# முரசொலி

## பொங்கல் மலர் 1960




ஆசிரியர்
மு. கருணாநிதி



விரைவில்
வெளிவருகிறது
சந்திரபாபு
நடிக்கும்
சிவகாமி பிக்சர்ஸ்
குமாரராஜா
T.S.பாலையா.. T.S.துரைராஜ்.. ஜாவர் சீத்தாராமன்.. கள்ளப்பார்ட் நடராஜன்
M.N.ராஜம்.. K.சூர்யகலா.. P.S.ஞானம்.. C.T.ராஜகாந்தம்
திரைக்கதை வசனம்
முரசொலி மாறன் M.A.,
டைரக்ஷன்-ஒளிப்பதிவு
G.K.ராமு
இசை... T.R.பாப்பா · கலை... A.K.சேகர் · பாடல்கள்.. (காலஞ்சென்ற) பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் · தஞ்சை ராமையாதாஸ்
ஸ்டுடியோ... விஜயா · வாஹினி
உலக நெகிடிவ் உரிமையாளர்கள் : ஜெயந்தி பிலிம்ஸ் (மதுரை) பிரைவேட் லிமிட், சென்னை.17


சத்தியா பிலிம்ஸ் கார்ப்பரேஷன்
மகிழ்ச்சியுடன் அளிக்கும் திரைக்காவியம்
வாதாபி கொண்ட நரசிம்ம பல்லவனின் வீர வரலாறு
போர்க்களம்!
தென்னவர் விளையாடிய தாழ்வாரம்
பாசறை
அவர்கள் படுத்திருந்த தொட்டில்
அந்த மேன்மையை விளக்க
கலைஞர் மு. கருணாநிதி எழுதும்,
புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். நடிக்கும்
காஞ்சித்தலைவன்
டைரக்ஷன்... எம். ஜி. சக்கரபாணி
ஒலிப்பதிவு... ஆர். ஆர். சந்திரன்
பாடல்கள்.. கவிஞர் கண்ணதாசன் .... இசை.. என். எஸ். பாலகிருஷ்
தயாரிப்பு: எம். ஜி. ஆர்., பி. வி. கிருஷ


ஏ.ஆர்.வி.பிக்சர்ஸாரின் முதல் படைப்பு!
தனிஉடமையா? பொதுஉடமையா?
இந்த இரண்டிற்கும் ஏற்பட்ட மோதல்தான்
மனிதசரித்திரத்தில் ஏற்பட்ட முதல் போராட்டம்
இதை விளக்கும் திரைக்காவியம்!
புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர்
நடிக்கும்
தேனாற்றங்கரை
டைரக்ஷன்... எம்.ஜி.ஆர்.
கதை
வே.லட்சுமணன்
வசனம்:
சுரதா
பாடல்கள்:
சுரதா, வே.லட்சுமணன்
இசையமைப்பு:
டி. ஆர். பாப்பா
Chitrakala
தயாரிப்பு.... A.ராமதாஸ் & T.V. சிவானந்தம்.


பால சூர்யா பிக்சர்ஸாரின் முதல் தயாரிப்பு!
தேன் சிந்தும் மொழி பேசி
தெவிட்டாத இசை பாடி
கருத்தசைக்கும் களி நடனமாடி
காளையரைக் கட்டுகின்ற
காரிகை ஒருத்தியின்
காதல் காவியம்
புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர் நடிக்கும்
கேரளக் கன்னி
டைரக்ஷன்... ஆர். ஆர். சந்திரன்
கதை, வசனம்
ஒலிப்பதிவு
இசையமைப்பு
ரவீந்திரன்.. ஆர். ஆர். சந்திரன்... என். எஸ். பாலகிருஷ்ணன்
தயாரிப்பு... M.G. சக்கரபாணி

★

தற்பொழுதுகூட நேர்முக வகுப்பு களிலும் தபால் மூலமும் 1000-க்கு மேற்பட்டவர்கள் இங்கிலீஷ் மொழிப் பயிற்சி பெறுகின்ற சென்னையின் மாபெரும் கல்வி அரங்கம்.

★

# THE SCHOOL OF ENGLISH LEARNING

# ஆங்கிலக் கல்வி நிலையம்,

60, பிராட்வே, மண்ணடி, சென்னை-1.

தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்

# ஒரே வருடத்தில்

ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி இலக்கண ரீதியாக திருத்தமான முறையில்

# இங்கிலீஷ் தபால் மூலம் கற்கலாம்

சேர்வதற்கு அச்சிட்ட மனுவைப் பெற்று பூர்த்தி செய்து

**24-1-60**

வரை அனுப்பலாம்.

அச்சிடப்பட்ட பாட விளக்கங்கள்

**27-1-60**

முதற்கொண்டு தொடர்ந்து அனுப்பப்பட்டு, கற்கும்போது ஏற்படும் சந்தேகங்களுக்கு முறைப்படி அவ்வப்போது தெளிவுரைகள் வழங்கப்படும்.

1. 16 வயதிற்கு மேற்பட்டவர்களே சேரத் தகுதியுடையவர்கள்.
2. ஆதாரப் பூர்வமான ஒப்பற்ற இலக்கணப் பயிற்சி அளிக்கப்படுவதால் ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் சேர்ந்து திருத்தமாகக் கற்றுத் தமக்குள்ள சந்தேகங்களைப் போக்கிக் கொள்ளலாம்.
3. இங்கிலீஷ் ஓரளவுக்குத் தெரிந்தவர்களுக்குத் தனியாகவும் எழுத்து முதல் ஒன்றுமே தெரியாதவர்களுக்குத் தனியாகவும் பிரிவு பிரிவாகவும் பயிற்சி அளிக்கப்படும்.
4. இந்தத் தபால் முறையில் படிக்க ஆண்களும் பெண்களும் சேரலாம்.

அச்சிட்ட மனுவையும் முழுவிபரங்களையும் எட்டு புதிய காசுகள் தபால்தலை அனுப்பிப் பெறுக.

**கதிரவன் பிக்சர்ஸாரின்** *மகத்தான தயாரிப்பு!*

*நாட்டு மக்களின் உள்ளங்களில் நீங்கா இடம் பெற்ற*

**நாடோடி மன்னனின்** *தொடர் ஓவியம்!*



*செங்குருதி நீர் பாய்ச்சிச் சரித்திரத்தைச்*
*சீர்திருத்தி மங்காப் புகழ்கொண்ட மாவீரனின்*
*மாகாவியம்!*



புரட்சி நடிகர் **எம். ஜி. ஆர்** நடிக்கும்

# நாடோடியின் மகன்

டைரக்ஷன்:
**என்.எஸ்.ராமதாஸ்**

கதை: **எம்ஜியார் பிக்சர்ஸ் கதை இலாகா**

**வசனம், பாடல்கள், கவிஞர் கண்ணதாசன்**

ஒளிப்பதிவு: **ஏ. சண்முகம்**

இசையமைப்பு: **எஸ். எம். சுப்பையா**

தயாரிப்பு:
K.N. குஞ்சப்பன்
P. பத்மனுபன்.

# அன்பர்களுக்கு
# எங்கள் மனமார்ந்த
# பொங்கல் வாழ்த்துக்கள்

சிவாஜி ரிலீஸ்

**சிவாஜி கணேசன்**

*சிவாஜி பிலிம்ஸ் பிரைவேட் லிமிடெட்*

சென்னை-6.


பொங்கல்
அன்று...
சூரியா பிலிம்ஸ்
தந்தைக்குப்பின்
தமையன்
தயாரிப்பு
M.M.A. சுப்பையத்தேவர்
டைரக்ஷன் G.R. ராவ்
Elegant

**விரைவில் வருகிறது!**

"அல்லற்பட்டு ஆற்றாதுஅழுத கண்ணீர் அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை" எனும்
**வள்ளுவரின்** தெள்ளுதமிழ் கூறும்
*திரை ஓவியம்!*



ஜூபிடரின்

# எல்லாரும் இந்நாட்டு மன்னர்

டைரக்ஷன்: டி. பிரகாஷ் ராவ்

கதை, வசனம்:

**கலைஞர் மு. கருணாநிதி**

-JEEVAN-

கடலோரம்...

•

உப்புக் கடலோரம் அமர்ந்திருந்து
முத்துச் சிரிப்பு கொட்டுவதும்
முன்னேற்றக் கழகம் பெற்றுவரும் வெற்றி கண்டே!

•

இயற்கை வண்ணப் புகைப்படம்:
சாமுவேல்

•

முரசொலி
பொங்கல் மலர்-1960



# அடிக்கரும்பு

உங்கள் பொன்னான கரங்களை அழகு படுத்தி, இதய வாழ்த்துக்களைப் பெற்றுத் தாயின் மடியில் தலைவைத்துக் கொண்டிருக்கும் மழலைத் தங்கம்போல் செல்லம் கொண்டாடியவாறு காட்சி தரும் முரசொலி பொங்கல் மலர்பற்றி நான் கூறும் இரண்டொரு வார்த்தைகளைச் செவியில் போட்டுக் கொண்டு, பொங்கல் கொண்டாட—குடும்பத்தோடு பூரித்து மகிழ — விழா எடுக்க—பஞ்சி விரட்டப் புறப்படுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஆண்டு, மலர் இல்லை என்றேன் முதலில்! மலராத முகங்களுடன் இருவர் என்னிடம் விடைபெற்றுச் சென்றனர். ஒருவர் முல்லை சத்தி. இன்னொருவர் கருணாநந்தம். போனவர்கள் திரும்பி வந்தனர்; மலர் போடவேண்டுமென்பதற்குப் புதியதோர் ஆதரவாளனாக சொர்ணத்தை அழைத்துக்கொண்டு.

தாள் கிடைப்பதற்கிருந்த நெருக்கடியைச் சுட்டிக்காட்டி, என்னைப்போலவே மாறனும் மலர் வேண்டாமென்பதற்குப் புள்ளிவிபரங்களையும் வெளியிடுவதால் ஏற்படும் நட்டக் கணக்கையும் காட்டி நின்றான். இறுதி வெற்றி, மலர் வேண்டுமென்றவர்களுக்குத்தான். ஒரு வாரத்து முரசொலியில் மலர் பற்றிய அறிக்கை இல்லையென்றதும் அப்பப்பா; எத்தனை எத்தனை விற்பனையாளர்களிடமிருந்து எத்தனை வகை வேண்டுகோள்கள், அன்புக் கட்டளைகள், நிலைமை விளக்கங்கள்! முரசொலி மலர் இல்லையென்றால் வாசகர்களின் போர் முரசைக் கேட்டுத் தீரவேண்டும் என்ற அச்சம் பிடித்துக்கொண்டது. வண்ண மலர்களை வெளியிடுவது என்ற கலையில் ஒரு துறையினர்க்கே திறமையுண்டு என்பதை மறுத்து, அவைகளைவிட அழகான இயக்க மலர் வெளியிடும் பெருமை முரசொலிக்கே உண்டு என்ற அண்ணாவின் பாராட்டுதலைப்பெற்ற ஏடல்லவா இது!

மலர் என்றால் எழில்வேண்டும்—எண்ண மணம் வேண்டும்—வழக்கம்போல் நாடு நம்மிடம் எதிர்பார்க்கும் எல்லா வகைச் சிறப்புக்களும் இருக்கவேண்டும். பத்து நாட்களில் அனைத்தையும் நிறைவேற்றமுடியும் என்ற நம்பிக்கை எழவில்லை. அந்த நம்பிக்கையில்லாமல் மலரை இரண்டு ரூபாய் விலைக்குக் கொடுத்து வாசகர்களின் கசப்பைப் பரிசாகப்பெற விருப்பமில்லை. ஆயினும் முயற்சியில் ஈடுபட்டோம். கருணாநந்தம் அலுவலகத்திற்குக் குடியே வந்துவிட்டார். உணவு தவிர வேறெதுவும் காலத்திற்கொள்ளாமல் உழைத்தார். முல்லை, இல்லாத நேரமில்லை; அவர் வழங்கிய உற்சாகம் அளவிடமுடியாது. உழைப்பும் அவ்வண்ணமே! சொர்ணத்தின் பம்பரச் சுழற்சி—அடியாரின் ஆர்வப்பணி—முரசொலி ஓவியர் செல்லப்பனின் ஒத்துழைப்பு — ஓவிய மன்னர் மாதவன் தீட்டிய சிற்பியின் கைவண்ணம்—ஜீவனின் திறன்—எழுத்தோவியம் தந்தவர்கள் காட்டிய அன்பு—எல்லாம் சேர்ந்து மலராகியிருக்கிறது. வழக்கம்போல் அறிஞர் பெருந்தகையாம் நம் மூத்த அண்ணனும், நாவலராம் இளைய அண்ணனும் எழுதித் தந்த வாழ்த்துக்கள் மலருக்குத் தனிச்சிறப்பு என்பேன். புகைப்படம் உதவிய தோழர்கட்கும் குறிப்பாக நமது சாமுவேல், பெரியகுளம் கே. எம். மேத்தர், சி. எஸ். பதி, செயபால் ஆகியோருக்கும் நன்றி.

ஆண்டுதோறும் பொங்கலன்று 'முரசொலி' முழுக் கரும்பென வந்தது; சுவை தந்தது. இந்த ஆண்டு ஒரு ரூபாய் விலைதான்! இது அரைக் கரும்பு என்கிறீர்களா? ஆனாலும் அடிக் கரும்பு—அதை மறந்துவிடாதீர்கள்.

இதுவரையில் இரண்டு ரூபாய்க்குத் தந்த மலரில் இந்த ஆண்டு சிறிதளவே குறைந்திருக்கும் என்று நினைக்கிறேன். அடுத்த ஆண்டு—இந்த ஆண்டில் நீங்கள் இழந்ததையும் சேர்த்து இன்பப் பொங்கல் மலர் வழங்குகிறோம். "மாவலி"க்கு இடமில்லை, மாறனின் எழுத்தோவியமில்லை. தாள் பற்றாக்குறைதான்! போனால் போகிறது என எமை மன்னித்து வாழ்த்துங்கள்!

அன்பன்,

மு. கருணாநிதி



# முரசும் மலரும்

தமிழரின் திருநாளாம் பொங்கல் நன்னாளன்று 'முரசொலி' மலர் வாயிலாக என் வாழ்த்துக்களை அனுப்பித் தருவதில் மகிழ்ச்சி கொள்கிறேன். 'மலர்' வாயிலாக வருவதால், மணம் நிரம்ப இருத்தல் இயல்பு.

'முரசு' 'மலர்'—இவை தமிழுக்கு நீண்ட பழங்காலந் தொட்டு, எழுச்சியும், சுவையும் தந்து வந்த பொருள்கள். முன்னையது புறம், மற்றது பெரிதும் அகம் பற்றியதாகும். வீரம், காதல் எனும் இரு சீருடைப் பண்புகளைக் குறிக்க அவை அமைந்திருந்தன.

முரசு—மலர் — இவைகளே கூடப் பலவகைப்பட்டனவாக இருந்தன, ஒவ்வொரு நிலைக்கு ஒவ்வொன்று என்று தமிழர் கொண்டிருந்தனர், அத்துணை நேர்த்தியாகத் தமிழரின் வாழ்க்கைக் கலை அமைக்கப்பட்டிருந்தது.

இன்று, மீண்டும் தமிழர் தன்னரசு பெற்றுத் தரணியில் தலை நிமிர்ந்து வாழ்ந்திட நடாத்தப்பட்டு வரும் விடுதலைக் கிளர்ச்சிக்கு ஓர் எழுச்சி முரசாக அமைந்து பணியாற்றி வருகிறது, தம்பி கருணாநிதியின் 'முரசொலி'!

முரசொலி மலர், தமிழர் இல்லங்களில், இனிமையும் எழுச்சியும் தந்து மகிழ்விக்கும் என்பதை ஆண்டு பலவாக அனைவரும் அறிந்துளர்.

விடுதலைக் கிளர்ச்சியில் ஈடுபட்ட நமக்கு, வண்ணம் சேர்த்துக் கூட்டிட, நேரம் கிடைத்தல் அரிது விழாக்கோலம் பூண்டிட வாய்ப்புகள் ஏற்படுவதும் அரிதுதான். எனினும், பொங்கற் புது நாள் மட்டும் நம்மை எப்படியோ வண்ணம் தேடிடவும், இனிமை கண்டிடவும் வைக்கிறது.

நத்திப்பிழைத்திடவும், நாடிழக்கவும் கற்றுக்கொள்ளாதிருந்த அந்த நாட்களில், வாகை சூடியோனின் கரம் பறித்தெடுக்கும் மலரே மங்கை நல்லாளுக்கு மகிழ்ச்சியும், பெருமிதமும் தருமாம்! மாற்ருனிடம் நாட்டை விட்டுவிட்டு, வீடெல்லாம் தோட்டமாக்கி, விதவிதமான பூக்கள் பறித்து, பொன்னிழை கொண்டு தொடுத்து, காரிகைக்குத் தந்தால், மணமும் இராது; மகிழ்ச்சியும் வராது.

இன்று நமது நாடு, மலர்த்தோட்டமாகவுமில்லை; நமது அரசும் நடந்திடவுமில்லை,

எனவேதான் 'முரசு' தேவைப்படுகிறது—'போர் முரசு'—இதன் மூலம் கிடைக்கும் எழுச்சி, வீடெல்லாம் விழா என்று கூறத்தக்க விடுதலையைப் பெற்றிட, நமக்கு ஆர்வம் தரும்—தந்து வருகிறது,

அந்த ஆர்வத்தின் வளர்ச்சி, வெற்றியை நமக்கு அளித்திடும்; அந்த வெற்றிக்குப் பிறகே நாம், தேடிக் கொணர்ந்த மலர் தேன் மொழியாள் தனக்கே, என்று பாடி மகிழ இபலும்,

அந்த எதிர்காலத்தை நோக்கிச் செல்கிருேம். கிடைக்கும் துணையை நன்றியுடன் ஏற்றுக்கொண்டு ஏற்படும் இன்னல்களைத் தாங்கிக் கொண்டு அந்தப் பயணத்தின்போது, 'முரசொலி மலர்' நமக்கு மகிழ்ச்சி தந்து, களைப்பை நீக்கிடப் பயன்படுகிறது. வரவேற்கிறேன், வரவேற்பீர் என்பது அறிவேன். வாழ்க நீவிர்! வளர்க நல்லறம்! வெல்க விடுதலைக் கிளர்ச்சி!

அன்பன்,

அண்ணாதுரை.

# கருத்துப் பொங்கல்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளையும், குறிக்கோள்களையும், திட்டங்களையும் முரசறைந்து திக்கெட்டும் பரப்பும் பணியில் மிகச் சீரிய முறையில் ஈடு பட்டுவரும் 'முரசொலி', மிக அழகிய முறையில் பொங்கல் விருந்து படைக்க இவ்வாண்டும் முன் வந்திருப்பது போற்றி மகிழ்வதற்குரியதாகும்,

'முரசொலி' பொங்கல் மலர் என்றால், அதில் வண்ண ஓவியங்கள் இருக்கும், சுவைதரும் கதைகள் மிளிரும், சிந்தையைக் கிளறும் கட்டுரைகள் துலங்கும் என்று யாவரும் எதிர்பார்த்து வழக்கமாக மகிழ்ந்து வந்துள்ளனர். யாவருடைய வேட்கையையும் நிறைவேற்றும் வகையில் இனிப்புமிக்கக் கருத்துப் பொங்கல் படையல்களைத் தர 'முரசொலி' காத்திருக்கிறது.

"பொங்கலோ பொங்கல்! பொங்கலோ பொங்கல்!! பொங்குக வளம்! பொங்குக நலம்! பொங்குக இன்பம்!" என்று கூறி, என் உளங்கனிந்த பொங்கல் வாழ்த்துக்களை 'முரசொலி' மூலம் நண்பர்களுக்கு அளிக்கிறேன்!

இனிக் கருத்துப் பொங்கல் படையல்களை வயிறார உண்டு மனமார மகிழ நண்பர்கள் செல்லலாம்! வாழ்க முரசொலி'! வளர்க அதன் முயற்சி! வெல்க அதன் தொண்டு!

இரா. நெடுஞ்செழியன்








ஊருக்கு 'உலை'வைப்பவர்கள் கொண்டாடும்
வெறும் பொங்கல்!

# மறப்பதுண்டோ காதல்?




வான்சுற்றித் திரிகின்ற முகிலினங்கள் தோயும்
  மலையுச்சித் தேனடையை மங்கையர்கை
                    வீழ்த்தும்!
தேன்சுற்றி மொய்க்கின்ற வண்டினங்கள் பாடும்
  செம்போத்து குரல்கொடுக்கும்! மயிலினங்கள்
                    ஆடும்!
கான்சுற்றி முழவார்க்கும் மலையருவி ஓசை
  கழைச்சாரல் எதிர்ஒலிக்கக் கன்னியர்கள்
                    கூவும்!
மான்சுற்றித் தேடுகின்ற வேடுவன்போல் தேடி
  அங்கெல்லாம் உனைக்கண்டேன் மறப்ப
                    துண்டோ காதல்?

சிலைஇட்ட காம்போடு வெள்ளாட்டு மந்தை
  செடிகொடிகள் மேய்ந்திருக்கும்! கழுத்துமணி
                    ஆர்க்கும்!
ஓலைஇட்ட பெருங்குடைக்குள் அடைத்துவைத்த
                    குட்டி
  ஓயாது கூச்சலிடும்! குழலூதும் ஆயன்!
பாலைஇட்ட உலைநாறும்! காட்டுமலர் நாறும்!
  பைம்புதர்கள் இசைமீட்டும்! பகல்ஒளியும்
                    சாயும்!
மாலைஇட்ட செவ்வானம் மாலைஇட்டுக்காட்டும்!
  அங்கெல்லாம் உனைக்கண்டேன் மறப்ப
                    துண்டோ காதல்!

கன்னியரின் வாயழகை மலர்பூத்த வாவிக்
  கரைகாட்டும்! இடைஇடையே விழிகாட்டும்
                    நீலம்!
முன்னுயர்ந்த வானத்து வில்லழகைக் காட்டும்
  முண்டிஎழும் நீர்வாளை! குளம்மூழ்கும் காளை!
மின்னவிடை யாரெல்லாம் குடம்ஏந்தி வந்தார்!
  விழியாலே நகைகாட்டி அசைந்தாடிச்
                    சென்றார்!
அன்றின்றும் அழியாத ஓவியமே வாழ்வே!
  அங்கெல்லாம் உனைக்கண்டேன்! மறப்ப
                    துண்டோ காதல்?

அலைபாயும் கடலோரம் வளைபாயும் நண்டு!
  பைந்தாழை அருகிருந்தே அடைகாக்கும்
                    பேடை!
வலைபாயும் கடல்மீது படகாடிப் பாயும்!
  மணற்பரப்பு நெடுங்கரையில் பொன்பூக்கும்
                    புன்னை!
மலைபாயும் மானொக்கும் நெய்தல்வாழ்
                    பெண்கள்!
  வரிவளைக்கை கோல்ஏந்தி வாடுலர்த்தி நிற்பர்;
சிலைபாயும் விழிபாய; இசைபாயும் பேச்சில்!
  செந்தமிழே! உனைக்கண்டேன்! மறப்ப
                    துண்டோ காதல்?

கவிஞர் வாணிதாசன்



# காமகோடி
# ‘பீடா’திபதி




செல்லப்பன்

"கானல் வரி நான்பாட, மாயப்பொய் பல கூட்டும் காதல்மொழி சிந்தியதை இந்தக் காதுகளால் கேட்டிருந்தேன். காளையரை ஏமாற்றக் காட்சி வரி, கண்கூட்டு வரி முதலிய எட்டு வகை நடிப்புவரியும் கற்றவளடி நீ! குமிழம்பூ மூக்கும் குவளை மலர்க் கண்ணும் கொண்டு இனி இந்தக் கோவலனை ஏமாற்ற முடியாது!'' எனக் கூறி மாதவியாம் மங்கையர் திலகத்தைப் பிரிந்து வந்த கோவலன், பேடை தேடி வரும் சேவலெனக் கண்ணகியைக் காண வீடு நாடி ஓடுகிறான். ஆளனைக் கண்ட அந்த ஆரமுதுப் பெண்ணாள் அடி தகர்ந்த மரம்போல அவன் அடிவீழ்ந்தாள். கண்ணீர்த்துளிகளால் அவன் காலைக் குளிப்பாட்டினாள்.

கோவலன், ''கண்ணகி!'' எனக் கதறினான். அந்தக் கதறலில் தான் எத்தனை ஏக்கம்!



'இத்தனைநாள் உன்னை உயிருடன்வைத்து வதை புரிந்த இந்தக் கயவனை மன்னித்து விடு' என்ற வாசகமே அந்த ஒரு சொல்லில் அடங்கியிருந்தது.

''கற்பின் திருவுருவம் உனை விடுத்துக் கணிகையின் மடியிலே சுகங்கண்ட இந்தக் கற்றறிந்த மூர்க்கனை.........'' என்று ஆரம்பித்தான் மன்னிப்புப் படலம் எழுதுவதற்கு!

அதற்குள் அவன் அழகிய உதடுகளில் தன் கரங்களால் பூட்டிட்டு ''திட்டாதீர்கள்! என் கணவரை என் கணவரே கூடத் திட்டக்கூடாது. நான் அனுமதிக்கமாட்டேன்.'' என்று தழுதழுத்த குரலில் பதில் கூறினள்.

''மாதர்குல மாணிக்கமே! தமிழ் மறை காத்து மனைகாக்கும் இன்பப் பெருமாட்டி நீயிருக்க மாதவியாம் விலைமாதின் வசப்பட்டேன். அவள் வாச மலர்க் கூந்தலிலே வையகமே அடிமையென எண்ணி விட்டேன். அந்தமோசம் நிறை மங்கை என் குடும்பப் பாசம் அறுத்தாள். தேசமெல்லாம் தெருவெல்லாம் இகழ்ந்துரைக்க, தேகமிருந்தும் உயிரில்லாப் பாண்டமாக என்னை ஆக்கி விட்டாள்.''

''அத்தான்! என் தங்கை அவள். அவளை ஒன்றும் சொல்லாதீர்கள். என் குழந்தை மணிமேகலை சுகந்தானே அத்தான்...?''

''குழந்தை மணிமேகலை! ஐயோ, அது உன் குழந்தையா? குவிந்திருந்த பொன்மணிகள், தங்கக் குன்று நீ அணிந்திருந்த நகைகள் எல்லாம் கொட்டிக் கொட்டி நான் பெற்ற இன்பத்தில் விளைந்ததன்றோ அந்தக் குழந்தை? விலை கொடுத்துச் சுவை பார்த்த காதல் விருந்தின் அடையாளம். கணிகை வீட்டில் உன் கணவனுக்கு ஏற்பட்ட களங்கம்தான் கண்ணகி, அந்தக் குழந்தை!''

''ஐயோ! அப்படியெல்லாம் சொல்லாதீர்கள். மணிமேகலை மாதவிக்குப் பிறந்தாலும் என் குழந்தைதான்! என் குழந்தையைப்பற்றித் தவருக ஒன்றும் சொல்லாதீர்கள் அத்தான்!''

''என் தெய்வமே! நீ என் மதிப்பிற்குரியவள். மரியாதைக்குரியவள். என்னை மன்னித்து விடு. உன் இதயத்தை உணர முடியாத இந்த இழிமகனை மன்னித்து விடு கண்ணகி. கடல் வாணிபத்தில் தமிழருக்கு ஈடில்லை என்ற புகழ் என்னலே பெருகிற்று. இன்றோ உடல் வாணிபத்தில் ஈடுபட்ட ஒருத்தியிடம் அறிவிழந்தேன். அளவிட முடியாத பொருளிழந்தேன்; புலம்புகிறேன் ஏழையாக! என் செல்வமே! பூம்புகார்ப் பெரு வணிகன் என்ற பெயர் போயிற்று. புயல்தனிலே படகானேம். கரையேற வழியில்லை. அலைமோதும் கடல் மாதா வயிற்றுக்குள் போய்விடுவோம், வா...வா......''

''ஏன் கண்ணு அந்த முடிவு? ஆனை உயரம் அடுக்கி வைத்த தங்கம் உண்டு என் தாய் வீட்டில்! நாம் எடுத்துக் கொண்டால் தடை சொல்ல யாருண்டு?''

''ஆருயிரே! மாமன் கைபார்த்துப் பிழைக்கின்ருன் என ஊர் பேசும்; மானம் போகும்! வேண்டாம்; வேண்டாம்.''

''நெல்மணியை அளப்பதுபோல் அளக்கின்ருர் முத்துக்களைத் தங்கள் தந்தை; அவர்கூட ஆதரவு காட்டுவதற்கு மறுப்பாரோ அத்தான்?''

''தனியாக வாழ்வதற்குத் தகுதியுண்டு என எண்ணிப் பொருள்கொடுத்தார் தந்தை! அதைத் தொலைத்து விட்டுப் புதுத் தொல்லை கொடுப்பதற்கு மனமே இல்லை. மார்க்கம் வேறு இருந்தால் சொல், இல்லையேல் மரணம்தான் மேல்.''

''நானிருக்கும் வரையிலே சோகத்தால் வாடாதீர். என் காற் சிலம்பு இரண்டு உண்டு. அதைக் கழற்றித் தருகிறேன். விற்றுவிட்டால் புதிதாக வாணிபத்தைத் தொடங்கலாம் அத்தான்!''

''சிலம்பை விற்பதா? ஐயோ கண்ணகி! இந்த வார்த்தையைக் கேட்கும் காலமும் வந்ததா?...உன் காலை அழகு செய்யும் அந்தச் சிலம்புகளை--இந்தக் காமுகன் இதுவரையில் கழற்ருமல் கடைசியாக விட்டு வைத்திருக்கும் அந்த ஆபரணத்தையும் விற்றுவரச் சொல்கிருயா கண்ணகி?''

''கவலைப்படாதீர்கள். நான் சொல்வதைக் கேளுங்கள். சிலம்பை விற்று அந்தப் பொருளைக் கொண்டு நாம் துவங்கும் வாணிபம், வளரத் தொடங்கிவிட்டால் இதுபோல் எத்தனையோ சிலம்புகள் வாங்கிக் கொள்ளலாம்.''

''ஆனல்...பூம்புகாரிலேயே சிலம்பை விற்பது அவமானமல்லவா?''

''பிறகு...எங்கே விற்கலாம் என்று நினைக்கிறீர்கள்?''

''நம்மையாரும் எளிதில் அடையாளம் காண முடியாத பாண்டிய நாட்டுக்குச் செல்லலாம். அங்கே...மதுரைத் தலைநகரில் சிலம்பு நல்ல விலைக்குப் போகும்.''

''தங்கள் விருப்பம் போலவே செய்யுங்கள். மதுரைக்குத் தங்களோடு நானும் வருகிறேன்.''

''வா! இனிச் சாகும் வரையில் அணுப்பொழுதும் உன்னைப் பிரியமாட்டேன் கண்ணே.''

இந்த உரையாடலுக்குப் பிறகு ஒருவரையொருவர் தழுவிக் கொண்டனர். ஒருவர் கண்ணீரை ஒருவர் கண்ணீரால் கழுவிக்கொண்டனர்.

கோவலனும் கண்ணகியும் பிரிந்து கூடிப் பெருமகிழ்வு பெற்று மதுரைப்பயணம் தொடங்கிய வேளையிலே பூம்புகார்க் கலைச் செல்வமாம் மாதவியோ தூண்டிற் புழுவெனத் துடித்துக் கொண்டிருந்தாள், குழந்தை மணிமேகலையைத் தூக்கி வைத்துக்கொண்டு.

''அம்மா மணிமேகலை! உன்னையும் என்னையும் பிரிந்து உன் அன்புத் தந்தை ஊரைவிட்டே போய்விட்டார். என் செல்வமே! வாரி அணைத்து 'வண்ணப்புது நிலவே! எண்ணச் சோலை உதிர்க்கின்ற தமிழ்க்கனியே!' என்றெல்லாம் முத்தமாரி பொழிவாரே-அவர், உன்னையும் என்னையும் வெறுத்து இந்தப் பாவியிருக்கும் பூம்புகாரிலேயே இருக்கக் கூடாதென்று போய் விட்டாராம். 'அப்பா!' என்று எப்போது அழைப்பாய்--

"அம்மா!" என்று என்றைக்கு வாய் திறப்பாய் என ஆவலோடு கேட்டுக் கேட்டுத் துடித்த உன் தந்தை, உன் செந்தமிழ் மழலையைச் சுவைக்க விருப்பமில்லையென்று உன் தாயைச் சுடு நெருப்பில் எறிந்துவிட்டுப் போய்விட்டாரம்மா, போய் விட்டார்" என அலறி அழுதாள்.

அவளைத் தேற்றுவதற்கு யாராலும் முடியவில்லை. கோவலனின் அன்புச் சின்னமாம் மணிமேகலையின் முகத்தோடு முகம் பதித்து விழுந்து கிடந்தாள். பூம்புகார் பட்டினம் மேலும் மேலும் இருளில் மூழ்குவதுபோலவே அவளுக்குத் தோன்றியது.

"வெண்மதி நீங்கக் காரிருள் நின்ற கடைநாள் கங்குல்" என இளங்கோவடிகள் வர்ணிக்கும் அந்த நேரத்தில், வீட்டுவாயிலில் விளையாடிக் கொண்டிருந்த அன்னம், ஆட்டுக்கடா, கவரிமான் ஆகியவற்றையெல்லாம் கவனிக்காமல் கோவலனும் 'கண்ணகியும் மதுரைச் செலவு தொடங்க வெளிக்கிளம்பினார்கள். பூம்புகார் மக்கள் புது நீராடக் காவிரி ஆற்றுக்குச் செல்லும் வழியில் கனிச்சுமையால் தாழ்ந்த சோலைகளின் பக்கமாகக் காவிரியின் சங்கமுகத் துறையின் கடைசி இடத்தையும் கடந்து சென்றார்கள்.

வழியில் அவர்கள் கவுந்தி எனும் சமணமதப் பெண் துறவியைச் சந்திக்க நேரிடுகிறது. கவுந்தியைக் கண்டதும் கோவலன் வணக்கம் தெரிவித்துவிட்டு, கண்ணகிக்கும் அடிகளை அறிமுகப்படுத்துகிறான். ஆனால் கவுந்திக்கு அவர்கள் இருவரையுமே அறிமுகமில்லை. வாழ்த்துக் கூறிவிட்டு "நீங்கள் யார் என அறியலாமோ?" எனக் கேட்கிறார்.

"வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் உயர்ந்த குதிரைகளும், ஏற்றுமதிக்கெனக் குவியும் மிளகு மூட்டைகளும், வடமலைப் பிறந்த மணியும் பொன்னும், குடமலையிற் பிறந்த ஆரமும் அகிலும், தென் கடல் முத்தும், குணகடல் பவளமும், கங்கையின் பொருளும், காவிரியின் பயனும் நிறைந்து தோற்றமளிக்கும் சோழனின் கடற்கரைப் பட்டினமாம் பூம்புகார்த் தலைநகரமே எமது ஊர். என் பெயர் கோவலன். இவள் என் வாழ்க்கைத் துணைநலம் கண்ணகி" எனக் கோவலன் பதில் கூறியதும், கவுந்தியடிகள் திகைப்படைந்து விட்டார்.

"என்ன? கோவலனா? பெருவணிகர் மாசாத்துவானின் மகனா? குழந்தாய்! உனக்கு வந்த இடர் யாது?"

"சுடர் விளக்காம் கண்ணகிக்குத் துரோகம் செய்தேன். அது போதாதென்று...படர்கின்ற முட்புதரில் என் பத்தினியின் பாதம் பட்டுப் பாகற் பழம்போல் சிவக்கின்ற பாதகத்தையும் செய்கிறேன் இப்போது."

"வருந்தாதே! தவறு செய்தவர்கள், தங்கள் தவறை உணரும்போது அதுவே பெருந் தண்டனையாகிறது. பரவாயில்லை. மதுரைக்குத் தானே போகிறீர்கள்? நல்லது. ஆனால் நீங்கள் போகும் வழியில் அடர்ந்த காடுகள் இருக்கின்றன. இப்போதே உன் துணைவி களைத்துப்போயிருக்கிறாள். அவள் மெல்லிய பாதங்கள் அக்காடுகளைத் தாண்டிக் கடப்பதற்கு ஏற்றவையாக மாட்டா. வழியில் பல இடர்களும் உண்டு. ஆயினும் மதுரை செல்வதெனத் தீர்மானித்து விட்ட உங்களை நான் தடுப்பது என்பதும் இயலாத ஒன்று. உங்களுக்குத் துன்பத்திலும் சற்று ஆறுதல் அளிக்கலாம் என்ற நோக்கத்துடனும் --மதுரையில் உள்ள பெரியவர்களின் அறமொழிகளைக் கேட்க வேண்டுமென்ற ஆசையுடனும் நானும் வழித்துணையாக வருகிறேன்." எனக் கூறிக் கவுந்தியும் அவர்களுடன் புறப்பட்டார்.

கொஞ்ச தொலைவு நடந்ததற்கே ஒடிந்து விழும் கொடி போன்ற கண்ணகியின் இடை வருந்தி வாடிற்று. விரைந்து விரைந்து மூச்சை இழுத்து விட்டாள்.

வழியில் ஒரு சோலையைக் கண்டவுடன் மதுரைக்கு அருகாமையில் வந்து விட்டோம் என்று நினைத்தாள். அப்படி நினைக்கச் சொன்னது அவளுக்கேற்பட்ட களைப்புத்தான்.

"மதுரை மூதூர் எது?" என்று கோவலனைப் பார்த்து அவள் கேட்டாள்.

ஏதோ நாலைந்து ஊர்களைப் பார்த்துவிட்டு அவைகளில் எது மதுரை என்று தெரியாது திண்டாடியவளைப்போல "மதுரை மூதூர் எது?" எனக் கேட்டதும் கோவலனுக்குச் சிரிப்பும் வந்தது; வருத்தமும் மேலிட்டது. முப்பது காதத் தொலைவு என்று கூறினால் கண்ணகி அயர்ந்து விடுவாளோ என அஞ்சுகிறான் கோவலன். ஆனாலும் அவளுக்கு அவன் பதில் சொல்லியாக வேண்டுமே! இந்தச் சோகமான கட்டத்



றாலும் நறுக்குத் தெரித்தாற்போல ஒரு நகைச் சுவையை உண்டாக்கி விட்டு நடக்கிறார் பெரும் புலவர் இளங்கோவடிகள்.

''மதுரை மூதூர்யாது?'' என வினவ,

''ஆறு ஐங்காதம் நம் அகல்நாட்டு உம்பர்,

நாறு ஐங்கூந்தல்! நணித்து''

''ஆறு ஐந்து காத தூரந்தான் இருக்கிறது. அதாவது அருகாமையில் தானிருக்கிறது'' என்று பதில் கூறிவிட்டுத் துன்பச் சிரிப்பு சிரிக்கிறான் கோவலன்.

உடன் கவுந்தியடிகள் கண்ணகியைப் பார்த்து, ''கண்ணே! உன் துணைவர் உன்னை ஏமாற்றுகிறார். ஆறைந்து காதமென்றால் முப்பது காதம்.'' என்று கேலி பேசுகிறார்.

களைப்பின்றிப் பயணம் நடத்துவதற்குப் பேச்சுத் துணை இன்றியமையாததல்லவா? துவண்டு துவண்டு கண்ணகி நடப்பதைப் பார்த்துக் கவுந்திக்கே பெரும் வேதனையுண்டாயிற்று.

விளையாட்டுப் பேச்சுக்களால்தான் அந்த வாட்டத்தைப் போக்க முடியும் என்று கருதியவராய்க் கோவலனை நோக்கி, ''குழந்தாய்! நான் வேண்டுமானால் முன்னே போய் விடுகிறேன். நீ கண்ணகியைத் தூக்கிக்கொண்டு......'' என இழுத்தாற்போல் கூறியதும், கோவலன் வியப்புடன் கவுந்தியைப் பார்த்துப் புன்னகை புரிந்தான்.

''நீ அவளுக்குச் செய்த குற்றத்திற்குத் தண்டனை வேண்டாமா? அதற்காகச் சொன்னேன். அது மட்டுமல்ல; முன்பே குறிப்பிட்டேனே--நாம் செல்லும் வழியில் நிறைய இடர்ப்பாடுகள் உண்டு என்று; அந்த இடர்ப்பாடுகளையும் விளக்குகிறேன்; கேள்! வழியில் வள்ளிக்கிழங்கு தோண்டிய குழிகளில், வாடிய சண்பக மலர்கள் குவிந்து மூடியிருக்கும்; கவனமாகச் செல்லாவிட்டால் மலர்க்குவியலென எண்ணி அந்தப் பொய்க் குழிகளில் விழுந்துவிட நேரும். கண்ணகிக்கு இவ்வழி யெல்லாம் நடந்து பழக்கமில்லையல்லவா--சோலையிலுள்ள துன்பங்களை நீக்கி வயல் வெளிகளில் செல்வோமானால் நீர்நாயினால் கௌவப்பட்ட வாளை மீன்கள் உயிர் தப்பத் துள்ளி மேலே விழும். அதைக் கண்டு கண்ணகி பயப்படுவாள். கரும்புத் தோட்டங்களில் நடக்கும்போது கரும்பின்மீது தவறி உராய்ந்து விட்டால் அங்குள்ள பெரிய தேன் கூடுகள் உடைந்து தேனெல்லாம் அருவி நீரோடு கலந்துவிடும். அதோ கண்ணெதிரே ஓடுவதெல்லாம் தேனருவிகள்தான். வரப்புகளில் நடந்து செல்வோமென்றால் களை எடுப்பவர்கள், வயலில் பிடுங்கிய குவளைமலர்களை வரப்புகளின்மேல் போட்டு வைத்திருப்பார்கள். அந்தப் பூக்களைச் சுற்றி வண்டினங்கள் நாட்டியம் பயின்று கொண்டிருக்கும். நடக்கும்போது நம்மையறியாமலே அந்த வண்டுகளைக் கொன்றுவிடக் கூடும். இவைகளை யெல்லாம் விட்டு சோலையின் ஓரத்தில் ஒதுங்கியே செல்வோமென்று கருதி நடந்தால் கிளைகளில் தாழ்ந்து தொங்கும் பலாப் பழங்கள் எதிரிகள் போல் தலையில் முட்டித் தடுக்கும்.''

--எனக் கவுந்தி கூறியதும் கண் கலங்கியவாறு கோவலன், ''அய்யோ! நான் சென்ற தவறான வழியில் அந்தப் பலாக்கனிகளைப்போல முட்டி என்னை யாரும் தடுக்கவில்லையே...'' என்று கூறினான்.

கவுந்தி, அவனைத் தேற்றினார்.

அவர்களுடைய பயணத்தில் இல்வாழ்க்கையின் சிறப்பு பற்றிய தெளிவு மட்டுமல்ல; தமிழகத்தின் பெருமையும் தலை நிமிர்ந்து நின்றது. சோழ நாட்டையும் பாண்டிய நாட்டையும் இணைக்கின்ற அந்தப் பாதையோரத்துச் சிறப்புகளின் வாயிலாக வளம் பெற்றிருந்த தமிழகத்தைப் படமெழுதிக் காட்டுகிறார் இளங்கோவடிகள்.

குளங்களில் தாமரைக் காடுகள். அந்தக் காடுகளில் சம்பங்கோழி, நாரை, அன்னம், கொக்கு, காட்டுக்கோழி, நீர்க்காக்கை, உள்ளான், குளுவை, கணாந்துள், பெருநாரை முதலிய பறவைகள் எழுப்புகின்ற ஒலி, போர்க்களத்தில் வெற்றிவேந்தன் எழுப்புகிற ஒலியை ஒத்திருக்கிறதாம். வயற் களங்களில் நெற்கூடுகள் குன்றுகளென நிற்கின்றன. கூடுகள் பிரியாமலிருக்கும் பொருட்டு அவைகளை வைக்கோற் கயிறுகொண்டு கட்டியிருக்கிறார்கள். சிவந்த கண் படைத்த எருமைகள், தினவெடுத்த முதுகை அந்தக் கூடுகளில் தேய்க்கின்றன. அதனால் கயிறு அறுந்து கூடுகளில் உள்ள நெல்மணிகள் வயலில் விளைந்திருக்கும் நெற்பயிரின் மேல் சரிந்து விழுகின்றன. கழனிகளில் வேலை செய்யும் பெண்கள், தங்கள் கூந்தலில் உள்ள மலர்களை வீசியெறிந்துவிட்டு நெல் நாற்றை நறுக்கித் தலையில் சூட்டிக் கொள்கிறார்கள். அவர்கள் தோளிலும் மார்பிலும் சேறு படிந்திருந்த போதிலும் அது அவர்களின் துணைவர்களுக்குச் சந்தனம்போல் தோன்றுமளவுக்கு அழகு வீசுகின்றது. கள் குடித்ததால் அந்தப் பெண்களுடைய கயல்போன்ற கண்கள் சிவப்பேறியிருக்கின்றன.

இந்தக் காட்சிகளையெல்லாம் கண்டவாறு மூவரும் பயணம் நடத்தித் திருவரங்கத்தை அடைந்தனர். அங்கே பெருஞ் சாரணரைக் கண்டு அறிவுரைபெற்று அதன் பின்னர் பள்ளியோடத்தில் ஏறித் துறையைக் கடந்து காவிரியின் தென் கரையை அடைந்தனர். அங்கிருந்து உறையூர் சென்று அதன் பின்னர் மதுரை நோக்கிக் கிளம்பினர்.

வழியில் மாதவியின் ஓலையொன்றைக் கோவலன் பெறுகிறான். அந்த ஓலையில் தன் அன்பிற்குரியவளின் கையெழுத்தைக் கண்டதும் கோவலனின் மனம் மாறுகிறது. மாதவியை எண்ணி உருகி நிற்கிறான். ஓலையைப் படித்துப் பார்க்கிறான்.

''பேரன்புடையவரே! தங்கள் அடிதொழுது வணங்குகின்றேன். பெற்றோர்க்குப் பணி புரியாமல்--உற்ற மனைவிக்கும் தீங்குசெய்து


பொங்கல் வசனங்கள்
கரும்பே, உன்னை நான் காதலிக்கிறேன்.
என்னய்யா என்னைப் பார்த்து இஞ்சி தின்னகுரங்கு மாதிரி இளிக்கிறே?
உயிர் என்ன வெல்லமா? புறப்படு போருக்கு.
மாட்டைக் கூட அடக்கலாம். உன்னை அடக்க என்னால் முடியலையே.
உன்கோல முகத்தையும், அரிசிப்பல்லையும், மஞ்சள் மேனியையும் நினைத்தால் இந்தப் பால் நிலவில் என் உணர்ச்சிஎப்படிப் பொங்குகிறது, தெரியுமா?
Che

--பிழைப்பு நடத்த வெளியூர் செல்வதற்கும் நானே காரணமானேன். என் தவறால் வருந்தும் உங்கள் நெஞ்சை ஆற்றிக்கொள்ள வேண்டுகின்றேன்.''

கோவலனின் கண்கள் கலங்குகின்றன. மாதவி யெழுதிய அந்த மடலையே தன் பெற்றோருக்கு அனுப்பிவிடுகிறான், மாதவி, கோவலனுக்கு எழுதிய மடலின் வாசகமே--கோவலன் தன் பெற்றோருக்கு எழுதவேண்டிய வாசகம் எனக் கருதுகிறார் சிலப்பதிகார ஆசிரியர். என்னே இலக்கியச் செறிவு! என்னே வாழ்க்கை இலக்கணம்! என்னே தமிழனின் கற்பனை வளம் என்று நாம் பாராட்டாமல் இருக்க முடியுமா?

அப்படிப் பாராட்டிக்கொண்டே, கோவலனின் பதிலைப்பெற்ற மாதவியைப் பற்றி ஒரு புதுக் கற்பனைசெய்து பார்ப்போம்.

கோவலனுக்குத் தான் எழுதிய மடல் திரும்பி வந்ததும் அதை யெடுத்துக்கொண்டு மாதவி, மாசாத்துவான் வீட்டுக்குப் போகிறாள். கோவலன் அனுப்பிய மடல் கண்டு அவன் பெற்றோர் கண்ணீர் வடிக்கின்றனர். எதிரே குழந்தை மணிமேகலையுடன் மாதவி நிற்கிறாள். அவளுக்குப் பின்னால் நூற்றுக் கணக்கான பெண்கள், வெள்ளித் தட்டுகளில் பொற்காசுகளை நிரப்பிக் கொண்டு வருகிறார்கள். மாசாத்துவான் திகைத்த நிலையில் பேசுகிறார்.

''யார்?''

''மன்னிக்கவும், நான்தான் மாதவி. தங்கள் பெருமை வாய்ந்த குடும்பத்தின் சீரழிவுக்குக் காரணமான பாதகி...மாதவி நானே தான்! இதோ! எனக்கும் தெரியாமல் எங்கள் வீட்டில் குவிக்கப்பட்டிருந்த தங்கள் வீட்டுச் செல்வம்!...''

''என்ன, மாதவி!...நீ மாற்றுக் குறையாத பசும்பொன் என்று இப்போதே உணர்ந்தேன்!''

''இனி யார் உணர்ந்தென்ன, உணராவிட்டால் என்ன? நான் உதிர்ந்த மலராகி விட்டேன்!''

''மாதவி! இந்தப் பொற்குவியல் என் மகன் உனக்காக அளித்தது! இதை நான் தீண்டமாட்டேன். திரும்பப்பெறுவது தீங்கானது!''

''எனக்கு ஏன் பொருள்? என் அன்புச் செல்வமே பறிபோய்விட்ட பிறகு, அழிகின்ற இந்தச் செல்வம் எதற்காக? எங்கே, என்னை மன்னித்தேன் என்று ஒரு முறை சொல்லுங்கள்!

''மாதவி, நீ என் அன்பு மருமகள்!''

''ஐயோ, மணிமேகலை...எவ்வளவு நல்ல குடும்பத்தை உன் தாய் நாசமாக்கிவிட்டாள்!''

''அழாதேயம்மா -- எங்கே; குழந்தையைக் கொடு!'' என்று மணிமேகலையைக் கையில் வாங்கிக்கொள்கிறார்.

குழந்தை தாத்தாவின் முகத்தைப் பார்த்துச் சிரிக்கிறது.

குலைந்த குடும்பம் ஒன்றாகி விடக்கூடிய சூழ்நிலை உருவாகிவிட்டது. ஆனால் கோவலன், சாவை நோக்கியல்லவா கால்கடுக்க நடந்து கொண்டிருக்கிறான். அந்த மதுரைச் செலவு குறித்துத்தான் இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்தில் நாடுகாண் காதை, காடுகாண் காதை, வேட்டுவ வரி, புறஞ்சேரியிறுத்த காதை ஆகியவை முழங்குகின்றன.

இருவரும் பூம்புகாரை விட்டுப் புறப்பட்டுக் கவுந்தியைச் சந்தித்து மூவரும் உறையூரை அடையும் வரையில் உள்ள சிறப்புக்களை நாடுகாண் காதை விளக்குகிறது. காட்டுவழி நடந்து, கொடும்பாளூர் நெடுங்குளக்கரையின் வழியாக உள்ள மூன்று பாதைகளில் வலப்புறப் பாதையில் நுழைந்து தென்னவன் மலையைத் தொட்டு, இடப்புறம் திரும்பி, திருமால் குன்றம் வரை சென்று அங்கிருந்து மதுரைக்கேகும் வழியில் ஐயை கோட்டத்தில் தங்கியது வரையில் உள்ள நிகழ்ச்சிகளை--அக்காலத்திற்கேற்ற எண்ணங்களை முன்வைத்துச் சொல்வதே காடுகாண் காதையாகும். வழியில் கொற்றவை எனும் தெய்வத்தை வணங்கும் வேட்டுவரை சந்திப்பதே வேட்டுவ வரியாகும். மாதவி அனுப்பிய ஓலை பெற்று அதனைத் தன் பெற்றோருக்கு அனுப்பிவிட்டுப் பின்னர் பாணருடன் சேர்ந்து யாழ் வாசித்துவிட்டு அவர்கள் வாயிலாக வழியறிந்து மதுரையைச் சேர்வதை வர்ணிப்பதே புறஞ்சேரியிறுத்த காதையாகும்.

வழியிற் கண்ட பாணரை நோக்கி, ''இன்னும் எத்தனை காதமிருக்கும் மதுரைக்கு?'' என்று கேட்கிறான் கோவலன்.



''அதிக தூரமில்லை. இதோ மதுரைத் தென்றல் வீசுகிறது. இந்தத் தென்றல் பொதிகைத் தென்றல் போன்றதல்ல. இதில் மிகுதியான அகில், மணமிக்க குங்குமப்பூ, சந்தனக் குழம்பு, புழுகுக் குழம்பு ஆகியவற்றின் மணங் கலந்திருக்கிறது. செங்குவளை, சண்பக மாலை, குருக்கத்தி, மல்லிகை, மலை முல்லை முதலிய பூக்கள் விரிக்கப்பட்ட பஞ்சணைகளின்மீது பட்டு, அந்த மணந் திருடிவரும் தென்றலாக்கும் இது! மன்னவனின் மாளிகையில் எழும் பரிமள வாசத்தைத் தன்னிடம் காட்டி, புலவர் நாவிற் பொருந்திய பெருமையுடன் மதுரைத் தென்றல் வருகிறது'' எனப் பாணர் விடை பகர்ந்தனர்.

தென்றலா அது?

கோவலன் கண்ணகி வாழ்வில்--ஏன்; நெடுஞ்செழியப் பாண்டியனின் ஆட்சியில் வீச இருக்கும் புயலுக்கான பொல்லாத அறிகுறியல்லவா அது?

## பதவிப் " பிரமாணம் !"




எம். சுப்பிரமணியம்.

" இன்னு வாத்தியாரே, பதவி குடுத்தாச்சி; பார்த்துக்க ஒருகை !"
" சரிதான் நைனு. விடுவேனு இந்த தி. மு. க. வை !"

# புது நிலை



பொங்கலெனில் புத்தரிசி, பசும்பால், வெல்லம்,
புதுப்பானை, கதிர்வாழ்த்தல், மாடு போற்றல்
செங்கரும்பு, தேன்கதலி, இஞ்சி, மஞ்சள்—
சிந்தனையில் இவைதாமே முன்னே நிற்கும்?
இங்கிருக்கும் புதுநிலைமை யாதோ என்றால்,
இவற்றுடனே நில்லாமல், இயக்க ஏடு
பொங்கலுக்குச் சிறப்புமலர் தருமா என்றும்,
பொலிவுமிக அச்சியற்றும் பொங்கல் வாழ்த்து

மடல்களிலே எந்தவகை வாங்க என்றும்
மனமயங்கும் மக்களெண்ணில் பெருகி விட்டார்!
உடல்பொருளும், தேவையெனில் ஆவி யையும்
உயர்வுமிகுந் தாயகத்தை மீட்கத் தந்து
கடமைதனை முடிக்கவல்ல கழக வீரர்
காட்டிவிட்ட முறையன்றோ! தென்னா டெங்கும்
கடலலைபோல் மகிழ்ச்சிநிலை பொங்க லன்று
காணுகின்றோம்; துன்பத்தைக் கணம்ம றப்போம்!

இந்துமதப் பண்டிகைகள் நிறைய வுண்டாம்;
எதனையுமே நமதாக ஏற்றோ மில்லை!
சொந்தமுடன் விழாவெனநாம் கொண்ட ஒன்று
சுவைமிகுந்த தைம்முதல்நாள் இஃதே யாகும்!
எந்தவிதக் கவலைக்கும் இடந்த ராமல்,
இனிப்புமிகுந் தமிழரது திருநா ளன்று
'செந்தமிழும் திருநாடும் வாழ்க!' என்று
செயல்படுவோம்; முயற்சிகளில் வென்று
வாழ்வோம்!



கருணாநிதி



பாலந்தாண்டி வந்தோம்
பாய்மரத்தை விரித்துவிட்டோம்!

[புகைப்படம்: சி. எஸ். பதி, சென்னை.]

# நடுகல்

## பழைய வழிபாடு

போரில் விழுப்புண்பட்டு இறந்த வீரர்க்குக் கல் எடுத்து விழாச் செய்தல் மரபு. அதுவே தமிழகத்துள் சிறப்புற்ற தெய்வ வணக்கமாக இருந்ததென்பது தொல்காப்பியர் விரிவாகக் கூறலால் நன்கு விளங்கும். (1) கற்காண்டல், (2) கால்கோள், (3) கல்லை நீர்ப்படுத்தல், (4) கல்லை நடுதல், (5) வீரன் பெயர்—செயல் முதலியவற்றைக் கல்மீது பொறித்தல், (6) கால்கொண்ட தெய்வத்திற்குச் சிறப்புச் செய்து வாழ்த்தல் என இக்கல் எடுப்பு விழா ஆறுவகைப்படும்என்பர் தொல்காப்பியர். நடுகல்லைப் பீலியாலும் மலராலும் அணிசெய்து, பல்லியம் ஒலிக்க விழவுச் செய்தல் தமிழர் மரபு. இங்ஙனம் நாட்டப்படுங் கல்லிற்குக் கோயிலும் மதிலும் வாயிலும் ஏனைச் சிறப்புகளும் செய்தலும் பழந்தமிழர் மரபு. இதனைச் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் எடுத்ததனைக் கொண்டு விளக்கமாக அறியலாம்.

இங்ஙனம் வீரர்க்குக் கல் நட்டமை—நட்டு வழிபட்டமை பண்டைத் தமிழ் இலக்கியங்களில் பலவிடத்தும் பரக்கக் காணலாம்.

## பலவகைப் போர்கள்

ஒரு நாட்டின்மீது படையெடுக்க விரும்பும் அரசன், பகைவன் நாட்டில் உள்ள ஆனிரைகளைக் கவர்தல் வழக்கம். இம்முயற்சி வெட்சித் திணை எனப்படும். இம்முயற்சியில் ஈடுபடும் வீரர்கள் வெட்சிப் பூவையோ மாலையையோ அணிவர். இம்முயற்சியை ஆனிரைகளுக்கு உரிய வீரர்கள் எதிர்த்து நிற்பர். இங்ஙனம் எதிர்த்தல் கரந்தைத் திணை எனப்படும். இதற்குரிய கரந்தைப் பூவையோ, கரந்தைப் பூமாலையையோ சூடிக்கொள்வர்.

இதற்கு அடுத்தபடி, படையெடுக்க விரும்பிய அரசன் பெரும்படையுடன் பகைவர் நாட்டின்மீது செல்வான். அவன் வீரரும் வஞ்சிப் பூவையோ, வஞ்சிப் பூமாலையையோ அணிந்துகொள்வர். இப்போர்முறை வஞ்சித் திணை எனப்படும்.

இப் போருக்கான வீரர் காஞ்சிப் பூவையோ, காஞ்சிப் பூமாலையையோ சூட்டிக்கொள்வர்.

நாடுபிடிக்க வந்த மன்னனும் வீரரும் கோட்டையை முற்றுகை இடுவர். அம்முறையே உழிஞைத் திணை என்பர். அவர்கள் உழிஞைப் பூவையோ, உழிஞைப் பூமாலையையோ சூடிக் கொள்வர். கோட்டைக்குள் இருக்கும் அரசனும் அவன் வீரரும் கோட்டைமதில் மீதிருந்து போரிடுவர். அம்முயற்சி நொச்சித்திணை எனப் பெயர் பெறும். அவர்கள் நொச்சிப் பூவையோ, மாலையையோ அணிவர்.

பரந்தவெளியில் இருவேந்தரும் அவர் தம் வீரரும் கடும் போர் புரிவர். அது தும்பைத் திணை எனப்படும். அப்போது இரு திறத்தாரும் தும்பைப் பூவையோ, தும்பைப் பூமாலையையோ சூடிக்கொள்வர், இரு திறத்தாருள் ஒருவர் வெற்றிபெற வேண்டுவது. இயற்கையன்றோ? அங்ஙனம் வெற்றி பெறுதல் வாகைத் திணை எனப் பெயர் பெறும். வெற்றி பெற்றவர் வாகைப் பூவையோ, வாகைப் பூமாலையையோ சூடிக்கொள்வர்.

சங்ககாலத் தமிழர் இங்ஙனம் பல போர்கள் செய்து வந்தனர் என்பதைப் பழம் பாடல்கள் தெரிவிக்கின்றன. போரைக் குறிக்கும் ஒவ்



வொரு திணைக்கும் அவர்கள் பல துறைகள் அமைத்துள்ளனர். ஒவ்வொரு துறையும் அப்போருக்குரிய ஒருபடியாகும்.

டாக்டர்
# மா. இராசமாணிக்கனார்

### கல்நாட்டு விழா

இப்போர்களில் தம் வீரத்தைக் காட்டி இறந்த வீரர் பாராட்டுக்குரியவ ராவார். ஒரு படை சிதறி ஓடுகிறது. உடனே ஒரு வீரன் தோன்றி அப்படைக்கு முன்நின்று பகைவரைத் தாக்கி அலைக் கழித்து, இறுதியில் பகைவர் தாக்குதலால் மடிகிறான். இத்தகைய வீரத்தை அவனைச் சேர்ந்த அரசனும் மற்ற வீரரும் பாராட்டுவர்; அவன் இறந்த இடத்தில் அல்லது அவனைப் புதைத்த இடத்தில் அல்லது அவனை எரித்த இடத்தில் அவனது வீரத்திற்கு அறிகுறியாக ஒரு கல்லை நடுவர். அக்கல்லில் அவனது உருவம் பொறிக்கப்பெறும். அவ்வுருவத்தின்கீழ் அவன் பெயரும் வீரச்சிறப்பும் குறிக்கப் பெறும். இங்ஙனம் நடப்பெறும் கல், முன்பு கூறியபடி நன்கு தேர்ந்தெடுக்கப்பட்டும், நீராட்டப்பட்டும் இருக்கும். அக்கல்மீது மயிற்பீலி சூட்டப்படும். கல் நடப்பட்ட அன்று அக்கல்லைச் சுற்றிலும் மேலே துணிப்பந்தர் அமைக்கப்பெறும்.

“உயரிசை வெறுப்பத்
  தோன்றிய பெயரே
மடஞ்சால் மஞ்ஞை
  அணிமயிர் சூட்டி
இடம் பிறர் கொள்ளாச்
  சிறுவழிப்
படஞ்செய் பந்தர்க்
  கல் மிசை யதுவே”

—என்பது புறநானூறு.

### அரசர் நடுகற்கள்

போரில் விழுப்புண்பட்டு இறந்த அரசனுக்கும் இவ்வாறே கல்நடுதலும், பின்பு அதனை வழிபடுதலும் வழக்கமாகும். தகடூரை ஆண்ட அதியமான் நெடுமானஞ்சி போரில் இறந்துபட்டான்; அவன் நினைவாகக் கல் நடப்பட்டது; நடப்பட்ட அக்கல்லின்மீது பீலி சூட்டப்பட்டது. நாரால் அரிக்கப்பட்ட தேறல் சிறிய கலத்தில் வைத்துப் படைக்கப்பட்டது.

“நடுகற் பீலி சூட்டி நாரரி
  சிறுகலத் துகுப்பவுங்
    கொள்வன் கொல்லோ”

—என்பது புறநானூறு.

தன் மக்களோடு வேறுபட்ட கோப்பெருஞ்சோழன் அரசைத் துறந்து வடக்கிருந்து உயிர்நீத்தான். அவன் உயிர்விட்ட இடத்தில் அவன் நினைவாகக் கல் நடப்பட்டது என்பதும் புறநானூறு கூறும் செய்தியாகும். கோப்பெருஞ்சோழன் போரில் இறக்கவில்லை. ஆயினும் அவனுக்குக் கல் நடப்பட்டது. சிறந்த ஒழுக்கமும் செங்கோன்மையும் உடைய வேந்தர்க்குக் கல் நடும் வழக்கம் அக்காலத்தில் இருந்தது என்பதை இஃது உணர்த்துகிறது அன்றோ?



### நடுகல் வழிபாடு

தன் ஆனிரையைக் கவரும் முயற்சியில் ஒரு வீரன் முனைந்தான். வெட்சியர் தாக்கியவுடன் இவ்வீரனைச் சேர்ந்தோர் ஓடலாயினர். ஆயினும், இவன் மட்டும் வெள்ளத்தை எதிர்த்து நிற்கும் அணைபோலப் பகைவரை எதிர்த்து நின்று போரிட்டு இறுதியில் இறந்தான்.

அந்தப் பெருவீரனுக்குக் கல் நடப்பட்டது; வீரர்கள் அக்கல்லை வழிபட்டு வந்தனர். அவ்வழியே செல்லும் வீரனைப் புலவர் ஒருவர் பார்த்து, மேலே கூறப்பெற்ற வீரச்செயலை அவனுக்கு விளக்கிக் கூறி, “அவ்வழியே

# திருநாள்

நாவுக்கரசன்

வரப்போரம் தலைதாழ்த்தி வணங்கி நெல்லை
வழங்குகதிர்க் கட்டெடுத்து வருவான்! வஞ்சி
துரப்போரக் காய்பறித்துக் கூடை போட்டுத்
தூக்கிஇடை துவளநடை இடுவாள்! நாளை
வரப்போகும் தமிழ்த்திருநாள் இல்லம் போற்ற
வகைபடைப்பாள்! அலங்கரிப்பாள்! குழந்தை எல்லாம்
தரப்போகும் புத்தாடைக் களிப்பால் ஆடும்!
தைபிறக்கும்! கதிர்வாழ்த்த உலகம் கூடும்!

முழங்குகிற மேகத்தைப் பிழிந்து, மண்ணில்
முத்துமுத்தாய் நீர்ஊற்றிப், பயிர்கள் காத்துக்
களங்கத்துத் திங்களுக்கும் ஒளியை ஈயும்
காவலனும் ஞாயிற்றின் உதயம் கண்டார்!
விழுங்குகிற கருப்பிருட்டைச் சிவப்புக் கீற்றால்
வீழ்த்திச்செம் பொன்பரப்பிக் கீழை வானில்
எழுங்கதிரைத் திருவிடத்தார் வாழ்த்து கின்றார்!
இழைந்ததடா பொங்கலெனும் மகிழ்ச்சி மின்னல்!

சீரகம்போல் புத்தரிசி, பசும்பா லோடு
செங்கரும்புச் சாறெடுத்துப் பானை கூட்டி
நேரிழையார் தமிழிசைத்தே இன்பம் எங்கும்
நிறைகவெனப் பொங்கலிட்டார். உழைப்பைப் போற்ற
ஏரிழுக்கும் காளைகட்கும் சிறப்புப் பொங்கல்
இட்டளித்தார்! அறுவடைநாள் புதுமை உண்டார்!
ஊரெல்லாம் விழாக்கோலம்! நாட்டின் வாழ்வை
உயர்த்தவரும் தைமுதல்நாள் நமது பொன்னாள்!!

செல்வையாயின், அவனது கல்லைத் தொழாமற் செல்லாதே'' என்று அறிவுறுத்தினார். (புறநானூறு, செய். 263).

ஒரு பெண்ணின் குடியைச் சேர்ந்த முன்னோருள் ஒரு வீரன் நடுகல்லாக வழிபடப் பட்டான். அந்தப் பெண் அந்நடுகல்லின் முன்னின்று, அதற்கு வழிபாடு செய்து, கைகுவித்து, "என் இல்லத்திற்கு விருந்தினர் வருவாராக, என் கணவனது வீரம் போரில் விளங்கும்படி எம் அரசன் பகையரசனைப் பெறுவானாக.'' என்று வேண்டினாள் எனப் புறநானூறு புகல்கின்றது. (செய். 306.)

இப்பெண்மணிக்கு விருந்து பேணும் ஆவலும், போரில் தன் கணவன் புகழ் எய்த வேண்டும் என்ற ஆர்வமும் இருந்தவாறு என்னே!

"பாணனே, நீ செல்லும் வழியில் மிகச் சிறந்த வீரன் கல்லாகி நிற்கின்றான். அவன் அத்திசைக்குத் தெய்வமாய் நிற்கின்றான். அவனைக் கைதொழுது செல்வாயாக.'' என்பது ஒரு பாடல்.

"அடும்புகழ் பாடி
அழுதழுது நோனா(து)

இடும்பையுள் வைகி
இருந்த—கடும்பொடு

கைவண் குரிசில்கல்
கைதொழூஉச் செல்பாண

தெய்வமாய் நின்றான்
திசைக்கு''

—புறப்பொருள் வெண்பா மாலை.

இங்ஙனம் நடுகல் பெற்ற வீரர் பலராவர். அவ்வீரரது போர்ப்புகழைப் புலவர் பலர் உளமாரப் பாராட்டிப் பாடியுள்ளனர். அப்பாடல்கள் நம் தமிழகத்து மறவரது மறத்தையும் புகழையும் நன்கு எடுத்து நவில்வனவாகும். ஃ

# கல்லாக் கவித்திறம்



புலவர்குழந்தை

பசும் பொற் பட்டாடையின் கண் அமர்ந்து பண்ணியம் தின்பார் போல, ஒரு பசும் புற்றரையில் ஆடுகள் புல்மேய்ந்து கொண்டிருக்கின்றன. அவ்வாடுகட்குப் பாதுகாப்பாக ஆடு மேய்க்கிச் சிறுவன் ஒருபுறம் நின்று கொண்டிருக்கிறான். அவன் ஆடுகள் மேய்வதைப் பார்த்துக் கொண்டு சும்மா நிற்கவில்லை. ஆடுகள் புல் மேய்கின்றன, அவனுக்கு வேலை வேண்டுமே. சும்மா நின்று கொண்டிருப்பது சிறுவர்க்கியல்பா? மேய்கின்ற ஆடுகளைப் பார்த்துக் கொண்டே அவன் எவ்வளவு நேரம் சும்மா நின்றுகொண்டே இருப்பான் நடுகற்போல? அவ்வாறு சும்மா இருப்பது மக்கட் பண்பாட்டுக்கேற்றதா? அப்பண்ட மேய்க்கிச் சிறுவன் சும்மா நிற்கவில்லை; பாட்டுப் பாடுகிறான். அவன் பொழுதுபோக்காக உட்கார்ந்து பாடிக்கொண்டிருக்கிறான்.

அச் சிறுவன் வாய்க்கு வந்தசொற்களை அடுக்கி அழகாகப்பாடுகிறான். அவன் காரிகை கற்றுக் கவிபாடும் கவிஞன் அல்லன். எனினும், அவன் பாடும் பாட்டு, பாட்டு என்னும் பெயருக்கேற்றவாறு பாட்டாகவே அமைந்துள்ளது. கேட்போரை இன்புறச் செய்யும் நடையழகும், மோனை எதுகை முதலிய தொடையழகுங் கூட அப்பாட்டில் நன்கு அமைந்துள்ளன.

வெறும் சொல்லடுக்கு மட்டும் அல்ல, பொருட்செறிவும் நன்கு அமைந்துள்ளது அப்பாட்டில்.

எழுத்தறிவில்லாத அப்பண்ட மேய்க்கிச் சிறுவனுக்கு, இலக்கிய இலக்கணம் இன்னதென்றே அறியாத அச் சிறுவனுக்கு, யாப்பறிவில்லாத அவ் விளவலுக்கு எங்ஙனம் அத்தகைய பாட்டுப் பாட முடிந்தது? அதன் காரணம் என்ன? அதுதான் தமிழ் மொழிக்குரிய தனிப் பெருந்தன்மை! இது எல்லா மொழிக்கும் உரியதெனினும், தமிழ் மொழிக்குள்ள அத்தகு தகுதியும் சிறப்பும் மற்ற மொழிகளுக்கு அமையவில்லை. காரணம், தமிழ் மொழியின் இயற்கைத் தன்மையும், வேண்டிய அளவு மோனை எதுகைச் சொற்கள் இருத்தலுமேயாகும். தமிழ் மொழிபோல் கல்லாக் கவிஞர்களை யுடைய மொழி உலகில் வேறொன்றும் இல்லை என்பது பொய்யுரையாகாது; பொருள் பொதிந்த பொன்னுரையேயாகும்.

இனிக் கல்லாச் சிறுவன் அத்தகு கவிபாடும் திறமை பெற்றதற்கேது என்ன வெனில், உரிமை வேட்கையுடைய அவனது இயற்கையுள்ளத்தெழுந்த உணர்ச்சிப் பெருக்கே யாகும். இதுவே கவிதை தோன்றுதற்குரிய கருக்கூடு எனலாம். ஆம், அக் கருப்பையில் உருவாகிய கவியே கவி என்னும் பெயருக்கேற்ற கவியாகும்.

அக் கல்லாச் சிறுவன், கற்று வல்ல கவிஞர் போலப் பிறருக்காகக் கவி பாடவில்லை. அவன் தனக்காகவே பாடினான்; தன்னுணர்ச்சியால் தூண்டப்பட்டுத் தன் உள்ளக் கிளர்ச்சிக்காகவே பாடினான். தன் போக்கில் பாடிப்பாடி அவன் தமிழின் இனிமையை நுகர்ந்தான்; தமிழின் தனியின்பம் பெற்றான். அவன் தமிழன்னையின் அழகுக்கழகு செய்தான்; தாய் மொழித் தொண்டு, தமிழ்த் தொண்டு செய்தான்.

அச் சிறுவன் பாடிய பாட்டு இனிய இசைப் பாட்டு. அவன் சும்மா நின்றுகொண்டே இசையுடன் பாடவில்லை. பாட்டின் பொருளுக்கேற்றவாறு ஆடிக்கொண்டே பாடினான். அவன் இனிய இசையுடன் ஆடிக் கொண்டு பாடினான். அவ்விசை அவனாகவே அமைத்துக் கொண்ட தனியிசையாகும். ஓரிசையை அவன் தழுவிப் பாடவில்லை. அது கல்லாக் கவிஞனாகிய அச் சிறுவனின் பண் பாடன்று. அவ்வாறு பாடியிருந்தால் அவன் கவி அவ்வளவு சிறப்புடைய சீரிய கவியாக அமைந்திருக்காது.

கல்லாக் கவிஞனாகிய அப் பண்ட மேய்க்கிச் சிறுவன் புதிதாகக் கவி பாடுகிறான்; அக் கவியை இசையுடன் பாடுகிறான்; இசையோடு பாடிக் கொண்டே பாட்டின் பொருளுக்கேற்றவாறு ஆடுகிறான். எனவே, அச்சிறுவன் ஒரு முத் தமிழ்க் கவிஞனாகவன்றோ திகழ்கின்றான்? ஆம், அவனொரு முத்தமிழ்க் கவிஞன்தான். புதிதாக இசையுடன் பாடியாடுவது தானே முத்தமிழின் இலக்கணம்? இப் பொல்லாச் சிறுவனின் கல்லாக் கவித் திறமே கவித் திறம்! இதோ அக்கல்லாக் கவிஞனின் கவி ஒன்று,

‘ மத்தியான நேரத்திலே
மாடுகன்றி னோரத்திலே
பத்திபத்தி யாகமேயும்
வெள்ளைக் கொக்காரே!
--மாட்டுப்
பாலைப்போலப் பறந்துசாயும்
வெள்ளைக் கொக்காரே!’’

பாட்டு எப்படி? மோனையும் எதுகையும் இயைபும் துள்ளி விளையாடுகின்றன வல்லவா? ‘நேரத்திலே --- ஓ ர த் தி லே, மேயும் -- சாயும்’ எத்தகைய இயைபின்பம்! ‘மாடு கன்று’ என உம்மைத் தொகையும், ‘பத்திபத்தியாக’ என இணைச் சொற்றொடரும் இன்பந் தருகின்றன வல்லவா? கருத்துக்குத் தான் என்ன? கொக்குகள் பத்திபத்தியாக மேய்கின்றன வாம். கொக்குக் கூட்டமொன்று மாட்டுப் பாலைப் போல வெள்ளை வெளேரெனப் பறந்து வந்து மாடுகளுக்குப் பக்கத்தில் உட்காருகின்றன வாம். உவமை எப்படி? அருமையான உவமை யல்லவா? மடியிலிருந்து மாட்டுப் பால் வீழ்வது போல வானிலிருந்து கொக்குகள் பறந்து வருகின்றனவாம். என்னே கல்லாக் கவிஞனின் கவித்திறம்! இனி, அஃறிணைப் பொருளாகிய கொக்குகளைக் ‘கொக்காரே’ என உயர்திணைப் பொருள் போல விளித்திருப்பதும், கேளாதவற்றைக் கேட்பன போலப் பாடும் இலக்கண விதிப்படி ‘கொக்காரே’ என்பதும் எத்தகைய சொன்னயமும் பொருணயமும் உடையவை!

செய்யுள் உறுப்புக்களுள் ஒன்று மரபு என்பது. அது பெயர்ச் சொல், வினைச் சொல், இடைச் சொல், உரிச் சொல் என்னும் உலக வழக்கச் சொற்களை அடுக்கிப் பாட்டாகப் பாடுவதாகும்.

‘‘ மரபேதானும்,
நாற்சொல் இயலான் யாப்பு
[வழிப் பட்டன ’’

என்பது தொல்காப்பியம் (செய். 80). நம் பண்டமேய்க்கிப் பாட்டு அம்மரபு என்னும் இலக்கணப்படி அமைந்ததேயாகும். இத்தகைய இயற்கைக் கவிகளைப் பிற்காலத்தார் தெம்பாங்கு என்றனர். இன்று கூடப் பண்டமேய்க்கிகள் பாடும் பாடல்களை எழுதினால், அவை சிறந்த சீரிய பேரிய இலக்கியச் செல்வங்களாகத் திகழும் என்பதில் ஐயமில்லை.

முறையாக இலக்கிய இலக்கணங் கற்றுச் செய்யுளியற்றுந் திறம் பெற்றுச் சிறந்த புலவர்களான பின்னர், ஒருவர் இப் பண்டமேய்க்கி போல் பாடும் பாடலைப் பிற்காலத்தினர் ஆசு கவி எனவும், அவ்வாறு கவி பாடுங் கவிஞரையும் ஆசுகவிஞர்எனவும் கூறி சிறப்பித்தனர். ஆனால், இலக்கிய இலக்கணம் இன்னவென்றே அறியாது, ஏன்? எழுத்தறிவே இல்லாது ஆசுகவி பாடும் நம் பண்ட மேய்க்கி போன்ற கல்லாக் கவிஞரை என்னென்றழைப்பது? இத்தகைய இயற்கைக் கவிகளின் தமிழ்த்தொண்டைப் புறக்கணித்து வாழ்வது தமிழ்த்தாயின் குறைபாடேயாகும். என்று தமிழ் மக்கள் இக்குறைபாட்டைக் களைந்து தமிழன்னையைப் பெருமைப் படுத்துவார்களோ?

பண்ட மேய்க்கிகள் மட்டுமா இத்தகைய தமிழ்த் தொண்டு செய்து வருகிறார்கள்? இல்லை, இன்னும் இவர் போன்றார் எத்தனையோ பேர் இத்தகைய தொண்டினைச் செய்துவருகிறார்கள். கல்லாக் கவிஞர்களாய்த் திகழ்கிறார்கள். அவர்களுள் ஒரு சிலர் கவித்திறத்தினை இங்கு காண்போம்.

இரவு பத்து மணிக்குமேல் இருக்கும். வழியில் பார வண்டிகள் வரிசையாகச் செல்கின்றன. அவ்வண்டிகள் செல்வதை அவ்வண்டிச் சக்கரங்களின் கீச்சுக் குரல் நமக்குத் தெரிவிக்கிறது. அவ்வண்டிக்காரரில் ஒருவன் பாடுகிறான். அப்பாடல் சக்கரங்களின் கீச்சுக்குரலோசையோடு இணைந்து கேட்போருக்கு இன்பமூட்டுகிறது. அவ்வண்டிக்காரனும் நம் பண்ட மேய்க்கிச் சிறுவனைப்போல எழுத்தறிவில்லாதவனேயாவான்; காரிகை என்பதைக் காதாலும் கேட்டறியாதவனே அவனும். அப்பண்ட மேய்க்கி போல உணர்ச்சிப் பெருக்கினால்தான், உள்ளக் கிளர்ச்சிக்காகத்தான் அவ்வாறு கற்று வல்ல கவிஞர் போலப் புதுப்புதுக் கவிதை புனைந்துகொண்டு, தான் இரவில்வண்டியோட்டுகிறோம் என்பதையே மறந்து, தமிழின் தனியின்பத்தில் திளைத்துக் களித்துக் கொண்டு செல்கின்றான். இவ்வண்டிக்காரன் பாடல்களும் நம் பண்ட மேய்க்கிப் பாடல்கள் போல நடையழகும் தொடையழகும் உடையவையே; பொருட் பொலிவு பொலிந்து விளங்குபவையே. இப்பாடல்களையும் பிற்காலத்தார் தெம்பாங்கு என்றே பெயரிட்டழைக்கலாயினர்.

அடுத்த கல்லாக் கவிஞர்கள் துணி வெளுக்கும் தொழிலாளர்கள், துணியை வண்ணஞ் செய்வோர், பூசாரிகள் ஆகியோர்.

இற்செறிப்பினால் குறியிடம் சென்று தலைவனைக் காணப் பெறாத தலைவி அப்பிரிவுத் துன்பத்தால் வருந்துவள். தலைவிக் குற்ற நோயின் காரணமறியாத செவிலி, வேலன் என்பானை வரவழைத்துக் கேட்பள். அவ்வேலன் வெறியாடித் தலைவிக் குற்ற நோயின் காரணத்தைக் கூறி செவிலியைத் தேற்றுவான் என்கின்றது தொல்காப்பியம். ஐயாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட தொல்காப்பியர் காலத்துக்கு முன்னமே சாமியாடி வாக்குச் சொல்லும் பூசாரிகள் இருந்து வந்திருப்பதால், இலக்கிய இலக்கணச் சிறப்பும் பெற்றிருப்பதால், இக்கல்லாக் கவிஞர்களின் கவித்திறத்தின் பழமையும்பெருமையும்அறிந்து இன்புறத் தக்கனவாகுமன்றோ? இப்பூசாரி வேலைக் கையில் கொண்டு ஆடுவதால் வேலன் எனவும், வெறியாடுவதால் வெறியாட்டாளன் எனவும் பெயர் பெறுவர். பழந் தமிழ்ப் புலவர்கள் இவர்களை அகத்திணையின் ஓர் உறுப்பாகப் போற்றுதலைச் சங்க நூல்களில் காணலாம்.

இன்னும் கல்லாமல் கவி பாடும் கல்லாக் கவிஞர்கள் பலர் உண்டு எனினும், அவர்களுள் ஒரு வகையினரின் கவித்திறத்தை இங்கு கூறாமல் விடுத்தது அறிவுடைமை யாகாது. தமிழ் மொழியைத் தமிழ்த்தாய் என வாயினிக்கக் கூறிக்கொண்டு, அத்தமிழ்த் தாயினத்தைக் கல்லாக் கவிஞர்களாக்கிய பெருமை தமிழ் ஆடவர்க்கே உரிய தனிப்பெருமையாகும்! "அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு?" என்று அடக்கி யாண்டுங்கூட அத்தண்டமிழ்ப் பெண்டிர் எப்படியோ கல்லாக் கவிஞர்களாகி விட்டனர்.

அக்கல்லாக் காரிகையரின் கவித்திறம் இரு வகையில் வெளிப்படுகின்றது. ஒன்று தாலாட்டு, மற்றொன்று ஒப்பாரி. இவ்விரு வகைக் கவி பாடுவதிலும் அவர்க்கு நிகர் அவரேயாவர். அக்கவிகள்பாடும் திறம் அன்னாரின் தனியுடைமை யாகும்.

இயன் மொழி வாழ்த்து என்பது, புறத்திணைப் பாடாண் துறைகளுள் ஒன்று. அது, ஒருவனைப் பாடும்போது, அவன் பெருமையோடு அவன் குல முன்னோர் பெருமையினையும் அவன் மேலேற்றிக் கூறுவதாகும். அதாவது, ஒருவன் முன்னோர் செய்ததை அவன் செய்ததாகவே கூறுவது. இதைத் தாய்மார்கள் பாடும் தாலாட்டில் அப்படியே காணலாம். அத்தாலாட்டுப் பாடல்கள் இத்தகைய துறையாயமைவதோடு, உவமை உருவகம் முதலிய பல்வகை அணிநலமும், மோனை எதுகை இயைபு முதலிய தொடை நலமும் பொருந்தியனவாகும். பழந்தமிழ்ப் புலவர்கள் பாடியுள்ள எந்த ஓர் இயன் மொழி வாழ்த்துப் பாடலுக்கும் இத்தாலாட்டுப் பாடல்கள் இளைத்தவை யல்ல.

அடுத்த ஒப்பாரியோ ஒப்புயர்வற்றதாகும். ஒப்பாரி பாடுவதில் இப் பாரில் ஒப்பாருமில்லாதார் துப்பா ரிதழுடைத் தோகையரே யாவர் என்பது மிகைபடக் கூறலாகாது. கல்லன்ன மனத்தையும் கரைவிக்கும் தன்மை வாய்ந்தது ஒப்பாரி. பெற்ற தாயையோ, தந்தையையோ, கொண்ட கணவனையோ இழந்து தலைவிரிகோலமாய் அழுது புலம்பும் ஒருத்தி, ஆறாத் துயர்க் கடலில் வீழ்ந்தாழ்ந்து கரை காணாமல் தவிக்கும் அதுபோது, மோனை எதுகை முரண் இயைபு அளபெடை என்னும் ஐந்து தொடையும் அப்படியே அமைய, காலத்துக் கேற்ற கருத்துச் செறிவுடன், செய்யுள் நலம் திகழும்படி பாடும் அப்பாடலை நோக்கின், காரிகையரின் கல்லாக் கவித் திறத்தின் சிறப்பினை என்னென்றியம்புவது! உவமை முதலிய பொருளணிகளோடு, திரிபு, மடக்கு என்னும் சொல்லணிகளும் பொருந்தி விளங்குவன அப்பாடல்கள்.

தற்குறி என்னும் பெயரைத் தகவுடன் தாங்கிய ஒருத்தி, காரிகை என்பதைக் காதாலுங் கேட்டறியாத ஒரு காரிகை எங்ஙனம் இத்தகைய சிறப்புடைய சீரிய பாடலைப் பாடுகிறாள்? எவ்வாறு அவளால் அவ்வாறு பாட முடிகிறது? இஃதொரு புதிராகவன்றோ உளது? புலவர் பட்டம் பெற்றவர்களில் ஒரு சிலரே மோனையும் எதுகையும் நன்கு அமையப் பாட முடியாது யாப்புக் குறையுடைய பாட்டுக்களைப் பாடும்போது, எழுத்தறிவில்லா ஏந்திழை நல்லாரால் எங்ஙனம் அத்தகு சிறந்த சீரிய பாடல்கள் பாட முடிகிறது? அதுதான் இயற்கை யெழுச்சியின் இயல்பாகும். அதுதான் உணர்ச்சிப் பெருக்கின் ஒதுக்கிடமாகும். காரிகை கற்றுக் கவி பாடுவோர்க்கு அத்தகு உணர்ச்சி இன்மையால் கவித்திறம் நன்கு அமைவதில்லை. அகராதியிலிருந்து தேடி யெடுத்து அவர்கள் மோனையும் எதுகையும் அமைப்பதால் கருத்தமைவதில்லை. கருத்தமைந்தால் யாப்பமைவதில்லை. யாப்பமைந்தால் கருத்தமைவதில்லை. கவியுள்ள முடையோர்க்கே எளிதில் இயல்பாகச் சிறந்த கவிகள் அமையும்.

காலத்துக் கேற்ற கருத்தமைவுடையதே கனி எனப்படும். பழமையை விளம்பிக்

கொண்டே இருப்பது சிறந்த கவியாகாது. பழமையும் புதுமையும் கொஞ்சிக் குலவி விளையாடுவதே கவி எனப்படும். இவ்வாறு அமையுங் கவிகளை மறுமலர்ச்சிக் கவி என்பர். மறு மலர்ச்சியை யுண்டாக்கும் கருத்தமைவில்லாத கவி உயர் கவி யாகாது.

எடுத்துக் காட்டாக, இக்கால ஆண் மக்கள் அத்தனை பேரும் குறுங் குஞ்சி யுடையராய் இருக்க, ஓர் ஆண்மகனை வருணிக்கும் கவிஞரொருவர், உருவக உவமை ததும்ப அவன் குடுமியை வருணிப்பது எங்ஙனம் கவி எனப்படும்? அவனது குறுங்குஞ்சியை வருணிப்பதன்றோ கருத்துடைக் கவியாகும்? கல்லாக் கவிஞர்களாகிய காரிகையார் அத்தகு பழமை பாராட்டிகளல்லர்; காலத்துக் கேற்ற கருத்தமைவுடைய கவிபாடுங் கவிஞர்களாவர்.

இன்று ஒருத்தி பாடும் ஒப்பாரியில் வானூர்தி வட்டமிடும், அணுகுண்டு தணதணக்கும், வானொலி தேனினிக்கும். ஏன்? செயற்கைத் திங்கள் கூடச் செவி கேட்கும். மறுமலர்ச்சி மறுமலர்ச்சி என்போர் இத்தகைய பாடல்களுக்கு என்ன பெயரிடப் போகிறார்கள்? அம்மங்கையர் மறுமலர்ச்சியை எங்கே கற்றனர்? அவர் தாம் எழுத்தறிவில்லாராயிற்றே, எவ்வார இதழ் அல்லது நூலிலிருந்து கற்றுத் தெரிந்து காலத்துக் கேற்ற கருத்தமைத்து மறுமலர்ச்சிக் கவி பாடுகின்றனர்? உள்ளத்துணர்ச்சியின் சிறப்பே இதற்குக் காரணமாகும்.

இன்னும் ஒரு 'புதுமை' ஒருத்தி தானும் பாடியழுது கொண்டே மற்ற மகளிர் பாடும் பாட்டுக்களையும் மனப்பாடம் செய்துகொள்வாள். இதுவும் இயற்கை யெழுச்சியின் இயல்பே யாகும். அவள் தன் ஊருக்கு வந்ததும் ஊர் மகளிரைக் கூட்டி வைத்துக் கொண்டு, தான் கற்று வந்த புதுப் பாடல்களை அம்மகளிர் பாடிய இசையுடன் பாடிக் காட்டுவாள். ஓர் இழவு வீட்டில் பலர் கூடி 'ஓஒ'வென்று அழும் அக் கூப்பீட்டொலிக் கிடையே, பிறர் பாடும் பாட்டை ஒரு முறை பாடினதும் மனப்பாடம்



செய்வதும், அப்பாட்டுக்களை அப்படியே மாலைவரை மறவாமல் இருப்பதும், அவர்கள் பாடினது போலவே பாடிக் காட்டுவதும் வியப்பினும் வியப்பாகவன்றோ உள்ளன? இயற்கையுணர்ச்சியின் பெருமையே பெருமை!

இன்னும் இத்தகைய கல்லாக் கவிபாடுவோர் பலர் உண்டு. அவ் வெல்லாக் கல்லாக் கவிஞர் கவிகளும் மேற்கூறிய கவிகள் போன்றே சீருஞ் சிறப்புடன் திகழும். அக்கல்லாக் கவிகளையெல்லாம் எழுதி இனப்படுத்தினால் அவை அரும்பெரும் இலக்கியச் செல்வங்களாகும். தமிழ் இலக்கியம் மறுமலர்சசி பெற்றுத் திகழும். தமிழில் காலத்துக்கேற்ற இலக்கியம் வளரவில்லை என்னும் குறைபாடு நீங்கும். இது நம் முன்னிற்கும் தலையாய பணியாகும்.

'இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பல்' என்பது இலக்கியஇலக்கணவரன்முறை. தமிழில் முதல் முதல் இலக்கணந் தோன்று முன்னரே கல்லாக் கவிகள் தோன்றி மிளிர்ந்தனவாகும். அக்கவிகளுக்கே பிற்காலப் புலவர்கள் இலக்கணம் கண்டனர்; அக் கவிகளின் அமைப்பினை எழுதி அவற்றிற்குக் குறியீடு இட்டனர். அக் குறியீடுகளே யாப்பிலக்கணம் எனப்படும். இயல்பாக எழுந்த அக்கல்லாக் கவிகளைப் பின்பற்றி, அவற்றின் இலக்கண மரபைத் தழுவி அமைத்தவையே வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் பாக்கள்.

பின்னர் யாப்பிலக்கணம் கற்று, யாப்பின் மரபு வழுவாமல் நால்வகைப் பாக்களும் பாடித் தமிழ் இலக்கியச் செல்வத்தை வளர்த்து வந்தனர், பிற்காலத் தமிழ்ப் புலவர்கள். காலப்போக்கு அவ்வரம்புக் குட்படவில்லை. இயற்கையைச் சிறைப்படுத்தயாரால் முடியும்? காலப் போக்கு அவ்வரம்பைக் கடந்து விட்டது. இயற்கையின் திசையை நோக்கிச் சென்றது. அதனால் பிற்காலத்தே தாழிசை, துறை, விருத்தம் என்னும் பாவினங்கள் தோன்றின. பின்னர்ப் பாவும் பாவினமும் பாடித் தமிழ்வளர்த்து வந்தனர் நந் தமிழ்ப் புலவர்கள். எனினும், பண்ட மேய்க்கி முதலிய கல்லாக் கவிஞர் மரபு அழிந்துபடவில்லை. அம்மரபும் அன்றுமுதல் இன்றும் அப்படியே நடந்து கொண்டேதான் வரலானது. பாவும் பாவினத்திற்கும் உட்படாது தனித்து நடந்துவந்த அச் செய்யுள் மரபினையே, ஆசிரியர் தொல்காப்பியர் செய்யுளியலில், ''அவ்வேழ் நிலத்தும்'' (79) ''அடிவரையில்லன ஆறென மொழிப'' (264) என்னும் சூத்திரங்களில், 'வாய்மொழி, பிசி,' முதலியனவாகக் குறித்துள்ளார்.

பிற்காலத்தார் அக்கல்லாக் கவிகளை ஒட்டிப் பாடியவையே கும்மி, சிந்து முதலிய பாவகைகள் இவற்றிற்கு இலக்கணம், என்னால் எழுதப்பட்ட யாப்பதிகாரம் என்னும் நூலில் காண்க. நமது முன்னோர்கள் இயல்பாக எழுந்த அக்கல்லாக் கவிகளைப் பின்பற்றிப் பாவும் பாவினமும் வகுத்துப் பாடித் தமிழ் வளர்த்து வந்தனர். அயல் மொழியாட்சியால் அம்மரபு தடைப்பட்டுப்போய் விட்டது. அம்மரபை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வந்து நமது தாய் மொழியாம் தமிழ் மொழியை வளர்ப்பது தற்காலத் தமிழ்க் கவிஞர்களின் நீங்காக் கடப்பாடாகும். வெண்பா முதலிய பாமரபு, தாழிசை முதலிய பாவின மரபு, கும்மி, சிந்து முதலிய கல்லாக் கவி மரபு ஆகிய அம்மும்மரபினையும் முறையொடு வளர்க்க, அம் மூவகைக் கவிகளையும் முறையொடு பாடத் தற்காலத்தமிழ்க் கவிஞர்கள் முற்படுவார்களாக. தமிழ்ச் செய்யுள் மரபுதோன்றுவதற்குக் காரணமான அடிப்படையான அக்கல்லாக் கவித்திறம் வாழ்க! அக்கல்லாக் கவிஞர்கள் வாழ்க!

# அருங் கலைத் திறன்

டாக்டர் மு. வரதராசனார்

சிலப்பதிகாரத்தில், புகார்க் காண்டத்தில் கோவலன் கண்ணகியை மணந்துகொண்டு சில ஆண்டுகள் வாழ்வதும், அவளைப் பிரிந்து மாதவியின் அழகிலும் ஆடல் பாடல்களிலும் விருப்பம்கொண்டு பல ஆண்டுகள் வாழ்வதும், ஒருநாள் மாலையில் கடற்கரையில் விட்டுப் பிரிவதும், வருந்திய உள்ளத்துடன் வீட்டிற்குச் சென்று கண்ணகியை அழைத்துக் கொண்டு மதுரைக்குப் புறப்படுதலும் காண்கிறோம். அவற்றால் விளங்குவன கோவலனுடைய செல்வம், அழகு, கலையார்வம், நுண்ணுணர்ச்சி, தவறை நினைந்து வருந்தும் தன்மை ஆகியவைகள். கோவலனைப் பற்றி இவ்வளவு அறிந்த நாம் இதற்குமேல் அவனுடைய சிறந்த பண்புகளை அறியாமல், அவன் மதுரையில் ‘அறநிலை பிழைத்த’ பாண்டிய மன்னனால் கொலையுண்டான் என்ற செய்தியை மட்டும் அறிவோமானால், நம் உள்ளம் அவ்வளவாக வருந்தாது. பொறுப்பும், நெறியும், கடமையுணர்வுமில்லாதவன் மடிந்தான் என்ற எண்ணமே நம் நெஞ்சில் நிற்கும். இளங்கோவடிகள் சிறந்த கலைஞராகையால் நம்உள்ளம் வருந்தும் முறையில் காவியம் அமைத்திருக்கிறார்.







**உருவமே சிறிதானாலும்**
**கருமமே கண்ணாயினாய் !**

*புகைப்படம்; ஜெயபால், நாகூர்.*

---

மதுரையில் கோவலன் கொலையுண்டு வீழு முன் அவனுடைய அரும்பண்புகள் பலவற்றை எடுத்துரைத்து நம் நெஞ்சில் பதியவைக்கிறார். மதுரைக்குப் பக்கத்தில் அறவோர் பள்ளியில் கோவலன் இருந்தபோது வழி நடந்த வருத்தம் தீர அந்தணன் ஒருவன் அங்கே வருகின்றான். அவன் பெயர் மாடலன். கோவலனுடைய ஊரைச் சார்ந்தவன். அவனுக்கு அறிமுகம் ஆனவன். மாடலன் கோவலனைக் கண்டதும் அவனுடைய வாழ்க்கையின் மாறுதல் உய்த்துணர்ந்து திகைக்கிறான். அப்போது காவிரிப்பூம்பட்டினத்தில் அவன் வாழ்ந்த பெருவாழ்வு அவன் நினைவுக்கு வருகிறது. மாதவிக்கு மணிமேகலை என்னும் குழந்தை பிறந்தபோது அக்குழந்தைக்குப் பெயர் வைக்கும் நன்னாளில் அவன் செல்வத்தை வாரி வழங்கிய அறச்செயலை நினைக்கின்றான். அன்று மத யானையின் கையில் அகப்பட்ட முதியோன் ஒருவனைக் காப்பாற்றக் கோவலன் துணிந்துசென்று யானையை அடக்கி அவனைக் காப்பாற்றிய வீரத்தையும் கருணையையும் நினைக்கின்றான். தான் அறிந்த ஒரு குடும்பத்திற்குப் பெரும்பொருள் உதவியாகக் கொடுத்து கணவன் மனைவியிடையே பிரிவு நேராமல் அவர்களை நல்வழிப் படுத்திய அருஞ்செயலை நினைக்கிறான். பொய்ச் சாட்சி கூறிய வறியவன் ஒருவனைக் காக்கத் தன் உயிரைக் கொடுக்கத் துணிந்த துணிவையும் அதற்கு இடமில்லாமற்போன நிலையையும் இறந்தவனுடைய சுற்றத்தாரையெல்லாம் பல ஆண்டுகள் உதவி புரிந்து காப்பாற்றிய பெருந்தன்மையையும் நினைக்கிறான்.

> பிடர்த்தலை இருந்து பெருஞ்சினம் பிறழாக்
> கடக்களிறு அடக்கிய கருணை மறவ!...
> கானம் போன கணவனைக் கூட்டி
> ஒல்காச் செல்வத்து உறுபொருள்
> கொடுத்து
> நல்வழிப் படுத்த செல்லாச் செல்வ!...
> அவன், சுற்றத் தோர்க்கும் தொடர்புறு
> கிளைகட்கும்
> பற்றிய கிளைஞரின் பசிப்பிணி அறுத்துப்
> பல்லாண்டு புரந்த இல்லோர் செம்மல்!

இந்தப் பிறப்பில் யானறிந்தவரையில் நீ பற்பல நன்மைகளையே செய்திருக்கிறாய், ஆயினும் உனக்கு இத்தகைய துன்பம் நேர்ந்ததே என்று மாடலன் வருந்துகின்றான்,

> இம்மைச் செய்தன யானறி நல்வினை
> உம்மைப் பயன்கொல் ஒருதனி உழந்துஇத்
> திருத்தகு மாமணிக் கொழுந்துடன்
> போந்தது

இளங்கோவடிகள் இதை அமைப்பது கொலைக்களக் காதைக்கு முற்பட்ட அடைக்கலக் காதையில் ஆகும். கோவலனுடைய உயர்ந்த பண்புகளையெல்லாம் இப்போது அறியும் நாம் அவனைப் பற்றி மிக உயர்வான எண்ணம் கொள்கிறோம். அவனுடைய உயர்ந்த பண்புகள் நம் நெஞ்சில் பதிந்து நீங்காமல் நிற்பதால் அவன் கொலையுண்டு வீழும்போது மிகமிக வருந்துகிறோம், அவனுடைய உயர்ந்த பண்புகளைத் தொடக்கத்திலேயே எங்கேனும் கூறியிருப்பாரானால் அவை இவ்வளவு தெளிவாக நம் உள்ளத்தில் பதிந்திருக்க வியலாது. அதனால் கோவலனுக்காக நாம் வருந்தும் வருத்தம் குறைந்திருக்கக்கூடும். கலைஞரின் நோக்கமோ நம் உள்ளத்தே உணர்ச்சிகளைப் பெருக்குவதாகும். நல்லோரின் துன்பத்திற்காகக் கசிந்து கண்ணீர்விடச் செய்வதும், தீயோரின் அழிவிற்காக இரங்கி அமைதியடையச் செய்வதும் கலைஞரின் கடமை

யாகும். ஆகையால் உயர்ந்த அன்பு, உயர்ந்த வெறுப்பு, உயர்ந்த வேட்கை, உயர்ந்த வீரம் முதலிய உணர்ச்சிகள் நம் உள்ளத்தே எழுமாறு செய்ய விரும்பும் கலை ஞர் உயர்ந்த மக்களைப் படைத்து, போராட் டங்களையும் படைத்துக் காட்டுகிருர். அந்த உணர்ச்சிகள் மிகுமாறு ஏற்ற வகையில் பல நிகழ்ச்சிகளையும் அமைத்துச் செல்கிருர். தொடக்கத்தில் கோவலனுடைய உயர்ந்த பண்புகளைக் கூருமல் கொலை நிகழ்ச்சிக்கு முன்பு மாடலன் வாயிலாக அவன் கண்ட றிந்த சான்றுகளாகச் சிலவற்றைச் சொல்லிக் கோவலனுடைய உயர்ந்த பண்புகளை ஆசிரியர் நம் நெஞ்சில் பதிய வைக்கின்ருர், அன்றியும் கோவலனுக்கும் கண்ணகிக்கும் திருமணம் ஆனபின் அவனுடைய பாராட்டு மொழி களைக் கேட்டோமே அல்லாமல், கண்ணகி யின் அன்பான இல்லறத்தைக் காணவில்லை, கண்ணகியின் அன்பான இவ்லறத்தையும் இளங்கோவடிகள் கோவலன் கொலையுண் ணும் அன்றுதான் காட்டுகிருர். மதுரையில் ஆயர்பாடியில் மாதவி வீட்டில் கண்ணகி திருமுகம் வியர்த்துச் செங்கண் சிவக்கச் சமையல் செய்யும் திறத்தையும் வாழைக் குருத்து விரித்து உணவு படைத்து உண்ணச் செய்யும் அன்பையும் அன்றுதான் காண் கிருேம்.

திருமுகம் வியர்த்தது செங்கண் சேந்தன
கரிபுற அட்டில் கண்டனள் பெயர...
மண்ணக மடந்தையை மயக்கொழிப் [பனள்போல்
தண்ணீர் தெளித்துத் தன்கையால் தடவிக்
குமரி வாழையின் குருத்தகம் விரித்திங்கு
அமுதம் உண்க அடிகள் ஈங்கென...
ஆயர் பாடியின் அசோதைபெற் றெடுத்த
பூவைப் புதுமலர் வண்ணன் கொல்லோ
நல்லமுது உண்ணும் நம்பி ஈங்குப்
பல்வளைத் தோளியும் பண்டுநம் குலத்துத்
தொழுனை யாற்றினுள் தூமணி வண்ணனை
விழுமம் தீர்த்த விளக்குக் கொல்என
ஐயையும் தவ்வையும் விம்மிதம் எய்திக்
கண்கொளா நமக்கிவர் காட்சி ஈங்கென...

இவ்வளவு அன்பான வாழ்க்கையைக் கண்ட சிறிது நேரத்திற்குள் கோவலனின் உடல் வெட்டுண்டு வீழ்வதையும் கண்ணகி புலம்பித் திரிவதையும் காண்கிருேம். கலைஞர் இளங் கோவடிகள், கோவலன்பால் நமக்குக் கழி விரக்கம் ஏற்பட்டு அன்னுன் கொலையுண்டது அநீதியென நாம் கருதவேண்டுமென்றும் நம் உள்ளத்து உணர்ச்சியைப் பெருக்கு வதற்காக வேண்டியும் இவ்வாறு கொலைக் காட்சிக்கு முன் கோவலனு டைய புகழ் மிக்க செயல்களையும் அன்புமிக்க இல்வாழ்க்கையையும் விளக்குதல் அரிய தொரு கலைத்திறனுகும்.



# தமிழகத்தின் வருங்கால

இமய உச்சியில் யார் முதலில் சென்று கொடி நாட்டுவது என்று முத்தமிழ் அரசர் போட்டியிட்டதாகச் சங்கத்து ஏடுகள் முழங்குகின்றன. ஆனால் இது பழங்கதையாக, பலர் நம்பாத பழங்கதையாகி விட்டது. அணிமைக் காலத்தில் மேனாட்டிலோ யார் முதலில் வட தென் துருவங்களில் சென்று தம் கொடியை முந்தி நாட்டுவது என்ற வகையில் மேலை அரசுகளிடையே போட்டி இருந்தது. இமய முகட்டில்கூட ஓரளவு அப்போட்டி இருந்து வந்துள்ளது. ஆனால் உலகப்போட்டி இப்போது இந்த எல்லைகளையெல்லாம் பொம்மை எல்லையாக்கிவிட்டன. யார் முதலில் திங்கள்மீது கொடி நாட்டுவது, செவ்வாய், கதிரவனை யார் முதலில் சென்று ஆளுவது என்ற போட்டி தற்கால மேலைத் தேசங்களிடையே எழுந்துவிட்டன.

இந்தப் போட்டியில் கீழ்திசையும் நம் தமிழகமும் கொண்ட பங்கெல்லாம் பெரிதும் போட்டிச் செய்தியை எந்தப் பத்திரிகை முதலில் போடுவது, யார் முதலில் வாசிப்பது என்பதாகவே இருக்கிறது. மிகப் பெரும்பாலோர் இந்த அளவில்கூட அதில் அக்கறை கொள்ளாமல், அத்திசையிலே பாராமல், 'சூரிய கிரகணம்', 'சந்திர கிரகணம்', தினசரிராசிபலன், —இராகு குளிகை காலம் ஆகியவற்றிலேயே கிடந்து உழல்வதாக இருக்கின்றனர்.

'மனித உலகொரு மனித உலகாக என்று தமிழகம் நிலவுமோ, நிலவும் காலம் தான் வருமோ?' என்று வருங்கால அறிவியல் உலகம் பற்றிக் கனவு காண்பவர் கவலைப்படும் நிலையையே நாம் பெற்றிருக்கிறோம் என்பதில் ஐயமில்லை.

நம் நிலைமை கவலைக்குரியதுதான். ஆனால் நம்பிக்கை முழுவதும் கெட்டுவிட்ட நிலையை நம்மவர் எட்டிவிடவில்லை. போதிய விழிப்புடன் கடுமுயற்சிகள் செய்தால், நம்பிக்கைக்கு இன்னும் இடமில்லாமலில்லை. ஆனால் நம்பிக்கைக்கே அடிப்படை கவலையில்தான் இருக்கிறது. நம் நிலை கவலைக்கிடமானது என்பதை நாம் நன்கு உணர்ந்து கொண்டால்தான், நம்மைச் சுற்றிய மாய இருள் எவ்வளவு செறிவுடையதென்பதை நாம் நன்கு அளந்திருந்தால்தான், அதனை நீக்கும் கதிரொளி நம்மிடையே எழும் என்ற நம்பிக்கைக்கு வழி ஏற்படும்.

நம் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், உருது ஆகிய தென்னாட்டுத் திராவிட மொழிகளைத் தவிர மற்றக் கீழ்த்திசைத் தாய்மொழிகள் கிட்டத்தட்ட யாவுமே அணிமைவரை மக்கள் பேசுவதற்குரிய பண்படா மொழிகளாக இருந்து வந்துள்ளனவேயன்றி இலக்கிய மொழிகளாகவோ, அறிவு மொழிகளாகவோ, ஆட்சி மொழிகளாகவோ இருந்ததில்லை. இந்நிலை சில காலமாகத் தென்னாட்டு மொழிகளையும் இன்று தமிழையும் பீடித்து வருகிறது. மேலை ஆங்கில மொழிகள் மூலம் நம் மொழிகள் அடைந்துவிடும் மேலீடான சிறு விழிப்பைச் சமஸ்கிருத ஆதிக்கம் என்ற மாயப் பழமை இருள் முற்றிலும் மறைத்து அழித்துவிடுமோ என்ற பேரிடர் வளர்ந்து வருகிறது.

தமிழராகப் பிறந்துள்ள சிலர் தாம் குடிமரபால் பிராமணர் என்ற காரணத்தாலோ, மதத்தால் இந்து என்ற காரணத்தாலோ சமஸ்கிருதத்துக்கே தம் இதயத்திலும் அறிவுத் தளத்திலும் நேரிடையாகவோ மறைமுகமாகவோ முதலிடம் தருவதைத் தம் பிறவிக் கடமையாகவோ மேற்கொண்டு விடுகின்றனர். தமிழ் சமஸ்கிருதத்தைவிடப் பழமையும் பெருமையும் உடைய மொழி என்பதை அவர்கள் தெரியாமலோ, தெரிந்தும் ஒப்புக்கொள்ளாமலோ, ஒப்புக்கொண்டும் செயலில் அதற்கு

பன்மொழிப்புலவர்
கா. அப்பாதுரையார்



நேரிடையான போக்கில் முனைபவராகவோ உள்ளனர்.

சமஸ்கிருதம் வெறும் மொழிப்பற்றாக மட்டும் நிலவவில்லை. மொழிப்பற்று என்ற முறையில்கூட அது கீழ்த்திசையிலும் தமிழகத்திலும் தாய்மொழி வாழ்வுகளையும் கீழ்திசைத் தேசிய வாழ்வுகளையும் அழித்துவிடப் போதியது. ஆனால் அது சாதி வருணாசிரம தருமங்களில் ஊன்றிய பற்றாக, புராண இதிகாசங்களையே வரலாறுகளைவிட உண்மையான மெய் வரலாறுகளாகக் கொள்ளும் மனப்பான்மையாக, மூட நம்பிக்கைகளையும் குருட்டுப் பழக்கங்களையும் தாம் நம்புவதுடன் நில்லாது. தாம் நம்பினாலும் நம்பாவிட்டாலும் பிறர் நம்பும் சூழ்நிலை பெறுவதில் ஆர்வமாக வளர்ந்து வருகிறது.

விலைக்கு வாங்கமுடியாத பொருள், வலியுறுத்திப் பெற முடியாத பொருள், அது கொண்டே அதைத் தாண்டினாலல்லது, பிறிதொன்றினால் தாண்டமுடியாத பொருள் ஆர்வமே. உழைப்பாளர் உழைப்பை விலைக்கு வாங்கலாம். அறிவாளி அறிவைக் கூலி கொடுத்து வாங்கி விடலாம். முதலாளிமார்களுக்கு ஆதாயத்தினைக் காட்டி இயக்கலாம். ஆனால் ஆர்வம், அவா அவ்வளவு எளிதல்ல. அது உண்ணின்றெழுவது; உண்ணின்றெழுப்பப்படுவது. தீயைப்போல அளவிறந்தபேராற்றல் உடையது. ஆனால் அளந்து பயன்படுத்த வேண்டியது.

தற்காலத் தமிழகத்தின் பெருங்குறை — ஆதாய ஆர்வம், அடிமை ஆர்வம் தவிர, தமிழ் ஆர்வம் எதுவும் தமிழ் இனத்தில் மிக அரிதாகி விட்டது.

மக்கள் அறிவும் ஆர்வமும் அறிவியலில் செல்லாதிருப்பதுடன் மட்டுமல்ல, அதற்கு எதிர்திசையில் செல்லும்படி தூண்ட இம்மனப்பான்மைகள் காரணமாகின்றன. படித்துப் பட்டம்பெற்ற மாணவர் கூட அதை வெறும் பிழைப்புக்குரியதொரு நடிப்பாகக் கொண்டு, வாழ்க்கைப் பண்பையும் மனமார்ந்த நம்பிக்கையையும் வாழ்க்கை நோக்கத்தையும் முழுவதும் கோயில், குளம், பழமை, குருட்டு நம்பிக்கை வளர்ச்சி ஆகியவற்றின் மூலம் தமக்கு இவ்வுலகில் தம் பிற்பட்ட கல்லா சமுதாயத்தில் புகழும், மேலுலகில் நிலையான புண்ணியமும் தேடுவதிலேயே செலவிடுகின்றனர்.

இந்த இருண்ட சூழ்நிலைக்குக் காரணம் சில பழைய வைதிகப் பழம் புரோகிதர்கள் என்றால்கூட நிலைமை கவலைக்கிடமானதே யாகும். ஏனென்றால் அரசாங்கம், அறிஞர், கலைஞர் ஆகிய எல்லாரையும்விடப் பாமர மக்களிடம் நெருங்கிய தொடர்பும் அசைக்கமுடியாத செல்வாக்கும் உடையவர்கள் இவர்களே. ஆனால் உண்மையில் அரசியல் நிலையங்கள், வானொலி நிலையம், பத்திரிகைகள், நாட்டின் பல கல்வி நிலையங்கள் யாவுமே பொதுவாகக் கீழ்திசையெங்கும் சிறப்பாகத் தமிழகத்தில், ஆலயம் தொழும் புரோகிதர், புரோகிதத் தொழில் செய்யாத புரோகிதர், மேனாட்டு நாகரிகப் போர்வை போர்த்த புரோகிதர் என்று கூறத்தக்கவர்களிடமே இருப்பதைக் காணும்போது அறிவுநூல்கள் தோன்றுவதற்கான நம் தமிழகச் சூழல் மிகச் செறிந்த இருட்சூழல் என்றுதான் கூறவேண்டும்.

ஏனெனில் அந்தப் பல்வகைப் புரோகிதர்கள் மாற்றத்தை விரும்பாத பிற்போக்கு எண்ணம் கொண்டவர்கள். தமிழ்ச் சமுதாயம் அறிவியலில் முன்னேறிவிட்டால் தங்கள் பதவிகள் பறிபோகும் என்ற பதட்டம் கொண்டவர்கள். ஆகவேதான், அந்தப் புகழ்மிக்க சமுதாயத்தைப் புழுதிமேடாக்கும் திருப்பணியில் ஈடுபடுகிறார்கள்.

# அறிவுநூல் வளர்ச்சி



இந்த இருட் சூழல் இருளார்ந்த சூழல் என்பதை நம் மக்களும் நம் மக்கட் பிரதிநிதிகள் என்று கூறப்படும் ஆட்சியாளரும் தலைவர்களும் நிலையங்களும் கொண்டுவிட்டால், அதை நீக்கும் ஒளி தொலை தூரத்தில் இல்லை. ஏனெனில் தமிழராகிய நம் நிலை உண்மையில் வைரப் பாளத்தைக் கையில் வைத்துக்கொண்டே பல கண்ணாடிக் கற்களையும் செயற்கை வைரங்களையுமே, நல் வைரமென்று கருதிப் பெரு விலை கொடுத்து வாங்கி அவற்றை வைப்பதற்குரிய பெட்டிக்கு மெருகிட்டு பளபளப்பூட்டத் தன் கையிலிருக்கும் வைரப் பாளத்தைத்தீட்டுகருவியாகப் பயன்படுத்துபவன் நிலையேயாகும். உண்மையில் அறிவியல் வளர்ச்சி வகையில் நம் தமிழ்மொழி வைரப்பாளத்தை ஒத்த வாய்ப்புடையது. அதன் அருமை தெரிபவர் அருகிவிட்டமையும் அதைத் தீட்டுவாரில்லாமையும் தான் அதன் இன்றைய பெருங் குறைபாடுகள். அதை நோக்க வருங்காலத்தில் கீழைமொழிகள் பலவும் அவற்றின்மீது ஆதிக்கம் செலுத்தும் சமஸ்கிருதமும் பல்வேறு வகைப்பட்ட உடைந்த வளையல் துண்டுகள், கண்ணாடிச் சில்லுகள் போன்றவை. மேல் திசை மொழிகள்கூட தற்காலிகப் பகட்டுடைய செயற்கை வைரங்கள் மட்டுமே என்று கூறத்தக்கவை.

மேலை இலக்கியங்கள், மொழியுடன், அவற்றிற்கு உயிர்ப்பூட்டியுள்ளபண்டைய மாண்ட பெருமொழிகள், அவற்றின் இலக்கியங்கள் ஆகியவற்றைவிடச் சங்கங் கண்ட தமிழும் சங்க இலக்கியமும் வருங்கால அறிவியல் வளர்ச்சிக்கு இயல்பாக வழி வகுக்கும் உயிர்ப் பண்புகள் மிக்கவை. ஆனால் இவற்றில் கருத்துச் செலுத்தக்கூடக் கீழையுலகின் சமஸ்கிருத ஆர்வம் ஒருபுறமும், முழு உலகின் மேலை நாகரிக ஆர்வமும் தடைகளாக உள்ளன. வருங்காலத் தமிழகத்தின் அறிவு நூல் வளர்ச்சியில் கருத்துடையவர்கள் மட்டுமன்றி, வருங்கால உலகின் அறிவு நூல் வளம் பற்றிக் குறை காண்பவர்கள்கூட இவ்விரு மயக்கமும் தாண்டி இக் கூறுகளில் கருத்துச் செலுத்தக் கடவர்.

முதலாவதாக. உலகம் தட்டையானது-கடல்கள் ஏழு, உலகங்கள் மூன்று அல்லது ஈரேழு உண்டு - பாம்புக்குக் கண்கள் தாம் செவி- சிங்கக் குரலைக்கண்டு யானைக் கூட்டம் வெருண்டோடும்- சருகாரம் என்ற பறவை வெயிலை உண்டு வாழும்-அன்னம் பால் கலந்த நீரில் பாலையுண்டு தண்ணீரை நீக்கி வைத்துவிடும் இவைபோன்ற எண்ணற்ற கருத்துக்களை நம்பிக்கையாக அல்ல, பொது அறிவாக,விஞ்ஞான நுட்பங்களாக இன்றைய உலகின் எல்லா மொழி இலக்கியங்களிலும் பின்னாளைய தமிழிலக்கியத்திலும் கூடக்காணலாம். சங்க இலக்கியத்திலோ தொல்காப்பியத்திலோ திருக்குறளிலோ," இவற்றைச் சல்லடை போட்டரித்தாலும் காண முடியாது. சில சமயம் நம்பிக்கை மரபுகள் குறிக்கப்பட்ட இடங்களில் கூட சமய மொழி மரபாக அன்றி ஆசிரியர் அறிந்து பரப்ப விரும்பும் மெய்ம்மையாக, அறிந்து நம்பிக் கூறும் உண்மையாக எங்கும் தரப்படவில்லை.

இதுமட்டுமன்றி. மேலை இலக்கியத்தில் மிகஅணிமைக் காலத்தில்கூட டெனிசன், வெல்ஸ் முதலிய ஒரு சில கலைஞரிடமே காணத் தக்க நிலையில்உள்ள அறிவார்ந்த இலக்கியக் கருத்துக்களை-அறிவு நூலாராய்ச்சிப் பண்புடைய அணி மரபுகள்-சங்க இலக்கியங்களில் பக்கந்தோறும் பாத்தோறும் காணலாம். கருத்தழகும் சொல்லழகும் கருதி இடைக்காலத்திலும் இக்காலத்திலும் நாம் வழங்கும் அடைமொழிகளை எண்ணிக்கொண்டு பார்ப்பதாலேயே கிட்டத்தட்ட அறிவியல் நூற்கள் எழுதுகின்ற எழுத்தர் பாணியில் பொதுச் சிறப்புத் திரிபுப் பண்புகளை வேறுபடுத்திக் காட்டுகிற சங்க ஏட்டு அடைமொழிகளின் திட்டத்தை நாம் அடிக்கடி கவனிப்பதில்லை.

சங்க இலக்கியமும் சங்கத் தமிழும் ஒரு பால் இருக்க, இவற்றின் துணை உடைய தனித்தமிழுக்கே அறிவு நூலுக்கு அடிப்படையான சொல்வள ஆக்க வாய்ப்பு எல்லையற்ற அளவில் உண்டு. மக்கள் மாவட்டம்தோறும் பேசும் தமிழ், செடிகொடிகள்



விலங்கு பறவைகளுக்குப் பிற மொழிச் சூழல்கள் கடந்த நாட்டுப்புற மலைப்புறவாளர் வழங்கும் பெயர்கள்; சமஸ்கிருத, ஆங்கிலச் சூழல்களால் தன் வயமிழக்காத தளத்திலுள்ள தொழிலாளர்கள், உழவர்கள் ஆகியோர் வழங்கும் கருவியின் பெயர்கள், மீன் முதலிய உயிரினப் பெயர்கள், வாழ்க்கைச் சூழற் சொற்கள்; அடித்தளத்தில் உள்ள சிற்றூர்ப்புறப் பெண்டிர் வழக்குச் சொற்கள் இவையும் சங்க இலக்கியத்தருகே அங்கம் வகிக்கத்தக்க தனித்தமிழ் பண்பார்ந்த அறிவுக்கருவூலங்கள் ஆகும்.

பிற திராவிட மொழிகள், திராவிடச் சூழலில் வளர்ந்த தென்கிழக்காசிய மொழிகள் கீழ்திசைத் தாய்மொழிகள், வேதமொழி, சமஸ்கிருதம், பாளி, பாகதங்கள் போன்ற பழய மாண்ட வழக்கு மொழிகள் ஆகியவையும் வழக்கிறந்து ஆனால் வழக்குச் சொற்களுடன் தொடர்பு விடாத தமிழ்ச் சொற்களைக் கண்டு எய்த வழிகாட்டிகளாக உதவக் கூடும். மேலை மொழிகள்கூட இதற்கு விலக்கல்ல.

கடைசியாக, தமிழில் உள்ள சித்த மருத்துவ ஏடுகள், பழய வானியல் மரபில் பின்னாட்களில் கெட்டு உயிர்ப் பிழந்துபோன சோதிட ஏடுகள், இசை நாடக நூல்கள், சித்தாந்த வேதாந்த ஏடுகள், உரையாசிரியர் வழக்குகள், கல்நாட்டுப் பட்டய வழக்குகள், மொழி ஒப்பீடு மூலம் கிடைக்கும் உலகளாவிய தமிழ்ப் பண்புக் கூறுகள் ஆகியவையும் பயன்படுத்தற்குரியன.

இவ்வழி மரபுச் செல்வந்திரட்டி இதனை அடிப்படைத் துறைச் சொற்களாக, அடிப்படை அறிவாகக் கொண்டு, மேலை அறிவு நூலென்னும் மதிலெழுப்பி இவற்றுடன் இணைத்து, இவற்றின் மூலம் தமிழகத்து வருங்கால அறிவு நூலைத் தமிழர் வளர்க்கக்கூடுமானால், வருங்கால உலகில் அறிவு நூல் வளர்ச்சியை வளப்படுத்தும் வகையில் தமிழர் அதில் பேரிடம் வகிக்கப் போதல் ஒரு தலை என்னலாம்.



"சிறைப்பட்டு வாடுகின்றாய்
செய்தகுற்றம் உரைப்பாய்!"

புகைப்படம்; ஜெயபால், நாகூர்.

இச்சூழலில் கையிலுள்ள வைரப்பாளம் அதை வைப்பதற்குரிய பெட்டியில், பளபளப் பூட்டப்பட்ட பெட்டியில்தான் வைக்கப் பெறும். செயற்கை வைரங்களும், கண்ணாடிக் கற்களும் கழிபொருள் மேட்டிலே எறியப்படும். எறியும்போது அத்தகு மொழிகள் நம்முடைய மொழியின் அறிவியல் வளர்ச்சிக்கான முறையில் திட்டுக் கற்களாகப் பயன்படுத்தப்பட்டதாகவே இருக்கும்.

அதைப் பின்பற்றத் தமிழர், தமிழுலகம் முன்வர வழி ஏற்படுமா? அவ்வழி முயல்பவர் முயற்சிக்குரிய உரிமையை யாவது குறைந்த அளவு ஒரு தேர்வு முறையாக அளிக்க தமிழ் மக்களும் ஆட்சியும் முன்வர இயலுமா?

# கவிதை

ரவி

உள்ளத்தே ஊறுகின்ற உணர்வு தன்னை
உயிர்க்கின்ற செஞ்சொல்லால் ஒன்று கூட்டி

வெள்ளமெனப் படிப்போர்தம் வயலுள் ளத்தே
வற்றாத நீரெனவே பாய்ந்தும் இன்பக்

கள்ளெனவே இதயத்தில் மயக்க மேற்றி
இன்தமிழை நம்முயிரில் இணைத்தே வானில்

புள்ளெனவே நீந்திடவே வைக்கும் வண்ணம்
போதையுணர் வூட்டுவதே கவிதை யாகும்!

2

கண்களிலே காணுகின்ற காட்சி தம்மைக்
கனிதமிழில் செம்மையுடன் வடித்தெ டுத்தே

எண்ணத்தை ஈர்க்கின்ற இசையைச் சேர்த்தே
இணைகின்ற கற்பனையின் சுவையும் கூட்டிப்

பண்ணமிழ்தும் பலாச்சுளையும் பிணைந்த பாங்கில்
பைந்தொடியை அணைந்தின்பம் உண்ணும் வாழ்வை

மண்ணிதிலே கூட்டுவதே கவிதை யென்றால்
மண்ணுலகில் வேறின்பம் யாது சொல்வீர்!

3

செத்துவிட்ட உளங்கூடச் சீறிப் பாயச்
செந்தமிழின் உணர்வினையே எழுப்பும்; துன்பம்

தத்துகின்ற உள்ளத்தில் மகிழ்வைக் கூட்டித்
தளராத இன்பத்தின் எல்லை காட்டும்!

மொத்தத்தில் ஐம்புலனும் ஒருங்கே சேர்ந்து
மொய்க்கின்ற இன்னுணர்வை உண்ணும் வண்ணம்

சித்தத்தில் வளம்கூட்டும் கவிதை என்றால்
சீருலகில் வேறின்பம் ஏது சொல்வீர்!

# குருடனும் கைவிளக்கும்

குருடர்களைப் பற்றிய கதைகள் பலவற்றை நாம் கேட்டிருக்கிறோம். வாழ்க்கையில் பேரிடர் உற்று வருந்தி நிற்கும் குருடர்களை நினைக்கும்போதே உள்ளமுடையோர் இரங்கத்தான் செய்வர்.

'குருடர்கள் கண்ட யானை' என்னும் கதையைக் கேள்விப்படாதவரே இரார். அவர்கள் அறுவரும்பிறவிக்குருடர். ஆகையினாலேதான் பெரியதொரு யானையைத் தொட்டுப் பார்க்கும் வாய்ப்பினைப் பெற்றும், அந்த யானையின் உறுப்புக்களையே முழு உருவமாகக் கொண்டு உரலாகவும், உலக்கையாகவும், முறமாகவும், சுவராகவும், கூர்மையான ஈட்டியாகவும், விளக்குமாறாகவும் கருதிக் கொண்டதால் வாய்ச்சண்டையிலும் முனைந்தனர். 'குருடர்கள்' என்பதை எண்ணும்போது அவர்கள் செயலில் பிறக்கும் கேலியும் கிண்டலும் மறைந்து இரக்கமும் வருத்தமுமே சுரக்கின்றது. ஆனால் கண்ணுள்ள ஒருவன் பட்டப் பகலில் ஒரு யானையைத் தடவியும் பார்த்துவிட்டு இதை நன்றாக ஆராய்ந்துதான், யானையா பூனையா என்பதைச் சொல்ல முடியுமாகையால் ஒரு கைவிளக்கு தேவை என்று கூறுவானேயானால் எத்தகைய கேலி தோன்றும்? என்னென்ன கேள்விகளை ஒரு துவக்கப்பள்ளிச் சிறுவன்கூடக் கேட்டிடுவான்? அத்தகைய நிலைதான் சில நாட்களுக்குமுன் —சென்னை சட்ட மன்றத்திலேயே பிறந்தது. அமைச்சர் என அமர்ந்திருக்கின்ற பேரறிஞர் ஒருவர் ஒரு விளக்கம் கூறப் புகுந்தார். சட்ட மன்ற நடவடிக்கைகளில் கேள்வி நேரம் மிகவும் முக்கியத்துவமுடையது என்பதும், அந்த நேரத்தில்தான் பெரும்பாலும் அரசாங்கத்தின் நடைமுறைகளில் உள்ள குறைபாடுகள் 'அம்பலமாவது' வழக்கம் என்பதும் மக்கள் அறிவர். அந்தக் கேள்விப் பொழுதில், கேட்கப்பட்டிருந்த கேள்வி ஒன்று ''வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள சாலைகளில் இருக்கும் மைல் கற்களில் இந்தியில் எழுதப்பட்டிருப்பது உண்மையா?'' என்பதாகும். அதற்கு அமைச்சர் கக்கன் அவர்கள், அதை ஒப்புக்கொண்டு ''ஆமாம்' என்றார். அடுத்து — ''மைல் கற்களில் இந்தி எழுத்துக்கள் எழுதப்பட்டிருப்பதைத் தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், யாரும் விரும்பவில்லை. அது தேவைப்படாதது என்பதை இந்த அரசாங்கம்—(மத்திய அரசாங்கத்திற்கு) வலியுறுத்தித் தெரிவித்திருக்கிறதா? இந்தி எழுதப்பட்டிருப்பதை விரும்பாத பொதுமக்கள் பல இடங்களில் அதைத் தார் கொண்டு அழித்திருக்கிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?'' என்று நான் கேட்டேன்.

அமைச்சர் கக்கன் அவர்கள், அளித்த பதில் இது:''தேசியப் பெருவழிச்சாலைகளிலே மட்டும் இப்பொழுதுதான் முதலில் ஆங்கிலம், பிற்பாடு தமிழ், கடைசியாகத்தான் இந்தி எழுதப்பட வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டது. ஒரு சில இடங்களில் அங்கத்தினர் சொல்லியபடி இந்தி அழிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு அரசாங்கம் தங்களுடைய வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தி ஒரு முக்கியமான தேசிய மொழியாக இருப்பதனால் அதையும் மக்கள் தெரிந்து கொள்ள வேண்டிய காரணத்தினால் அது கடைசியாக எழுதப்பட்டிருக்கிறது. மதிப்பிற்குரிய முதன் மந்திரி அவர்கள், பிரைம் மினிஸ்டர் அவர்களுக்கு ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் எழுத வேண்டும், இல்லாவிட்டால் ஆங்கிலத்தில் மட்டுமாவது எழுத வேண்டும என்று எழுதிய கடிதத்திற்குப் பதில் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அதன்பேரில் இப்பொழுது பரிசீலனை செய்து எல்லா இடங்களிலும் இங்கிலீஷிலும் தமிழிலும் எழுதுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது.''

உடனே சட்ட மன்றத்தில் காங்கிரஸ் கட்சித் தலைவரா



யுள்ள அமைச்சர் சி. சுப்பிரமணியம் எழுந்து அமைச்சர் கக்கன் கூறிய பதிலை மேலும் தெளிவுபடுத்தும் நோக்குடன் கூறினார், ''இக்கேள்விக்குப் பதில் சொல்லுவதற்கு—ஒரு குட்டிக் கதை மட்டும் சொல்ல வேண்டுமென்று நினைக்கிறேன். ஒரு குருடன் லாந்தரைக் கையில் எடுத்துக் கொண்டு போனான். கண்கள் தெரியாதவர்களுக்கு எதற்கு லாந்தர் என்று அதைப் பார்த்துப் பக்கத்தில் இருந்தவர்கள் சிரித்தார்களாம். லாந்தர் மற்றவர்களுக்காக! ஆகையினால் இந்தி எழுதியது.........''

அதற்குள்ளாகவே அமைச்சர் கூறிய உதாரணம் தமிழர்களை இழிவுபடுத்துவதாக இருப்பதை உணர்ந்த நானும் நண்பர் கருணாநிதி, ஆசைத்தம்பி அவர்களும்--அமைச்சரின் உதாரணத்தைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் 'ஒழுங்குப் பிரச்சினை' எழுப்பினோம். ''தமிழர்கள் கருத்துக் குருடர்களா'' என்று நானும், ''சில கண்ணாடி போட்ட குருடர்களும் இருக்கிறார்களே?'' என்று நண்பர் கருணாநிதி அவர்களும் கேட்க நேரிட்டது. நிதி அமைச்சர் அவர்களோ இதைக் கண்டு தமது பதிலை நிறுத்தி, அமர்ந்து, மறுபடியும் எழுந்து--விடையைத் தொடரலானார்.

''நான் முழுக் கதையும் சொல்வதற்குள் அவசரப்பட்டுவிட்டீர்கள். அந்த விளக்கு நமக்குத் (தமிழர்க்கு) தேவையில்லை என்றுதான் நான் சொல்கிறேன். குருடனுக்கு எப்படி விளக்குத் தேவையில்லையோ அதைப்போல இந்தியும் நமக்குத் தேவையில்லைதான். என்றாலும் வட நாட்டிலிருந்து வருபவர்களுக்கு அது தேவைப்படுகிறது''—என்று கூறி முடித்தார். ...அமைச்சரின் பேச்சுத் திறமையைப் பாராட்டவேண்டும் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. ஏனெனில் ஒரே பதிலில் மாற்றுக் கட்சியினரின் 'மனம்' வேகவும் அதே சமயத்திலேயே குளிர்ச்சி அடையவும் செய்ய முடிகிறதே அவரால் என்பதால்தான்!

ஆனால், அந்தப் பதிலில் மறைந்து கிடக்கும் உண்மையைக் கண்டாலோ பச்சைக் கொடியிலே மறைந்து தாக்கும் பச்சைப் பாம்பைப்போல் வெட்கமும், வேதனையும் உயிரை வாட்டுகிறது.

'இந்தி' தமிழர்க்குத் தேவைப்படவில்லை என்பதை ஒப்புகிறார் அமைச்சர். ஆனால் அந்த இந்தி வட நாட்டவருக்குத் தேவையாவதால், அவர்கட்குப் பயன்படுவதால் தமிழர்கள் தாங்கிக் கொள்ளவேண்டும் என்கிறார். தமிழர்க்குத் தமிழே போதும்; 'இந்தி' தெரியாது—தேவையுமில்லை. ஆனால் வேறு சிலருக்குத் தேவை.' எனவே தமிழரைப் பொறுத்து அது பயன்படாவிட்டாலும், நன்மை இல்லை என்றாலும், மற்றவருக்காக அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதே அமைச்சரின் வாதம். நேரிடையாகக் கூறியிருந்தால்கூட இக் கருத்தை ஏற்க நியாயமில்லாவிடினும் பதிலைப் பொறுத்துக்கொள்ளலாம். ஆனால் கருத்தை விளக்க நிதி அமைச்சர் தமது முன்னாள் குருவின் ஆசீர்வாத நம்பிக்கையால் குட்டிக் கதை கூற முனைந்தார். கேள்விக்குப் பதில் கூறும்போது அமைச்சர்கள் குட்டிக்கதை கூற முனைவது பாராளுமன்ற முறைக்கு அவ்வளவு பொறுத்தமல்ல என்றாலும் அவர் 'மேதை'; எனவே முனைந்தார். அந்தக் கதையின்படி 'ஒரு குருடன் லாந்தரைக் கையில் எடுத்துக்கொண்டு போனான்' என்கிறார் அமைச்சர். குருடன்——கண்ணிழந்தவன் ஒளிதரும் லாந்தரைக் கையில் எடுத்துக் கொண்டு 'எங்கோ போனான்' என்பதில் உள்ள விசித்திரமே விசித்திரம்!

குருடனுக்கு வேண்டியது கோல். எங்கே போவதானாலும் கோலுடன் கூடவே விளக்கையும் எடுத்துக்கொண்டு போனான் என்றாவது கருதலாமா எனில், விளக்கால் அவனுக்கு என்ன பயன்? கண்கெட்ட பிறகா கதிரொளிக் காட்சி? (சூரிய நமஸ்காரம்) என்னும் பழமொழி—கண்ணிழந்தார்க்குக் கதிரொளியினாலும் பயன் இல்லை என்பதை உணர்த்தும்போது லாந்தர் கொண்டுசெல்ல எந்தக் குருடன்தான் நினைப்பான்? ஆனால் அமைச்சர் நினைக்கிறாரே! காரணமும் அல்லவோ தருகிறார்! குருடன் கைவிளக்குக் கொண்டு போவது அவனுக்காக அல்ல—மற்றவர்களுக்காக என்று கூறுகிறார். குருடன் விளக்கைப் பெற்றது எப்படி? அவனுக்கு மற்றவர் யாரோ விளக்கை ஏற்றிக் கையில் தந்தனர் என்றே வைத்துக்கொள்வோம். அவன் அதை எடுத்துக்கொண்டு எங்கே போவது? மற்றவர்கள் எங்கு உள்ளனர் என்று தெரிந்தால் அல்லவா அவன் போகமுடியும்! அவர்கள் உரக்கக் கூவினாலும்—அந்த ஒலி கேட்டு அங்கு அவன் போய்ச் சேரத்தான் முடியுமா? அல்லது அந்த மற்றவர்கள் தான் குருடன் கையில் உள்ள விளக்கை நம்பி அவன் போகும் வழியிலேயே — போய்க்கொண்டிருப்பார்களா?

அதுதான் போகட்டும் என்றால்—குருடன் கையில் உள்ள விளக்கு, அணைந்து போகாமல் எரிகிறதா? அணைந்து விட்டதா என்றுதான் குருடனுக்கு எப்படித் தெரிவது? குருடனுக்கு வழியும் தெரியாது; ஒளியும் தெரியாது. எனினும் அவன் விளக்குடன் செல்கிறானாமே மற்றவர்கட்கு வழி தெரிவதற்காக! என்னே அற்புதம்! ஒரு வேளை அந்தக் குருடன் ஊனக்கண் போனபின் ஞானக்கண் பெற்றவனோ? அவனுக்குத்தான் இந்த விளக்கு ஏன்? அவன் காட்டும் பாதை - பரமண்டலத்துக்கன்றோ வழியாகும்!

போகட்டும்—இன்றுள்ள அரசியல் நிலையையும்தான் அமைச்சர் தெளிவுபடுத்தினார் என்று நான் கருதுகிறேன். குருடர்கள் கையில் விளக்கைக் கொடுத்துவிட்டு, அந்த வெளிச்சத்தில்—கண் தெரிந்தவர்கள் தமது தேவையை நிறைவேற்றிக் கொள்கிறார்கள். முன்னாட்களில் தீவட்டிக் கொள்ளைக்காரர்கள், சிலர் பெருஞ் செல்வர் வீட்டிலே புகுந்து—அந்தச் சீமானின் கண்ணையும் காலையும் கட்டி விட்டு, அவர் கையிலேயே தான் கொண்டு வந்த தீவட்டியையும் கொடுத்துப் பிடிக்க வைத்து, வேண்டிய பொன்னையும் பொருளையும் தேடிக் கட்டிக் கொண்ட பின், தீவட்டியையும் வாங்கிக் கொண்டு செல்வார்களாம். அவன்கூட 'நாகரிகமானவன்' என்றுதான் எனக்குப் பாராட்டத் தோன்றுகிறது, கண்ணையே குருடாக்கிவிட்டுக் கையிலே தீவட்டி தந்தானில்லையே என்பதை எண்ணும்போது! வாயிலே துணியை அடைத்து விட்ட

தால் மூச்சுத் திணறும் நிலையில் உள்ள கன்னியிளம் பெண்ணின் கற்பினைச் சூறையாடிய காமுகன் அவள் கண்கள் வீசிய ஒளியேதான் தனக்கு இந்த வழியைக் காட்டிற்று என்றானும். அவனாவது காமுகன்; மனிதத் தன்மை இழந்தவன். ஆனால் சமுதாயத்தின் மானத்தையே காப்பாற்ற வேண்டியவர்கள், குருடன் கையில் விளக்கு தருகிறார்கள். இதனை என்னவென்று கூறுவது?

பட்டப் பகலிலே—பாதை காட்ட விளக்கு ஏன்? அப்பொழுதும் பாதை தெரியாதவன் எவனோ, அவனல்லவோ குருடன்? பாதை காட்டுபவனல்லனோ ஒளி படைத்த கண்ணினான்! அப்படிக் குருட்டுக்குப் பாதை காட்டவும், கோலைக் குருடன் கையில் கொடுத்து அழைத்துப் போவதும்தானே முறை! இதோ இருக்கிறதே ஆங்கிலம் என்னும் கோல், இதனைத் தமிழ் அறியாக் குருடன் கையில் கொடுத்து—அழைத்துச் சொல்லுவது தானே நியதி! ஆனால் அமைச்சரோ நேர்மாறாகக் கூறுகிறார். "கண்" படைத்தவருக்கு, ஒளியும் இருளும், ஒளி உமிழும் கண்ணும் சீழ்சிந்தும் குருடும்—தெரியாமலா போகும்? அமைச்சருக்குத்தான் ஏனோ தெரியவில்லை; ஆமாம்; அமைச்சர் தான் கண்ணாடி போட்டவராயிற்றே! கண்ணாடி அணிந்ததால் தன் பார்வை தெளிவாகுமே என்கிறீர்களோ! நான் கூறுவது அவரது, அரசியல் கண்ணாடியல்லவோ? அதனால் உண்மை ஒளி வீச்சு அவரது கண்ணாடியின் மூலம் கண்ணுக்குக் கூச்சம் தந்து மூடவைத்துவிட்டதோ என்னவோ? கண் மூடியுள்ளபோது— கண்ணிருந்தும் குருடுதானே? அந்த நிலைதானோ இதற்குக் காரணம்?

ஏனெனில், அமைச்சர் இந்தியைப் பொறுத்து தமிழர்களைக் குருடருக்கு ஈடாக்கினார். அதுவே முதல் தவறு. முற்றும் தவறவும் வழியாயிற்று! இந்தியைக் குருட்டு மொழி என்று கூறாவிடினும், தமிழைப் பொறுத்து இந்திக்காரர் குருடர் என்று கூறியிருக்கலாம். ஆனால் அந்த உதாரணம் கூறுதற்கு 'நெஞ்சுரமும் நேர்மைத் திறமும்' வேண்டுமே! இந்திக்காரர்கள்தாம் எஜமானராயிற்றே! அவர்களையா குருடர் என்றுகூறத் துணிவு பிறக்கும்! அவர்களைக், "குருடர்" என்றாலோ அவர்களுக்கு "விளக்கு" பயன் தராது; இதோ கோல் என்று 'ஆங்கிலத்தை" நீட்டுவரே தமிழர்?

எனவேதான் அமைச்சர் தமிழர்களைக் குருடாக்க (உதாரணத்தில்தான்!) ஒப்பினார். ஆனால் நானோ என் நண்பர்களோ அதற்கு ஒப்ப மறுத்தோம்; என்றும் மறுப்போம்!

ஆனால் அரசியலில் இன்றும் தமிழர்கள்—"குருடர்கள்" ஆக்கப்படுவதைத்தான் காண்கிறோம். உதாரணத்தில் மட்டுமல்ல—வாழ்க்கையில், உரிமையில் ஆட்சியில், அரசியல் அமைப்பில் தமிழர்கள் குருடராக்கப்படுகின்றனர்.

தமிழ் மொழியின் தனி நலத்தை மறந்து, தாய் நாட்டின் உரிமையை இழந்து—திராவிடம் நமது இனம் என்னும் எழுச்சியைத் துறந்து, இன்று வடவர் ஆதிக்கத்திற்கு உட்பட்டு, டில்லி ஆட்சிக்கு அடிபணிந்து, மானமிழந்து, மதிகெட்ட ஒரு கூட்டமாய் வாழும் நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். இந்நிலையை விளங்கிக் கொள்ளாத ஓர் அரசியல் குருட்டுத்தனம் இன்று ஆட்சி செலுத்துகிறது.

இன்றுள்ள 'அரசியல்' அமைப்பில் ஓர் அடிமைத்தனம் நம்மையே குருடராக்கிக்கொள்ளும் அளவுக்கு வளர்ந்து விட்டது. இந்நிலையில் பிறருக்கு விளக்கு காட்டி, அதனால் வருவாய் தேடும் கோழைத்தனம் கோலோச்சுகிறது. 'குருடனை' விளக்குக் காட்ட வைத்துவிட்டு அந்த ஒளியில் ஒய்யார நடை போடும் 'அரசியல் அகங்காரம்' டில்லி அரசினரின் முறையாகிவிட்டது.

இதனையே அமைச்சரின் பதில்—குட்டிக் கதை நமக்கு அறிவுறுத்துகிறது. இந்நிலையை மாற்றியமைக்கவே, எழிலார் தாயகத்தின் அடிமைத் தளையறுக்கவே தி. மு. க. 'தொடர் கதையாக' வளருகிறது. இந்தக் குருட்டுத்தனமும் தமிழரின் இயல்பல்ல; ஊனத்தன்மை அல்ல. ஆனால் சூழ்நிலையாம்—அடிமை இருளின் பலனும் இந்தக் காரிருள் நீக்கவே, உதய சூரியன் முளைக்கின்றான்.

ஆனால் அதற்கு முன்பாகவே சிலர் ஆட்சியில் அமர்ந்துள்ள ஒரே காரணத்தால் பிறரையும் ஆட்டிவைக்கலாம் என்ற நினைப்பில்—ஆட்டம் போடுகின்றனர். அந்த ஆட்டத்தைக் காணும் போது எனக்கு திருமூலர் இபற்றிய பாடல் நினைவிற்கு வருகிறது.

"குருட்டினை நீக்கும்
குருவினைக் கொள்ளார்,
குருட்டினை நீக்காக்
குருவினைக் கொள்வார்,
குருடுங், குருடுங்
குருட்டாட்டமாடிக்,
குருடுங் குருடுங்
குழிவிழுமாறே."

என்பதே அது. தத்துவ உலகை உணர்த்த வந்த பாட்டு எனினும் அரசியல் உலகத்தின் இன்றைய சூழ்நிலைக்கும் பொருந்துவதே—அதன் சிறப்பு.

அரசியலில் குருடாவது அடிமைத்தனம். இந்தப் பாடலில் 'குருடு' என்னுமிடத்தில் எல்லாம் 'அடிமை' என்று சேர்த்துக்கொண்டால்,

"அடிமையினை நீக்கும்
குருவினைக் கொள்ளார்,
அடிமையினை நீக்காக்
குருவினைக் கொள்வார்,
அடிமையும் அடிமையும்
குருட்டாட்டமாடி,
அடிமையும், அடிமையும்
குழிவிழுமாறே."

என்று அமையும். அதுவே இன்றுள்ள நிலை. அடிமையினை நீக்கும் குருதான் "அண்ணா" அவரது நெறியைப் பின்பற்றாதார் "ஆடும் ஆட்டம்"தான் குருட்டாட்டம். அதன் விளைவுதான் அனைவரையும் குருடாக உவமித்துக் கூறிக் குழிவிழும் நிலை.

'குருடனுக்கு' தான் குருடன் தான் என்பது தெரியாத நிலை ஏற்படின்—பிறரெல்லாம் 'குருடர்' ஆகத் தோன்றுவது இயல்பு.

அதுபேர்லவே சட்டசபையில் எழுந்த கேள்விகளையும் அமைச்சர் தந்த விடைகளையும் காண்போருக்கு, அமைச்சர் தந்த பதில், 'இந்தி' நுழைவைத் தமிழர் எதிர்க்காமல் செய்ய கண்ணுக்குப் போடும் திரை; கண்ணைக் குருடாக்கும் முறை என்பது விளங்கும்.

# வைகை அணைச் சிலைகள்



பூமிதனைக்குடைந்தே
புதுவாழ்வு சமைத்திடுவோம்!



இவையிரண்டில் மான் எதுவோ?



நின்றிடுமோ
நிலம் அளக்கும் வேலை,
நிலப்பிரபுபோலே
பாம்பு நீ சீறிடுவதாலே?

தூங்குகிற சிங்கமே நீ துயில் நீத்தால்
தூளன்றோ பகையெல்லாம்!





ஆனைப்படை மோதினாலும்
அழிந்திடுமோ இக்கோட்டை?



அரை வயிறு உணவுதான் கிடைத்ததால்,
விரைவிலே வீடுதிரும்புவீர் அத்தான்!



எம்மதத்தோர் ஆயினும்
உழைப்பாளர் இனம் ஒன்றே!



புதுவலிவு பெற்றிடுவோம்,
புரட்சித்தீபம் ஏந்திடுவோம்!



வேறுநதியில் நீரை மொண்டு
வைகையை நிரப்புகின்றாளோ?

-Jeevan-

புகைப்படம்: கே. எம். மேத்தர், ரஹீம் ஸ்டுடியோ. பெரியகுளம்.




தபால்காரன் ஒரு கத்தைக் கடிதங்களைக் கொடுத்துவிட்டுச் சென்றான். அவைகளைக் கண்டதும் என்னையறியாது எனக்குச் சிரிப்பு வந்தது. கடந்த ஒரு வார காலமாக இப்படித்தான் கடிதக் குவியல்கள் என்னை முற்றுகையிடுகின்றன. இவைகளுக்குக் காரணம், நான் பத்திரிகையில் 'மணமகள் தேவை' என்று விளம்பரப்படுத்தியதுதான்!

என்னைப் பெற்றவர்கள் பரலோகம் போய், ஆண்டுகள் பல உருண்டோடிவிட்டன. உதட்டிலே அமுதத்தையும், உள்ளத்திலே விஷத்தையும் கொண்டு உறவாடிய உறவினர்களை உதறித் தள்ளித் தன்னந்தனியாய் வாழ்க்கைப் பயணத்தைத் துவங்கியவன் நான். ஆகவே, பருவத்தின் படிக்கட்டில் நிற்கும் எனக்கு, மணப்பெண்ணைத் தேடும் கட்டாய நிலை ஏற்பட்டது. பெண்ணைத் தேடி ஊர் ஊராக அலைய என் கால்களில் வலுவில்லை--நேரமுமில்லை. அது மாத்திரமல்ல; இந்தக் காலத்தில் இப்படி அலையத் தேவையில்லை என்பது என் சித்தாந்தம். நம் எண்ணத்தை ஒரே நாளில் பல்லாயிரக் கணக்கானோர் அறிந்து கொள்ளச் சாதனங்கள் இருக்கும்போது, ஏன் அலையவேண்டும்? ஆகவே 'மணமகள் தேவை' என விளம்பரம் செய்தேன்.

விளம்பரம் வெளியான மறுநாளிலிருந்து, கடிதக் குன்றுகள் குவிந்தன. வகைவகையான நிழற் படங்கள்--விதவிதமான குடும்பக் கதைகள்--இத்தனையும் சுமந்து வந்தன! ஒவ்வொரு கடிதமும் ஒவ்வொரு குடும்பத்தின் வரலாற்றைக் கூறியது. பெரும்பாலும் சோகச் சரித்திரம் தான்! ஒரு எழுத்தாளன் கையில் இக்கடிதங்கள் கிடைக்குமானால், அவன் காலம் முழுதும் கதைகள் எழுதுவதற்கு 'பிளாட்' தேடவேண்டிய அவசியமே இருக்காது! இக்கடித மலையைக் காணும் தோறும் இந்நாட்டில் பெண்களைப் பெற்றவர்கள் பட்டாளத்தின் பரிதாப நிலை நினைவிற்கு வரும், எனக்கு. பெண்ணைப் பெற்றுவிட்டுக் கணவனைத் தேடும் அவர்கள், அனுதாபத்துக்குரியவர்கள்!

அன்று வந்த கடிதங்களைப் பிரித்துப் படிக்கலானேன். எல்லாம் ஒரே பல்லவியைத்தான் பாடின. ஒரே ஒரு கடிதம் என் கவனத்தைக் கவர்ந்தது! அந்தக் கடிதத்துடன் பெண்ணின் படம் இணைக்கப்படாமலிருந்தது, எனக்கு ஆச்சரியத்தை விளைவித்தது! கடிதத்தைப் பிரித்தேன்.

''அன்புடையீர்!

வணக்கம். தங்கள் விளம்பரத்தைக் கண்டேன். ஒருவேளை இக்கடிதம் தங்களுக்குத் தாமதமாகக் கிடைக்கிறதோ, என்னவோ? இதுவரையில், நீங்கள் பெண் தேடும் பணிக்கு முற்றுப் புள்ளியிடாமலிருந்தால்-மணப் பெண்ணைத் தேர்ந்தெடுக்காமலிருந்தால் -- பம்பாயிலுள்ள என் வீட்டிற்கு வாருங்கள். அங்கே அழகி ஒருத்தியைக் காண்பீர்கள். அவள் உங்கள் கண்ணையும், கருத்தையும் கவருவாளேயானால், நீங்கள் அவளை மணந்து கொள்ளலாம். அவள் ஒரு அனாதை. என்னுடைய பராமரிப்பிலே வளருபவள். நீங்கள் அவளை மணந்து கொள்வீர்களேயானால், 'எதிர்காலம் எப்படி இருக்கும்?' என இரு விழி,

களிலே ஏக்கத்தையும், இருதயத்திலே துக்கத்தையும் ஏந்தித் துடிதுடிக்கும் ஒரு பெண்ணின் கண்ணீரைத் துடைத்தவராவீர்கள்! அனுதை ஒருத்திக்கு அபயம் அளித்த பெருமையும் உங்களுக்குச் சேரும்!

அன்புள்ள,
ராஜலட்சுமி.

[பின் குறிப்பு—நேரில் பெண்ணைப் பார்க்கப்போகின்ற உங்களுக்கு அவளது நிழற்படம் எதற்கு? அது மாத்திரமல்ல--நிழற்படம் நிழல்தானே? ]

விசித்திரமாகவும், வேடிக்கையாகவும் இருந்தது எனக்கு, இக்கடிதத்தைப் பார்க்க. என்றாலும், வரிக்கு வரி தொனித்த சோகக்குரல் என் இதயத்தைக் குத்தாமலில்லை.

அந்தப் பெண்ணைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் என் நெஞ்சத்திலே பிறந்தது. அருகிலிருப்பவைகளைவிடத் தூரத்தில் உள்ளவைகள் மீதுதானே மனம் லயிக்கிறது!

'நாளை வருகிறேன்' என்று தந்தி அடித்தேன். அவ்வளவு அவசரம் ஏனே எனக்கு!

❋

பம்பாய் போய்ச் சேர்ந்ததும் அவசர அவசரமாகக் குளித்துவிட்டு, ராஜலட்சுமியின் இல்லத்தைத் தேடி ஓடினேன்!

'வாருங்கள்' என்றழைத்தார்கள், என்னை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருந்த ராஜலட்சுமி அம்மையார். நாற்பதுக்கும், ஐம்பதுக்கும் இடையே இருக்கும் வயது--சாந்தமான முகம்--கண்களிலே கருணை! குரலிலே அன்பும், அடக்கமும் போட்டி போட்டன. எனக்கு அவரிடத்தில் மரியாதையும், மதிப்பும் பிறந்தது!

வீட்டினுள்ளே நுழைந்தேன். அங்கிருந்த சோபாவில் அமர்ந்தேன்.

''இரவெல்லாம் தூக்கமில்லை போலிருக்கிறது! பிரயாணம் சுகமாக இருந்ததா?'' என்றெல்லாம் கேள்விக் கணையைத் தொடுத்தார்கள்! இவைகளுக்கு என் நா பதில் கூறிக்கொண்டிருந்ததே தவிர, என் மனம் மட்டும்'பெண் எங்கே? எங்கே?' என்று கேட்டுக்கொண்டேயிருந்தது.

''கிரிஜா! காப்பி கொண்டு வாம்மா!'' என்று குரல் கொடுத்தார்கள், அந்த அம்மையார்.

கிரிஜாவைக் காண என் கண்கள் தயாராயின. கைகளிலே காப்பிக் கோப்பையைத் தாங்கி, தங்க நிலவொன்று என் எதிரே வந்தது.

''இவள்தான் கிரிஜா! இவர் சென்னையைச் சேர்ந்தவரம்மா-பெயர் மூர்த்தி!''—அம்மையார் என்னை அறிமுகப்படுத்தி வைத்தார்கள்.

அவ்வழகியின் கரங்கள் மட்டும் கூம்பின. ஆண்களைக் கண்டால், பெண்களின் வாய் சத்தியாக்கிரகம் செய்ய ஆரம்பித்துவிடுகிறதா ? தகதகக்கும் தங்கப்பேழை போன்ற உடலில் நடுக்கம் நெளிந்தோடியது. பொங்கும் நிலவு போன்ற முகத்தில் கவலை ரேகைகள் மின்னின! காப்பியை வைத்துவிட்டு ஓடி மறைந்தாள்!

''தம்பி, ஏன், கிரிஜா அழகிதானே?''

''விழி பழுதடைந்தவனும், 'இல்லை' என்று கூறமாட்டானே !''

''அப்படி என்றால், அவளை உனக்குப் பிடித்திருக்கின்றதா?''

''கரும்பு கசக்குமா?''

''கரும்பில் 'சுணை' இருக்குமே?''

''முள்ளிருக்கிறதே என்று ரோஜாவைப் பறிக்காமலா இருக்கிறோம்?''

''தம்பி! என் வயிற்றிலே பாலை வார்த்தாய்! இருளடைந்துபோன அவள் வாழ்வில் ஒளி வீசுமா--என ஏங்கி ஏங்கித் தவித்த எனக்கு, உன் பதில் எவ்வளவு மகிழ்ச்சி அளிக்கிறது தெரியுமா? கிரிஜா வாழ்வாள் வையகத்தில், வளத்தோடு, இன்பத்தோடு! அவள் பாக்கியசாலி!''--உணர்ச்சிப் பெருக்கால், அவ்வம்மையாரின் குரல் தழதழத்தது!

❋

அன்றிரவெல்லாம், கிரிஜா என் கண்களிலே விளையாடிக் கொண்டிருந்தாள். அவளும் நானும் குடும்பம் நடத்துவதைப்பற்றி என் மனம் தீவிரமாகத் திட்டம் போட்டுக் கொண்டிருந்தது...

மாலை நான் வீடு திரும்புகிறேன்.......வாயிற்படியிலேயே என்னை வரவேற்கிறுள் கிரிஜா!

''கிரிஜா! நான் உனக்கு ஒரு பரிசு கொண்டு வந்திருக்கிறேன்--அது என்னவென்று சொல், பார்ப்போம்!''

''பூச்சரம்!''

''இல்லை!''

''படிக்க நல்ல கதைப் புத்தகம்?''

''இல்லை!''

''பின் என்ன, நீங்களே சொல்லுங்கள்!''

''மாட்டேன்!''

''சொல்லாவிட்டால் போங்கள்!''—சிணுங்குகிறுள், அவள்.

''கோபிக்காதே, மானே!'' என்று கூறிக்கொண்டே பொட்டலத்தைப் பிரிக்கிறேன்.

''பட்டுப் புடவையா?''

''தீட்டின வைரம்போல் மின்னும் உன் மேனிக்கு, இந்த நீலப் பட்டாடை எவ்வளவு பொருத்தமாயிருக்கும்?''

''கண்டபடி ஏன் பணத்தைச் செலவழிக்கிறீர்கள்? சேமித்து வைக்கவேண்டாமா?''

''சேர்த்து வைத்து என்ன செய்யப் போகிறோம்?''

''மகளுக்குச் சீதனம்கொடுக்க வேண்டாமா?''

''மகளா?''

''எட்டு மாதத்தில் குதிக்கப் போகிறுள்''--நாணத்தில் அவள் முகம் சிவக்கிறது! இதழில் புதுநகை மின்னலைப்போல் ஓடுகிறது! தாய்மையின் வளர்ச்சியால், தேகம் முழுவதும் ஒளி வீசுகிறது!

''கண்ணே! இத்தனை நாள் ஏன் என்னிடம் இந்த இரகசியத்தை ஒளித்தாய்? அதற்கு என்ன தண்டனை தெரியுமா?'' என்று கூறிக்கொண்டே அவளை அணைக்க...அவள் ஓடுகிறுள்... அவளைப் பிடிக்க நான் ஓடுகிறேன்...ஏதோ ஒன்று அவளைத் தொடர முடியாமல் தடுக்கிறது ...தடாலென்று கீழே விழுகிறேன்!...

அந்த அதிர்ச்சியில் கண்விழித்தேன். கட்டிலிலிருந்து கீழே விழுந்திருந்தேன். இவ்வளவும் கனவுதானு?

❋

வேக வேகமாக கிரிஜாவின் வீட்டை அடைந்தேன். அம்மையாரின் முகத்தில் கவலை மேகம் கப்பியிருந்தது.

"தம்பி" என்றார்கள். மேற்கொண்டு பேச முடியாமல் துக்கம் தொண்டையை அடைத்தது.

"என்னம்மா?"

"என் ஆசை நிராசையாகி விட்டது."

ஆயிரம் ஆயிரம் ஊசி கொண்டு யாரோ என் இதயத்தில் குத்துவது போலிருந்தது. தேன் எடுக்கும் நேரத்தில் தேள் கொட்டினால்...?

"கிரிஜாவுக்கு என்னைப் பிடிக்கவில்லையா?"

"நிரம்பப் பிடிக்கிறது...அதனால்தான் மணம் செய்து கொள்ள மறுக்கிறாள்!"

"புதிராக இருக்கிறதே உங்கள் பதில்"

"அவள் வாழ்க்கையே ஒரு புதிர்; விடையில்லா விடுகதை!"

"என்னைக் குழப்பாதீர்கள்—விளக்கமாகக் கூறுங்கள். என்னை மணக்க மறுப்பதேன்? பதில் கூறுங்கள்; இல்லாவிட்டால் என் இதயம் வெடித்துவிடும்!"

அம்மையாரின் கண்கள் குளமாயின.

*

இரண்டு நாட்கள் பறந்தன. கிரிஜாவைக் காணாதது எனக்குப் பெரும் வேதனையாக இருந்தது. என் கால்கள் அவள் வீட்டை நோக்கி நடை போட்டன. வழியிலேயே கிரிஜாவைச் சந்தித்தேன்.

"இன்னமும் நீங்கள் ஊருக்குத் திரும்பவில்லையா?" — பேச்சைத் துவக்கினாள்.

"தேடி வந்த பொருள் கிடைக்கவில்லையே!"

"கிடைக்கும் வரை தேடிக் கொண்டேயிருப்பீர்களா?"

"ஆமாம்!"

"அவ்வளவு விலை உயர்ந்ததா, அது?"

"என் வாழ்வைவிட!"

"மின்மினியை நட்சத்திரமென்று நம்பிக்கொண்டிருக்கிறீர்கள்!"

"இல்லை; நட்சத்திரம்தான் தன்னை மின்மினி என்று நினைத்துக்கொண்டிருக்கிறது!"

"வானத்தில் ஒட்டியிருக்கும் வரைதான் நட்சத்திரம் மின்னும்! கீழே விழுந்தால் அது வெறும் கரித்துண்டு!"

"இது துருவ நட்சத்திரம்--கீழே விழாது!"

"துருவ நட்சத்திரமல்ல; எரி நட்சத்திரம்! சுடும்!"

"சூட்டிற்குப் பயந்தால் பூனை பால் குடிக்க முடியுமா? கடலலைக்கு அஞ்சி முத்தெடுக்காமலா இருக்கிறோம்?"

*

அடுத்த நாள் காலை டெலிபோன் மணி, என்னை விழிக்கச் செய்தது. ரிசீவரை எடுத்தேன். "சம்மதித்து விட்டாள்!" என்றார்கள், ராஜலட்சுமி.

"அப்படியா? ஒரு நொடியில் வருகிறேன்!" என்றுதான் பதில் கூற முடிந்தது என்னால்.

[தொடர்ச்சி பக்கம்-99]



தண்மலைச் சாரல் சார்தரும் சிற்றூர்
கண்கவர் பொழில்சூழ் கருமலைக் குறிச்சி
எனும்பெயர் கொண்டெழில் இலங்கிய
தவ்வுழி
இனமயில் அகவ இருந்ததோர் குன்றம்;
குன்றின் அடியில் சிற்பக் கோட்டம்
ஒன்றினை நிறுவி உலகோர் வியக்க
வாழ்ந்தனன் சிற்பம் வல்லான் ஒருவன்;
போழ்ந்தகற் பாறையில் புகுத்திய புதுமை
கண்டார் அவனைக் கடவுளே என்பர்;
கற்பனைத் திறனும் கைச்சிற் றுளியும்
பொற்புடன் படைத்த அற்புதப் பொரு
ளெலாம்
தொடாஅது நின்று தொலைவில் காண்போர்
விடாஅது நோக்கி வியப்புற் றவையெலாம்
உயிர்ப்பொருள் என்றே உரைப்பார்;
அவர்தாம்

# காதற் சிலை

## கவிஞர் முடியரசன்






அயிர்ப்பொரு சிறிதும்
அடையார்; அருகில்
தொட்டுப் பயின்றபின்
துணிகுவர் சிலையென;
எட்டுத் திசையும் நிகரிலை
எனமனம்
விட்டுப் புகழ்வர்; விளைபுகழ்
மொழிகள்
கொட்டும் பொருள்கள்
குறியாய்க் கொள்ளான்
கலைவளர் நோக்கம் ஒன்றே
கருத்தில்



நிலையாய்க் கொண்டான் நினையான் பிறிதை;
கலையே அவனும் அவனே கலையாம்
கலைஞன் எனும்பெயர்க் கமைந்தோன் அவனே;

கண்ணில் ஒளியும் கையில் உளியும்
எண்ணில் சிலையும் இளமையின் பொலிவும்
உடலிற் கட்டும் ஒருங்குடன் பெற்றோன்
இடமுடைக் கோட்டத் திருந்துழி ஆங்கண்
அழகிள நங்கை அவன்முன் நின்றாள்
பழகிய தோழியும் பக்கலில் நின்றனள்;
நிமிர்ந்தவன் நோக்கினன் நீள்விழி மீட்கிலன்
எதிரெதிர் விழிகள் இமையா திருந்தன;
பெண்மையின் இயல்பால் பேதை நாணினள்;

அண்மையில் நின்ற ஆருயிர்த் தோழி
"எங்கள் தலைவி மங்கையர் திலகம்
உங்களை நாடி உவந்திவண் வந்தனள்
வந்தவள் தன்னை வைத்தகண் எடாஅது
நுந்தம் விழியால் நோக்குதல் முறையோ?"
என்றொரு வினவை எழுப்பிட, எழுந்தவன்
ஒன்றிய துயில்களைந் துணர்ந்தெழு
பவன்போல்
விழிகளைத் துடைத்து மீண்டுற நோக்கி
"எழிலுற வடித்த என்சிலை உயிருடன்
எழுந்திவண் வந்ததோ எனநான் மயங்கிக்
கொழுந்து நிகருடற் கொடியிடை யாள்தனை
உற்று நோக்கினேன் உறுபிழை பொறுப்பீர்!
எற்றுக் கிவ்வயின் என்பால் வந்தீர்?
பொற்றொடி! இவள்யார்? புகலுதி" என்றனன்;
"முழுதுணர் கலைஞ! முன்னிநீ படைத்த
பழுதிலாச் சிற்பக் கோட்டம் நிறைதரு
சிலையெலாம்--கண்டுநின் கலையெலாம்
கண்டிவண்
உலவலாம் எனமனம் உவந்திட வந்தனம்;
வளநா டாளும் வடிவேல் மன்னன்
உளமகிழ் மகளாய் ஒருதனி வந்தவள்;
முரசொலி முழங்கும் முத்து நாட்டின்
அரசிளங் குமரி யாமிவள்" என்றனள்;
"கலைநலம் விழையும் கருத்துடன் வந்தீர்!
தலைதரும் வணக்கம் தந்தனென் நுமக்கே
வருக வருக வடிவுடைச் சிலைநலம்
பருக வருக பாவையீர்! வருக" என்
றக்குல மகளிரை அழைத்துடன் சென்று
தக்கநற் சிலையெலாம் தனித்தனி காட்டினன்;

சிலைத்திறம் காட்டும் சிற்பியின் வினைத்திறம்
கலைத்திறம் அனைத்தும் கண்டு வியந்து
பலபடப் புகழ்ந்து "பாரில் நிகருமக்
கிலையென உணர்ந்தேன்; எனைப்போல் ஒருசிலை
கைத்திறன் முழுதும் காட்டிச் சமைத்துத்
தைத்திரு நாளில் தருதல் ஒல்லுமோ?
விழைந்ததென் உள்ளம் வேண்டினேன் நுமை"
எனக்
குழைந்து கனிந்து கூறினள் அரசி.

"எழில்வினை நிலமே! என்தொழில் அதுவாம்
முழுநலம் பெறுசிலை முடிப்பேன்; இதுவரைக்
கற்பனைத் திறத்தால் கற்சிலை சமைத்தேன்
பொற்புடை நின்போல் பொற்சிலை சமைக்க
இன்றே தொடங்குவன் ஏழாம் நாளில்
நன்றே முடிப்பேன் நல்லாய்! என்முன்
அசைதல் இன்றி அவ்வயின் நில்" லென;
நசையுடன் நின்றனள் நங்கையும் அவன்முன்;

நின்ற நிலையை நிமிர்ந்தொரு முறைமனம்
ஒன்றும் படியாய் உற்று நோக்கினன்
பின்பவள் மலர்த்தாட் பெருவிரல் நோக்கி
இன்ப வல்லியின் இடையினை நோக்கி
இடையில் ஒன்றும் இடக்கை நோக்கி
வடிவொடு தொங்கும் வலக்கை நோக்கி
எடுத்த மார்பும் தொடுத்த தோளும்
கழுத்தின் வடிவும் கண்டபின் முகத்தின்
வட்டம் நோக்கி வாயிதழ் நோக்கி
ஒட்டும் புருவம் ஒண்குழைச் செவியை
எட்டும் விழியின் இணைஎழில் நோக்கிக்
கதுப்பும் நுதலும் கண்கவர் மூக்கும்
விதுப்புற நோக்கி வெய்துயிர்த் தனனே;

அவ்வயின் நின்ற ஆருயிர்த் தோழி
"இவ்விதம் பெருமூச் செறிவதன் நோக்கம்
யா" தென வினவ ஆடவன் கூறுவான்
"மாதுடல் அமைப்பின் மாண்புகள் யாவும்
சிற்பச் செந்நூல் செப்பும் இலக்கணச்
சொற்படிக் கண்டேன் சொக்கினேன்; இவளுரு
அற்புதப் படைப்பாய் அமையும் எனினும்
விழியில் வழியும் ஒளியும், அருளும்,
பிழிதேன் பொழியும் மொழிபுகல் வாயின்
இதழில் தவழும் இனிய மூரலும்,
புதுமைச் சிலையில் புகுத்திக் காட்ட
என்கைச் சிற்றுளி வல்லதோ எனநான்
உன்னிப் பார்த்தேன் உயிர்த்ததென் னெஞ்"
செனச்
சிலையாய் நின்றவள் சிரித்தனள்; வாயில்
நிலையாய் நிற்கும் நிரல்படு முகத்தின்
ஒளிபட அவன்முகம் களியால் மலர்ந்த(து);
அளிநிறை நெஞ்சை அவன்பால் வைத்துத்
தளிரடி பெயர்த்துத் தையல் நடந்தனள்;
பேதையின் பின்செலும் பேதுறும் மனத்தைத்
தீதிலன் தடுத்துத் திருப்பினன் அவள்சிலை
படைத்திட வேண்டும் பணியுள ததனால்;

உடைத்தொரு கல்லில் உளியை நாட்டினன்;
தளிரடிச் சிலம்பொலி உளியடிக் கெழுமொலி
குளிர்மலைச் சாரலில் குலவி எதிர்ந்தன
சிலம்பொலி தாழ்ந்தது சிற்றுளி ஒலித்த(து);
உண்ணான் உறங்கான் உடல்நலம் பேணான்
கண்வழி புகுந்து கருத்திற் கலந்தாள்
வண்ண உருவம் வடிப்பதே தொழிலாய்
ஒவ்வோ ருறுப்பும் உன்னி நோக்கிச்

செவ்வனே முடித்தனன் செப்பிய எழுநாள்
முடிந்தது சிலையும் முடிந்தது நெஞ்சிற்
படிந்த உருவின் படிமங் கண்டனன்;
காதல் மடவார் கடைக்கண் பணித்தால்
ஈதொரு பணியோ? ஏழ்சிலை முடிப்பர்!
காதல் வேகம் கடிதே! கடிதே!

மன்னன் மகளாம் மயிலியும் வந்தனள்
நன்னர்ச் சமைத்த நயத்தகு படிமம்
கண்டனள் வியட்புக் கொண்டனள் மிகவே;
''ஒண்டொடி! என்போல் உளதோ இவ்வுரு?
விண்டிடு மெய்''யென வினவினள் தோழியை;
மயிலியைச் சிலையின் மருங்கினில் நிறுத்திப்
பயிலியற் சாயல் பார்த்தனள்; விம்மி
''எதுசிலை? எதுநீ? எனக்காண்ப ரிது!
புருவச் சிலையில் பூத்துள வியர்வால்
உருவச் சிலைஎது உன்னுடல் எதுவென
உணர வல்லேன்; ஒப்பிலை இவற்கே
இணர்மலர்க் கோதையின் இதழின் சிரிப்பும்
இன்னருள் விழியும் எப்படிப் படைத்தனை?
கற்பனை மிகுத்திடும் சிற்பக் கலைஞ!
நிற்புகழ்ந் தேத்த--முற்படும் எனக்கு
நாவும் ஒன்றே நானென் செய்கேன்?''

''பலபடப் புகழும் பாவாய்! என்றன்
கலைமுறைத் திறனைக் காட்டிலேன்; நெஞ்சில்
வாழும், வடிவின் வார்ப்படம் இவ்வுரு;
ஊழல் அமைத்திடும் உருவினில் ஒருகுறை
உளதிவள் நெஞ்சை உளியாற் படைத்த
சிலையிற் பொருந்தச் செய்திலேன்' என்றனன்;
''நெஞ்சை நும்பால் நிறுத்திச் சென்றேன்
வஞ்சம் செய்தீர்'' என்றனள் வஞ்சி;
தொலைவில் இருக்கும் சிலைகளைக் காணத்
தோழி அகன்றனள்; தூயநற் கலைஞன்
''வாழி நெஞ்சே வாழிய மயிலி
என்றன் நெஞ்சும் உன்றன் நெஞ்சும்
ஒன்றிய படியால் எடுத்ததைச் சிலையில்
தைத்திட மறந்தேன் மைத்தடங் கண்ணி!
தைத்திரு நாளில் தாம்கலந் தனவே;
மன்னன் மகள்நீ மயலுறும் என்பால்
அன்புடன் கடைக்கண் அருளுதி யோ?'' என;
''மாண்புயர் கலையில் மணிமுடியரசர்
ஏனுமக் கையம்? என்மன வுலகில்நீர்
ஆளும் மன்னர்! அன்பரீர்! நும்மை
நாளும் நினைந்தே நலிவுறு கின்றேன்''
என்றலும் தோழி இடையில் வந்து
நின்றனள்; பின்னர் நீங்கினர் இருவரும்;

ஆடினன் பாடினன் அருவி நீரில்
ஆடினன் ஓடினன் ஆண்டுள மலர்களைச்
சாடினன் அச்சிலை சார்ந்துதன் மெய்யால்
மூடினன் காதலில் மூழ்கினன் சிற்பி;

வேட்டம் போகிய வெள்வேல் வேந்தன்
கோட்டம் காணிய குறுகினன் ஆங்கண்;
''குறிஞ்சி நாட!நின் கொற்றம் வாழி!
செறிந்தநல் லறஞ்சேர் செங்கோல் வாழி!
தெரிந்த வகையாற் செய்துளேன் சிற்பம்
அறிந்திட வந்துளீர் அடியனேன் வணக்கம்''
என்று கூறி இயற்றிய சிலையெலாம்
நன்று காட்டிட, நாடாள் வேந்தன்
அழகோ வியமாய் ஆண்டுள சிலையை
விழியால் பருகினன் வியந்தனன்; சிற்பக்
கலைஞன் அதன்நிலை கழறினன் விரிவாய்;

வடிவேல் மன்னன் மகளெனக் கேட்டலும்
''கொடியிடை இவள்போல் குவலயம்
யாங்கணும்
வடிவுடை யழகி வாழ்ந்திடல் காண்கிலேன்
என்னடி வணங்கித் திறைகொடுத் திருக்கும்
மன்னவன் இவற்கோர் மனங்கவர் மகளுளாள்
என்ப தறிந்திலேன் இன்றே தெரிந்துளேன்
பின்பவட் காண்பேன் பேதையை மணப்பேன்''
என்று மனத்துள் எண்ணினன் சென்றான்;
சென்ற குறிஞ்சியான் செய்தி எழுதி
வடிவேல் மன்னனின் மகட்கொடை வேண்டிக்
கடிதிற் செல்லும் காவலற் போக்கினன்;

முடங்கல் கண்ட முழுமதி முகத்தாள்
தடங்கல் சொல்லித் தானொரு சிற்பிக்
குரியள் என்பதை உணர்த்துக என்றனள்;
சிறியவள் விடுத்த செய்தியைக் கேட்டுச்
சீறி எழுந்தனன் ''சிற்றர சன்மகள்
மீறிய உரைசொல் மேவிடும் செருக்கைக்
கூரிய மதிகொடு கொட்டம் அடக்குவேன்''
தீப்பொறி சிதறச் சினந்துரை கூறிக்
கூப்பி(டு) அந்தக் கொடுஞ்செயற் சிற்பியை''
என்றலும் ஏவலர் ஏகினர்; கொணர்ந்தார்.
நின்றிடும் சிற்பியை நெருங்கினன் குறுகிக்
''கலைவலோய்! நின்றன் காதற் குறிப்பின்
நிலையெலாம் அறிகுவன்; நீயொரு குடிமகன்
அரசியை மணத்தல் அடுக்குமோ? அதனுல்
கருமலைக் குறிச்சிக் காவலன் ஆக்கிடக்
கருதி உனையிவண் கடிதின் அழைத்தேன்;
என்மொழி கேட்க இயைகுவை யாயின்
மன்மகள் நினக்கு மணமகள் ஆவள்
உன்கலைத் திறனை உலகமும் ஏத்தும்''
என்றனன் வேந்தன்; இசைந்தனன் சிற்பி;
''குன்றடர் மலையைக் குடைந்தொரு கால்வாய்
சென்றிடப் படைத்துச் சிற்பத் திறமெலாம்
காட்டி அதனிரு கரையிலும் அமைத்திடல்
வேட்டனன் யானே; விரைவினில் முடிப்பின்
வேட்டவள் தன்னை வியன்மணம் கொள்வாய்;
காட்டுக நின்திறம் கலைஞ! என் ஆணை;
வினைகள் முடியுமுன் விழைவோட் காண
முனைவதும் குற்றம்இம் மொழியுமென் ஆணை''

எனமொழிந் திருந்தனன் இறையவன் அரியணை;
மனம்நிறை துயரினன் மயங்கினன் செய்வகை
யாதென அறிகிலன் ''யானென் செய்குவன்?



தீதுறு மோ?எனச் சிந்தனை செய்தனன்.
மயிலியின் திருவுரு மனக்கண் தோன்றலும்
வெயிலவன் போல வெண்முகம் சிவந்தது
''குறிஞ்சி நாட!நீ கொடுத்தஇவ் வாணையை
விரைந்து முடித்துநான் வெற்றியுங்
கொள்வேன்''
எனுமொழி கூறி ஏகினன் சிற்பி;

காதல் உணர்வு கருத்தினில் உந்தி
மோதி எழுதர முனைந்தனன்; உழைப்பால்
மலையைக் குடைந்தனன் மாபெருங் கால்வாய்
அலையொடு பாய்ந்த(து) அதனிரு கரையில்
உலகம் உவப்ப உயர்பெருஞ் சிலையெலாம்
படைத்தனன்; ஆண்டுகள் பலப்பல நடந்தன;
உடலந் தளர்ந்தனன் உள்ளந் தளர்ந்திலன்
தடந்தோள் வீரன் தலைநிமிர்ந் திருந்து
வெற்றிச் செருக்கொடு விழித்து நோக்கினன்

கலைஞன் புலம்பல் காடெலாம் பரவி
மலையகம் மோதி எதிரொலித் தெழுந்தது;
மாதின் சிலைபால் ஓடினன் மயங்கி
மோதினன் முட்டினன் ''மோனத் திருக்கும்
காதற் சிலையே! கண்ணீர்த் துளியால்
குளித்திடு! எனினுயிர் குடித்திடு விரைவாய்!
யாண்டுச் சென்றனை? யாதுநீ எண்ணினை?
ஆண்டு வருவேன் ஆருயிர்க் காதலி!''
என்றவன் புலம்பிக் குன்றினில் ஏறி
நின்றனன் வானை நிமிர்ந்து நோக்கினன்
விரலுறு சிற்றுளி வீசி எறிந்தனன்
''மயிலி! மயிலி! மனங்கவர் மயிலி!
மயிலி! நானும் வருவேன்'' என்று
பலகால் அலறிப் பாய்ந்தனன் கீழே
சிலையால் நிற்பவள் சீறடி வீழ்ந்தனன்;
கதறலும் உயிரும் காற்றுடன் கலந்தன;
சிதறிய குருதி சிலைஎலாம் நனைத்தது;



பெற்ற களிப்பால் பெருமூச் செறிந்தனன்
சிற்றுளி கைவிரல் பற்றி யிருந்தது.
''காதற் கனவு பலித்திடக் கண்டேன்
ஏதுக் கினித்துயர்? இவ்வுல காள்வேன்
நானும் அவளும் வானம் பாடி
போலப் பறந்து வானில் திரிவோம்''
எனப்பல கற்பனை எண்ணி நின்றனன்;

சினப்படு வேந்தன் செய்ததோர் சூழ்ச்சியால்
ஆங்கோர் கிழவி அழுது வந்தனள்
தீங்குனக் கென்ன? செப்பெனச் செப்பினள்
''வடிவேல் மன்னன் மகளென வந்த
கொடியிடை மயிலி மடிந்தனள்'' என்றுள்;
அலறினன் கதறினன் ''ஐயகோ'' என்றனன்
''பலபகல் இரவுகள் பாடுபட் டுழைத்ததால்
உறுபயன் இதுவோ? உலகம் முடிந்ததோ?
இருளெனைச் சூழ்ந்ததோ? இனிஉயிர்
விழைவதோ?''

கவலைகள் தீர்ந்தான் காதலும் தீர்ந்தான்;
திவலைகள் அலறின சிலைகளும் அலறின
குன்றுகள் அலறின குகைகளும் அலறின

பறவைகள் அலறின பாரெலாம் அலறின;
மாய்ந்தனன் சிற்பி என்றொரு மாற்றம்
தோய்ந்தது செவியில் துடித்தனள் மயிலி
''ஐயகோ! ஐயகோ! ஆர்செய் சூழ்ச்சி?
வையகம் பொறுக்குமோ! வானகம்
இருக்குமோ!
உண்மைக் காதலை உலகம் வெறுத்ததோ!
பெண்மைக் கிங்கே பெருந்துயர் தானோ!''
என்றவள் ஏங்கி ஏகினள் குறிச்சிக்
குன்றினில் ஏறிக் குதித்தனள் கீழே
சிலையின் அருகே அவளும் சேர்ந்தனள்
கலையும் உயிரும் காதலும் தீர்ந்தனள்
மலையும் மரமும் மலைத்து நின்றன;
அழுமொலி போல அவலம் பாடி
இழுமெனும் ஒலியால் இழிதரும் ஆறே. ஃ


புராண விநோதம் பாரீர்!
'சப்த'ரிஷி
'பஞ்சப்'பாண்டவர்
அஷ்டதிக்குப்'பாலகர்'

# இப்படி நடந்தால்...

சி. பி. சிற்றரசு

'இப்படி நடந்தால் எப்படி இருக்கும்; அப்படி நடந்தால் எப்படி இருக்கும்' என்றெல்லாம் மனதை போன பக்கமெல்லாம் ஓட்டுகிறார்களல்லவா? எனக்கும் ஒரு நாள் அப்படி ஓட்டிப் பார்க்கலாமே என்ற எண்ணம் தோன்றியது. சிந்திக்கவே பயமாயிருக்கிறதே என்று யாரும் எண்ணக்கூடாது. சிந்தனைக்கு ஒரு விருந்து வேண்டாமா? பொங்கல் விருந்துண்டால் போதுமா?

"என்ன விருந்தளிக்கப் போகிறீர்கள், அண்ணே?" என்று கேட்டார் கலைஞர் கருணாநிதி.

இதோ, இலையில் இருக்கிறதே தன்னடக்கத்தோடு, யார் கண்களிலும் 'சட்' டென்று படாமல், அதுவும் மற்ற வகைகளின் மத்தியிலே மறைந்து கிடக்கிறதே துவையல் (சட்னி) அதுதான் என்னுடையது—என்று காட்ட அழைத்துச் செல்லுகிறேன். அதில் விருப்பம் உள்ளோர் எல்லாரும் வாருங்கள்.

தேர், ஊரெல்லாம் சுற்றினாலும் கடைசியில் நிலைக்கு வந்து சேருவதுபோல், கை, இலையை எந்தப் பக்கம் சுற்றினாலும் கடைசியில் துவையலின்பக்கம் வந்துதான் தீர வேண்டும். முண்டியடித்துக் கொண்டு எல்லாம் வாய்க்குள் முன்னே போகட்டும்; நாம் கடைசியில் போவோம்; என்று அமைதியாகக் காத்துக் கொண்டிருக்கிறது, துவையல். மற்ற காய்கறிகளை அள்ளி அள்ளி விழுங்குவதைப்போலத் துவையலை அள்ளி விழுங்கிவிட முடியாது. மணமான இளைஞன் ரயிலில் போகும்போது கூச்சப்பட்டுக் கொண்டே ஒரு விரலால் தன் காதலியின் தோளைத் தொடுவதைப் போலத் தொட வேண்டும். ஒரே மூச்சாக வழித்து வாயில் போட்டுக் கொண்டால் அந்தக் குற்றம் செய்ததற்காக அவர்கள் ஒரு சொட்டுக் கண்ணீராவது விட்டுத்தான் தீர வேண்டும்.

அந்தத் துவையலைப்போன்றதுதான் இது. வாருங்கள்; விருந்து மண்டபத்திற்குப் போவோம்......

பாபநாசம்....பகவதி....அப்படியென்றால் பாபநாசம் என்ற ஒரு ஊரில் பகவதி என்ற ஒரு பெண்ணா என்று கேட்பீர்கள்! இல்லை; பாபநாசம் நம் கதாநாயகன்—பகவதி நம் கதாநாயகி!

பாபநாசம் என்பவரின் ஊர் வேம்படிதாளம். பகவதியின் ஊர், நல்ல ஆண்பிள்ளை பெற்றாள். இந்த ஊர் இப்பொழுது நல்லாண்பிள்ளை பெற்றாள் என்று வழங்குகிறது. அந்த ஊரிலிருந்த ஒரு அரசி நெடுநாட்களாகக் குழந்தை இல்லாமல் ஒரு ஆண் குழந்தையைப் பெற்றாளாம். அதனால் அந்த ஊருக்கு 'நல்ல ஆண் பிள்ளை பெற்றாள்' என்ற பெயர் வழங்குகிறது.

அந்த ஊரின் பக்கத்திலே ஒரு சிறிய குன்று. அதற்கு ஒரு சிறிய' வரலாற்று முக்கியம். அதைப் பார்க்க அடிக்கடி யாராவது வருவதுண்டு. அந்த ஊர், வீரன் தேசிங்கின் செஞ்சிக் கோட்டைககுச் சுமார் 10, 15 மைல்களுக்குள்ளிருப்பதால், இந்த ஊரையும் பார்த்துவிட்டுச் செல்வார்கள்.

அந்த முறையில் வந்தவன்தான் பாபநாசம்!

குன்றைச் சுற்றிப் பார்த்துக் கொண்டே வந்தவன் தந்தை செய்யும் பூசைக்காக கொன்றைப் பூப்பறிக்க வந்த ஒரு பெண்ணைப் பார்த்துவிட்டான். அவ்வளவுதான்......

"ஆகா! இன்றோடு என் பாவமே நாசமாப் போச்சு," என்று வாய் விட்டுக் கத்திவிட்டான் பாபநாசம்.

உடனிருந்த தோழர்கள் குளத்தில் குளித்துக்கொண்டிருந்ததால் தனிமையில் இவன்பேசியதைஅவர்களால் கேட்க முடியவில்லை. பகவதிக்கு மட்டும் இலேசாகக் கேட்டது. திரும்பிப் பார்த்தாள்.

கோயிலைப் பார்த்துத்தான் இப்படிச் சொல்கின்றான் போலிருக்கிறது என்று பூப்பறிக்கும் வேலையைக் கவனிக்கலானாள்.

குளித்துக் கொண்டிருக்கும் நண்பர்கள் வருவதற்குள் எப்படியாகிலும் அவளை அணுகித் தன் தோற்றத்தையும் எண்ணத்தையும் விளக்கிவிட வேண்டுமென்று நினைத்தான், பாபநாசம். அவளுடைய எண்ணம்எதுவானாலும்ஆகட்டும்; முதலில் நம் எண்ணத்தைச் சொல்லி விடுவோம் என்று

நினைத்தான், ஏதோ நாம் ஊதுகிற சங்கை ஊதி விடுவோம்; பொழுது எப்பொழுதாவது விடியட்டும்—என்று எண்ணுவதைப்போல.

அவள் இருந்த இடம் நோக்கி வந்துகொண்டிருந்தான். அதற்குள் தோழர்களும் வந்து விட்டார்கள்; பகவதியும் போய்விட்டாள்! அன்றைய தினம் அவனுடைய ஆரம்ப முயற்சி படுதோல்வி!

இனி இந்த ஊருக்கு கும்பலாக வருவதைவிடத் தனியாக வருவதுதான் நல்லது என்று தீர்மானித்து நான்கு முறை வந்திருக்கிறான். இந்த நான்கு முறைகளில் அவன் கண்ட வெற்றி, அவளை நெருங்கித் தன் கருத்தைச் சொன்னான் என்பதுதான்! எங்கெங்கே சந்தித்தார்கள்—எந்த நேரத்தில் சந்தித்தார்கள்-என்றெல்லாம் விளக்கத்தேவை இல்லை. ஏனெனில், அதற்கான விளக்கங்கள் எல்லாம் நம் தமிழ் இலக்கியங்களிலே உண்டு!

ஆனால் நவீனமான முறையில் கதையின் முடிவை அனுசரித்து இப்படித்தான் பேசியிருப்பார்கள் என்று நினைக்கிறோம்.

"கண்ணே! நான் உன்மேல் என் உயிரை வைத்திருக்கிறேன்!" என்று சொல்லியிருப்பான்.

"யாரையா வைக்கச்சொன்னார்கள், என் மேல் உயிரை?" என்று அவள் கேட்டிருப்பாள்.

"யாரும் சொல்லவில்லை; நானாகத்தான் வைத்தேன்!" என்று பதில் தந்திருப்பான்.



"நீயாகத்தானே வைத்தாய்? ஆகவே, நீயே அதை எடுத்துக் கொண்டு போ!" என்று அவள் சொல்லியிருப்பாள்.

இவன் கெஞ்சினான்; அவள் எடுத்தெறிந்து பேசினாள். "கரும்பே" என்றான்; "ஓடிவிடு! கூச்சல் போட்டு ஊரைக் கூட்டுவேன்!" என்று மிரட்டினாள்; புறக்கணித்தாள்; உதாசீனம் செய்தாள்.

'எனக்குக் கிடைக்காத இந்தப் பொருள் இனி உயிரோடிருக்கக் கூடாது' என்று நினைத்து, அவர்கள் நின்று பேசிக்கொண்டிருந்த ஒரு கிணற்று மேட்டிலிருந்து அவளைக் கிணற்றில் தள்ளிவிட்டு ஓடிவிட்டான்.

ஆம்; அவன் எண்ணத் திரைகள் அலைமோதுகின்றன. கிணற்றில் அவனால் தள்ளப்பட்ட அவள் என்ன ஆனாள்?

மறுநாள் வெளிவந்த பத்திரிக்கைகளை எல்லாம் புரட்டிப் பார்த்தான். அவன் வாங்காத செய்தித் தாள்களே இல்லை. மக்கள் கூடுகின்ற இடங்களில் ஏதாவது பேசிக் கொள்கின்றார்களா என்றெல்லாம் கவனித்துக்கொண்டிருக்கின்றான்.

யுவராஜ் என்கின்ற நாய் எங்கேயாவது துப்பறியப் புறப்பட்டிருக்கிறதா என்று கவனித்தான். அதுவும் எங்கேயோ போயிருப்பதை மட்டிலும்தான் இவனால் தெரிந்து கொள்ள முடிந்தது. ஆனால் எங்கே அது போயிருக்கிறது என்று கேட்க இவனுக்குத் துணிவேதும் பிறக்கவில்லை. துணிந்து விசாரித்தால், இவனுக்கேன் இவ்வளவு அக்கறை என்று சந்தேகப்பட்டு உள்ளே போட்டு மூடிவிட்டால் என்ன செய்வது என்ற பயம்.

ஆனால் அவன் மனம் சூறாவளியில் சிக்கிய மரக்கலம்போல் தத்தளிக்கிறது. அவள் யார்? நாம் யார்? ஏன் அவள்மேல் ஆசை கொண்டோம்?

'கிட்டாதாயின் வெட்டென மற' என்பதை அவனும் படித்தான். ஆனால் இந்தச் செயலைப் பார்க்கும்போது அவன் அந்தப் பழமொழிக்குக் கொண்ட பொருளே வேறாகத் தெரிகிறது. 'கிட்டாதாயின் வெட்டென மற'—'நினைத்த பொருள் கிடைக்கவில்லையாயின் மறந்து விடு' என்ற அர்த்தத்தை, 'அந்தப் பொருளையே மறைத்துவிடு' என்று பொருள் கொண்டான் போலிருக்கிறது. ஆகையால்தான் தனக்குக் கிடைக்காத பகவதியை உலகத்திலிருந்தே மறைத்துவிடத் துணிந்தான்.

அந்தப் பக்கம் நடக்கின்ற சந்தைகளிலே உருமாறித் திரிவான். ஏன்? அவளைப் பார்ப்பதற்காக அல்ல; அவள் சாவைப் பற்றி யாராவது பேசிக் கொள்கின்றார்களா—என்பதை அறிய.

ஒன்றும் தெரியவில்லை; இப்படி நான்காண்டுகள் உருண்டு விட்டன.

மன எழுச்சி அடங்கிய பாடில்லை! தன் எதிரில் யாராவது ஒரு போலீஸ்காரர் வந்தால் சந்தேகம் — நாய் ஏதாவது தன்னை நெருங்கினால் சந்தேகம்-போலீஸ் வண்டியில் துப்பாக்கி ஏந்திய காவலர் போனால் கலக்கம்—தூக்கத்தில் ஏதாவது உளறிவிடுவோமோ என்ற அச்சம்!

இப்படிப் பலநாட்கள் கழிப்பதைவிட எப்படியும் இந்த மனப் போராட்டத்திலிருந்து விடுபட வேண்டும்! 'கண்டுபிடித்து விட்டால் உடனே தூக்குத் தண்டனை கிடைக்கப் போவது உறுதி. சரி, அவள் மரணத்தறுவாயில் ஒன்றுமே சொல்லாமல் செத்திருந்தால் நாம்தான் என்று எப்படித் தெரியும்? துணிந்து அவள் ஊருக்கே போவோம்; பின்னால் நடைபெறுகின்ற வழக்கில் கொலை செய்தவன் இவ்வளவு தைரியமாக அந்த ஊருக்கே வருவானா - என்று வக்கீல் வாதாடுவதற்கு ஒரு ஆதாரமாக இருக்கும்' என்றெல்லாம் நினைத்து அந்த ஊருக்கே வந்து தெருத் தெருவாகச் சுற்றி வந்து கொண்டிருக்கிறான்.

ஒருநாள் இவன் ஒரு பெரிய தெருவில் போய்க் கொண்டிருக்கும்போது, ஒரு பெண், அழகான மாலை ஒன்றை இவன் கழுத்தில் அணிவித்து, "அத்தான்" என்றாள்.

"யாரது?"

"யாருமில்லை. அன்று கிணற்றில் தள்ளிவிட்டு ஓடி விட்டீர்களே; அந்த பகவதி!"

"நம்ப முடியவில்லையே!"

"ஆச்சரியமில்லை! இந்த பகவதி கொஞ்சம் உருமாறியிருக்கிறாள். ஏன் தெரியுமா? கிணற்றில் தண்ணீர் நிறைய இருக்கும் என்று தள்ளிவிட்டீர்கள்! ஆனால் அதில் தண்ணீர் கொஞ்சம்தானிருந்தது. அதனால் முகம் கால் கைகள் எல்லாம் அடிபட்டுவிட்டன. அதனால் முகத்தில் மாற்றம்!"

"பகவதி! நான் செய்த குற்றத்திற்கு என் கழுத்தில் கயிற்றை மாட்டியிருக்க வேண்டுமே; அதற்குப் பதிலாக மாலை போடுகிறாயே! அவ்வளவு கருணை உள்ளமா உனக்கு? பெருந்தன்மையோடு என்னை மன்னித்து மாலை போட்டிருக்கிறாயே; இதன் கருத்து எனக்கு விளங்கவில்லையே!" என்று கண்ணீரோடு நின்றான்.

"நீர்தான் உண்மையான காதலர்! உங்களை மணக்காத என்னை வேறொருவனும் தீண்டக் கூடாதென்று எண்ணினீர்களே; அதனால் தான் உம்மையே திருமணம் செய்து கொள்கின்றேன்! வாழ்வோம் நாம்!" என்றாள்.

கதை முடிந்தது. ஆனால், வாலிப சிங்கமே! இதையே பின்பற்றிவிடப் போகிறாய்! பகவதியைப் போல் எல்லாரும் உயிர் தப்பிவிட முடியாது!

இதுதான் கலைஞர் கருணாநிதியளிக்கும் பொங்கல்படைப்பில் நான் தரும் துவையல்!



தி.மு.க.வே திட்டம் எங்கே?
இதோ!
அண்ணா கொடுத்த திட்டம்
திட்டமிடப்பட்டுள்ள 10,000 கோடியில் சென்னை மாநிலத்துக்கு 1000 கோடி பங்கு கேட்கும் திட்டம்
500 கோடி
10,000 கோடி
பணக்காரர்களிடம் தேங்கியுள்ள பணத்தை பலவழிகளில் பெறுந் திட்டம்
இன்னும் கவனிக்கப் படாமலிருக்கும் ஏராள தரிசு நிலங்களை விளை நிலமாக்கும் திட்டம்.
சூரிய வெளிச்சத்தால் மின்சாரம் உண்டாக்கும் திட்டம்.
சென்னைநகர் சீரமைப்புத் திட்டம்
விலைவாசி
டெல்லி சர்க்காரின் கட்டளைக்குக் காத்திராமல் விலைவாசியைக் கட்டுப்படுத்தும் திட்டம்



பாசன ஏற்பாட்டில் ராணுவத்தைப் பயன்படுத்தும் திட்டம்.
அணுமின்சார உற்பத்தி நிலையங்களை ஏற்படுத்தும் திட்டம்
கால்நடைத் திட்டம்
தோல்
கறி
தோல்சாமான்கள்
கம்பளம்
துணி
எலும்பு சாமான்கள்
கெடிகாரம், தையல்மெஷின் செய்தல் போன்ற கைத்தொழிற் பயிற்சிக்கு மாணவர்களை வெளிநாடு அனுப்பும் திட்டம்
கைத்தறி துணிகளுக்கு எல்லா நாடுகளிலும் 'மார்க்கெட்' ஏற்படுத்தும் திட்டம்
சேலத்தில் இரும்பு உருக்குத் தொழிற்சாலை, அலுமினியத் தொழிற்சாலை உடனடியாக ஏற்படுத்தும் திட்டம்
மோட்டார் உருவாக்கும் தொழிற்சாலை-கெடிகாரத் தொழிற்சாலை மற்றும் நுண் தொழிற் திட்டம்.



முந்திரியிலிருந்து பிளாஸ்டிக் சாமான்கள் செய்யும் திட்டம்
உதகையில் பிலிம் தயாரிக்கும் திட்டம்
உப்பு
கடற்கரைகளில் உப்பெடுக்கும் தொழிலை விரிவாக்கும் திட்டம்
காவிரி வட்ட எண்ணெயைப் பயன் படுத்தும் திட்டம்
OIL
OIL
காப்பி, டீ, ரப்பர் போன்ற மலைச்செல்வங்களைத் தேசியமயமாக்கி வருமானத்தைப் பெருக்கும் திட்டம்
நீலகிரியில் பால்பண்ணை நிறுவும் திட்டம்
MILK VAN
MILK
MILK
புது ரயில் பாதைகள் போடும் திட்டம்
அண்டை நாடுகளின் வீணாகும் நீர் கொணரும் திட்டம்
தூத்துக்குடி துறைமுகத்தை விரிவுபடுத்தும் திட்டம்
தூத்துக்குடிக்கும் சென்னைக்கும் இரட்டை ரயில் பாதை (DOUBLE LINE) போடும் திட்டம்


மீன் பிடிக்குந்தொழிலைப் புதுவிஞ்ஞான முறையில் விரிவுபடுத்தும் திட்டம்
STOP
மாங்கனீஸ் தாதுப் பொருளை ஏற்றுமதி செய்வதை நிறுத்தி, அதை இங்கேயே பயன் படுத்தும் திட்டம்.
மூலிகைகள் நிறைந்த இடத்தில் மருந்துத் தொழிற்சாலைத் திட்டம்
பூமி வளத்தைக் கண்டு பிடித்துப் பயன்படுத்தும் திட்டம்
சேது சமுத்திரத் திட்டம்
'நீலகிரி, தஞ்சையில் காகிதத் தொழில் திட்டம்
சினிமாத்தியேட்டர்களையும் ஸ்டுடியோக்களையும் தேசியமயமாக்கும் திட்டம்
CINEMA
STUDIO
"இதெல்லாம் ஆண்டிகள் மடங்கட்டின கதை தான்!"
Che



# தங்கச் சங்கிலி

ப. உ. சண்முகம். M.L.A.

திருவண்ணுமலை கார்த்திகை தீப உற்சவம் என்ருல் கூடும் மக்கள் தொகையைக் கணக்கிட முடியுமா? தங்கட்குக் கிடைத்திருக்கும் வசதியும், வாழ்வும் குலேயாது நிலேயாயிருக்க வேண்டிட வருவாருமுண்டு! தமக்கு வந்த இன்னல் எல்லாம் அண்ணல் அண்ணுமலேயானேத் தரிசித்தால் தீராதா என்ற நம்பிக்கையோடு வருவாருமுண்டு! இவ்விதம் வருவோர் தாங்கி வரும் நகைகளே நம்பி வருவாருமுண்டு! இந்தக் கடைசி நம்பிக்கையோடுதான் திருவண்ணுமலே வந்தான் ரெளடி ரங்கன்.

இவனேப் பற்றிப் பல சொல்வதைவிடக் கம்பனது மொழியில் ஒன்று சொன்னுல் போதும்; "இரக்கமென்னும் ஒரு பொருளில்லா அரக்கன்!!" கொடுமையாளன் என்பதை இவன் மீசையே காட்டும்! பிறர் தலேயைக் கொய்வது என்பது இவனுக்கு வெற்றிலேக் காம்பு கிள்ளுவது போன்றது என்பதை இவனது தோற்றமே சொல்லும்! கண்ணீர் உகுத்தறியாத கண்களுடையான் என்பதை அவன் பார்வையே அறிவிக்கும்! கூட்டத்தினிடையே புகுந்து தேட்டை போடுவதும், வேட்டை முடிந்ததும் பட்டை விற்கும் வீட்டைத் தேடுவதும்தான் இவனது தொழில். இந்தக் கருணுமூர்த்தி அருணுசலத்தில் நுழையும் போது இரவு மணி பத்து இருக்கும். வெள்ளித் தேர் வெளியில் வருவதைக் காணப் பெருங் கூட்டம் கூடி யிருந்தது. பொய்க்கால் குதிரையின் ஆட்டங் காணக் கிராமத்து மக்கள் இடித்து நெறித்துக் கொண்டிருந்தனர், ஒருபக்கம்! மற்ருெரு பக்கம் குழிக்கரையாரின் நாதஸ்வரம் கேட்க ஆண் பெண் என்று பாராமல் நசுங்கி நின்றிருந்தனர்! இதைத் தொடர்ந்துவரும் வெள்ளித் தேர் காண நின்றிருந்தோரும் நெரிசல்பட்டு அவதிக்கு உள்ளாகி யிருந்தனர். எங்கு பார்த்தாலும் நகர்ந்து செல்லும் ஆயிரக்கணக்கான தலேகள்! இப் பெருங் கூட்டத்தைக் கண்டான் ரெளடி ரங்கன்! கரும்புத் தோட்டங் கண்ட கந்துகமானுன்! நுழைந்தான் கூட்டத்தின் நடுவே!

சிறிது நேரத்திற் கெல்லாம் "வசந்தி......வசந்தி" என்று யாரோ ஒரு பெண் கூச்சலிட்டாள். அந்தப் பெருங் கூட்டத்தில் அந்த அபலேயின் குரலுக்கு செவி சாய்ப்போரில்லே. எப்படி முடியும்? வெள்ளம் போல் நகர்ந்துவரும் கூட்டத்தில் மிதிபடாமல் தப்பினுல் போதுமென்று அவரவர் திணறுகிற நேரம்! "போ - போ" என்று சுழற்றிய தடியோடு போலீசார் போடும் இரைச்சல் கேட்டு அப்பெருங் கூட்டமே நகர்ந்து கொண்டிருந்தது. அந்தக் கூட்டத்தில் சிக்கிய அபலே, குரல் கொடுத்தவாறே கூட்டத்தோடு கூட்டமாக நகர வேண்டியதாயிற்று. அவள் குரலோடு இன்னுமொரு குரல் "வசந்தி...வசந்தி" என்று கேட்டதே யொழிய வசந்தியின் மறுமொழி கேட்கவில்லே. நேரம் ஆகிக் கொண்டேயிருந்தது. ஆனுலும்கூட 'வசந்தி' என்ற குரல் ஓயவில்லே. "நாதஸ்வர இசையைக் கேட்க வேண்டாமா?" என்ற பலரின் அதட்டல் அந்த அபலேயின் குரலே அடக்கியது. கூட்டத்தை விலக்கிக் கொண்டு வெகு சிரமப்பட்டு வெளியில் வந்தாள்.

அலறி அடித்துக் கொண்டு வெளியில் வந்த அவளோடு அவள் கணவனும் வந்தான். இருவரும் "வசந்தி - வசந்தி" என்று கத்தியவாறே சுற்றிச் சுற்றி யலேந்தனர். இரவு ஒரு மணியாகியும்கூட அவர்கள் தேடிய வசந்தி கிடைக்கவில்லே... போலீஸ் ஸ்டேஷனில் காணுமற் போன குழந்தைகள் இருப்பதாகக் கேள்விப்பட்டு இருவரும் அங்கே ஓடினர், வேறு குழந்தைகள் இருந்தன; வசந்தியைக் காணவில்லே. அவர்களின் கதறலேக் கேட்ட போலீஸ் அதிகாரிகள் விபரம் கேட்டுத் தேடிப் பார்ப்பதாக உறுதி கூறினர். அந்த உறுதி அவர்களின் கண்ணீர்ப் பெருக்கைத் தடை

செய்துவிடவில்லை. இருவரும் தெருத் தெருவாக "வசந்தீ—வசந்தி" என்று கத்தியவாறே தேடித் திரிந்தனர். வருவோர் போவோரை யெல்லாம் "ஆறு வயதுப் பெண் குழந்தையைப் பார்த்தீர்களா ?... சிகப்பாக சீவிய முடியோடு யிருக்கும்... பச்சைப் பாவாடையும் வெள்ளைச் சட்டையும் போட்டிருக்கும்...கழுத்தில் தங்கச் சங்கிலி அணிந்திருக்கும்... பார்த்தீர்களா ?" என்று விசாரித்தார்கள். "இல்லை...இல்லை" என்ற பதில்தான் எதிரொலித்தது.

பகல் பத்து மணியிருக்கும். பச்சைப் பாவாடையும் வெள்ளைச் சட்டையும் அணிந்த குழந்தையொன்று கொல்லப்பட்டு மலைசுற்றும் பாதையின் ஓரம் உள்ள ஒரு புதரில் கிடப்பதாகச் செய்தி எட்டியது போலீசாருக்கு; விரைந்தனர். வசந்தியைத் தேடிக் கொண்டிருந்த தம்பதிகளும் இச் செய்தி கேட்டு ஓட்டமும் நடையுமாக அவ்விடம் வந்து சேர்ந்தனர்.

ஆம்... அவர்கள் தேடிய சிங்காரச் சிட்டு தான் அது ! கை எட்டாத தூரத்திலிருந்தாலும் முள்மீது தாவினர்... போலீசார் தடுத்து விட்டனர். ...கதறினர்கள்... அவர்களின் பரிதாப நிலை கண்டு பலரும் கண்ணீர் விட்டனர். துவைத்துப் போட்ட துணிபோல் துவண்டு கிடந்த அந்தப் பச்சைக் கிளியைக் கொன்ற கயவனைக் கூடியிருந்த அத்தனை பேரும் சபித்தனர். கொலை செய்தவனைக் கண்டு பிடிக்கத் துப்பறியும் நாய் சென்னையினின்றும் காரில் வந்து கொண்டிருக்கிறதென்று கூறி, அந்தப் புதரைச் சுற்றிக் காவல் போட்டனர்... கதறிக் கதறி அழுத களைப்பால், தம்பதிகள் மயக்கமுற்று விழுந்தனர். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

மாலை மணி நான்கு இருக்கும். துப்பறியும் நாய் வந்து சேர்ந்தது. புதரின் அருகே அழைத்துச் சென்றனர்...... சிறிது நேரத்திற்கெல்லாம் மலையைச் சுற்றி ஓடியது. ஒரு குடிசைக்குள் நுழைந்தது. அக் குடிசைக்குச் சொந்தக்காரன் கைதானன். மீண்டும் நாய் ஓடியது. ஊருக்கு வெளியில் ஒரு பாழும் மண்டபத்தைச் சுற்றிவிட்டு மீண்டும் ஊருக்குள் ஓடியது. பல வீதிகளின் வழியே ஓடி கடைசியாக, பஸ் நிலையத்தை வந்தடைந்தது. அதைத் தொடர்ந்து வந்தனர் ஏராளமான மக்கள்...அங்கே புறப்படத் தயாராயிருந்த வேலூர் பஸ்ஸில் ஏறி முக்காடிட்டு உட்கார்ந்திருந்த ஒருவனைப் பிடித்தது. போலீசார் அவனைக் கைது செய்தனர். அவன்தான் ரௌடி ரங்கன்! அவன் மடியில் ஒரு தங்கச் சங்கிலியோடு வேறு சில நகைகளும், ரூபாய்களும் இருந்தன.

ஆஸ்பத்திரியில் மறுநாள் மயக்கம் தெளிந்த தம்பதிகளைத் தேற்றி, தங்கச் சங்கிலியைக் காட்டினர். அது வசந்தியின் கழுத்தில் அணிவித்திருந்ததுதான் என்றனர். அதை ஆதாரமாக வைத்து ரௌடி ரங்கன்மீது கொலை வழக்கு ஆரம்பமாகியது.

சர்க்காரின் சாட்சியங்களாக தனமும் சங்கரும் எடுத்துக் கொள்ளப்பட்டனர்.

"உன் பெயர்...?"

"தனம்"

"கொலை செய்யப்பட்ட குழந்தை உன்னுடையதா?"

"இல்லை"

"இல்லையா?"

"ஆமாம். நான் பெற்ற குழந்தையல்ல; வளர்த்த குழந்தை"

"குழந்தையோடு கூட்டத்தில் நீங்கள் நுழைந்தவுடன் என்ன நடந்தது?"

"சிறிது நேரத்திற்கெல்லாம் குழந்தையைக் காணவில்லை. தேடினேம் ... தேடினேம்... கிடைக்கவில்லை!"

"அப்பொழுது வசந்தியின் மேல் நகை ஏதாவது இருந்ததா?"

"ஆமாம்; கழுத்தில் ஒரு தங்கச் சங்கிலி இருந்தது"

"இதுதானு அது?"

"ஆமாம்"

நீதிபதி குறுக்கிட்டு, "இதுதான் என்று எப்படி சொல்கிருய்?"—எனக் கேட்டார்.

"இந்தச் சங்கிலி நன்ருக அடையாளம் தெரியும். இந்தச் சங்கிலியால்தான் வசந்தியும் கொலை செய்யப்பட்டாள். அவள் தாயும் கொலை செய்யப்பட்டாள்!"

நீதிபதி, "தாயும் கொலை செய்யப்பட்டாளா?" என்ருர்.

"ஆமாம்! கட்டிய கணவனலேயே பயங்கரமாகக் கொலை செய்யப்பட்டாள். பதி சொல் தவருத பதிவிரதையாக வாழ வேண்டுமென்று ஆவலுற்ருள். கணவன் பணம் கேட்ட போதெல்லாம் காரணங் கேட்காது தன்னிடம் இருந்ததைக் கொடுத்தாள். தான் அணிந்திருந்த நகைகளையும் தந்தாள். கடைசியாக அவளிடம் மிஞ்சியது இச் சங்கிலி ஒன்றுதான். அதுவரை தன் கணவன் பெரிய குடிகாரன் என்பதையறியாதிருந்த என் அக்காளுக்கு உண்மையை யாரோ சொல்லிவிட்டார்கள். வீட்டிற்கு வந்த தன் கணவனை விபரம் கேட்டாள். அவர் இந்தத் தங்கச் சங்கிலியைக் கேட்டார், தங்களுக்கிருக்கும் ஒரே பெண் குழந்தைக்கு இச் சங்கிலியாவது மிஞ்சட்டும் என்று கெஞ்சினள். குடி போதையிலிருந்த என் மாமன் விடவில்லை. கோபங்கொண்டு விறகுக் கட்டையால் என் அக்

காலைப் பலங்கொண்டவரை அடித்தார். இரத்தம் பீறிட்டது. அப்போதும் அந்த உத்தமி "அத்தான்" என்று தன் கணவனின் கால்களைக் கட்டிக் கொண்டாள். பீறிட்ட இரத்தம் அவர் பாதங்களை நனைத்தது. பயந்து ஓடிவிட்டார். சாகும்போது என் அக்காள் ஆறு மாதக் குழந்தையாயிருந்த வசந்தியையும், அந்தச் சங்கிலியையும் என் கையில் ஒப்புவித்துவிட்டு, தன் கணவன் வந்தால் இந்தச் சங்கிலியைக் தந்துவிடும்படி கூறினாள்; போலீசார் வந்து விசாரித்தனர்; ஏணியின்மீது ஏறிய போது, தானே தவறுதலாக வீழ்ந்துவிட்டதாகக் கூறிச் சட்டத்தினின்றும் தன் கணவனைக் காப்பாற்றினாள். ஆனால் அவளைத்தான் எங்களால் காப்பாற்ற முடியவில்லை, இது நடந்து ஆறு வருடங்களாகின்றன...இன்றுவரை வசந்தியின் தந்தை திரும்பி வரவேயில்லை. ...தங்கச் சங்கிலியை வசந்தியின் கழுத்தில் அணிவித்தேன். ...பாழும் சங்கிலி அவள் உயிரையும் பலி வாங்கிவிட்டது !"

தனம் விம்மியழுதாள்!

மறுகணம்...

"ஐயோ! வசந்தியா? நான் கொன்றது என் செல்வத்தையா?" என்று அலறியபடியே இரும்பு விலங்கால் தான் தலையில் அடித்துக் கொண்டான், ரௌடி ரங்கன்!

நீதிபதி, மரண தண்டனை தருவதற்கு முன்பே அத் தண்டனை நிறைவேறியது! ❖



# மஜ நாட்டு





1

பதினாறும் நூற்றாண்டின் மத்திய காலம். இங்கிலாந்தை மேரி ஆண்டு கொண்டிருந்தாள். பிரான்சுக்கும் இங்கிலாந்துக்குமிடையே போர் மூண்டது. பிரஞ்சுக்காரர்கள் அப்பொழுது ஆங்கிலேயர் வசமிருந்த கலே துறைமுகத்தைக் கைப்பற்றப் பெரு முயற்சியில் ஈடுபட்டிருந்த சமயம்.

சாரக்தீவின் கோட்டையின்மீது ஆங்கிலக் கொடி அனுயாசமாக அசைந்தாடிக்கொண்டிருந்தது. வான்முட்ட வளர்ந்தோங்கிய குன்றுகளால் சூழப்பட்ட அத்தீவு நீலக் கடலை ஆடையாக நாற்புறமும் போர்த்தியிருந்த காட்சி, பருவமடைந்த மங்கை யொருத்தி தன் அங்கங்களின் செழுமையால் நாணமுற்று, நீலப்பட்டாடையை அவசரக் கோலத்தில் மேனியெங்கும் அள்ளி வீசிக் கொண்டதுபோல் இருந்தது. இயற்கை அரண்களோடு அமைந்த அந்த எழிற் கோட்டையினுள் நுழைய, வடக்குப் புறமாக அமைந்திருந்த சிறிய கணவாய் ஒன்றே வழியாக இருந்தது. அந்தக் குறுகலான பாதை வழியாக ஒரே சமயத்தில் இரண்டு பேருக்கு மேல் நுழைவது மிகவும் கஷ்டம். இந்தத் தீவின் குடிமக்கள் சுமார் நானூறு பேர். அவர்களனைவரும் ஆங்கில ராணி மேரியின் விசுவாசமுள்ள பிரஜைகள்.

குன்று அரண் தாண்டி, கோட்டை வாயில் தாண்டி, மாளிகையின் உட்புறத்தில் சற்றே சென்று வருவோம். இந்த இடத்தில் இவ்வளவு அழகான மாளிகையா என்றுதானே

# மங்கை



வியக்கிறீர்கள்? மாளிகையின் அழகிலேயே இப்படி மனத்தைப் பறிகொடுத்து விட்டால்? அதோ பாருங்கள்...நிலா முகத்தைத் தாமரைக் கரத்தால் தாங்கி, சோகப் பதுமையாக வீற்றிருக்கும் அந்தச் சுந்தரி சிற்பியின் கைவண்ணத்திலே சமைந்த சிலையல்ல; மானிடப் பெண்தான்! அந்த மலை நாட்டு மக்களின் கன்னி இளவரசி அவள்! அழகு பொழியும் நிலா முகம் சோக மேகத்தால் சோபிதமிழக்கக் காரணம்...

மணல் வீடு கட்டிய பருவத்தில் மாதாவை இழந்தவள், கனவு காணும் கன்னிப் பருவத்தில் தந்தையையும் இழந்துவிட்டாள்...!

அவளுடைய தந்தை டால்பிரே சிறந்த போர்வீரர். ராணி மேரியிடம் மாருத ராஜ விசுவாசம் கொண்டவர். சாரக் தீவு மக்களின் ஏகச் சக்ராதிபதியாய் விளங்கிய அவர், பிரஞ்சுக்காரர்களால் கலே துறைமுகத்துக்குப் பெரும் ஆபத்து எனக் கேள்விப்பட்டவுடன், ஆங்கில ராணிக்குத் தன் கடமையைச் செய்ய, பிரான்சின் போர்க்களத்துக்குப் புறப்பட்டுப் போய்விட்டார். களம் நோக்கிச் செல்லும் தந்தையின் பிரிவைத் தாங்கமாட்டாதவளாய், டால்பிரேயின் மகள்-அந்த மலைநாட்டு மங்கை-ஆன்னெட் (அதுதான் அவள் பெயர்) கண்ணீர் உகுத்தாள். கடமையாற்றச் செல்லும் தந்தையைப் பார்த்துக் கண்ணீர் வடிப்பது வீர மங்கைக்கு அழகல்ல என டால்பிரே தன் மகளுக்கு ஆறுதல் சொன்னார்.

"அப்பா! போர்க்களம் செல்லும் வீரர்கள் திரும்பி வரும் வரை, அவர்கள் உயிரோடு திரும்பி வருவார்கள் என்று எப்படியப்பா நம்புவது? நீங்கள் துரதிர்ஷ்டவசமாகக் களத்திலே உயிர் துறந்துவிட்டால், இந்த அனாதையை யாரப்பா ஆதரிப்பார்கள்?"-தாமரையில் தவழ்ந்து விளையாடிய இரு கருவண்டுகள் முத்துக்களைச் சிதறவிட்டன.



பி.சி.கணேசன். பிஎஸ்.ஸி.,பி.டி.

இதயத்தின் ஆழத்தில் கவலை தேங்கிக் கிடந்தாலும், டால்பிரேயின் வீர முகத்தில் கம்பீரச் சிரிப்பு மலர்ந்து ஒளி வீசியது. "ஆன்னெட்! நீ சொல்லுவதில் உள்ள நியாயத்தை நான் உணராமலில்லை. ஆனால் மேரி ராணி என்னிடம் ஆறாத அன்பு கொண்டவர்கள். கட்டாயம் உன்னை அவர்கள் கைவிட்டுவிட மாட்டார்கள். நீ சொல்லுகிறபடி களத்தில் நான் ஒரு வேளை கொல்லப்பட்டாலும், கவலைப்படக் காரணமே இல்லை. பார்க்கப்போனால் உயிரோடிருக்கும் என்னைவிட என்னுடைய சவப்பெட்டி உனக்கு அதிகமான ஒத்தாசை செய்யக்கூடும்!" எனக் கூறிவிட்டுப், பக்கத்திலிருந்த சாரக் தீவின் கவர்னர் ராபர்ட் டட்லியை அர்த்த புஷ்டியோடு பார்த்தார், டால்பிரே.

வாட்டசாட்டமாக வளர்ந்து வாலிப வனப்போடு விளங்கிய கவர்னர் ராபர்ட் டட்லி, டால்பிரேயின் வாசகத்தை ஆமோதிப்பதுபோல் அன்பொழுக ஆன்னெட்டைப் பார்த்தார். ஆன்னெட்டின் கருநீல விழிகள் டட்லியின் விழிகளைச் சந்தித்துப் பின், நாணத்தால்நிலத்தை நோக்கின. தான் உயிர் துறக்க நேரிட்டாலும், தன் மகளுக்குக் கவர்னர் டட்லியின் ஆதரவும் அன்பும் இருக்குமென்பதை உணர்ந்துகொண்ட டால்பிரே அனைவரிடமும் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டார். போனவர் பிறகு திரும்பவே இல்லை. பிரஞ்சுப் போர்க்களத்தில் மேரி ராணியின் உண்மையுள்ள ஊழியராய் அவர் உயிர் நீத்தார் என்ற செய்தி மட்டுமே சாரக் தீவை வந்தடைந்தது. ஆன்னெட் சோகப் பதுமையானாள். அவளுடைய தந்த நிறமேனியைக் கறுப்பு உடை அலங்கரித்தது. இந்த நிலையில்தான், அவள் தன்னுடைய ரோஜாக் கன்னத்தைத் தாங்கியபடியே துயரத்தோடு வீற்றிருந்தாள்.

"ஆன்னெட்! இறந்தவர்களை எண்ணி யெண்ணி ஏங்குவதால் என்ன பலன்? கர்த்தரின் கட்டளை அது என ஆறுதலடைவதுதான் விவேகம்...எழுந்திரு ஆன்னெட்!" என்ற கவர்னர் டட்லியின் வாசகத்தைக்கேட்ட பிறகுதான் அவள் தன் துயர உலகிலிருந்துமீண்டு, திடுக்கிட்டு எழுந்தாள்.

"இல்லை பிரபு! ஏதோ நினைத்தேன்; தாங்கள் வருவதைக்கூட உணராமல் உணர்விழந்து உட்கார்ந்திருந்து விட்டேன். என்னை மன்னித்து விடுங்கள்." என்றாள் பணிவுடன்.

"உன் துயரத்தில் எனக்கும் பங்குண்டு ஆன்னெட்...உன்னை என் பராமரிப்பில் உன் தந்தை விட்டுச் சென்றதை அதற்குள் மறந்திருப்பேன் என்றா நினைக்கிறாய்?"

ஆன்னெட் நன்றிபெருக்கெடுக்கும் கண்களோடு டட்லியைப் பார்த்தாள். டட்லியின் கரங்கள் அவளுடைய கண்ணீரைத் துடைத்தன. அன்புக் கரங்களின் இன்ப ஸ்பரிசத்தில் ஆன்னெட் தன்னை மறந்தாள். இரண்டு இதயங்கள் ஒன்றாக இயங்கி, உணர்ச்சியில் நெட்டுயிர்த்தன!

## 2

நாட்கள் பல வாரங்களாகி, வாரங்களும் மாதங்களாகிக் கொண்டிருந்தன. டால்பிரேயின் மரணத்தால் சோக இருள் கப்பியிருந்த சாரக் தீவு, டட்லி-ஆன்னெட் திருமணச் செய்தி கேட்டு மகிழ்ச்சிப் பெருக்கில் மிதந்துகொண்டிருந்தது.

கன்னி இளவரசி ஆன்னெட், கவர்னர் டட்லியின் கரம்பிடிக்கப் போகிறாள்! அழகுத் தேவதையை வீர வாலிபன் மணக்கப் போகிறான்!

ஆலயமணி மகிழ்ச்சி ஆரவாரம் செய்துகொண்டிருந்தது. சாரக் தீவின் ஆண்களும் பெண்களும், இளையவரும் முதியவரும், சிறுவரும் சிறுமியரும் புத்தாடை உடுத்தி, புது அணி பூண்டு ஆலயத்தில் கூடினர். மாதா கோயிலின் புனிதமேடையின்முன் அழகே உருவான ஆன்னெட்டும் ஆண்மையே உருவான டட்லியும் மணக்கோலத்துடன் நின்றுகொண்டிருந்தனர். அவர்கள் இருவருக்கும் இடையில், முதுமையின் ஞானம் முகத்திலே மிளிர, அறிவின் தீட்சண்யம் கண்களிலே ஒளிர பாதிரியார் திருமணச் சடங்கில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார். மணவிழா நிறைவேறும் சமயம்...

"மணவினை நிற்கட்டும்; மேற்கொண்டு தொடராதே!" என்ற கர்ஜனை ஓசையோடுவந்த ஆணை கேட்டு அனைவரும் திகைத்து நின்றனர்.

உருவிய வாளுடன் உள்ளே நுழைந்து கொண்டிருந்தான் இளம் போர்வீரன் ஒருவன். அவனைத் தொடர்ந்து பிரஞ்சு ராணுவ உடை அணிந்த நாற்பது போர்வீரர்கள் உள்ளே நுழைந்தனர்.

விரோதிகளான பிரஞ்சுப் போர் வீரர்களின் திடும்பிரவேசத்தால் டட்லி திகைத்துப் போனார். அவரோ அன்றி அவருடைய பிரிட்டிஷ் போர்வீரர்களோ செயல்பட முடியவில்லை. காரணம், ஆயத்தமாக ஆயுதம் தாங்கி வரவில்லை!

உள்ளே நுழைந்த வீரனின் கண்கள் ஆன்னெட்டையே கூர்ந்து நோக்கின. வாளின் நுனியால் அவளுடைய முகத்திரையை விலக்கினான். மேகம் விலகிய நிலவுபோல்அவளுடைய முகம் ஒளியிட்டது. திகைப்பு மேலிட்டவளாய் ஒரு கணம் வந்தவனை வைத்த விழி வாங்காமல் பார்த்தாள். பிறகு,

"கிளமென்ட், நீயா?" என்றாள்.

"நான்தான்ஆன்னெட்! ஆண்டவனே உன்னை உரிய சமயத்தில் என்னிடம் சேர்த்துவிட்டான்!" என்றான் வந்த வாலிபன்.

"துரோகி!"-சூட்டோடு ஆன்னெட்டின் வாயிலிருந்து வந்த அச்சொல் துப்பாக்கியிலிருந்து விடுபட்ட குண்டுபோல் வெளிப்பட்டது.

கிளமென்ட் சிரித்தான். "வீரர்களே, ஏன் நிற்கிறீர்கள். கைது செய்யுங்கள் கவர்னர் டட்லியை!" என உத்தரவிட்டான். பிரஞ்சு வீரர்கள் டட்லியைக் கைது செய்தனர்.

"திகைக்காதீர்கள் கவர்னர் அவர்களே! அழகி ஆன்னெட் என்னுடைய முறைப் பெண். ஐந்து ஆண்டுகளுக்குமுன் இந்தத் தீவில் ஆன்னெட்டின் தந்தை டால்பிரேயால்தான் நான் வளர்க்கப்பட்டேன். காளையான நான் இந்தக் கட்டழகியின்மீது காதல் கொண்டேன். இரவு பகல் இவளுடைய அன்புக்காக ஏங்கி ஏக்கப் பெருமூச்சு விட்டேன். போர்க் களத்தில்

பாய்ந்துவருகின்ற வாளுக்குக் கண்கலங்காத நான், இவள் என்னுடைய காதலைப் புறக்கணித்து என்னை நிராகரித்த போது கண்கலங்கினேன். அன்புப் பிச்சை கேட்டேன்; அலட்சியப்படுத்தினாள். உறவு முறை பேசினேன்; உதாசீனம் செய்தாள். தந்தையாவது மகளுக்குப் புத்தி சொல்லி மனத்தை மாற்றுவார் என எண்ணி டால்பிரேயிடம் முறையிட்டேன். ஆனால் அவரோ சீறும் நாகமானார். மகளிடமல்ல; என்னிடம்! மெதுவாக என்னைக் கப்பலேற்றி பிரான்சுக்கு அனுப்பி வைத்தார். பாவம், பிரஞ்சு மண்ணில் ஆங்கிலேயனான எனக்குக் கல்லறை அமைக்க எண்ணினார். ஆனால் நடந்ததோ; வீரம் விலை போயிற்று! பிரஞ்சு மன்னன் என் வீரத்தை மதித்துத் தன் படையில் சேர்த்துக் கொண்டு விட்டார். டால்பிரே, கலே போரில் இறந்த செய்தியை நீங்கள் அறிந்திருப்பீர்கள். ஆன்னெட் எனக்காகப் பிறந்தவள். அவளை அடையும் ஆவலில்தான் இங்கு ஓடோடி வந்தேன். சற்றுத் தாமதமாக வந்திருந்தால் கூட, என் வாழ்க்கையில் பெரிய அசம்பாவிதம் ஏற்பட்டிருக்கும். நல்லவேளை-கவர்னர் அவர்களே நன்றி!'' என மூச்சுவிடாமல் பேசிக்கொண்டே போனான் கிளமென்ட். பிறகு, ''ஏன் நிற்கிறீர்கள், புறப்படுங்கள்!'' என்றான் டட்லியைப் பார்த்து.

''எங்கே போக வேண்டும்?'' என்றார் டட்லி ஏக்கத்துடன்.

''கரையிலே கப்பல் காத்து நிற்கிறது. நீங்களும் இங்குள்ள பிரிட்டிஷ் வீரர்களும் உடனே போய் ஏறிக் கொள்ளுங்கள். உங்களனைவரையும் பத்திரமாகக் கொண்டுபோய் பிரிட்டிஷ் கரையில் இறக்கிவிட்டு விடும். உங்களில் எவருக்கும் தீங்கிழைப்பது என் நோக்கமல்ல. நான் விரும்பிய பொருளைப் பெற்று விட்டேன்!''

கிளமென்ட் கண்ஜாடை காட்டினான். பிரஞ்சு வீரர்கள் புடைசூழ டட்லி புறப்பட்டார். கடைசியாக ஒரு முறை ஏங்கும் விழிகளோடு ஆன்னெட்டைப் பார்த்தார். அவளுடைய கண்கள் கண்ணீரைச் சொரிந்தன. டட்லி மறையும்வரை அவரையே பார்த்துக் கொண்டு நின்றாள்.

''பாதிரியாரே, ஏன் நிற்கிறீர்? தொடரட்டும் மணச் சடங்கு! உரியவன் வந்துவிட்டேன்.'' என்றான் கிளமென்ட்.

''முடியாது; முடியவே முடியாது! உன்னை ஒரு நாளும் என்னுடைய கணவனாக ஏற்றுக் கொள்ளவேமாட்டேன்!''-ஆன்னெட் சீறினாள்.

''ஆன்னெட், இப்பொழுது நீ என் கைதி. உன்னை விரும்பியபடி நடத்த எனக்கு உரிமையுண்டு. ஆனாலும் உன்மீதுள்ள காதலினால், உன்னைக் கௌரவமாகவே நடத்த விரும்புகிறேன். வீணாகப் பிடிவாதம்செய்யாதே! நன்றாக யோசனை செய்; உன்னிடம் காதல் பிச்சை கேட்பவன் வெறும் பிரிட்டிஷ் போர் வீரனல்ல; பிரஞ்சு மன்னனின் நம்பிக்கைக்குரிய தளபதி; உன் உறவினன்; உன் கரம்பற்ற எல்லாத் தகுதியும் உடையவன்; இளமையிலேயே உன் அழகுக்குத் தன் இதயத்தைக் காணிக்கையாக்கியவன்; இன்று அடையவிருக்கும் இன்பத்துக்காக எத்தனையோ இரவுகள் தூக்கமில்லாது தவித்தவன். வலியவரும் பேற்றினை உதைத்துத் தள்ளி உன்னைப் பாழாக்கிக் கொள்ளாதே!'' என்று கூறிக்கொண்டே அவளுடைய கரம்பற்றப் போனான். ஆன்னெட்டினுடைய கரங்கள் அவனுடைய கன்னத்தில் மாறி மாறி அறைந்தன.

''நாட்டையும் இனத்தையும் மாற்றானுக்குக் காட்டித் தந்த துரோகி! உன்னை வளர்த்து ஆளாக்கியவரின் மகளுக்கு நீ செலுத்தும் கைம்மாறா இது?''

கிளமென்ட்டின் கண்கள் கோவைப் பழம்போல் சிவந்தன.

''ஆணவக்காரி! உன் திமிரான நடத்தைக்கு உன்னைக் கண்ட துண்டமாக வெட்டிக் கழுகுக்கும் காக்கைக்கும் இரையாக்கியிருப்பேன். ஆனால்...ஆனால்... உனக்கு இன்னும் கொஞ்சம் அவகாசம் தருகிறேன். ஆற அமர யோசனை செய்து ஒரு முடிவுக்கு வா.'' என்று கூறிவிட்டுப் பிரஞ்சுப் போர்வீரர்களைப் பார்த்து, ''வீரர்களே, ஆன்னெட்டை அழைத்துப் போய்க் காவலில் வையுங்கள். ஆன்னெட் சாரக்தீவின் இளவரசி. அதை மறந்துவிடாமல் அதற்குரிய மரியாதையுடன் நடத்துங்கள்.'' என்றான்.

புள்ளிமானைச் சூழ்ந்து புலிக்குழாம் புறப்பட்டது. கண்ணி வைத்த வேடன், காரியத் தோல்வியால் கவலை கொண்டவனாய், அப்படியே அசைவற்று நின்றுகொண்டிருந்தான்.

## 3

கிளமென்ட், ஆன்னெட்டிடம் நடையாய் நடந்தான். அன்பு மொழி பேசினான்; ஆசை வார்த்தை பல வீசினான். அவை பலனளிக்காமை கண்டு மிரட்டினான்; உருட்டினான். அவள் அவனைத் திருமணம் செய்துகொள்ளச் சம்மதிக்கவே இல்லை.

அவன் பொறுமையாயிருந்தான்-காய் கனியுமென்று! காய் கனியாதது மட்டுமின்றி, அவனுடைய பொறுமையையும் சோதித்தது!

முடிவில் அவன் பொறுமையிழந்தவனாய்த் திருமணத்துக்குத் தேதி குறித்து இறுதி எச்சரிக்கையும் செய்துவிட்டு வந்தான், ஒரு நாள்.

மீண்டும் சாரக் தீவின் தேவாலய மணி ஒலித்தது. மக்கள் கூடினர். திருமணத்தைக் காணும் ஆசையால் அல்ல; ஆட்சி செய்பவனின் ஆணைக்குப் பயந்து!

பலவந்தமாக ஆன்னெட் கொண்டுவந்து நிறுத்தப்பட்டிருந்தாள். பாதிரியார் வாள் முனைக்குப் பயந்து, தேவாராதனை செய்துகொண்டிருந்தார். ஆசைநிறைவேறும் மகிழ்ச்சியில் கிளமென்ட் திளைத்துக்கொண்டிருந்தான்.

திடீரென்று ஒரு பிரஞ்சுப் போர்வீரன் வந்து தளபதிக்கு சலாம் செய்தான்.

''என்ன ஹென்றி, ஏதாவது விசேஷச் செய்தி உண்டா?'' என்றான் கிளமெண்ட்.

''ஆங்கில வீரர்கள் சிலர் துறைமுகத்தில் தங்கள் ஆணைக்காகக் காத்திருக்கிறார்கள். கப்பலில் வந்திருக்கிறார்கள்.'' என்றான்.

''காரணம்?''

''டால்பிரே பிரபுவின் சவப் பெட்டியை கலே போர்க்களத்தி

விருந்து கொண்டு வந்திருக்கிறார்கள். டால்பிரே இறக்கும் பொழுது தன்னுடைய பிறந்த தீவிலேயே தன்னுடைய சவம் அடக்கம் செய்யப்படவேண்டும் என்று ஆசைப்பட்டாராம்! அதனால் அவருடைய பெட்டியுடன் பிரிட்டிஷ் வீரர்கள் துறைமுகத்தில் இருக்கிறார்கள். சவப்பெட்டியை டால்பிரே இஷ்டப்படி அடக்கம் செய்யத் தங்கள் ஆணைக்காகக் காத்திருக்கிறார்கள்!''

''நல்லது, ஹென்றி! ஆயுதந் தாங்கிய பிரிட்டிஷ் வீரர்களை ஒரு முறை தீவுக்குள் அனுமதித்து விட்டால் பிறகு அவர்களால் அபாயம் நேராது என்பதற்கு யார் உறுதியளிப்பது? அதை அவர்களிடம் கேட்டாயா?''

''கேட்டேன். அவர்கள் எந்த விதமான ஆயுதங்களையும் தங்களுடன் கொண்டு வருவதில்லை என்று வாக்குறுதி யளிக்கிறார்கள். அதோடு உள்ளே நுழையுமுன் தங்களைப் பரிசோதனை செய்தே விடும்படியாகவும் அவர்கள் கூறுகிறார்கள்.''

''அப்படி எத்தனை பேர் வந்திருக்கிறார்கள்?''

''இருபது பேர்!''

சிறிதுநேரம் புருவத்தை நெறித்து கிளமென்ட் யோசித்தான். பிறகு, ''பிரஞ்சுப் போர்வீரர்கள் நாற்பது பேர் நம்மிடம் இருக்கிறார்கள். நிராயுதபாணியாகத் தீவினுள் நுழையும் இருபது ஆங்கிலேயர்கள் அவர்களை ஒன்றும் செய்துவிட முடியாது. ஹென்றி, பிரஞ்சுப் போர்வீரர்களைக் கொண்டு அவர்களை செம்மையாகப் பரிசோதனை செய்த பிறகு உள்ளேவிடு. ஜாக்ரதை!''

ஹென்றி வணங்கி வெளியேறினான்.

கிளமென்ட், ஆன்னெட்டைப் பார்த்து, ''உன் அன்பைப் பெறத்தான் இந்தச் சலுகையை அளித்தேன். மனப்பூர்வமாகச் சம்மதமளித்து என்னைத் திருமணம் செய்து கொள்; மணவிழா முடிந்தவுடன் இருவருமாகச் சென்று உன் தந்தையின் சமாதிக்கு அஞ்சலி செலுத்துவோம்!'' என்றான்.

ஆன்னெட் ஆத்திரம் மாறாதவளாய், ''நயவஞ்சக நரியே!



நன்றிகெட்டவனே! ஆன்னெட் உயிரோடிருக்கும்வரை உன் எண்ணம் ஈடேறாது,'' என்று கூறிவிட்டு, கண்களில் நீர் பெருக்கெடுக்க, ''பாபிகளையும் ரட்சிக்கும் பரம பிதாவே! அன்று என் தந்தை, உயிரோடிருக்கும் என்னைவிட என்னுடைய சவப்பெட்டி உனக்கு அதிக ஒத்தாசை செய்யக்கூடும் என்றார். என்னையும் அவருடன் சேர்த்து அடக்கம் செய்துவிட அருள்பாலியுங்கள்.'' என்று இறைஞ்சினாள்.

கிளமென்ட் முகத்தில் கோபம் கொப்பளித்தது. ''ஆன்னெட், நிறுத்து உன் புலம்பலை. இது இழவு வீடல்ல. மணக்கோலம் பூணும் மங்கல மேடை. பாதிரியாரே, இந்த நீலியின் கண்ணீரில் நீரும் கரைந்து விடாதீர். கர்லதாமதமின்றிக் காரியத்தைப் பாரும்.'' என்றான்.

பாதிரியார், அவன் ஆணைக்குப் பயந்து, தன் பணியை மேற்கொண்டார்.

அத்தகைய கொடுமை ஒன்றினை அனுமதிக்க விரும்பாத மக்கள்தான் என்ன செய்ய முடியும்? அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டு, சிலைபோல் நின்றார்கள்.

திடீரெனப் பலர் ஆலயத்தின் படிகளில் ஏறி வரும் ஓசை கேட்டு அனைவரும் திடுக்கிட்டுப் பார்த்தனர். உருவிய வாள்களுடன் ஆங்கில வீரர்கள் அணி அணியாக வந்து கொண்டிருந்தனர். எதிர்பாராத இந்தக் காட்சியைப் பார்த்ததும் கிளமெண்ட் திடுக்கிட்டான்.

''ஏமாந்துவிட்டோம்!'' என அவன் வாய் முணுமுணுத்தது. இடையிலிருந்த வாளைக் கரத்தில் ஏந்தி நிலைமையைச் சமாளிக்கத் தயாரானான்.

மண மேடை, போர் அரங்கமாயிற்று. எதிர்பாராத வகையில் வளைக்கப்பட்ட பிரஞ்சு வீரர்கள், ஆங்கில வாளுக்குப் பலியாயினர். முடிவுவரை போராடி கிளமென்ட்டும், ஆன்னெட்டின் காலடியில் பிணமாக வீழ்ந்தான்.

நடப்பது கனவா அன்றி நினைவா எனத் தெரியாமல் ஆன்னெட் விழித்தாள்.

மலரன்ன அவளது மென் கரங்களை ஆங்கில வீரன் ஒருவனின் கரம்பற்றியது. திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தாள். எங்கோ பார்த்த முகம்! அவள் தெளிவடையுமுன் ''கண்ணே ஆன்னெட்!'' என்றது அவ்வீரனின் குரல்.

அவள் தெளிவு பெற்றாள். ''தாங்களா பிரபு?'' என்றாள். கண்கள் ஆனந்தக் கண்ணீர் பெருக்கின.

''நானேதான் கண்ணே!''- கவர்னர் டட்லியின் இனியகுரல் பியானோவின் கீதம்போல் அவளுடைய காதுகளில் ஒலித்தது.

''கனவல்லவே பிரபு!''

''உன் தந்தையின் சவப்பெட்டிதான் ஆன்னெட் உன்னைக் காப்பாற்றியது. அந்த சவப் பெட்டியில் உண்மையில் உன் தந்தையின் உடல் இல்லை. ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. அதில் கொண்டு வரப்பட்ட வாள்களே உன்னை எனக்குச் சொந்தமாக்கின!''

''ஆகா, என்னைவிட என் சவப்பெட்டி உனக்கு அதிக ஒத்தாசையாக இருக்கும் என்ற தந்தையின் வாசகம் எவ்வளவு தீர்க்கதரிசன வாசகம்!'' என்றாள் ஆன்னெட்.

''மண விழாவை ஆரம்பிக்கலாமா?'' -- பாதிரியார் கேட்டார்.

மணமக்களின் முகம் நாணத்தால் சிவந்தது. ஆலய மணி முழங்கியது. அறத்தின் சான்றாக இருவரும் இல்லறநெறியை ஏற்றனர்.

அன்றிரவு சாரக் தீவில் ஒரே குதூகலம். மலைநாட்டு மங்கையின் மண விழா பற்றியே அனைவரும் பேசினர்.

மாளிகையின் அந்தப்புரத்திலே இரு ஜோடிக் கண்கள் மயங்கிக் கலந்தன. ஒரு ஜோடி உடல்கள் ஒருயிரில் இயங்கின!

# விடுதலைக்கொடி



நடனம்
திருமதி லட்சுமிராஜம்


சுதந்திரம் வேண்டி நின்றார்
பின்னர் வேறொன்று கொள்வாரோ?
என்றும், ஆரமுதுண்ணுதற்காசை கொண்டார்
கள்ளில் அறிவைச் செலுத்துவாரோ?
JEEVAN


விண்ணில் இரவிதனை விற்று-
விட்டெவரும் போய்
மின்மினி கொள்வாரோ?
கண்ணிலும் இனிய-
சுதந்திரம் போனபின்
கைகட்டிப் பிழைப்பாரோ ?


மண்ணிலின்பங்களை விரும்பி
சுதந்திரத்தின் மாண்பினை இழப்பாரோ?
கண்ணிரண்டும் விற்றுச்
சித்திரம் வாங்கினால்
கைகொட்டிச் சிரியாரோ?
புகைப்படம்
சாமுவேல்
பாடல்: பாரதியார்


அரசியல் தசாவதாரம்
காங்கிரஸ் அக்கிராசனர்
சஞ்சீவரெட்டி
மச்சாவதாரம்
கூர்மாவதாரம்
வராக அவதாரம்
பட்டீல்
பரசுராம அவதாரம்
காமராஜ்
தமிழ்த்தாய்
வாமன அவதாரம்
ராஜேந்திர பிரசாத்
கேரள ஜனநாயகம்
நரசிம்ம அவுதாரம்
தி.க.
பெரியார்
சுப்ரமணியம்
பதவி
ராமாவதாரம்
பலராம அவதாரம்
ஜெயப்பிரகாஷ்
கிருஷ்ண வதாரம்
வெளிநாடு
கிருஷ்ணமேனன்
வெளிநாடு
கல்கி
அவதாரம்



# கல்பாகும் கவிதை

க. இராசாராம். பி.ஏ

“எழுத்தாளர்கள், பயணம் செய்து பார்த்து, பயணக் கட்டுரைகள் வரைதல்வேண்டும்.”

--மதுரை எழுத்தாளர் சங்கத்தில் அறிஞர் அண்ணா.

நான்காண்டுகட்கு முன்பு நண்பர் சம்பத்துடனும், இரண்டாண்டுகட்கு முன்பு அறிஞர் அண்ணா அவர்களுடனும், ‘எல்லோரா’ என்ற எழில் மிகு சரித்திரத்தின் பெயர் கொண்ட மகோன்னத சிற்ப பூமியைக் கண்டிருக்கின்றேன். இரண்டு முறையும் உள்ளத்தில் மட்டற்ற மகிழ்ச்சியும், மேலும், மேலும் காணவேண்டும் என்ற ஆசையும் எழுந்ததே தவிர சலிப்பேற்படவில்லை. இரண்டு முறையும் காரிலேயே பயணம் இருந்ததால் பம்பாயிலிருந்தே புறப்பட்டு எல்லோராவை அடைந்தேன்.

நவீனத்தின் சிறப்புகளை மனிதரிடையேயும், கட்டிடக் கலையிலேயும், பம்பாயில் கண்ட எனது கண்கள், பழமையின் பெருமைகளைக் கண்டதும் பெரிதும் மகிழ்ச்சி அடைந்தன.

தமிழகத்தில் உள்ள மகாபலிபுரம், கடலின் அலைகளால் சூழப்பட்டு எழிலோடு காட்சி அளிக்கின்றது. மகாபலிபுரத்தில்; இந்து மதத்தின் தன்மைகள்தான் காட்சி தருகின்றன. ஆனால் எல்லோராவின் குகைகள் அகில இந்தியாவிலும் பரவியிருக்கும் மிக முக்கியமான மூன்று மதங்களைப் பிரதிபலித்துக் கொண்டிருக்கின்றன. எல்லோரா மகாபலிபுரத்திற்கு நூறு ஆண்டுகள் முன்னதாக உருவாக்கப்பட்ட இடம். எல்லோரா, ஏழாம் நூற்றுண்டிலும், மகாபலிபுரம் எட்டாம் நூற்றுண்டிலும் உருவாக்கப்பட்டவை. பம்பாயிலிருந்து, அவுரங்காபாத் வந்து சேரும் சாலையில், அவுரங்காபாத்திற்கு பதினெட்டுக் கல் தொலைவில் அடர்த்தியான காடுகளுக்கிடையில் உள்ள குன்றில் இந்த இடம் உள்ளது. அவர் நெருங்கி வரும்வரை இதன் அமைப்பு நன்கு தெரிவதில்லை. நெருங்கியதும் வரிசையாக அமைக்கப்பட்டுள்ள குகைகள் நமக்குத் தெரிகின்றன.

எல்லோராவில் முப்பத்து நான்கு குகைகள் உள்ளன. முதல் பன்னிரண்டு குகைகளும் புத்த மதத்தினரால் உண்டாக்கப்பட்டவை. அவற்றை அடுத்துள்ள “பார்ப்பனக் குகைகள்” என்று கூறப்படும் பதினறு குகைகள் இந்து மதத்தினராலும், அவற்றை அடுத்துள்ள முப்பதில் இருந்து முப்பத்து நான்கு வரை சமணர்களாலும் உண்டாக்கப்பட்டவை.

முதன் முதலில் இந்த இடத்தை பௌத்தர்கள்தான் கண்டுபிடித்து தங்கள் மதத்திற்கு அழியாத சின்னங்களை ஏற்படுத்தவேண்டும் என்ற எண்ணத்தில் வேலை செய்யத் தொடங்கியுள்ளார்கள் என்று சரித் வாயிலாகத் தெரிய வருகின்றது. ராஷ்டிரகூடர்களின் ஆட்சியில்தான் இந்த வேலை தொடங்கப்பட்டுள்ளது. இந்தக் குகைகளைப் பற்றிப் பத்தாவது நூற்றுண்டில் இங்கு வந்த மாசுடி என்கிற அராபியர் தனது குறிப்புகளில் எழுதியுள்ளார். ஆகவே இந்தக் குகைகள் உலகின் பல பகுதிகளிலும் உள்ளவர்களைப் பல நூற்றுண்டுகட்கு முன்பே ஈர்த்துள்ளது என்பது தெரிய வருகின்றது.

புத்த மதத்தாரால் உருவாக்கப்பட்ட குகைகளில் இரண்டாவது குகையில் உள்ள புத்தரது சிலை மிக நுண்ணிய சிற்பத் திறமையை வெளிக்காட்டுவதாக உள்ளது, தாமரையின்மீது புத்தர் அமைதியின் வடிவமாக அமர்ந்து தனது கொள்கைகளை உலகுக்கு எடுத்துச் சொல்வது போதுற காட்சி இயற்கையாக அமைந்துள்ளது. அவரது கண்களின் அமைதியை, முகத்தின் பொலிவை, உதட்டின் சிரிப்பை, சிகையின் அமைப்பை அப்படியே சிற்பிகள், சிலையில் வடித்துள்ளார்கள். அந்தக் குகையின் அமைப்பில் வெளியில் நல்ல முற்றமும் அதில் நல்ல சிற்ப வேலைப்பாடும் காட்சி தருகின்றது. தற்போது நமது இயக்கம் நடத்தும் பொதுக்குழுக் கூட்டங்களை நடத்துவதுபோல் அப்போது புத்த மதக்காரர்களும். தங்கள் பிரச்சினைகளை விவாதத்திருப்பார்களோ என்று எண்ணத் தக்க அளவில் பலர் கூடுவதற்கு ஏற்றதான பெரிய மண்டபம் ஒன்று ஐந்தாம் குகையில் அமைக்கப்பட்டுள்ளது.

பத்தாவது குகை பின் அமைப்பு பார்ப்பவர்கள் அத்துணை பேரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தத்தக்க முறையில் அமைந்துள்ளது.

அதன் கூரை மரத்தால் செய்யப்பட்டது போல், கல்லிலே செதுக்கியுள்ளார்கள் குதிரையின் குளம்பு வடிவத்தில் அதன் அமைப்பு உள்ளது. சுற்றிலும் அழகிய வேலைப்பாடமைந்த தூண்கள். உள்ளே நுழைந்ததும் நேர் எதிரே ஒரு ஸ்தூபியும், அதில் புத்தர் நிற்கும் பாணியில் சிலையும் உள்ளது. எந்தப் பகுதியில் இருந்து 'புத்தம் சரணம் கச்சாமி' என்று கூறினாலும் ஒலி இசையோடு அந்த அறை முழுதும் ரீங்காரம் செய்கின்றது. அது பௌத்தர்கள் வணங்கும் கூடமாகப்பயன் படுத்தினார்கள் என்பதாகத் தெரிகின்றது.

பதினொன்றும் குகையும், பன்னிரண்டாம் குகையும், மாடிகள் கொண்டவை. பன்னிரண்டாம் குகையில் உள்ள மாடியில் ஒரு பக்கம் மரத்தின் கீழும் மற்றொரு பக்கம் குடையின் கீழும் உட்கார்ந்திருப்பது போன்ற பதினான்கு புத்தர் சிலைகள் மிகவும் அழகாக அமைக்கப்பட்டுள்ளன. அங்குள்ள இரண்டு தூண்கள் வேலைப்பாடு மிக்கவை. இந்த அறை சுமார் நூறு அடி நீளம். இங்குள்ள, சிலைகளில் தனது கைகளைக் கோர்த்துக்கொண்டு சிந்தனையில் ஆழ்ந்திருக்கும் பெரிய புத்தர் சிலை அனைவரையும் கவரும் தன்மையில் இருக்கின்றது.

புத்தரது சிலைகளை நாம் காணும்போது அவரை நேரில் காண்பது போன்ற உணர்ச்சி ஏற்படுகின்றது. புத்தரது, பிறப்பு, வளர்ப்பு எண்ணங்களில் ஏற்பட்ட மாறுதல் அவை யத்தனையும். நம் கண்முன் தோன்றி மறைகின்றன. சிற்பிகளின் திறம் வியந்து நம்மையறியாமலேயே அவர்களை நாம் உளமாரப் பாராட்டுகின்றோம்.

அடுத்துள்ள குகைக்குச் செல்கின்றோம். அடடா! என்ன மாறுதல் நம்முடைய உள்ளம் இந்து மதத்தின் புராணக் கதைகளை நாடி ஓடுகின்றது!

சிற்பங்களில்தான் எத்தனை வித அற்புதங்கள்! திரும்பிய பக்கமெல்லாம் கலையின் காட்சி. சிற்பிகள் தங்கள் கற்பனைகளையெல்லாம் உதறித் தெளித்துள்ளார்கள் இந்தக் குகைகளில். சிற்பிகள் என்றால் அவர்கள் வெறும் கூலிக்கு உளி எடுத்துக் கல் செதுக்குவோர் அல்ல. அவர்கள் பரத நாட்டியக் கலையிலும், கற்பனைத் திறனிலும், ஓவியக் கலையிலும் மிக்க ஞானம் படைத்தவர்கள் என்பதை எல்லோரா உலகுக்கு எடுத்துக் காட்டிக் கொண்டு உள்ளது. பதினான்காம் குகையில் உள்ள இந்து மதச் சிற்பங்களில் சிவ தாண்டவத்தில், ஒரு சிறந்த பரத நாட்டியக் கலைஞனின் முழுத் திறமையும் காட்டப்பட்டுள்ளது. இராவணன் கைலையை அசைப்பது என்கிற சிற்பத்தில், மாபெரும் வீரனின் முயற்சி தெளிவாகச் செதுக்கப்பட்டுள்ளது.

எல்லோராவுக்கே பெரும் புகழைத் தேடித் தருவது கைலாச குகையேயாகும். ஒரே கல்லில் தங்களது முழுத் திறனையும் சிற்பிகள் காட்டியுள்ளார்கள். சுமார் முப்பது லட்சம் கன அடிக் கற்கள் உளிகளால் செதுக்கப்பட்டு வெளியேற்றப் பட்டிருக்கின்றது. உள்ளத்தில் சிறந்த கலை உணர்ச்சியும், தங்களது சிற்பங்கள் எதுறெதுறும் அழியாது புகழ் பெற்று ஒளி வீசும் என்ற நம்பிக்கையும் அந்த சிற்பிகள் மனத்திலே இருந்திருந்தால் ஒழிய இவ்வளவு அரிய செயலை அவர்கள் செய்தே இருக்க முடியாது. உள் வாயிலைக் கடந்ததும் பெரிய கோயிலும், சுமார் ஐம்பதடி உயரமுள்ள ஸ்தூபியும் தெரிகின்றன. சுற்றிலும் மண்டபம் இரண்டு--அடுக்குமாடி. சிங்கங்கள் உயிரோடு இருப்பது போல் தூண்களுக்கருகில் உள்ளன. உள்ளே சுற்றினால், திடீரென பெரியதொரு யானைக் கூட்டம் தெரிகின்றன. அவைகள் தம் முதுகில் பெரிய கோயிலைத் தூக்கிக்கொண்டு நடைபோடுகின்றன. தமிழகத்தில்





யானைகளைக் கட்டிப் 'போர் அடித்ததாகக் கூறுவார்கள். அதையெல்லாம் இந்தச் சிற்பிகள் கண்டிருப்பார்கள் என்பது போல் எனக்குத் தோன்றிற்று.

கோவிலின் சுவர்கள் எல்லாம் சித்திரங்கள். அதன் கோபுரம் வட்டமாகக் கூண்டு போல் அமைக்கப்பட்டிருக்கின்றது. இவ்வளவும் ஒரே கல்லில் என்னும்போது நமது ஆச்சரியம் எல்லையை மீறுகின்றது. பெண்களின் கழுத்தையும், உடலையும் அலங்கரிக்கும் நகைகளையெல்லாம் இங்கேயுள்ள தூண்களில் பதித்துவிட்டிருக்கின்றார்கள். பூவிதழ்களின் தோற்றங்களும், பூக்குடலைகளின் காட்சிகளும், மங்கையரின் எழில் மிக்க உருவங்களும், இந்தக் குகை முழுவதும் மண்டிக் கிடக்கின்றன.

சிங்கங்கள், யானைப் படை, யாளிகள், தேவதைகள், பறக்கும் மாதர், அழகிகள், கடவுளர்கள், மையிடும் மங்கை, மலர் கொய்யும் நங்கை, கணவனுடன் சொக்கட்டான் ஆடும் குமரி; ஆலிங்கன அணங்குகள், ஆடிவரும் நடன மணிகள் முதலியோர் தங்களது சாமுத்ரிகா லட்சணத்தை நமக்குச் சொல்லாமலேயே சொல்லுகின்றார்கள்.

இங்கிருந்து சுமார் ஒன்றரை மைல் தூரத்தில் இருக்கும் ஜைனக் குகைகளில் இந்திர சபை என்ற பெயர் பூண்ட குகை சிற்பத்தின் சிறப்புக்கே தலைமை வகிக்கின்றது. இது இரண்டு மாடிகள் கொண்டதாக உள்ளது. மாவீரரின் சிற்பமும், இருபத்துநான்கு தீர்த்தகர்களின் சிற்பங்களும் மிக்க அருமையான வேலைப்பாட்டுடன் உள்ளன. இங்குள்ள பன்னிரெண்டு தூண்களிலும் பலவிதமான சிற்ப வேலைப்பாடுகளைக் காண்கிறோம். தந்தத்தில் கடைந்தெடுக்கப்பட்டதைப்போல் சிற்பங்கள் மிக்க எழிலோடும் பொலிவோடும் காட்சி தருகின்றன. எல்லோராவின் குகைகளில் செழுமையும் நல்ல முறையில் அமைந்த குகை என்று இதைக் கூறலாம். இந்திர சபையை உன்னதமாக சமணர்கள் உருவாக்கியுள்ளார்கள்.

எல்லோரா முழுமையும் சுற்றிப் பார்த்த பிறகு அந்தக் காலத்துச் சிற்பிகளின் நிலைமை நமக்குக் கண்முன்னே தோன்றிக்கொண்டே இருக்கின்றது. இந்தச் சிற்பிகள் மாபெரும் மண்டபங்களையும், சிறந்த கோபுரங்களையும் கட்டுபவராக மட்டும் இருந்திருக்க முடியாது. வெறும் சாஸ்திரத்தைக் கற்றுணர்ந்து அதையே கடைபிடித்து தெய்வச் சிலைகளை மட்டும் செதுக்குபவர்களாகவும் இருந்திருக்க முடியாது. குகைகளின் அலங்காரத் தூண்களையும், சுவர்களையும் செய்பவராக மட்டும் இருந்திருக்க முடியாது என்பது என் எண்ணமாகும். இவர்கள் மனித உருவம் படைப்பதிலும் கைதேர்ந்தவர்களாக இருந்துள்ளார்கள். இதை ஒப்பிட்டுப் பார்க்கும்போது உலகில் உள்ள எந்தப் பகுதியிலும் உள்ளவர்கட்கும் இவர்கள், இருந்த அல்லது இருக்கும் எந்த சிற்பிக்கும் இளைத்தவரல்லர் என்பது தெரிகின்றது.

இந்தச் சிற்பிகள் வெறும் வெளித் தோற்றத்தை மட்டும் கவனியாமல் ஒவ்வொரு பிம்பத்தின் ஜீவகளையையும் கவனித்து அதை அப்படியே சிலைகளில் செதுக்கியுள்ளார்கள். அவர்கள் உருவாக்கிய அந்தச் சிலைகளை நாம் என்று கண்டாலும் மகிழ்கின்றோம். அவைகள் கல்லில் செதுக்கியதாகவே நமக்குப்படவில்லை.

கி. மு. 3000 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய மகஞ்சதாரோ, சிந்து வெளியில் இருந்த ஹாரப்பா முதலிய திராவிடத்தின் நாகரீகத்தில் தோன்றிய கலையார்வம்வளர்ந்து கி. மு. 273-237 வரை இருந்த அசோகன் காலத்தில் கட்டைகளில் செதுக்கப்பட்டு வந்த சிற்பங்களைக் கற்களில் செதுக்கத் தொடங்கினர். அதன் வளர்ச்சி துணைக் கண்டம் எங்கும் பரவிற்று. அந்த வளர்ச்சியில் ராஷ்டிர கூடர்களின் காலத்தில் உருவாக்கப்பட்ட சிற்பங்களின் கூட்டம் தான் நாம் எல்லோராவில் காண்பது.

சிற்றுளியின் ஓசை, கன்னியரின் சலங்கை ஒலி, யானையின் பிளிறல், சிங்கத்தின் கர்ஜனை, ஆரணங்குகளின் மெட்டியின் தாளம், குதிரைகளின் கனைப்பு, குமரிகளின் சிரிப்பு, காட்டு மிருகங்களின் பேரிரைச்சல், காதலரின் கனிமொழிகள், வீரர்களின் போர் முழக்கம், வீணையின் நாதம், கடலின் அலை ஓசை, அத்தனையும் கல் பாடும் கவிதைகளாக, எல்லோரா சென்று திரும்புகின்றவர்களின் செவிகளில் என்றென்றும் கேட்கும் என்பதில் ஐயமில்லை. ஃ


## படித்திருக்கிறீர்களா ?

வாழ்வைப் படம் பிடித்துக் காட்டும் காலக்கண்ணாடி

# திருவாளர் பிரபலம்

**பி. சி. கணேசனின் நாடகம் (ரூ. 1 - 50)**

**பி. சி. கணேசனின் மற்ற நூல்கள் :**

தமிழ் வளர்த்த பேராசிரியர்கள் ரூ. 1 - 75
சோமநாத புரத்துச் சிலை 1 - 75
மக்கள் நிலை 1 - 25
சிந்தனை சிற்பி

**ம. சிங்காரவேலரின் நூல்கள்**

தத்துவமும் வாழ்வும் ரூ. 2 - 00
வாழ்வு உயர வழி 1 - 50

**கலைச் செல்வனின்**

இன்பமாய் வாழ்வது எப்படி? 1 - 25

விபரங்களுக்கு ;

**இமயப் பதிப்பகம் : நாகப்பட்டினம்.**

# உண்மையைக் கண்டுபிடியுங்கள்!




வழக்குகளை அறிந்து நடத்தும் பக்குவத்தை இப்பொழுது தான் பெற்றுளளேன். துவக்கத்திலேயே, எனக்கு வந்து வாய்த்த வழக்கு சுவை நிரம்பியதாய் இருந்தது. அந்தச் சுவைமிக்க வழக்கை நான் நடத்த ஒப்புக் கொள்வதற்கு முன் நடந்த சம்பவமே அதிகச் சுவை கொண்டது.

நான் வழக்கு மன்றத்திற்கு சென்று மாலை திரும்பிச் வந்தேன். உடைகளை மாற்றிக் கொண்டு, என் மனைவி தந்த சுவை நீரை அருந்தி விட்டு, வழக்கம் போல் சாய்வு நாற்காலியில் சாய்ந்தேன்.

காலையில் அவசர அவசரமாகப் புரட்டிவிட்டுப் போட்ட பத்திரிகைகளில் என் சிந்தனையை மிதக்க விட்டேன்.

தனித்தனியே நால்வர் வந்தனர். அவர்களில் மூவர் ஆடவர். ஒருத்தி இறுதியில் வந்தவள். அவர்கள் கூறிய விபரங்களைக் கூட்டிப் பார்த்தபொழுது ஒரு வாழ்க்கைச் சித்திரம் தெரிந்தது.

மாமுண்டி நாயகர்;-முதலில் வந்தவர். முதியவர். ஆனால் கொஞ்சம் வஞ்சனைக்காரர்.

இருளப்பதேவன்; இரண்டாவதுவந்தவன். சுமார் நாற்பது வயது. இவனும் பேச்சின் மூலமே வஞ்சகநினைவோடு எதையும் செய்வான் என்று காட்டிக் கொண்டான்.

### சுருளியப்ப தேவன்:

வாலிபன். இருபத்தாறு வயது நிரம்பியவன்; வெகுளி.

மாதவி;-அழகு ததும்பும் மாது. சுமார் இருபத்திரண்டு வயது இருக்கும். சோக முகம். இறுதியில் வந்தவள்.

இவர்கள் என்னிடம் கூறியவைகளை ஒளிக்காமல் உங்களிடம் கூறச் சொல்கிறேன். கேளுங்கள்.

### மாமுண்டி நாயகர்:

டாக்டரிடமும், வக்கீலிடமும் உண்மையைக் கூறிவிட்டால் ஆபத்துதான் வரும் என்பார்கள்.

நான் கொஞ்சம் சொத்தும் ரொக்கமும் வைத்திருக்கிறேன். கொடுக்கல் வாங்கல் உண்டு. என்னுடைய ஊர்க்காரர்கள் மட்டுமல்ல, வெளி கிராமத்துக் காரர்களும் வருவார்கள்.

பயிரிடப் பணம் கேட்பாரும் முன்பே பெற்ற கடனைத் தீர்க்க என்று கூறிப் பணம் கேட்பாரும் உண்டு. பிள்ளைக்குக் கல்யாணம், பெண்ணுக்குச் சீமந்தம் என்று சொல்லிப் பணம் கேட்பவரும் உண்டு. நான் கேட்பவரின் குணம் அறிந்து பணம் தரும் பழக்கமுடையவன். கேட்பவருக்குச் சொத்து சுகம் இல்லாவிட்டாலும்கூட 'நோட்டு' எழுதி வாங்கிக் கொண்டு பணம் கொடுப்பேன்.

என்னிடம் அந்தப் பகுதியில் கடன் வாங்காதவர்கள் இருக்க மாட்டார்கள். 'முடைபட்டால் நாயகரிடம் நடைகட்டு' என்று அந்த வட்டாரத்தில் கூறிக் கொள்வார்கள்.

என்னிடம் உள்ள நோட்டுகளை எண்ணிப் பார்த்தாலே ஆயிரக்கணக்கிலே வரும்.

வாங்குபவர்கள், நியாயம், அநியாயத்திற்குக் கட்டுப்பட்டவர்கள். சொன்னபடி பணம் தருவார்கள். அல்லது 'காலாவதி' ஆகாமல் தாங்களே வந்து 'செல்லு' வைத்து, அவரவர் 'நோட்டு'க்கு 'உயிர்' கொடுத்துப் போவார்கள்.

எனக்கு வழக்கு மன்றங்களுக்குப் போவது பழக்கமுமில்லை. பிடிக்கவும் பிடிக்காது. ஆனால் இப்பொழுது இங்கு வரும்படி அந்த அநியாயக்காரன் செய்து விட்டான்.

இரண்டு வருடங்களுக்கு முன்னால் அந்தப் பாவி வந்தான், என் வீட்டிற்கே நேராக! அவனோடு அவன் பங்காளி ஒருவனையும் கூட அழைத்துக்கொண்டு வந்தான். வந்தவனைத் தெரியாது. பங்காளியைத் தெரியும். அவன் எனக்குப் பழக்கமானவன். அவன் தான் வந்த விபரத்தைக்கூறினான். அதன் பேரிலேயே நானும் இந்த விவகாரத்தில் சிக்கிக்கொண்டேன்.

'நாயகர் ஐயா, இவன் என் தம்பி. சித்தப்பாரு மவன்.

**தில்லை வில்லாளன் எம். ஏ.**

கொஞ்சம் பணம் வேண்டியிருக்கு--இவனுக்குத் தையிலே கண்ணாலத்திற்கு ஏற்பாடாயிருக்கு? அதுக்குத்தான் மனசு வைக்கணும்' என்றான் பங்காளி.

'சுபகாரியமுங்க, தடை சொல்லக் கூடாதுங்க' என்றான் வந்தவன்.

எனக்கும், கல்யாணத்திற்குத் தானே கேட்கிறார்கள். நல்ல காரியத்திற்கு, நாமும் உதவியதாக இருக்கும் என்று பட்டது. சரியென்று சொன்னேன்.



வழக்கம்போல் நோட்டெழுதி வாங்கிக்கொண்டு பணமும் கொடுத்தேன். பங்காளி சாட்சிக் கையெழுத்துப் போட்டான். வழக்கமாக நோட்டெழுதும் நோட்டெழுத்துக்காரன் தான் எழுதினான்.

நாட்களும் ஓடின. மாதங்கள் ஆயின. இரண்டு ஆண்டுகளும் உருண்டுவிட்டன. பணம் கேட்டேன். அந்தப் பாவி சொல்லும் விசித்திரமான கதை இருதயத்தையே குலுக்கிவிட்டது. அதை ஏன் கேட்கிறீர்கள்? என் வாயால் நானே சொல்லமுடியாத விஷயமுங்க. எவ்வளவு நெஞ்சழுத்தம் இருந்தால் இப்படிச் சொல்வான்.

எனக்கு இரண்டு தாரமுங்க - மூத்தவ செத்துவிட்டா--இரண்டாந்தாரத்தா இருக்கா. எனக்கு வயது கிட்டத்தட்ட அறுபது ஆகிறது. அவளுக்கு இருபது வயதிருக்கும். இந்த வயது தாரதம்யத்தை வைத்து ஒரு புதிர்க் கதையையே கட்டிவிட்டாங்க.

அவளுக்கும் அவனுக்கும் சிநேகிதமாம். அவன் ஒருநாள் நான் வீட்டில் இல்லாதபோது, அவளோடு இருந்தானாம். நான் பிடித்தேனாம். கட்டி வைத்தேனாம். இந்த நோட்டை எழுதி வாங்கிக்கொண்டேனாம்.

அவன் செய்த காரியம் உண்மையா யிருந்தா, நோட்டெழுதியா வாங்கியிருப்பேன்--வெட்டிக் குழிதோண்டிப் புதைத்திருப்பேன். மானத்திற்குப் பணத்தை ஈடாக்கி விட்டேன்னு என் மானத்தைப் பறிக்கிறான்.

பங்காளிக்காரனைக் கூப்பிட்டேன். அவன் துடிக்கிறான். 'அந்தப் பாவியை நான் பாத்துக்கரேன். நீங்க அந்த நோட்டை என் பேருக்கு மாத்திக் கொடுங்க!'' என்று ஆவேசத்துடன் கூறினான். எனக்கும் அது சரியென்றே பட்டது.

பணம் போனால் போகிறது. அவன் பழிவாங்கப்பட்டால் போதும் என்று பங்காளிக்கு 'மேடோவர்' செய்து கொடுத்தேன்.

அதற்குப் பிறகு எனக்குக் கிடைத்த செய்தி இன்னும் பயங்கரங்க.

அவனும் இவனும் கூட்டாகச் சேர்ந்துதான் இந்த சதி செய்தார்களாம். 'நீ இப்படிச் சொல். நான் போய்ப் பேசிப் பைசல் செய்து நோட்டைத் திப்பீரு வாங்கிவிடுகிறேன்' என்றானும் பங்காளி. அவனும் சரியென்றானாம். பிறகு அவர்களுக்குள் என்ன நடந்ததோ தெரியவில்லை. தனக்கு 'மேடோவர்' கேட்டு வாங்கிக்கொண்டு விட்டானாம்.

இப்பொழுது பங்காளி, அந்த நோட்டை கோர்ட்டிலே தாக்கல் செய்யப் போகிறான் என்று கேள்விப்பட்டேன்.

நான் பங்காளியைக் கூப்பிட்டனுப்பி, என் வீட்டு விஷயம் கோர்ட்டுக்கு வந்தால் சும்மா விடமாட்டேன். கோர்ட்டுக்கும், சாட்சி, சம்மன்னு கூறி என்னை இழுக்கக் கூடாது, நான் வர மாட்டேன்-என்று முடிவாகக் கூறிவிட்டேன்,

அவன் உங்களிடம் வருவதாகத்தான் கேள்விப்பட்டேன். அதனால்தான் உண்மையை ஒளிக்காமல் கூறிவிட வேண்டும் என்று வந்தேன்.

வக்கீல்கள், பணம் கொடுத்தால் போதும், உண்மையோ, பொய்யோ வழக்காட வந்துவிடுவார்கள் என்று சொல்லுறாங்க. நீங்க அப்படியில்லைன்னு கேள்விப்பட்டதனாலேதான் வந்தேன். வந்தால் உண்மையை அறிந்து பிறகு மேல் நடவடிக்கை எடுக்க யோசனை சொல்லுங்க.

## இருளப்ப தேவன்:

ஐயா, கும்பிடுறேனுங்க. இதுக்கு நீங்க வழி சொல்லணுங்க.

நானும் என் பங்காளியுமாய் கூடிகிட்டுப் போய் என் பங்காளிக்கு ஒரு ஆசாமிகிட்டே ஐநூறு ரூபாய் நோட்டெழுதி வாங்கிக் கொடுத்தேனுங்க.

அந்த ஆசாமி நமக்கு வேண்டியப் பட்டவருங்க, அதிலே குறிப்பிட்ட காலத்திலே பங்காளியாலே பைசல் செய்ய முடியலிங்க.

'அண்ணாத்தே, அந்த நோட்டுக்கு நீ பணங் கொடுத்து மாத்தி எழுதி வாங்கிக்க, நான் உங்கிட்டே பணங் கொடுக்கிறேன்.' என்றான். சரின்னு ஐநூறு நான் கொடுத்து நோட்டை என் பேருக்குத் திருப்பிக்கிட்டேன்.

பணங்கேட்டால், என்னமோ கதை பேசுறான். அவனைப் பய

முறுத்தி எழுதி வாங்கிகிட்ட நோட்டாம் அது. என்னென்னமோ பொம்பளை சமாசாரமெல்லாம் சொல்ராங்க. அந்த நெட்டெழுத்துக்காரனும் சாமியையும் சரிக் கட்டி வைச்சுகிட்டான் போலிருக்கு. அவனும் அவன் பக்கந்தான் சொல்றானாம். என்ன அநியாயமுங்க— உதவி செய்யப் போய், இவ்வளவு உபத்திரவமுங்க.

அந்த ஆசாமி பணங் கொடுத்தான், தக்க சமயத்தில் அவனுக்குப் பணத்தைத் திருப்பிக் கொடுக்க வக்கில்லை. வழியில்லை. நான் ஈடு கொடுத்தேன்.

நான் என்னமோ அந்த ஆசாமிக்குக் கடன்பட்டிருந்தேனாம். அதற்கு, அவனை எழுதிக் கொடுத்தால், சும்மாயிருப்பதாக அந்த ஆசாமி சொன்னாராம். அதன் பேரில் நம்பிக்கைக்காகக் கொடுத்தானாம். எனக்கு அந்த ஆசாமியின் சம்சாரத்துடன் சிநேகதமாம். அதனை அவன் அறிவானாம். அதை வெளியில் சொல்லக்கூடாது என்று மிரட்ட இந்த நோட்டை அவள் சொல்லி, அந்த ஆசாமி எனக்குப் பணமில்லாமல் மாற்றிக் கொடுத்தாராம்.

என்ன நியாயமுங்க. கடன் வாங்குகிறபொழுது கையை, காலைப் படிப்பது-பிறகு இப்படி கதை கட்டிப் பணத்தை ஏமாத்திடப் பாக்கிறது! இவனை விடப்பிடாதுங்க.

இவன் கிட்டே, இந்தப் பணத்தை வசூல் பண்ணியே ஆகணுங்க. இல்லாவிட்டால் ஜெயிலிலாவது ஒரு மூணு மாசம் உட்கார வைச்சுப் பார்க்கணுங்க.

நான் இப்படிப் பணத்தைக் கொடுத்துபுட்டு நோட்டை என் பெயருக்கு மாத்திக்கிட்டு முழிக்கிறேன்.

பணங் கொடுத்த ஆசாமி கோர்ட்டுக்குப் போகாமே, பணத்தை வசூல் பண்ணிக்க என்கிறார். என்ன காரணமின்னு புரியலிங்க. கோர்ட் வாசல்படி பக்கம்கூட நான் வர மாட்டேன்னு சொல்கிறார்.

அவரிடம் என்ன சொல்லி மிரட்டி வைத்திருக்கானோ!--- தெரியவில்லை. ஒருவேளை, இந்த மூத்தான் சமாச்சாரம் தெரியுமோ என்னவோ! அந்த அம்மாவும் ஒரு மாதிரின்னு கேள்வீங்க. அவங்ககூட செத்தது சாதாரண சாவில்லீங்க. ஏதோ நடந்து போய் மறைஞ்சிட்டாங்கன்னு சொல்வாங்க.

அந்த ஆசாமி கஞ்ச மகாப் பிரபுங்க. தன்னைத் தவிர இந்த உலகத்திலே வேறு யாரும் பச்சின்னு இருக்கக் கூடாதுங்க. தனக்குத்தான் பணம் கிடைத்துவிட்டதே, இனி இவன் எப்படிப் போனா என்னன்னு அப்படிக் சொல்றாரோ என்னவோ! யார் கண்டாங்க? எந்தப் புற்றிலே எந்தப் பாம்பு இருக்குமோ?

ஆனால், அந்த ஆள் சாட்சி சொல்ல வல்லேங்கிறதை வைச்சு இந்த நோட்டைத் தள்ளிடுவாங்களா, என்ன! அப்படி நடந்ததுன்னா, அதுமாதிரி அநியாயம் வேறொண்ணும் இருக்கமுடியாதுங்க.

ஐயா, நீங்கதான், இந்தப் பணத்தை வாங்கிக் கொடுக்க வழி சொல்லணுங்க. நான் ஏற்கனவே கொடுத்து மாட்டிக்கிட்டேங்க. இதை இழந்திடக் கூடாதுங்க.

**சுருளியப்ப தேவன் :**

வணக்கங்க. நான் ஒரு முக்கியமான விஷயமாய் உங்க யோசனை கேட்க வந்திருக்கேன். உதவி செய்யணுங்க.

நான் எழுதிக் கொடுக்காத நோட்டு பேரிலே, சம்பந்தமில்லாத ஆள் ஒருத்தன் தாவா போட்ரேன்னு மிரட்டுராங்க.

எங்க பக்கத்திலே ஒரு பணக்கார புள்ளிங்க அவன். எதுக்கும் துணிஞ்சவங்க. எதையும் செய்வாங்க.

அவன் ஒருத்தனைப் பழிவாங்கணும்னா, அவன் கையெழுத்து மாதிரி போடவேண்டியது, கையாட்களிடம் சாட்சி வாங்க வேண்டியது. தான் கோர்ட்டுக்கு வருவதில்லை. அவனுக்கு எவன் எதிரியோ, அவனைக் கூப்பிட வேண்டியது--ஐம்பதோ, நூறோ கொடுத்து, வழக்கிலே மாட்டவைக்க ஏற்பாடு செய்வது! இதுவே தொழிலுங்க.

உங்ககிட்ட உண்மையைச் சொல்ரேனுங்க. அந்த ஆசாமி கிட்டே, எங்க ஊர் பொண்ணு தாலியறுத்தது, சமையல் வேலை வீட்டுவேலை செய்துகிட்டிருக்கு. அதுகிட்டே எனக்



கொஞ்சம் பரிச்சயம். அதுக்கும் என்பேரிலே கொஞ்சம் பிரிய முங்க.

இதிலே அங்கே போகவர இருப்பேனுங்க.

அந்த ஆசாமிக்கு இரண்டாந் தாரம் ஒண்ணுங்க. அது இள வெட்டுப் பொண்ணுங்க. வய தான காலத்தில் கல்யாணம் பண்ணிகிட்டாலே, சந்தேகந் தானுங்களே இருக்கும்! அதிலும் இந்த ஆசாமி, மகா சந்தேகி!

நான் போகவர இருப்பது, அந்தப் பொண்ணு விஷயமா யின்னு சந்தேகம் ஏற்பட்டது போலிருக்கு. என்னைக்கூப்பிட்டு ஜாடைமாடையாகக் கண்டித் தாரு. அப்படியும் நான் கேட் கலே! உடனே வழக்கமான இந்த ஆயுதத்தைக் கையிலே எடுத்து விட்டாரு.

என் பங்காளிக்கும் எனக்கும் ஜென்மப் பகைங்க. அவனைக் கூப்பிட்டு; இந்தப் பொய் நோட்டை 'மேடோவர்' கொடுத்து விட்டாருங்க. அவரு என்னை மிரட்டிக்கிட்டுத் திரிய ராரு!

பாவம், அந்தத் தாலியறுத்த பொண்ணு அழுவுது. என் னலே தானே, உனக்கு ஐநூறு தண்டம் வைக்கப் பார்க்கிருங்க. அதுக்கு, இந்த ஆசாமி பட்டு கிற சந்தேகம் புரியல்லே. என் கையிலே, மடியிலே இருக்கி றதைக் கொடுத்துட்டேன்--எப் படியாவது கொடுத்து தீர்த்து விட்டு, நாம என்னமோ சட்ட மாமே, அதுப்படி கல்யாணம் பண்ணிக்கலாம். அப்போ, எவன் நோட்டெழுதி நம்மை வாட்ட முடியும் என்கிறது.

எனக்கு, இந்த ஆசாமியின் சூழ்ச்சி அம்பலத்திற்கு வரணு மிங்கிறஆசை. இப்படியே பொய் கையெழுத்துப் போட்டே, அந்தப் பக்கத்தையே மிரட்டி வைச்சிருக்காங்க. ஆமாங்க. இதுக்கு வழி சொல்லுங்க.''

## மாதவி:

காலமாகி விட்டுது. அதிக நேரம் ஒண்ணும் சொல்ல வில்லே. நான் சொல்வது சுருக் கமே தவிர, விஷயம் விரி வானது.

நான் இந்த இள வயதில் ஒரு கிழவருக்கு வாழ்க்கைப்பட வேண்டியதாகிவிட்டது. என் வாலிப எண்ணங்களுக்கு உயிர் கொடுக்க, என் வாழ்க்கைத் துணைவராய் வந்து வாய்த்தவ ருக்கு நிலைமை இல்லை. ஆனால் பணம் நிறைய இருந்தது. அதைக் காட்டித்தான் என்னை விலைக்கு வாங்கி வந்தார்.

வந்த இடத்தில், எனக்குத் துணையும், ஆறுதலும் என் வீட் டில் சமையல் வேலை செய்யும் விதவைப் பெண்தான்.

அவள்தான், என் கண்ணீ ரைத் தன் இனிய மொழிகளால் துடைப்பாள். அவள் என்கூடப் பிறக்கவில்லையே தவிர, என் சகோதரியாகவே கருதுவேன்.

அவளுக்குச் சகோதரன் முறையாம் ஒருவன். அவன் வீட்டிற்கு வருவான். அடிக்கடி அவன் அவளை பணங் கேட்டுக் கொண்டிருந்தான்; சொன்னுள்.

எனக்கென்னமோ, அவளைப் பார்த்தால் ஒரு பரிதாபம். அத ணுல் உதவி செய்ய வேண்டும் என்று தோன்றியது. அவளும் சொன்னுள்.

அவர் நான் சொல்லும் எதையும் தட்ட மாட்டார். ஆகவே, அன்று இரவு, அவரிடம், அவனுக்கு ரூபாய் ஐநூறு கொடுக்கவேண் டும் என்று கூறினேன். அவர் முதலில் மறுதளித்தார். கோப மாகப் பேசினர். ஆரம்பத்தில் பிறகு வெறுப்போடு பேசினர். கடைசியில் ஒத்துக்கொண் டார். மறுநாள், நோட்டு எழு திக்கொண்டு பணம் கொடுத் தார்.

பிறகு இரண்டு வருடங்கள் கழித்துப் பணம் கேட்டால் இல்லை என்கிருன். அவர் என் மீதுதான் கோபப்படுகிருர். ஆத்திரப்படுகிருர். ஏனென்று எனக்குப் புரியவில்லை.

பணங்கேட்டால், ஏதோ கதை சொல்கிருன் என்று கூறி னுர். எனக்குக் கடைசியாக விஷயம் புரிந்தது.

அந்த ஆசாமி, ஒருநாள் என் வீட்டிற்கு வந்திருந்தான். அவ ளைத் தேடினன். அவள் வெளி யில் சென்றிருந்தாள்; ஐயாவும் இல்லை என அறிந்துகொண் டான். நான் தனித்திருந்தேன். என்னிடம் நெருங்கினன். நேச மாய்ப் பேசிக் கரத்தைப் பிடித்துவிட்டான். நான் கண்ட படி பேசி அனுப்பிவிட்டேன்.

அதிலிருந்து அவன் என்னை வெறுப்போடு பார்ப்பான். நானும், வெறுப்போடு அவனை நடத்தி வந்தேன்.

அவன் கடைசியில், தன் ஏமாற்றத்திற்குத் தக்க பரிகா ரம் தேடிவிட்டான். என் னேமா, அவனேடு காதல் லீலை கள் புரிந்தேனும்--கடிதங்கள் கூட எழுதினேனும். என்னமோ சொல்கிருனும்! பாவி!

கதைகளில் எழுதுவதைப் போலவே, வயதானவர்கள் மனைவி என்ருல் தவறிடவேண் டும் என்பது நியதியா? நியாய மில்லையா?

பணத்தையும் வாங்கிக் கொண்டு பழி சொல்கிருனே! அவனுக்கு யார் கூலி கொடுப் பார்கள்?

பணம் கொடுக்கச் சொன்ன அவளைக் கேட்டால், காலைக் கட் டிக்கொண்டு அழுகிருள். தன் னிடமிருந்த பணத்தைக்கூடத் திருடிக்கொண்டு போய்விட்டா னும், அவன். இதற்கென்ன வழியென்று நீங்கதான் சொல்ல வேணும்.

அந்த நோட்டைக்கூட வேரு ருவருக்கு மாற்றிக்கொடுத்து விட்டார் அவர். இருந்தாலும் என்னைப் பற்றிக் குறைவாக எதுவும் கோர்ட்டில் பேசக் கூடாது. நானும் கோர்ட்டுக்கு வரமுடியாது. இதுக்கு என்ன செய்யலாம்!

❋

இப்பொழுது, எனக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. ஆனால் சுவையான ஒரு துப்பறி யும் நாவல் படித்த உணர்ச்சி இருந்தது. வழக்கறிஞர்களாக இருப்பவர்களுக்கு வேலை, உண் மையில் ஒரு கூறு இது என்று எடுத்துக்காட்ட வேண்டியது. நீதிபதிகளுக்குத்தான் உண்மை யைக் கண்டு பிடிக்கவேண்டிய கடுமையான வேலை.

நான் வழக்கறிஞன் ஆகவே, என் வேலை முடிந்துவிட்டது. நீங்கள்தான் நீதிபதி இந்தக் கதை எப்படித்தான் நடந்திருக் கும்?-யார் எதை எதைக் கூட் டிச் சொல்கிருர்கள் என்பதை அறிந்து, உண்மையில் நடந்த தென்ன என் ஆராய்ந்து கண்டு பிடித்துத் தீர்ப்பு வழங் குங்கள். ஃ

# செய்யாத குற்றம் செய்தவர் யாரோ?

**தில்லைமறைமுதல்வன்**
எம்.ஏ.பி.எல்

**வழக்கு விசாரணை** அதற்குரிய சம்பிரதாயங்களோடு ஆரம்பமாயிற்று.

"கேதார் சர்மா அவர்களே! உமது சகோதரரின் புதல்வியாகிய பினு சர்மாவைக் கொலை செய்ததாக உம்மீது குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறது. நீர் குற்றவாளி என்பதை ஒப்புக்கொள்கிறீரா? அல்லது மறுக்கிறீரா?"

நீதிமன்றத்தில் கூடியிருந்த அத்தனை பேருடைய கண்களும் குற்றவாளிக்கூண்டில் கையில் விலங்கோடு நின்று கொண்டிருந்த அந்தக் குற்றவாளியின்மீது சென்று மொய்த்தன.

"நான் குற்றவாளி அல்ல"-பதட்டமில்லாமல், அழுத்தமாக உச்சரித்தார் கேதார் சர்மா.

—இந்த வழக்கு அந்த ஊரிலேயே பெரும் பரபரப்பை உண்டாக்கி இருந்தது. அதற்குக் காரணமும் இல்லாமல் இல்லை.

திடீரென்று ஒரு நாள், குமாரி பினு சர்மா என்ற பத்தொன்பது வயதான பெண் சந்தேகத்துக்கி—



மான சூழ்நிலையில் காணமல் போய் விட்டாள்!

அதுவரை அவள், நாற்பத்தெட்டு வயதுள்ள பிரம்மச்சாரியான கேதார் சர்மாவோடு தான் வசித்துக் கொண்டிருந்தாள். அவரைத் தவிர இரண்டே வேலைக்காரர்கள்தான் அவர்களது பெரிய பங்களாவில் இருந்து வந்தனர்.

சில மாதங்களுக்கு முன்பு பிஞவின் உறவினர்கள் சிலர் அவளைப் பார்க்க வந்திருந்தனர். அவர்கள் திரும்பிச் சென்றபோது, 'இனி திரும்பி வரக்கூடாது' என்று கேதார் சர்மாவினுல் ரகசியமாக எச்சரித்து அனுப்பப்பட்டனர். பிஞவுக்கும் அவள் உறவினர்களுக்கும் இடையே நெருக்கம் ஏற்படாவண்ணம் கேதார் சர்மா கவனிப்பாக இருந்து வந்தார்.

பிஞவுக்கு இன்னும் திருமணமாகவில்லை. அவள் திருமணமாகாமல் இறக்க நேரிட்டால், அவளது சொத்துக்கு வாரிசு கேதார் சர்மா தான்.

இவை எல்லாவற்றையும் சேர்த்து வைத்துப் பார்த்த போது கேதார் சர்மா மீது சந்தேகப்பட இடமிருந்தது. பிஞ காணமல் போன நான்காம் நாள் அவர் கைது செய்யப்பட்டார்.

இரண்டு நாட்கள் நடைபெற்ற விசாரணையின் போது கேதார் சர்மாவின் மீது சுமத்தப்பட்ட குற்றம் நன்ருக பலப்பட்டுவிட்டது. சாட்சிகளின் வாக்குமூலங்களிலிருந்து விசித்திரமான சம்பவங்கள் வெளியாயின.

பிஞவின் தந்தை பல லட்சங்களுக்குச் சொந்தமான பிரபல வியாபாரி. அவர் இறக்கும்போது பிஞவுக்கு 16 வயது. அவர் எழுதி வைத்துச் சென்ற உயிலின்படி, அவரது இளைய சகோதரர் கேதார் சர்மா, பிஞவுக்குக் 'கார்டியஞ்'க நியமிக்கப்பட்டார். பிஞவுக்குத் திருமணமாகும் தினத்தன்று கேதார் சர்மா கார்டியன் பொறுப்பிலிருந்து விலகிக் கொள்ள வேண்டுமென்றும், திருமணம் செய்து கொள்ளாமலே பிஞ இறக்க நேரிட்டால், எல்லா சொத்தையும் கேதார் சர்மா அடைய வேண்டுமென்றும் உயிலில் எழுதி வைக்கப்பட்டிருந்தது.

கேதார் சர்மா ஒரு விசித்திரமான பேர்வழி. அவரைச் சுற்றிலும் எப்போதுமே ஒரு மர்மத் திரை சலசலத்துக் கொண்டிருந்தது. எம்.எஸ்ஸி. பட்டம் பெற்ற பிறகு பல ஆண்டுகள் வரை அவரைப் பற்றிய தகவலே இல்லை. சாதுக்கள் கூட்டத்தோடு சுற்றிக் கொண்டிருந்ததாக வதந்திகள் உள்ளன.

கடைசி ஏழு ஆண்டுகளில் தான் கேதார் சர்மா தனது சகோதரரின் வீட்டுக்கு வந்து போய்க் கொண்டிருந்தார். சில மாதங்களுக்கு முன்பு நிலையாக நகரத்தில் குடியேறினர்.

நகரத்திலிருந்து நான்கு மைல் தொலைவிலிருந்த காட்டுககு அடிக்கடி கேதார் சர்மா சென்று வருவதாகவும், சில போது இரவு முழுவதும் காட்டுக்குள்ளேயே தங்குவதாயும் சிலர் பேசிக்கொண்டனர். அவருக்கென்று அதிக நண்பர்களும் இல்லை.

பிஞவின் தந்தை இறந்த பிறகு கேதார் சர்மா பிஞவுடன் வந்து தங்கிவிட்டார். பழைய வேலைக்காரர்கள் நிறுத்தப்பட்டு, புதிய வேலைக்காரர்கள் அமர்த்தப்பட்டனர். பிஞ 'ஏன்' என்று கூட கேட்கவில்லை. அவளுக்கும் கேதார் சர்மாவுக்கு மிடையே பாசம் எப்போதும் போலவே கனிந்து கொண்டிருந்தது.

மூன்று ஆண்டுகள் சென்றன.

பிஞ இப்போது பத்தொன்பது வயதுள்ள பாவை. அழகு சிந்திக் கொண்டிருந்தது. காட்டோரத்து மலர்ச் செடிகளின் புதுமையும் செழுமையும் அவளிடமும் பொலிந்தன. செல்வத்தின் மெருகு வேறு; கேட்க வேண்டுமா? அவளைத் திருமணம் செய்து கொள்ளப் பலர் போட்டி போட்டுக்கொண்டு வந்தனர். ஆனல் ஒவ்வொருவரையும் ஏதாவதொரு காரணம் காட்டித் தட்டிக் கழித்துக கொண்டே வந்தார் கேதார் சர்மா. அவருடைய போக்கின் காரணம் எவருக்குமே பிடிபடவில்லை.

மலர்ந்த தாழம்பூவின் மணம் வீணக் காற்றில் கரைந்து போவதா என்ன?

ஒருநாள் மாலை வேளை.

வழக்கத்துக்கு முன்னதாகவே வீட்டிற்குத் திரும்பிய கேதார் சர்மா தோட்டத்தில் நுழைந்ததும் திடுக்கிட்டார். அங்கே பிஞவும் ஒரு இளைஞனும் நெருக்கமாகஅமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். ஒருவரில் ஒருவர் லயித்துப் போயிருந்தனர். கேதார் சர்மாவுக்குத் தன் கண்களையே நம்ப முடியவில்லை.

"பிஞ" என்று ஒரு அதட்டல் போட்டார்!

திடுக்கிட்ட இருவரும் எழுந்து நின்றனர்.

"பிஞ, உள்ளே போ"

ஏதோ சொல்ல வாயெடுத்தாள் பிஞ. கேதார் சர்மாவின் கண்டிப்பான பார்வையைக் கண்டதும் பேசாமல் பரிதாபமாக அந்த இளைஞனைப் பார்த்தபடி உள்ளே சென்ருள்.

"யார் நீ? உனக்கென்ன இங்கு வேலை?" என்று கேள்விக் கணைகளைத் தொடுத்தார் கேதார் சர்மா.

அந்த இளைஞன் கூறிய பதில் வழக்கமான கதை தான். காந்தமும் இரும்பும் ஒட்டிக் கொண்ட கதை. அவன் பெயர் பசந்த் குமார். அப்போதுதான் கல்லூரியிலிருந்து வந்திருந்த இளம் டாக்டர்.

"நாங்கள் ஒருவரை ஒருவர் மனதார நேசிக்கிறோம். திருமணம் செய்துகொள்ளவும் விரும்புகிறோம்." என்றான் அந்த இளைஞன்.

இதற்கெல்லாம் மசிபவரா கேதார் சர்மா?

"நீ யாராக இருந்தாலும்சரி, இனி இந்த இடத்தில் நுழைந்தால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார்.

அந்த இளைஞன் தலையைத் தொங்கவிட்டுக் கொண்டு வெளியேறினான்.

இந்த நிகழ்ச்சி நடந்த ஒரு வாரத்திற்கெல்லாம், காட்டுப் பகுதிக்கு அருகே இருந்த ஒரு பங்களாவை வாடகைக்கு எடுத்துக் கொண்டு பினுவோடு குடி போனார் கேதார் சர்மா. கூட இரண்டு வேலையாட்களும் வந்தனர்.

அது பழங்காலத்துக் கட்டிடம். சுற்றிலும் அடர்ந்த புதர்களும் வளர்ந்த மரங்களும் மண்டிக் கிடந்தன. மேற்கே இரண்டு பர்லாங் தொலைவில் காடு இருந்தது. அரை மைலுக்குள் வேறு வீடு எதுவும் கிடையாது.

இந்தப் புதுவீட்டிற்கு குடி வந்த பிறகுதான் ஒரு நாள் பினு காணமல் போய்விட்டாள்.

துப்பு விசாரணையின் போது, பினு காணமல்போன தினத்தன்று அவளும் கேதார் சர்மாவும் காட்டுக்குள் சென்றதாகவும், அவர் மட்டுமே திரும்பி வந்ததாகவும், முதல் நாள் பசந்த் குமார், அவர்களது பங்களா அருகில் தென்பட்டதாகவும் தெரிய வந்தது.

"சர்வ வல்லமையுள்ள கடவுள் முன்பாக நான் சொல்வதெல்லாம் உண்மையே தவிர பொய்யல்ல." என்ற பிரமாணத்தின் பேரில் வேலையாள் ஒருவன் சாட்சி சொன்னது இது—

"சம்பவம் நடந்த தினத்தன்று பினுவுக்கும் கேதார் சர்மாவுக்கும் வாக்குவாதம் நடந்தது. பசந்த் குமாரையே திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்று அவள் பிடிவாதம் பிடித்தாள். கேதார் சர்மா முடியவே முடியாது என்றார். இதற்குமுன் பினு அழுது பார்த்திருக்கிறேன். கேதார் சர்மா கொஞ்சங்கூட அன்பில்லாமல் நடந்துகொள்கிறார் என்று பினு குறை கூறிக்கேட்டிருக்கிறேன்."

நடுத்தர வயதுள்ள பெண்மணி ஒருத்தியும் சாட்சி சொன்னாள். சம்பவ தினத்தன்று அவள் விறகு பொறுக்கக் காட்டுக்குச் சென்றாள். மாலை 5 மணிக்கு திரும்பி வந்துகொண்டிருந்தாள். அப்போது ஒரு பெண்ணின் குரல் கேட்டது— "என்னைக் கொல்லாதீர்கள்! என்னைக் கொல்லாதீர்கள்!" — என்று. சில வினாடிக் கெல்லாம் துப்பாக்கி வெடிச் சத்தமும், அதைத் தொடர்ந்து ஒரு பெண்ணின் அலறலும் கேட்டன. விறகு பொறுக்க வந்தவள் எல்லாவற்றையும் அப்படியே போட்டுவிட்டு ஓடினாள். போலீசாரிடம் விஷயத்தைச் சொல்லிய பிறகுதான் அவளுக்கு நெஞ்சின் படபடப்பு அடங்கியது.

போலீசார் தங்கள் வேலையைக் கச்சிதமாகச் செய்து முடித்தனர். பினுவைக் கொல்ல வேண்டிய நோக்கமும் நிருபிக்கப்பட்டது. சந்தர்ப்ப சாட்சியங்களும் தேவையான அளவு காட்டப்பட்டன. பனித்துளியை வைத்துக் கொண்டு கடலைச் சிருஷ்டிப்பவர்களுக்கு இது போதாதா என்ன?

ஆனால் எவ்வளவோ தேடியும் பினுவின் பிணம் மட்டும் கிடைக்கவில்லை. அதோடுகூட, பசந்த் குமாரையும் காணவில்லை — அவனைப் பற்றிய எந்தத் தகவலும் இல்லை.

கேதார் சர்மா தனக்காக வாதிட எந்த வழக்கறிஞரையும் ஏற்பாடு செய்துகொள்ளவில்லை. எந்த சாட்சியையும் விசாரிக்கவில்லை. 'நான் குற்றமற்றவன் என்பதை நிரூபிக்க மனித உதவி தேவை இல்லை. கடவுளுக்குத் தெரியும்' என்றார்.

"சம்பவ தினத்தன்று பினுவின் விருப்பப்படி அவளும் நானும் காட்டுக்குள் சென்றது உண்மை. அங்கே என்ன பேசினோம் என்பதை இங்கே சொல்ல நான் விரும்பவில்லை. அது எங்கள் சொந்த விஷயம். திரும்பி வந்துகொண்டிருந்த போது அவள் எப்படியோ என்னிடமிருந்து பிரிந்துவிட்டாள். தேடித் தேடிப் பார்த்தேன். காணவில்லை. இப்போது அவள் எங்கிருக்கிறாள் —என்ன ஆனாள்—என்பதும் எனக்குத் தெரியாது. நான் அவளைக் கொலை செய்யவில்லை—நினைத்ததும் இல்லை-அவளை நான் என் சொந்த மகளைப் போலவே நேசிக்கிறேன்."-புண்பட்ட குரலில் பேசினார் கேதார் சர்மா.

கடைசியில் தீர்ப்பு சொல்லப்பட்டது.

மரண தண்டனை!

தீர்ப்பின் வாசகங்கள் படிக்கப்பட்டபோது அவருடைய உடல் ஒருமுறை குலுங்கியது. விசாலமான கண்கள் அங்குமிங்கும் சுழன்றன. தனக்குத் தானே பேசிக் கொள்வது போல அவர் உதடுகள் முணுமுணுத்தன—

"நான் அவளைக் கொல்லவில்லை.........நான் அவளைக் கொல்லவில்லை ..."

ஒரு வாரமாயிற்று. கேதார் சர்மா தண்டனையைஎதிர்த்து அப்பீல் செய்து கொள்ளாததால் அவர் தூக்கிலிடப்பட்டார்!

அவருடைய பிணத்தைக் கேட்டு எவரும் முன் வரவில்லை. சிறை அதிகாரிகளே சவ அடக்கத்தையும் செய்து முடித்தனர்.

[80-ம் பக்கம் பார்க்க]



# பாவம்

**காட்சி—1.**

இடம்: அறிவுக்கடல் உயர் நிலைப்பள்ளி—

காலம்: பிற்பகல்: பள்ளி விட்டு மாணவர் வெளிவரு கின்றனர்,

மாந்தர்: மாணவர்கள் சிலர்-

அன்பன்; பாவம்! அவரைப் பார்த்து அப்படிச் சொல்லி யிருக்கிறார்கள் பார்...

அழகன்; ஆமாமடா - எனக்கு மிகவும் வருத்தமாகத்தான் இருக்கிறது.

அருகன்; நாம் வருந்தி என்னடா செய்வது? எவ்வளவோ நல்லவர்.

அன்; நல்லவர் தான்'டா. ஆனால் அவரே அடிக்கடி வகுப்பிலே சொல்வாரே; 'நல்லவனாக இருந்தால் மட்டும் போதாது; வல்லவனாகவும் இருக்கவேண்டும்' என்று-- யாரோ எழுதியிருக்கிறார்களாமே, அப்படி அவர் நடந்துகொண்டிருக்கலாம் அதுபோல.

அரு; ஊருக்குச் சொல்லத்தான் அவருக்கு நேரம் இருந்தது. தன்னைப் பற்றி எங்கே நினைத்தார் அவர்?

அழ; ஆமாமடா எனக்குக்கூட நன்றாக நினைவிருக்கிறது. ஒரு நாள் புத்தகம் இல்லாமல் வந்துவிட்டேன். அதற்கு எரிந்து விழுந்தாரா என்ன? 'ஏன் தம்பி, கொண்டு வந்தால் என்ன?' என்று எவ்வளவு குழைவாகக் கேட்டார்! எனக்கு அழுகையே வந்து விடும்போல் இருந்தது.

அன்; நீ அதைச் சொல்கிறாயே. இன்னொன்று தெரியுமா? அந்தப் பெரிய தெருப்பையன். அவன் தான்'டா நெட்டையன்-- அவன் ஒருநாள் சம்பளம் கட்டவில்லை என்று பேரை அடித்துவிடுவதாகத் தலைமை யாசிரியர்--அந்தக் கடுவன் பூனை சொன்னார். இவர்தான் அவரிடம் போய் 'பாவம் ஏழை வீட்டுப் பிள்ளை அய்யா --நாளைவரை பொறுத்துக் கொள்ளுங்கள்' என்று அவரிடம் மன்றாடி அனுமதி பெற்றார்.

அரு; போடா--இதை என்னமோ பெரிதாகச் சொல்லுகின்றாய்--ஒருநாள் 'த' 'நா' இரண்டு பேரும் விடுதிச் சுவர் ஏறிக் குதித்துக் கூத்துக்குப் போனார்கள் -- 'கொத்தவரங்காய்'--பார்த்துவிட்டுக் 'கடுவன் பூனை'யிடம் சொல்லிவிட்டது. 'கடுவன் பூனை' என்ன செய்தது தெரியுமோ--போ வெளியே என்று பெட்டி படுக்கையைத் தூக்கி வெளியில் எறிந்துவிட்டது. எங்கேயோ இருந்துவந்த அவர் கண்டார் இதை. உடனே கடுவன் பூனையிடம்போய் 'பாவம் அய்யா, பெரும் பாவம்--ஒரு பிள்ளையின் படிப்பை--வாழ்க்கையைக் கெடுக்கவேண்டாம் --ஏதாவது தண்டனை கொடுங்கள் -- திருந்திவிடுவான்' என்று சொல்லிக் கெஞ்சு கெஞ்சு என்று கெஞ்சினார். அப்புறம்தான் 'கடுவன் பூனை' ''சரி'' என்று சொல்லியது. இல்லாவிட்டால் இந்நேரம் ''த'' எங்காவது எருமை மாட்டின் வாலை முறுக்கிக் கொண்டிருப்பான்; ''நா'' ஊர் சுற்றியாகியிருப்பான். அவ்வளவு நல்லவருக்கு இவ்வளவு பெரிய தண்டனையா?

அன்; பெரிய தண்டனை என்றால் என்ன -- பள்ளிக் கூடத்தை விட்டே நீக்கி விடுவார்களோ? இனிமேல் அவரிடம் பாடம் கேட்கவே முடியாதா? அவ்வளவு அழகாகப் பாடம் சொல்லுவார்! பாட்டைப் பிரித்து, பொருள் சொல்லி, நயம் சொல்லி அட ...அட....

அரு; பாட்டுக்கிடக்கட்டும்'டா. பாட்டு எல்லாரும்தான் சொல்லுவார்கள் -- முன்னேயெல்லாம் எனக்கு இலக்கணம் என்றால் அவ்வளவு கசப்பு...இப்போது இலக்கணத்திலே புதிய பிடிப்பு-- இலக்கணத்தையே இனிப்பாகச் சொல்வாரே--

அழ; சொல்வார்; என்ன செய்வது இப்போது?

அன்; இனி அவர் வரவேமாட்டாரா--

அரு; ஏன் வரமாட்டார்? இனிமேல்தானே விசாரணை--இன்றைக்குப் பெரிய அதிகாரியே வந்திருக்கிறாரே -- அதற்குத் தானே இன்று பிற்பகல் நமக்கு விடுமுறை!

அன்; பெரிய அதிகாரி எப்படிப்பட்டவரோ?




அரு; நல்லவர்--நியாயமானவர் என்றுதான் சொல்லுகிருர்கள்--என் அண்ணன்கூட சொன்ஞர்--அவருக்குத் தெரியுமாம்.

அழ; அப்படி என்ன'டா அவர் பெரிய குற்றம் செய்துவிட்டார்?

அன்; அதுதானே?

அரு; வகுப்பிலே அரசியல் பேசுகிருராம்--

அன்; அடேய்...... அடேய்...... அடுக்குமா'டா இது? வகுப்பிலே எப்போது'டா அவர் அரசியல் பேசிஞர்? நாம் எப்போதாவது கட்டுரையில் ஏதாவது அரசியல் நிகழ்ச்சிகளை எழுதிஞல்கூட ஓரத்தில் கோடு கிழித்து 'அரசியல் கருத்துக்கள் கலவாமல் எழுதுக' என்று குறிப்பு எழுதுவாரே, அவரா அரசியல் பேசிஞராம்--அடப் பாவமே!

அரு; தெய்வத்தை நம்பாதே என்பாராம்.

அழ; யார் இதெல்லாம் சொன்னது? அவர் நெற்றியிலே இருக்கும் சந்தனப்பொட்டு ஒன்று போதுமே இதை மறுக்க.

அரு; அது வேஷமாம்--வெளியில்தான் அப்படியாம்--கட்டுரை ஏடுகளில் -- விடைத்தாள்களில் பிள்ளையார் சுழி, கடவுள் துணை இதெல்லாம் இருந்தால் அடித்துவிடுவாராம்.

அன்; இதைப் பற்றி நம் வகுப்பிலே எத்தனையோ சொல்லியிருக்கிருரே--

அரு; அடிக்கடி வடக்குவடக்கு என்று பிரித்துப் பேசுகின்ருராம்.

அன்; ஆமாம்'டா நேற்றுகூட 'வடமொழி' என்று ஏதேதோ சொன்ஞர்.

அழ; அதற்காக அவரைக் குறை சொல்வதா என்ன?

மா.கி.தசரதன் எம்.ஏ

அரு; என்னமோ நாமாகச் சொல்லவில்லை. நமக்கு நல்ல ஆசிரியர்தான். ஆஞல் மேல் அதிகாரிகளுக்குப் புகார் போய், விசாரணைக்கே வந்திருக்கிருர்களே--

அன்; யார் புகார் செய்திருப்பார்கள்?

அழ; வேறு யார் -- அந்தக் கடுவனும் கொத்தவரங்காயும் தான் இருக்கும்.

அன்; பார்க்கலாம் என்னதான் ஆகிறது என்று!

## காட்சி—2.

இடம்: அதே இடம்.

காலம்: அதே காலம்.

மாந்தர்: கல்வி அதிகாரி—தலைமை ஆசிரியர்—தமிழாசிரியர்—சில ஏடுகள்—தாள்கள்.

கல்வி அதிகாரி; இது நீதிமன்ற விசாரணை அல்ல--ஆஞல் உண்மையை அறிய நாம் முயல்கின்ருேம். இதிலே விருப்பு வெறுப்பு இல்லாமல் நமது கடமையைச் செய்வோம்.

தமிழாசிரியர் அவர்களே; -- உங்கள்மீது தலைமையாசிரியர் இந்தக் குற்றங்களை-- எழுதியனுப்பியுள்ளார். அவற்றினுக்கு நீங்கள் விடை சொல்ல இதனை--இந்த வாய்ப்பைக் கல்வித்துறை உமக்கு அளிக்கிறது. என்ன, குற்றங்களைப் படிக்கட்டுமா?

தமிழ் ஆசிரியர்; (வாய்பேசாது, தலையை அசைத்து இசைவைக் குறிப்பிடுதல்)

க அ; சரி! கேளுங்கள்; முதல் குற்றம், வகுப்பில் நீங்கள் அரசியல் பேசுகின்றீர்களாம். இரண்டாவது...

தமி. ஆ; ஐயா......ஒவ்வொன்றாகச் சொல்லுங்கள். விடையும் உடன் சொல்லிவிடுகின்றேன்.

க அ; சரி. அதுவும் நல்லதுதான். இதற்கு விடை சொல்லும்.

தமி. ஆ; ஐயா--எனக்கென்று சில அரசியல் கொள்கைகள் இருக்கின்றன. உண்மைதான். நான் வகுப்பில் 'அரசியல்' பேசுவதே இல்லை.

தலைமை ஆசிரியர்; பொய்... பொய்...

க அ; ஆவேசம் இல்லாமல் சொல்லுங்கள்.

தலை ஆ; பொய்...நானே கேட்டிருக்கிறேன்...என் காதால் கேட்டிருக்கிறேன்......"தமிழ் நாடு என்பது இன்று இல்லை; இருக்கும் நாட்டுக்கும் உரிமையான எல்லை இல்லை...அந்த எல்லையிலும் தமிழ் மொழியின் செல்வாக்கு இல்லை" என்றெல்லாம் பல முறை இவர் வகுப்பில் சொல்வதை நானே கேட்டிருக்கிறேன். இதெல்லாம் அரசியல்தானே?

க அ; (புலவரைப் பார்த்து) நீங்கள் என்ன சொல்லுகின்றீர்கள்?

தமி ஆ; ஐயா...தாங்கள் அறியாதது அல்ல. ஆனாலும் சொல்லவேண்டிய கடமை என்னுடையது; சொல்லுகின்றேன். 'தமிழ்நாடு என்பது இன்று இல்லை' என்று சொல்வது உண்டு. சென்னை ராஜ்யம்தான் இருக்கிறதே ஒழிய தமிழ்நாடு இல்லை என்று சொல்வேன். ஏனெனில் நான் சொல்லும் பாடத்தில் அடிக்கடி 'தமிழகம்', 'தமிழ் கூறும் நல்லுலகம்', 'தமிழ்' என்றெல்லாம் தமிழ் நிலப் பரப்பைக் குறிக்கும் சொற்கள் வருகின்றன. அது இன்றுள்ள 'சென்னை ராஜ்யம்' என்பதைக் கூடவா நான் சொல்லக்கூடாது?

க அ; சரி. எல்லையைப் பற்றிய பேச்சு?

தமி. ஆ; அதுவும் அப்படித்தான். தமிழில் இலக்கணம் சொல்வேன், 'வடவேங்கடம் தென் குமரி ஆயிடைக்கிடந்த தமிழ் கூறும் நல்லுலகம்' என்று நூற்பா வரும். வடக்கே வேங்கட மலையும், அதாவது திருப்பதி மலையும், தெற்கே குமரி முனையும் ஆகிய இவற்றிடையே இருக்கும் தமிழ் வழங்கும் பகுதி என்று பொருள் சொல்வேன். இன்று அந்த எல்லை இல்லை. சிற்றூரில் சில பகுதிகள் இல்லை. திருத்தணிகைவரை தமிழ்நாடு ஆகும் என்று இன்றைய நிலையோடு ஒப்பிடுவேன். அவ்வளவே. இதை அரசியல் என்று சொன்னால்...

தலை ஆ; அதுதான் போகட்டும்--தமிழ் மொழியின் செல்வாக்கு இல்லை என்பாரே; அதற்கு என்ன சொல்கிறார் புலவர்?

க அ; சற்றுப் பொறுங்கள்-- அவரே தொடர்ந்து சொல்லட்டும். (புலவரைப் பார்த்து) நீங்கள் சொல்லுங்கள்.

தமி ஆ; நல்லது; தமிழ் ஆட்சி மொழிதான்--அதிலே ஐயம் இல்லை. இனித் தமிழ் வாழும். அதிலும் ஐயம் இல்லை. ஆனால் உள்ள தமிழில் பிறமொழிச் சொற்களைக் கலந்து எழுதுவதனால் மொழிக்கு எத்துணை கெடுதல் என்பதனைத் தமிழாசிரியன் என்ற முறையில் நான் விளக்கிட வேண்டாமா? அந்த உரிமைகூட எனக்கு இல்லையா? கோவையிலே நடைபெற்ற தமிழாசிரியர் மாநாட்டில் பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் ரா. பி. சே. அவர்கள் இதுபற்றித் தமது அனுபவத்தை எடுத்துக் கூறித் தனித் தமிழ் எழுத அரசாங்கம் இடும் தடைகளை எடுத்துச் சொல்லியுள்ளாரே -- கல்வித்துறை இயக்குநர் -- நெறியாளர் -- முன்னிலையில்தானே இதனைச் சொல்லியுள்ளார். அந்தக் கருத்தைத்தான் நான் மாணவர்களிடையே சொன்னேன்- வேறு ஒரு பிழையும் செய்தறியேன்.

க அ; இரண்டாவது குற்றம்; கடவுள் நம்பிக்கைக்கு மாறாகச் சில கருத்துக்களைச் சொல்லுவது உண்டு என்று இந்தப் புகார் கூறுகிறது.

தமி ஆ; என் தோற்றமே தங்களுக்கு வேண்டிய விடையை அளிக்கும் என நம்புகின்றேன்.

தலை ஆ; ஆ! அதுதான் விஷயம்! தோற்றம் வெளிவேஷம்! உள்ளே இருப்பது வேறு.

க அ; இப்படிச் சொல்வது எல்லாருக்கும் பொருந்தும். ஏதாவது சான்று காட்டிப் பேசினால் நல்லது. அதுதான் முறை.

தலை ஆ ; இதோ நான் தயாராக வைத்திருக்கிறேன்.

க அ ; காட்டுங்கள்.

தலை ஆ; இதோ பாருங்கள். இவை இவர் திருத்திய கட்டுரை ஏடுகள்--தேர்வுத்தாள்கள். இதிலேயெல்லாம் பிள்ளையார் சுழியையும், கடவுள் துணை என்று எழுதியிருப்பதையும் அடித்திருக்கிறார் பாருங்கள். இது போதாதா வகுப்பிலே இந்தப் பிரச்சாரம் தான் செய்கிறார் என்று சொல்லுவதற்கு?

க அ; போதுமா-இல்லையா என்பதை நான் சொல்லுகின்றேன்-அதற்குத்தான் வந்திருக்கிறேன். (தமிழாசிரியரைப்பார்த்து) நீங்கள் என்ன சொல்லுகின்றீர்கள்? இவையெல்லாம் நீங்கள் திருத்தியவைதாமே?

தமி ஆ; ஆம்! மறுத்துப் பேசுகின்றேனே என்று எண்ண வேண்டாம். அந்தத் தாள்களையும் ஏடுகளையும் இன்னொரு முறை பாருங்கள். கட்டுரை ஏடுகளில் பயிற்சி எண். எழுதிய நாள் இந்த விவரங்கள் இரா. தேர்வுத்தாள்களில் வினா எண்களோ தங்கள் எண்

களோ இரா. இவை தேவையான சடங்குகள். இவை இருப்பதில்லை. ஆனால் தேவையற்ற பிள்ளையார் சுழி முதலியன இருக்கின்றன. எனவேதான் அவற்றை அடித்து விடுகிறேன்.

க அ; அவை இருந்தால் இருந்துவிட்டுப்போகட்டுமே. உமக்கு ஏதாவது தடையுண்டோ?

தலை ஆ; அதைக் கேளுங்கள்!

தமி ஆ; சொல்லுகிறேன். எனக்குத் தடையொன்றும் இல்லை, ஆனால் ஏடுகளிலும் தாள்களிலும் அவை தேவையில்லை என்பதை உணர்த்துகின்றேன்.

க அ; ஆண்டவனிடம் தனக்குள்ள ஈடுபாட்டை அவன் காட்டுகின்றான். அவ்வளவு தானே?

தமி ஆ; அதற்கு நான் தடையாக இருக்கவில்லை. ஆனால் அந்தத் தாள்கள் தமிழ்ப்பாடத்தில் அந்த மாணவனுக்கு இருக்க வேண்டிய ஈடுபாட்டைக் காட்ட வேண்டுமே ஒழிய வேறு செய்திகளைச் சொல்லுதல் வேண்டாம். எடுத்துக் காட்டாக ஒன்று சொல்வேன். என் மனைவிமக்கள்மீது எனக்கு மாறாக்காதல் இருக்கிறது என்பதினால் வகுப்புத் தொடங்கும்போதெல்லாம் அக்காதலைப்பற்றி ஒரு ஐந்து நிமிடம் புகழ்ந்துவிட்டுப் பிறகு பாடம் தொடங்குவதில்லை. காதலை வீட்டிலும், கவிதையை வகுப்பிலும்வைத்திருக்கிறேன்-வைத்திருக்க வேண்டும். அதே போல் மாணவர்கள் கடவுளை உள்ளத்திலும், பாடத்தைத் தாளிலும் காட்டினால், கண்டால் போதும். அதுவே முறை என்று காட்டுகின்றேன். இது பிழை என்று நான் எண்ணவில்லை.

த ஆ; மூன்றாவதைப் படியுங்கள்.

க அ; ஏன் அவசரம்-என் வேலையை நான்...

தமி ஆ; அதையும் படித்து விடுங்கள்.

க அ; இதோ வகுப்பில் அடிக்கடி 'வடக்கு, வடக்கு' என்று ஏதேதோ சொல்லுகிறீர்களாம்...

தமி ஆ! இதுவும் ஒரு குற்றமா?

தலை ஆ; பார்த்தீர்களா? இவர் கேட்டதை!

க அ; கேட்கிறேன், சொல்வதை!

தமி ஆ; அது என் குற்றம் இல்லை.

க அ; எது உங்கள் குற்றம் இல்லை?

தமி ஆ; வடக்கு என்று பேசுவது.

தலை ஆ; பொய்... அடிக்கடி பேசியிருக்கிறார்.

தமி ஆ; ஆமாம். இனியும் சொல்வேன். ஆனால் அது என் குற்றம் அல்ல.

தலை ஆ; பார்த்தீர்களா, முழுப் பூசணிக்காயைக் கிண்ணச் சோற்றில் மறைக்கிறார்...

தமி ஆ; நான் சோற்றையும் பிசையவில்லை, பூசணியையும் மறைக்கவில்லை. உண்மையைத்தான் சொல்லுகின்றேன்.

தலை ஆ; என்ன ஐயா 'மகா' உண்மை?

க அ; நான் ஒருவன் இருக்கிறேன், இங்கே-(புலவரிடம்) இதற்கு என்ன சொல்லுகின்றீர்கள்?

தமி ஆ; முகமன் கூறுவதாக எண்ண வேண்டாம். தாங்கள் தமிழ்மொழி கற்றவர் எனக் கேட்டிருக்கிறேன். எனவே தங்களுக்குத் தெரியும்.

க அ; சொல்லுங்கள்.

தமி ஆ; வடசொல், வடமொழி என்று தொல்காப்பியர் காலம் முதல் தமிழில் சொல்லுகின்றோம்-வடக்கே உள்ள எத்தனையோ மொழிகளை அது குறிக்காமல், சமஸ்கிருதம் ஒன்றையே குறித்து வருகிறது. வடநாடுஎன்பதும் அப்படியே. தென்னாடு என்பது தமிழகத்தை ஒட்டிய பகுதியைக் குறிக்கும் சொல்லாக இலக்கியத்தில் வருகிறது. 'தென்னவன்' என்று பாண்டிய மன்னனை இளங்கோவடிகள் பாடுகின்றார். 'தென்னாடுடைய சிவனே' என்று சிவனையே குறிக்கின்றனர் சைவர்கள். கொள்கைகளில், தமிழர் கொள்கை வேறு; வடவர் கொள்கை வேறு---என்பதனைத் தமிழ் இலக்கியம் ஆங்காங்கே எடுத்துக் காட்டுகின்றது. திருக்குறளின் உரையில் பரிமேலழகியார் பல இடங்களில் 'வடநூலார்' என்றெல்லாம் குறிக்கின்றார். சிலப்பதிகாரம் 'வடவாரியர்' என்கிறது. சுவைகளை வகுத்த முறையில் தமி



மூர் எட்டு என்று அவற்றை வகைப்படுத்தியுள்ளனர். தொல்காப்பியத்தில் எட்டுச் சுவைகள் தாம் பேசப்படுகின்றன. பின்னால் வந்த தண்டியலங்காரமோ 'சுவை ஒன்பது' என்கிறது. ஏன் இந்தக் குழப்பம்? தண்டி வடநூல் என்று சொல்ல எங்கள் தொழில் எங்களைப் பணிக்கிறது. இப்படி எத்தனையோ இடங்களில், இலக்கிய வகுப்பில் இலக்கணப் பாடத்தில், மரபு முறைகூறும் போது, தமிழர் வடவர் என்று பிரித்துக் கூற வேண்டிய இன்றியமையாமை வருகின்றது. நான் இவற்றையெல்லாம் சொல்லுதல் தவறு என்றால் அந்தத் தவறு என்னோடு மட்டும் நிற்பது அன்று. எல்லாத்தமிழ்ப் புலவர்களும் தமிழ் நூல்களும், இன்று மட்டும் அல்ல, தொல்காப்பியர் காலம்முதல் இந்தத் தவறு செய்தவர்களாக எண்ணப்பட வேண்டும். ஆகையால் அது என் தனி ஒருவனுடைய குற்றம் அல்ல...

க அ; இவ்வளவே போதும்.

## காட்சி—3.

இடம்: அதே இடம்.

காலம்: சில நாட்கள் கழிந்த பிறகு.

மாந்தர்: முதல் காட்சியில் வந்த மாணவர்.

அன்பன்; பார்த்தாயா என்ன ஆயிற்று?

அருகன்; நான்தான் சொன்னேனே, விசாரணைக்கு வந்த அதிகாரி நல்லவர் என்று! எனக்கு அப்போதே தெரியும்.

அழகன்; அதிகாரி நல்லவரோ, கெட்டவரோ--நியாயம் அவர் பக்கம் இருந்தது. தப்பித்தார்.

அன்; அவர் தப்பித்தார் என்று மட்டும் சொல்லாதே'டா. நாம் அவரிடம் படிக்கும் வாய்ப்பை இழக்கவில்லை என்று சொல்

இருவரும்; ஆமாம். அதுதான் உண்மை! ஃ

[75-ம் பக்கத் தொடர்ச்சி]

கேதார் சர்மா செத்துச் சாம்பலாகி 12 நாட்களுக்குப் பிறகு—பினு வீட்டுக்குத் திரும்பி வந்தாள்! கூட பசந்த் குமாரும் வந்தான்!

பார்த்தவர்கள் வாயடைத்துப் போயினர். நடந்து முடிந்த சம்பவங்களின் பயங்கரம் அவர்களைத் திணற அடித்தது. உயிரோடு இருக்கும் ஒருத்தியைக் கொலை செய்ததாக, நிரபராதி தூக்கிலிடப்பட்டான் என்பதையறிய அதிகாரிகள் பெரும் அதிர்ச்சிக்குள்ளாயினர்!

பினுவை விசாரித்தபோது உண்மை வெளியாயிற்று.

முதலில் அவள் விருப்பப்படிதான், அவளைத் திருமணம் செய்து கொள்ள வந்தவர்களை ஒதுக்கித் தள்ளினார் கேதார் சர்மா. பிறகு அவள் பசந்த் குமாரை சந்தித்தாள். காதல் பிறந்தது. ஆனால் என்ன காரணத்தாலோ அவர்கள் காதலை அங்கீகரிக்க மறுத்தார் கேதார் சர்மா. அவள் எவ்வளவோ கெஞ்சியும் வாதாடியும் பயனில்லை. கடைசியில் இருவரும் ஓடிப்போவது என்ற முடிவுக்கு வந்தனர். அதன்படி ஒருநாள் சாப்பாட்டுக்குப் பிறகு,சிறிது தூரம் உலாவி வரலாம் என்றுகூறி கேதார் சர்மாவை அழைத்துக் கொண்டு காட்டுக்குள் சென்றாள் பினு. அப்போது மீண்டும் திருமணப் பேச்சு எழுந்தது. கேதார் சர்மா தன் பிடிவாதத்தைத் தளர்த்திக் கொள்ளத் தயாராக இல்லை. பினு பொறுமை இழந்தாள்—

'நான் அவரைத்தான் மணம் செய்து கொள்ளப்போகிறேன். இல்லையெனில் சாவது தவிர வேறு வழியில்லை. ஏன் என்னைக் கொல்கிறீர்கள்?... என்னைக் கொல்லாதீர்கள்''

பினு இதைச் சொன்ன உடனே, அருகே எங்கிருந்தோ துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்டது. பினு பயத்தால் அலறினாள். சிறிது நேரத்திற்கெல்லாம் மரங்களுக்குப் பின்னாலிருந்து சுடப்பட்ட பறவையோடு ஒருவன் வந்தான்.

பிறகு வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது திட்டமிட்டப்படி பினு, கேதார் சர்மாவை விட்டுப் பிரிந்து விட்டாள். ஏற்பாட்டின்படி ஒரு இடிந்த கட்டிடத்தில் மறைந்திருந்த பசந்த்குமாரை சந்தித்தாள். உடனே இருவரும் ஊரை விட்டுப் பயணமாயினர். வேறு ஒரு நகரத்தில் திருமணம் செய்து கொண்டனர். ஒரு வாரத்திற்கெல்லாம், தேன் நிலவு கொண்டாட முக்கிய நகரங்களுக்கெல்லாம் சென்றனர்.

திரும்பி வந்தபோது, நீதி தடம் புரண்ட சோகச்செய்தி அவர்களை வரவேற்றது.

பினுவின் கண்களில் அருவி புரண்டது. அடக்க முடியாமல் விம்மி விம்மி அழுதாள்.

"அவரா என்னைக் கொன்று விட்டார்?... இல்லை... இதுவரை என்னை மெய்தொட்டுக் கண்டித்தவரல்லவே! தன் சொந்த மகளைப் போல நேசித்தாரே! அவருக்கா இந்தக் கொடுமை நிகழ வேண்டும்...?"

எல்லாமே ஏதோ நாடகக் காட்சிகளைப் போல நடந்து முடிந்துவிட்டன.

நீதியை நிலைநாட்டுவதென்பது அத்தனை சுலபமான காரியமல்லதான்! எங்கோ ஒரு தப்பு நிகழ வேண்டியதுதான் — அது எங்கோ கொண்டு போய் விட்டு விடுகிறது... பரமபத விளையாட்டில் பாம்பின் வாயில் சிக்கிக் கொண்ட கதையாகிவிடுகிறது!

சூழ்நிலையும் சாட்சிகளும் வசமாகச் சூழ்ந்து கொள்ளுகிறபோது. சட்டத்தின் கை குற்றம் சாட்டப்பட்டவர் யாராகயிருந்தாலும் தண்டிக்காமல் இருப்பதில்லை! ஃ

**மறவன்!**

●

“வேங்கைதனை வீழ்த்துகின்ற
வேங்கை வாழ்ந்த நாடன்றோ—நம்நாடு!”

●

ஓவியம்: லிங்கேசன்

●

முரசொலி

பொங்கல் மலர்-1960





# கவர்னர்களும் நமது நிதி அமைச்சரும்

எஸ். வி. லிங்கம்



சென்ற சில வாரங்களாக கவர்னர் பற்றிய உரிமைப் பிரச்சினையில் நமது நிதி அமைச்சர் சுப்பிரமணியம் சிக்கித் தவிக்கிருர். எதிர் காலத்தில் தான் ஒரு கவர்னராக வரக்கூடும் என்ற ஆவலில் எதை எதையோ செய்கிருர், செப்புகிருர், சிந்திக்கிருர். அவர் கவர்னராக வரத் தகுதி படைத்தவர் என்பதிலோ, அவர் அந்த பதவிக்கு வர வாய்ப்பும் இருக்கிறது என்பதிலோ நமக்கு ஐயமில்லை. அதற்காகப் பாதுகாப்பதாக எண்ணிச் செய்யும் செயலில், அவரது அமைச்சர் குழுவிற்குக் கெட்ட பெயர் உண்டாகிறது என்பதை மறந்து விடுகிருர்.

டெல்லியில் யாரோ ஒரு கனவானிடம், வட நாடு, தென்னுடு எனப் பேசுவது ஓர் சின்னக் கூட்டம்; அவர்களை எப்படியும் இந்தக் கவர்னர் உரிமைப் பிரச்சினையில் மட்டம் தட்டிவிடுகிறேன் பாருங்கள் -- என்று வீண் வீரூப்பு பேசியதற்காக இப்படிப் பைத்தியக்கார செயல்களைச் செய்யவோ, பேசவோ வேண்டியதில்லை.

தற்போதைய சட்டப்படி இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள மாநிலங்களில், கவர்னர்களாக இருப்பவர்கள், அந்தந்த மாநிலத்தைச் சார்ந்தவராக இருக்கக் கூடாது என்று இருப்பதாகச் சொல்கிருர். அதனால் தான் நமது மாநிலத்திற்கு வட நாட்டைச் சேர்ந்தவர் கவர்னராக நியமிக்கப்பட்டு இருக்கிருர் என்பதாகவும் கூறுகிருர். இதில் உண்மை சிறிதாவது இருக்கிறதா? எதிலென்ருல், இவர்கள் சட்டப்படி, இதுவரை எதிலாவது நடந்து இருக்கிருர்களா என்பதிலும், இவர் நம்மைப் பற்றிச் சொல்லும் குற்றச்சாட்டை, நாம் எப்போதேனும் சொல்லி இருக்கிருேமா என்பதிலும்தான். முதலில் அந்தந்த மாநிலத்தார் அந்தந்த மாநில கவர்னராக வரவேண்டுமென்பது எப்படி?

ஜனநாயக முறைப்படி தேர்தல் நடத்தி' அந்தந்த மாநிலத்தவரில் ஒருவர் கவர்னராக வரட்டும் என்று சொல்கிருேமாம்! நாம் சொல்லாத ஒன்றை சொன்னதாக மந்திரியார் சொல்வது போலவே, அவர்கள் செய்து வரும் ஒன்றை, அவர்கள் செய்யாததைப் போலப் பேசுகிருர்.

இந்தியத் துணைக் கண்டத்தை இன்று நேரு சர்க்கார் மூன்று விதமாகப் பிரித்து, 9--7--10 ஆக 26 ஸ்டேட்டுகளாக வைத்திருக்கிறார்கள். இதில் பம்பாய், அசாம், பீகார், சென்னை, ஒரிசா, பஞ்சாப், உத்தரப் பிரதேசம், வங்காளம், மத்தியப் பிரதேசம் --- இவை முதல் பிரிவு. இவைகளில் வங்காளத்தில் கனம் டாக்டர் எச். ஜி. முகர்ஜி முதல் கவர்னராக இருந்தார். இன்றைய கவர்னராக கனம் பத்மஜா நாயுடு இருந்து வருகிறார். இவர்களின் பெயர் வங்காளத்தின் வாக்காளர் பட்டியலில் இல்லை என்று நமது நிதி அமைச்சர் நம்புகிறாரா?

பஞ்சாப் கவர்னராக கனம் சி. பி. என். சிங் இருக்கிறார். அவர் பஞ்சாபி அல்ல என்பது இவர் எண்ணமா?

பீகார் மாநிலத்தின் கவர்னர் கனம் ஜனுப் கசிகர் உசேன் பீகாரி அல்லவா?

ஒரு மாநில கவர்னராக வேற்று மாநிலத்தவர்தான் நியமிக்கப்படுவார் என்பது இங்கே பொய்யாகிறதே!

இவைகளில்லாமல் மைசூர்' ஹைதராபாத், மத்திய பிரதேஷ், ஜம்மு, பஞ்சாப்--இம் மாநிலங்களில் முதன் முறையாக ''ராஜ் பிரமுக்'' என்ற பெயரில் வந்த கவர்னர்களைப் பற்றி நமது நிதி அமைச்சர் கருத்தென்ன? இவையெல்லாம் போகட்டும்; இத்தனையும் அவருக்கு நன்கு தெரியும். தனது தீர்ப்புக்குச் சாட்சிகளைத் தயார் செய்து கொள்ளுகின்ற நீதிபதி நிலைமையில் நிதி அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் பேசி இருந்தாலும், நாளை பிரியப் போகும் பம்பாய், குஜராத் மாநிலங்களுக்கு கவர்னர்களாக வரப் போகிறவர்கள் அந்த மாநிலத்தவரே! இதைப்பற்றி நமது மந்திரியாரின் மேலான கருத்து என்ன?



...உண்மையை மறைப்பது சுலபமல்லவே...

சுதந்திரம் வந்து 12 வருட காலத்தில் மற்ற எல்லா மாநிலங்களிலும் இவர்கள் கட்சிக்காரர்களாக உள்ள எம். எல். ஏ.க்களும், சில இடங்களில் மந்திரிகளும் அந்தந்த மாநில கவர்னர்களிடம் நடந்துகொண்ட மிகப் பெருந்தன்மை(?)யான நிகழ்ச்சிகளை ஞாபகப்படுத்திப் பார்ப்பாரானால் நன்றாக இருக்கும்.

காலம்சென்ற ஆந்திரகேசரி சென்னை கவர்னரிடம் காட்டிய செயலை விடவா?

இங்கு 15 பேர்கள் நடந்து கொண்டார்கள்; போகட்டும்! நான் டெல்லியில் கேள்விப் பட்டதைச் சென்னை சட்டசபையில், நண்பர் ஒருவர் மூலமாக இம்மாநில மந்திரிகள் செய்கிறார்கள் என்பதைக் கண்டபோது--இதற்காக என்னைப் பொறுத்தவரையில் மகிழ்ச்சி கொண்டேன். கேரளத்தில் வந்த சட்ட நிபுணர் இங்கும் வரவேண்டும்; அதன் பயனாய் அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் செயல் வெற்றியடைய வேண்டும்; அதனால் மகிழ்ச்சியூட்டும் பொன்னான விளைவு நமக்கு வரவேண்டும் என்றும் ஆசைப்படுகிறேன்.

நமது நிதி அமைச்சர் அவர்களுக்குப் பல செய்திகள் தெரியாது. இவர் பள்ளிக்கூடம் செலலும் பருவம்கூடப் பெறாத நாளில் இம்மாநிலத்தில் முதன் மந்திரியாக ஒரு திராவிடர் இருந்தார். அன்று அவர் மனதுக்குப் பிடிக்காத ஒருவர், டெல்லி வைசிராய் கவுன்சிலில் நியமிக்கப்பட இருந்தார். அவரை நியமிக்க இந்த மாநில கவர்னராக இருந்தவர் (வெள்ளையர்) சிபார்சும் செய்திருந்தார். அந்த வெள்ளை கவர்னர் செய்தது தவறு என்றும், அதன்படி அம்மனிதருக்கு டெல்லி வைசிராய் கவுன்சிலில் இடம் கொடுத்தால், இம்மாநில முதல் மந்திரி பதவியிலிருந்து தாம் விலக நேரிடும் என்றும், அக்காலத்திய திராவிட முதல் மந்திரி தந்தி மூலம் தெரிவித்தார். இந்த கவர்னர் போராட்டத்தில் முதன் மந்திரி வெற்றிபெற்றார்.

பின்பு, நிதி அமைச்சர் பள்ளி மாணவராக இருந்தபோது இம் மாநில சட்டசபைத் தேர்தலில் ஜெயித்த ''சுயராஜ்யா'' கட்சி அதிகாரம் வகித்தது. தேர்தலில் தோற்ற இந்நாட்டு ''திராவிடர்'' கட்சி அக்கால வெள்ளைக்கார கவர்னருடன் போர் தொடுத்தது. விளைவு என்ன? கோவையிலிருந்து கிளம்பிய அப்போர் என்ன ஆயிற்று?

இன்றைய ஆசிய ஜோதியான கனம் நேரு பிரானின் தகப்பனார்-பெரிய நேரு--மோதிலால் நேரு--சுய ராஜ்யா கட்சித் தலைவர்! இம்மாநிலத் தலைவர் திரு. எஸ். சத்யமூர்த்தி! இவர்கள் ராஜதந்திரத்திற்கும் இம் மாநில திராவிடர் கட்சித் தலைவரின் ராஜதந்திரத்திற்கும் நடந்த போட்டியில் திராவிடத் தலைவரே வெற்றிபெற்றார்.

இதை எல்லாம் நமது நிதி அமைச்சருக்கு எடுத்துச் சொல்ல எண்ணியதற்குக் காரணம் என்ன என்பதை அவரே சிந்தித்துப் பார்க்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன். ஃ



# இந்திய அரசியலாரின் அயல் நாட்டுக் கொள்கை

க. அறிவழகன். எம்.ஏ.,

இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை நீதியின் பக்கமே நிற்கும் சக்தி வாய்ந்த நடுநிலை கோட்பாடாகும்; ஒன்றை ஒன்று பகைக்கும் இருபெரும் எதிர்ச் சக்திகளுடனும் சாராமல் தனித்தன்மை பெற்ற இக் கொள்கைக்குப் பஞ்சசிலத் திட்டம்" வழி காட்டும் ஒளிவிளக்காகும்; இதனை வடித்தெடுத்து ஒளியூட்டியபெருமை நேருபெருமானைச் சாரும்--என்றெல்லாம் இன்று இந்திய அரசியலாரின் அயல்நாட்டுக் கொள்கைபற்றிப் பேசப்படுகிறது.

"கேட்பதற்குக் கவர்ச்சியாகவும் எழுதுவதற்கு சுவையாகவும்" இருக்கும் இந்தக்கொள்கை உருவான விதமென்ன? நீதியும் நேர்மையும் நிலைக்களனாய் உள்ள இந்திய அரசியல் தலைவர்கள் உலக அமைதியின் பால் அக்கரை கொண்டதனால்தான் இக்கோட்பாடு உருவாயிற்று?

இந்தக் கேள்விகட்கு எவர் எந்தப் பதிலைக் கூறினாலும், இந்தக் கொள்கைகள் உருவாவதற்கான அடிப்படைக் காரணம், இந்திய உபகண்டத்தில் சாகாவரம் பெற்ற 'வறுமை' நிலைமையாகும். அடுத்த காரணம், சுதந்தரப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறைச்சாலைக்கே போய்ப் பழக்கப்பட்டவர்கள், அவசர நிலையில் கிடைத்த அதிகார நாற்காலியில் அமர்ந்து, அனுபவமற்ற அகில உலக அரசியலில் பொருளற்றுத் தலையிட்ட காரணத்தால் இந்தக் கொள்கைகளை உருவாக்கிக் கொள்ள வேண்டிய கட்டாய நிலைக்கு ஆளானார்கள்.

ஐரோப்பிய வெள்ளை ஆதிபத்தியக்காரர்களின் அடிமைக் கோட்டமாக ஆசியாக் கண்டம் இருநூறு ஆண்டுகட்கு மேலாகவே அவதிப்பட்ட காரணத்தாலும் சமுதாயப் பொருளாதார நிலைமைகளில் படுகுழியில் வீழ்ந்து கிடந்து பின்னர் எழுந்த இழிநிலையும் துன்பங்களுமே இந்திய அரசியலாரை இந்தக் கொள்கைகளை உருவாக்கச் செய்த மூன்றாவது காரணமாகும்.

இலாப நட்டக் கணக்குப் பார்த்து பயனைக் கருதி வளைந்து நெளிந்து கொடுத்த திட்டமே வெளி நாட்டுக் கொள்கையாயிற்றே தவிர, மத்திய அரசாங்கத்தில் மமதையோடு வீற்றிருக்கிற இந்திய அரசியல் விற்பன்னர்களின் விவேகத்தினால் உருவாகியதல்ல.

பொலிவும் வலிவுமற்றப் பாதுகாப்புப் படையும், உறுதியும் நிலையுமற்ற பொருளாதாரப் போக்கும், இந்திய அரசியலாரை இருபக்கமும் சேர விடாமல் ஈட்டிபோல் தாக்கின.

கருத்துக்கு ஒவ்வாத கட்டுக் கதைகளையும், தத்துவத்திற்கு ஒத்துவராத தெளிவற்ற திட்டங்களையும், நடைமுறைக்கு சாத்தியமாகாத கூறுகளையும் கொண்டு உலக சமாதானம் பேசிய காரணத்தால், நட்பும் உரிமையும் பெறுவதற்குப் பதிலாக, இருவேறு கூடாரங்களிடமும் எரிச்சலையும் ஏமாற்றத்தையுமே பரிசாகப் பெற்றனர்.

உலக அரங்கிற்கு உபதேசம் செய்தவர்களின் உள் நாட்டில், கள்ளக் கடத்தல்காரர்களின் தங்குமிடங்களும், குடித்துக் கூத்தடிக்கும் கோமான்களின் கூடாரங்களும், வெளி நாட்டுக்காரர்களின் ஆதிக்கப் பீடங்களாக, கோவா, டையூ, டாமன் பிரதேசங்களும் உரிமையுடைய எல்லைக் கோடுகளுக்குள்ளே இருக்கக் கண்டோம். போர்ச்சுக்கீசியர் ஆதிக்கத்தில் 1510ல் சிக்கிய பகுதிகளை இன்றளவும் மீட்க முடியாதவர்கள் கிடைத்த பகுதிகளையும்இழந்தனர். 47-ல், 48,000 சதுர மைல் பிரதேசத்தை பாகிஸ்தானத்தின் ஆக்கிரமிப்பிற்கு அஞ்சி விட்டுக் கொடுக்கலாயினர். ஆசாத் காஷ்மீர் என பாகிஸ்தானியர் அதற்குப் பெயர் இட்டனர். இன்றைய தினம், 1959-ல், 2000 சதுர மைல் பிரதேசத்தை (லான்ஜா--லடக்)



பண்டிதரின் 'பஞ்சசீலம்'
பெற்ற பரிசு இது...!



வெளிநாட்டுக்குத் திருவோடு ஏந்திச் செல்வது ஒரு பெருமையா ...?

பஞ்சசீலப் பரிசாக சீனக்காரனுக்குப் பறிகொடுத்துவிட்டுப் பதறுகின்றனர்!

தென்னாப்பிரிக்க நாட்டிலே வாழும் தென்னாட்டான் மனித உரிமைகளைக் கூடப் பெற முடியாமல் துரத்தப்படுகிறான். சிங்கப்பூர், இலங்கைத் தீவுகளில் குடியுரிமையும், வாக்குரிமையும் பெற முடியாமல் சொல்லொணாத் துன்பங்கட்கும் தொல்லைகட்கும் ஆளாகிப் பரிதவிக்கிறான். 1957 நேரு-பண்டா ஒப்பந்தம் இலங்கை அரசினரால் மதிக்கப்படாமல், இந்திய அரசியலாராலும் வற்புறுத்தப்படாமல், இருபது இலட்சம் இந்தியர்கள் சட்டப் பூர்வமான உரிமைகளைப் பெற முடியாத அகில உலக அனாதைகளாக ஆக்கியிருப்பது ஒன்றே வெளிநாட்டுக் கொள்கையின் இலட்சணத்தை விளக்கத்தக்க சான்றாகும்.

பத்தாண்டுகளுக்கு முன்னால் தான் பிரிந்த பாகிஸ்தானத்தோடு நல்லுறவை நிலை நிறுத்தவும் உறுதிப்படுத்தவும் முடியாத காரணத்தால் இலட்சக்கணக்கான அகதிகளை ஆண்டுதோறும் வரவேற்கவும், அவர்கட்காக கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவழிக்கவும் வேண்டிய கட்டாய நிலைமைக்கு ஆளாகியுள்ளோம்.

வலிவற்ற பொருளாதார வழிவகைகளை நம்பி, ஐந்தாண்டுத் திட்டங்களிலே இறங்கியிருக்கிற இந்த அரசியலார் வட எல்லைப் பாதுகாப்புத் திட்டம் என்ற பெயரால், நேபாளத்திற்கும் பூட்டானுக்கும் பல இலட்சக் கணக்கான ரூபாய்களைச் செலவழிக்கின்றனர். இதைத் தவிர நல்லெண்ண தூதுகோஷ்டிகள், சமாதான தூதுக் குழுக்கள் என்ற பெயரில் ஆட்சி பீடத்தில் அமர்ந்திருப்போர் உலகம் சுற்றுகிற காரணத்தால், மிகப் பெருந்தொகை விழலுக்கு இறைத்த நீராகிறது. இந்நிலையில் இந்நாட்டின் நிதியமைச்சர்கள் ஒருவர் பின் ஒருவராய், பிட்சா பாத்திரம் தாங்கி ஊர் ஊராய், நாடு நாடாய் அலைவதைக் கண்டு வெட்கப்படுபடுவோர் யாருங் காணோம்!

திபேத்து நாட்டு மதத் தலைவன் தலைலாமாவை என்று இந்திய அரசாங்கம் வரவேற்றதோ, அன்றிலிருந்து இந்தியா சீன நட்புறவு முறிய ஆரம்பித்தது. இந்தியாவின் வட எல்லை 'மக்மோகன் கோடு' மதிக்கப்படவில்லை; மறுக்கப் பட்டது. இதைப் பற்றிய பேச்சு வார்த்தைகள் தொடங்கு முன்னே எல்லை மீறப்பட்டது. இச்செய்தியைப் படித்து முடிக்கு முன்பே, இரண்டாயிரம் சதுர மைல் பிரதேசத்தை சீனா ஆக்ரமித்துக்கொண்டது. ஆபத்திலிருந்து விடுபட்ட தலைலாமாவால் இந்தியாவின் தலைக்கே ஆபத்து ஏற்பட்டது. வழுக்கையான தலையையுடைய தலைலாமாவை நம்பி வந்த பதிமூவாயிரம் திபேத்தியர்களுக்காக இந்திய அரசாங்கம் செலவு செய்த ரூபாய் 22 லட்சம். தலைலாமாவின் தலைக்கு மாத்திரம் 2 லட்சம். பணம் பாழாகும் படலத்தைக் கண்டும் காணாமல் நேரு காலம் கடத்துகிறார்.

இந் நிலையில் அமெரிக்க நாட்டின் ஜனாதிபதி ஐசனோவரின் இந்திய வருகை நம் இதயத்திற்கு இன்ப மூட்டுவதாக இல்லை. ஐக்கின் இளமைப் பருவத்து ஆசையை---தாஜ்மகால் பார்க்க வேண்டும் என்ற விழைவைப் பூர்த்தி செய்வதாக மட்டுமே அமைந்திருந்தது. நெருக்கடி மிகுந்த இந்த நேரத்தில் சீனாவிடம் தகராறு வளரும் கட்டத்தில் சீனாவின் முதல் எதிரியை சந்திக்க நேர்ந்தது. சாந்தி, சமாதானத்தை நிலைநாட்டும் வெளிநாட்டுக் கொள்கைக்கு இது பேரிடி.

இந்தோ சீனாவில் ஏற்பட்ட உள்நாட்டுக் கலவரம், கொரியாவிலே ஏற்பட்ட போர், சூயஸ் பகுதிகளிலே ஏற்பட்ட குமுறல் இவைகளுக்கெல்லாம் சாந்தி தேடிய பெருமை இந்தியாவைச் சாரும் என்று பேசப்படுகின்றது.

அணுசக்தி போர்தான் மூன்றாவது உலகப் போராக இருக்க முடியும் என்று பேசப்படுகிற இந்தக் காலத்தில் உலகப் பிரச்சினைகளிலிருந்து எந்த நாடும் தன்னை விடுவித்துக் கொள்ள முடியாது. அந்த நிலைமையில் இந்தியா வேறு நாடுகளின் பிரச்சினைகளிலே நல்ல முடிவு காணுவதற்கு முயன்றது இந்திய அரசியலாரின் வீரத்தைக் காட்டுவதைவிட, விவேகத்தைக் குறிப்பதை விட, நிலைமையைக் காட்டுவதாகத்தான் கொள்ள முடியும். இந்திய உள் நாட்டிலே பெரும் பூசல்களை யெல்லாம் துடைக்க முடியாத துன்பங்களாய், கழுவிட முடியாத பேரிழிவுகளாய் வைத்துக் கொண்டு வேறு எத்தனை நாடுகளின் உள்நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தாலும் நேருவுக்கும் இந்தியாவுக்கும் பெருமை கிடைக்கப் போவதில்லை.

இன்றைய தினம் வரையிலே காஷ்மீர் பிரச்சினை தீரவில்லை. ஐ. நா. வின் தூதுவர் கிரகாம் அடிக்கடி வந்து போகிறார். அவர் சொல்லும் தீர்ப்பு இந்தியாவிற்கு ஒத்து வருவது இல்லை. நாள் ஒன்றுக்கு ஒரு இலட்ச ரூபாய் என்ற அளவில் இந்தியாவின் நிதி காஷ்மீரில் கொட்டப்படுகிறது. உலகத்திற்கு உபதேசிக்கும் நேருவின் மேதாவிலாசம் காஷ்மீர் பிரச்சினைக்குப் பயன்படக் காணோம். காஷ்மீர் பிரச்சினை இனியும் தீர்க்கப்படாவிட்டால் இந்தியாவும் பாகிஸ்தானும் அழிய வேண்டி நேரும் என சமீபத்தில் அயூப்கான் அச்சுறுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

## யாருக்கும் புரியாத காதல் இரகசியம் !

புகைப்படம்: ஜெயபாலன்



இந்தியாவின் அயல் நாட்டுக் கொள்கைகளிலே குழப்பம் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. இரண்டாவது உலகப் போரின் முடிவில் பிரிட்டன் பற்பல நாடுகளைக் கைகழுவி விட்டது. ஆட்சிச் சேணத்தில் அமர்வதற்கு தங்கள் கச்சையை வரிந்து கட்டிக்கொண்டிந்த வடவர்களின் கையில் இந்திய உபகண்டத்தின் ஆட்சிப்பிடி தரப்பட்டது. பெற்றவர்கள் அடித்துப் பறித்தோம் என எண்ணிப் பூரித்தார்கள். கொடுத்தவர்கள், விட்டுக் கொடுத்து, வேண்டியதைப் பெறுவோம் என்று நினைத்தார்கள். இந்தப் பேரப் பேச்சில் உதயமாகிய உத்தம புத்திரன்தான் இந்திய அரசியலாரின் இந்த அயல்நாட்டுக் கொள்கை. சுதந்தர தேவியின் சுகத்தைக் கோரி நின்றவர்கள் கதையின் ஆரம்பக் கட்டத்திலேயே 'கழுத்தில் விழுந்த மாலையைக் கழற்ற முடியவில்லையே' என்று கவர்னர் ஜெனரல் மவுண்ட் பேட்டனோடு கை கோர்த்து ஆறும் ஜார்ஜ்மீது ஆணையிட்டு சிம்மாசனத்தில் அமர்ந்தனர்.

நாடு சுற்றும் பண்டித நேரு காமன் பண்டிகை கொண்டாடும் பாமரர்போல்காமன்வெல்த் உறுப்பினராய் அமர்ந்து உலகுக்கு உபதேசம் செய்யத் தொடங்கினார். ஆனால் காமன்வெல்த் நாடுகளோ இந்தியாவை மதிக்கவில்லை. நேருவின் உபதேசம் நேட்டாலில் ஏற்கப்படவில்லை. இந்திய எல்லைக் கோட்டில் வெடிகுண்டுகளைப் பறிமாறிற்று பாகிஸ்தான். நிலமும் நீரும் பரந்திருந்தாலும் தன் நாட்டில் பாரத புத்திரர் யாரும் குடியேறக்கூடாது என ஆணையிட்டது ஆஸ்திரேலியா. குடியேறிய இந்தியனுக்கும் குடியேற்ற உரிமையில்லை என உறுமிற்று இலங்கை. தென்னாட்டான் பயனடைவதை இனியும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது என மருட்டியது சிங்கப்பூர். இந்தியர்கள் இங்கு வந்து சுகமாய் வாழ்ந்த காலம் இனி மலையேறிற்று என்றது மலேயா. கொடுத்ததைக் கேட்போம், கேட்டதைத் தரமாட்டோம் என்றது கனடா. இந்த நாடுகளை உறுப்பினராய்க் கொண்ட காமன்வெல்த் மாநாட்டில் கலந்து கொள்ள, இங்கிலாந்து அரசியின் அன்பிற்கு பாத்திரமாக நேரு ஆண்டுதோறும் சென்று வருகிறார். பலன் ஏதும் கொணர்ந்தாரில்லை.

'காமன்வெல்த்' என்பதே ஒரு விசித்திர அமைப்பாகும்.

புண்பட்டு சாகக் கிடக்கும் கிழடு தட்டிய பிரிட்டிஷ் சிங்கம் ஏகாதிபத்தியவெறிகொண்டு காலனி ஆதிக்கத்தை நிலைநாட்ட உருவாக்கிய பழைய, பயன்படா, காலத்திற்கும் பொருந்தாத மூளியான பாத்திரம்தான் காமன்வெல்த். இந்தியா இந்த காமன்வெல்த் மூலம் சாதித்ததென்ன?

இந்தியா பாகிஸ்தான் கால்வாய் நீர் தகராறு தீர்ந்ததா? பிரிட்டனோ இந்தியாவிற்குத் தரவேண்டிய ஸ்டர்லிங் கடனைத்தான் திருப்பி தரவில்லையென்றால் இந்தியாவிற்கே உரிமையான நூல் நிலையத்தைக் கூடத் திருப்பித்தர மறுக்கிறது.

சூயஸ் கால்வாய் தகராறு பேச்சு வார்த்தை நடந்துகொண்டிருக்கும் பொழுதிலே திடீரென்று பிரிட்டன் ஈஜிப்ட் மீது போர் தொடுத்தது. வெடிகுண்டுகள் வெடித்த பின்புதான் காமன்வெல்த்தின் மதிப்பிற்குரிய உறுப்பினர் நேருவிற்கு இந்த செய்தியே தெரியவந்தது.

அயல் நாட்டுப் பிரச்னையில் இவர்கள் அடைந்த தோல்விகள் ஏட்டில் அடங்காதனவாகும்.

ஆனால் ஒன்று சொல்வோம்! வெளிநாட்டான் ஆதிக்கத்தை நாம் எப்போதும் ஆதரித்ததில்லை. உதட்டில் உறவும் உள்ளத்தில் பகையும் கொண்ட பாக்கிஸ்தானம் கண்டம் காக்க முன்வரும்போது நமக்கென்ன? இந்தியத் துணைக் கண்டம் என்ற பொது நோக்கில் நாமும் ஆதிக்கத்தை எதிர்ப்போம். ஃ



நாசரின் கதிபற்றி நேருவுக்குத் தெரியுமா?




# வாரிசும் காதலும்



**முதல்வன்**

ஒரு நடன அரங்கேற்றத்திற்காக சோழப் பேரரசன் செம்பியன் அரசவை புதுக் கோலம் பூண்டிருந்தது. அதிலும் ஆடலழகி தியாகவல்லியின் நடன அரங்கேற்றமென்றால் கேட்கவா வேண்டும்?

மின்னற் கொடி பெற்றெடுத்த பேரழகி! தங்கத்தால் உருவெடுத்து, வைரங்களை விழிகளாக்கி, வானவில்லைப் புருவமாகவும், கார்மேகத்தைக் கருங்குழலாகவும் வைத்து, தமிழ் நாட்டிலுள்ள கைதேர்ந்த சிற்பியொருவன் கடைந்தெடுத்த சித்திரப் பாவை உயிர் பெற்று, தியாகவல்லி என்னும் பெயர் பெற்றுப் பேரரசன் செம்பியனின் முன்பு ஆடற் கலைக்குப் பெருமை தேடிக் கொண்டிருந்தது! அவளது சிலம்பொலி இளைஞர்களின் இதயத்தை வலிக்கச் செய்தது. அந்தச் சிலம்பொலியையும் மீறிக் கேட்டது வளவனின் பெருமூச்சு! தானும் அரசன் ஆட்டனத்தியைப் போலவே ஆடற் கலையைப் பயின்றிருந்தால், இப்போது தியாகவல்லியுடன் நடனமாடும் பாக்யம் கிடைத்திருக்குமே என்று எண்ணிக் கொண்டிருந்தான், அவன். ஆனால் இளவரசனான அவனுக்கு இதற்கெல்லாம் அவகாசம் கிடைக்கவில்லை. இளவரசுப் பட்டம் சூட்டிய நாளிலிருந்து போர்க்களத்திலேயே விளையாடிக் கொண்டிருக்கும் அவனுக்கு நடன மேடையில் சுழன்றாட நேரமேது? இதை நினைக்கும் போது அவனுக்கு விசயனின் மீதிருந்த வெறுப்பு முன்னை விடப் பன்மடங்கு அதிகரித்தது. அவனோடு போரிடுவதே வளவனின் நித்தியக் கடமையாய் இருந்தது. இத்தனைக்கும் விசயன் வேறு யாருமல்ல; அவனது சகோதரன் தான்; அதிலும், அவனுக்கு முன் பிறந்தவன். அவனது தொல்லை இல்லாதிருந்தால் வளவனும் நாட்டிய விற்பன்னனாகியிருப்பான். எவனுக்குத்தான் நடனத்தில் எவ்வளவு மோகம்!

அவனது எண்ணத்திற்கு ஏற்றாற்போல் தியாகவல்லியும் அகநானூற்றில் பரணர் பாடிய,

"ஏற்றியல் எழில்நடை
[பொலிந்த மொய்ம்பின்
தோட்டிருஞ் சுரியல்
[மணந்த பித்தை
ஆட்டன் அத்தியைக்
[காணீரோ"

என்ற பாடலுக்கு அபிநயம் பிடித்தாள். 'காளைமாட்டின் ஏற்றமிகு எழில் நடையும், பொலிவுற்ற தோள்களும், கரிய கேசமுமுடைய ஆட்டனத்தியைப் பார்த்தீர்களா?' என்ற கருத்தைப் பதம் பிடித்துக் காட்டும்போது அவளது கரு விழிகள் அவளையறியாது வளவனின்மீது பதிந்தன.

தன் பார்வையைத் திரும்பப் பெற முடியாதவளாகி, அந்த ஒரே பாடலில் வெகு நேரம் சஞ்சரித்தாள். அந்த நிலையில் அவளை அப்படியே வாரி அணைத்துக்கொள்ள வளவனின் கரங்கள் துடிதுடித்தன. அக்கரங்களுக்குரிய ஒரு வைர வியாபாரி மேலும் அங்கிருந்தால் தனக்குப் பைத்தியமே பிடித்துவிடுமென அஞ்சி அரசவையை விட்டு வெளியே போய் விட்டான்.

நடனம் முடிந்துவிடவே தியாகவல்லி அரசனின் முன் வந்து நின்றாள். மன்னர் பெருமான் ஆயிரத்தெட்டுக் கழஞ்சு பொன்னை அவளுக்குப் பரிசாகத் தந்து வாழ்த்தினார். தியாகவல்லி பெருமை பொங்க பரிசை ஏற்றுக் கொள்ளும்போது, உள்ளம் வளவனின் உருவத்தை ஏற்றிருந்தது.

2

அன்றிரவு நான்கு உள்ளங்கள் உறக்கமின்றித் தவித்தன. தியாகவல்லி, வளவன் வைரவியாபாரி ஆகிய மூவரும் தவித்ததில் விந்தையில்லை. ஆனால் முதுமையின் எல்லையில் முடி நரைத்துப் போன செம்பியனுக்கு என்ன வந்தது? அந்த மூன்று உள்ளங்களும் எதிர்காலத்தைப் பற்றிய இன்பக் கனவுகளில் லயித்திருந்தன. ஆனால் செம்பியனோ, கடந்துபோன கால வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட தன் வாழ்வை நினைத்து வருந்திக்கொண்டிருந்தான். அவனது இளமைப் பருவத்திலும் இப்படித்தான் நிரஞ்சினியை நினைத்து உருகினான். இறுதியில், குல வேறுபாட்டை ஒதுக்கிவிட்டு, ராஜ்ய அந்தஸ்துக் குறைந்துவிடுமே என்ற கவலையில்லாது, தவறிப்போய் கணிகையர் குலத்தில் பிறந்துவிட்ட தாமரை நிறத்தழகி நிரஞ்சினியைத் தாரமாக்கிக் கொண்டான். அவர்கள் திருமணத்திற்கு முன்பு அவன் நிரஞ்சினியிடம் அவனது குழந்தைக்கே முடி சூட்டுவதாக வாக்களித்திருந்தான். அவளும் விசயனைப் பெற்றெடுத்தாள். பிற்காலத்தில் அவனே மன்னனாக ஆவான் என்ற மகிழ்ச்சிப் பெருக்கில் அவளது இறுதி மூச்சு நின்றது. அதற்குப் பிறகு செம்பியன் சேரர் குலச் செல்வி மாதேவியைக் கைப்பிடித்தான். மாதேவியும் வளவனைப் பெற்று எடுத்தாள். செம்பியனோ தான்



உறுதி தந்தபடி விசயனுக்கு முடிசூட்ட முற்பட்ட போது சேர நாட்டினர் குறுக்கிட்டனர். வளவனுக்குத்தான் அரசுரிமை என்று வாதிட்டனர்; வற்புறுத்தினர். அன்றிருந்த அரசியல் சூழ்நிலை செம்பியனை வாக்குத் தவற வைத்தது. விளைவு...? விசயன், வேற்றரசர் சிலருடன் சேர்ந்துகொண்டு கலகம் செய்தான். நாட்டிலே குழப்பமேற்பட்டது. இதனால் செம்பியன் அமைதியிழந்து தவித்தான். தான் செய்ததைப் போலவே இளவரசன் வளவனும் நாட்டியக்காரியை மணக்க விரும்புகிறான் என்பதை செம்பியன் அறிந்தால் என்ன ஆகுமோ?

ஆனால் மன்னன் அறியாத வகையில்தான் வளவனும் தியாகவல்லியும் சந்தித்து வந்தனர். தங்கள் காதல் நிறைவேறுமா என்ற கவலையே இல்லாது, அந்தஸ்து பேதத்

தின் விளைவுகளைப் பற்றிய சிந்தனையே இல்லாது, சிறு குழந்தைகள் மணல் வீடுகட்டி மகிழ்வதுபோல், அவர்களும் பல இன்பக்கோட்டைகள்கட்டிக்கொண்டிருந்தனர். ஆனால் அரசுரிமைக்குப்போட்டியிடும் விசயன் தன் காதலிலும் குறுக்கிடுகிறான் என்பதை வளவன் அறியவில்லை.

3

தன் தாய்க்குக் கொடுத்த வாக்கைப் புறக்கணித்துத் தன்னை வஞ்சித்த தன் தந்தைக்கு சரியான பாடம் கற்பிக்க விசயன் முயன்று கொண்டிருந்தான். எல்லைப் புறத்திலிருந்த சிற்றரசர் சிலர் அவனுக்குத் தூபம் போடவே, அவர்கள் துணையுடன் எல்லையில் இருந்த சில கிராமங்களை ஆக்ரமித்துக் கொண்டு, கொலை கொள்ளை போன்ற பல கொடுஞ்செயல்களைப் புரிந்து வந்தான். உள் நாட்டிலும் சிலர் அவனுக்குத் துணை புரிவதால், வளவனின் கைக்கு அகப்படாமல் தப்பித்துக்கொண்டே வந்தான். இவர்களது துணையுடன் மாபெரும் சதித் திட்டமொன்றை நிறைவேற்றுவதற்காக அவன் வைர வியாபாரியாக உருமாறி தலைநகருக்கு வந்தான். அப்போது தான் தியாகவல்லியின் நடனத்தைக் கண்டான்.

தியாகவல்லியின் மயக்கும் மொழியில் தன் மனதைப் பறிகொடுத்த விசயன் அவளது வீடு தேடிச் சென்றான். அங்கு சென்ற பின்தான் தான் நாடி வந்த பொருள் வளவனின் கைக்குப் போய் விட்டதை அறிந்தான்; என்றாலும் அவனால் அவளை விட்டுப் போக முடியவில்லை. எனவே தன் தாய் ஏமாந்துபோனதை அவளுக்கு எடுத்துக் காட்டி அவளது எண்ணத்தைத் தன் பக்கம் திருப்ப முயன்றான்.

"இதோ பார், வளவன் உன்னை மணந்துகொண்டாலும் உன்னுடைய வாரிசுகள் இந்த நாட்டை ஆளமுடியாது. அவனது தந்தையும் இப்படித்தான் ஒருபெண்ணை ஏமாற்றினார். அந்தப் பெண்ணிடம் அவள் மகன் விசயனுக்கே முடிசூட்டுவதாக வாக்களித்துவிட்டு, இன்று வளவனுக்குப் பட்டம் சூட்ட முயல்கிறார். நாளை உனது மகனுக்கும் இதே நிலைதான் ஏற்படும்." என்று வைர வியாபாரி வேடத்திலிருந்த விசயன் எவ்வளவோ எடுத்துக் கூறியும், அது செவிடன் காதில் ஊதிய சங்காக முடிந்தது. எனவே வளவன் ஒழிந்தால்தான் அரியாசனத்துடன் இந்த ஆடலரசியும் கிடைப்பாளென்று தீர்மானித்த விசயன், தனது சதித் திட்டத்தை வெகு விரைவில் நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதில் தீவிரமாக ஈடுபட்டான்.

4

சோழர் பெருந்தகை செம்பியனிடம் அமைச்சர் வளவனது காதல் விவகாரத்தைப் பற்றிக் கூறியபோது மாமன்னரின் முகம் சுருங்கியது. பிறகு வளவனும் அதை ஒத்துக்கொண்டதோடு அவளை மணக்க அனுமதி கேட்டபோது அவர் நிலை கலங்கிப் போனார். வெகு நேரம் யோசித்த பிறகு, எதிர்காலத்தில் வளவனின் வாழ்வு வளமாக இருக்கவேண்டுமானால் இந்தத் திருமணம் நடத்தக் கூடாது என்ற முடிவிற்கு வந்து "வளவா, அன்று நானும் உன்னைப் போலத் தான் பிடிவாதமாக இருந்தேன். அதன் விளைவாகத் தான் இன்று வாரிசுப் போட்டி ஏற்பட்டு, அமைதி கெட்டு, அதன் காரணமாக பல உயிர்ச் சேதங்களும் ஏற்பட்டு எங்கும் பீதியும் குழப்பமுமாக இருக்கிறது. இந்தத் தொல்லை உன் காலத்திலும் ஏற்படவேண்டுமா?"

"அப்பா, நீங்கள் வீணான கற்பனையில் உங்களையே குழப்பிக் கொள்கிறீர்கள். இன்று நடப்பது போலத் தான் என்றும் நடக்கவேண்டுமென்று சட்டமா இருக்கிறது?"

"நீ உணர்ச்சி வசப்பட்டு பேசுகிறாய். கண்ணால் கண்ட நிகழ்ச்சிகளை அனுபவமாகக் கொண்டு அதற்கேற்ப நம் வாழ்க்கையை மாற்றி அமைத்துக் கொள்வதுதான் விவேகம். எனவே முடிவாகச் சொல்லுகிறேன். நீ அவளை மணக்கமுடியாது!" தந்தையின் முடிவுகேட்டு வளவன் வேதனைப் புயலில் சிக்கித் தடுமாறினான்.

அவனை இந்தச் சிக்கலிலிருந்து விடுவித்து, அவனுக்கு நிரந்தர அமைதியைத் தர விசயன் எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டான். விசயன் விரித்த வலையிலே உப தளபதியும், கோட்டைக் காவலர் தலைவனும் வீழ்ந்து விட்டனர். தனது திட்டத்திற்கு ஒத்துழைத்தால் சோழ மண்டிலத்தின் ஒரு பகுதியை அவர்களுக்குத் தருவதாக விசயன் ஆசை காட்டினான். சிற்றரசராகப் போகிறோம் என்ற பேராசையில் அவர்களும் ஒப்புக்கொண்டனர். அதன்படி அன்றிரவு கோட்டையைக் கைப்பற்ற முடிவு செய்யப்பட்டது.

5

தங்கள் திருமணத்திற்கு மன்னன் மறுத்துவிட்ட செய்தியை அறியாத தியாகவல்லி வளவனின் வரவை எதிர்நோக்கி, மழைநோக்கும் விளைநிலமாக உப்பரிகையிலே காத்திருந்தாள். சிறு சப்தம் கேட்டாலும் வளவன்தான் என்றெண்ணி எட்டிப் பார்ப்பாள். பாதையிலே யாருமில்லாதது கண்டு மனம் தளர்வாள். இப்படியே பன்முறை எட்டிப் பார்த்து ஏமாந்தாள். திடீரென அவள் முகத்தில் சிந்தனை ரேகை படர்ந்தது. சந்தடி கேட்டு தான் பாதையைப் பார்க்கும் போதெல்லாம் பாதையில்

[100-ம் பக்கம் பார்க்க]

# மறைவில்லை

முதல்நாள் மாளிகைத் தாழ்வாரத்தில் மன்னவன் பெற்ற பெண்ணும் அவளை மணந்திட்ட அரசகுமாரனும் உடலோடு உடல் உராய்ந்தவாறு உல்லாச கீதம் பாடிக் கொண்டிருப்பார்கள். "அமுத நிலவே! ஆடும் ஓவியமே!" எனக் காதலன் வர்ணித்துக் காதலியின் முகத்தைத் தன் கரத்தால் தடவிக் கொண்டிருப்பான். கதாநாயகியின் முகத்தை நிலவைப்போல் ஆக்க வேண்டிய பணிக்கு அந்த லைட்பாய் இயக்குகிற விளக்கு மிகமிக இன்றியமையாதது.

மறுநாள் அந்த இடத்தில் அரண்மனைத் தாழ்வாரம் இருக்காது. அதற்குப் பதிலாக முற்றும் துறந்த முனிபுங்கவரின் ஆஸ்ரமம் இருக்கும். பாதி திறந்த ஆடையுடன் ரிஷிபத்தினி காட்சி தருவாள். "அன்பே! இன்பமே!" என்ற சிற்றின்பச் சொற்களுக்குப் பதிலாக "சுவாமி! பிராணநாயகி!" என்ற பேரின்பச் சொற்கள் பெருக்கெடுத்தோடும்.

ஆஸ்ரமம் இருந்த இடத்தில் அடுத்த நாள் திருடர் குகை காட்சி தரும். அதே இடம் மறுநாள் போலீஸ் ஸ்டேஷனாக விளங்கும்.

இப்படிக் கோட்டைகள் குடிசைகளாக மாறினாலும், மாளிகைத் தாழ்வாரங்கள் மயான பூமிகளாக உருவெடுத்தாலும் ஆதவன் உட்கார்ந்து வேலை பார்க்கும் அந்த ஸ்டுடியோ பரணைப் பொறுத்தவரையில் எந்தவித மாற்றமுமில்லை. அதே பரண்தான்! அதே விளக்குதான்!

தொழிலாளிகளை வாட்டி வதைத்து அவர்களது உழைப்புக்கு மதிப்புத் தராமல் உன்மத்தம் கொண்டலையும் முதலாளிகளையும் அவனுக்குப் பிடிப்பதில்லை. கடமையுணர்ச்சியற்று வெறும் உரிமைக் கிளர்ச்சிகளால் மட்டுமே உந்தப்பட்டுத் தொல்லை கொடுக்கும் தொழிலாளிகளையும் அவன் விரும்புவதில்லை.

அப்படிப்பட்ட ஒரு நேர்மையான தொழிலாளிதான் ஆதவன். புகழ் பெற்ற 'அவிட்டம் ஸ்டுடியோ'வில் ஆதவன் ஒரு 'லைட்பாய்'தான்! இருட்டில் பகலையும் பகலில் இருட்டையும் உண்டாக்கிக் காட்டும் திரையுலகத்தின் விநோத ஒளி விளக்குகளை இயக்குகின்ற பல தொழிலாளிகளில் அவனும் ஒருவன்.

ஸ்டுடியோவில் படமெடுக்கும் அரங்கத்தின் மேலேயுள்ள பரண்மீது அமர்ந்தவாறே அவன் எத்தனையோ கோட்டை கொத்தளங்களில், அழகிய அரண்மனைகளின் அந்தப்புரங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளைப்பார்த்திருக்கிறான். குடிசைகளின் குமுறலைக் கேட்டிருக்கிறான். கரையான் புற்று முதல் கைலையங்கிரிவரையில் அவன் போடுகிற விளக்கின் ஒளியால் எழில் பெற்று 'கேமரா'வுக்குள் புகுந்து பார்ப்பவர் கண்களைக் கவர்ந்திருக்கின்றன.



மு. கருணாநிதி

அதே வேலைதான்! மணிக் கணக்கில் நாட்கணக்கில்—கேட்டுக் கேட்டுப் புளித்துப்போன ஒரே மாதிரியான அலுவல் வார்த்தைகள்தான்!

"ஏ, அந்தக் கோடாவை நகர்த்து!"

"பேபியைக் கொஞ்சம் சாப்ட் பண்ணு!"

"பதினைந்தை இடது பக்கம் தள்ளு!"

"பெரிய லைட்டைக் கட் பண்ணு!"

"ஜூனியர் போடாதே!"

"அந்த சீனியரில் ஒரு நெட் வையி!"

"நடிகர் முகத்திலே ஸ்ட்ராங் பண்ணுப்பா!"

"ரெடி! ஆல் லைட்ஸ்!"

கேமராமேன் இடுகின்ற இந்த வழக்கமான உத்திரவுகளை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பிலே உள்ளவர்களில் அவனும் ஒருவன். அந்த ஒரே வேலையைச் செய்து அலுத்துவிட்ட தொழிலாளிகள் சலித்துக் கொள்வதை அவன் கவனிக்காமல் இல்லை. பரணில் உட்கார்ந்து கொண்டே பணியில் அக்கரை செலுத்தாமல் சோம்பேறித்தனமாக நடந்துகொள்ளும் நண்பர்களை அவன் பார்த்து வருத்தப்படாமலும் இல்லை. தன்னைப் போலவே பல தொழிலாளத் தோழர் கடமையுணர்வோடு அலுவல் புரிவதை நோக்கி அவன் மகிழ்ச்சியடையாமலும் இல்லை. உயரமான அந்தப் பரணில் இருந்தவாறே அதன் யார் யார் முகத்தையோ விளக்குப் போட்டு நன்கு பார்த்திருக்கிறான். யார் யாரையோ தன் கையிலுள்ள ஒளி விளக்கின் மூலம் சிங்காரம் செய்திருக்கிறான், எத்தனையோ வசீகரமுகங்களைப்பயங்கரமாகச் சித்தரித்துக் காட்டக் கூடிய சக்தி, அவன் ஆளுகையின் கீழிருந்த அந்த விளக்குக்கு இருந்தது. அவன் காணாத நடிக நட்சத்திரங்கள் இல்லை. பார்க்காத டைரக்டர்கள், கதாசிரியர்கள் இல்லை. அவன் சந்தித்த கேமராமேன்கள் பலவிதம்.

ஒருவர், எல்லா விளக்குகளையும் ஏக காலத்தில் கொளுத்தச் செய்து ஒரு நொடியில் படப்பிடிப்புக்கு "ரெடி சார்!" என முழக்குவார். இன்னொருவர் ஒவ்வொரு விளக்கின் தாடையையும் பிடித்து அவைகளைத் தாஜா செய்து விட்டு—சிலவற்றின் குரல்வளையைப் பிடித்து உயிரை அணைத்துவிட்டு — அந்த விளக்குகளின் விழிகளுக்கும் நடிகர்களின் விழிகளுக்கும் வலி ஏற்படுகிறவரையில் கொடுமைப் படுத்தி-ஆறு மணி நேரத்துக்கு ஒரு முறை "ஆல் ரைட்! ரெடி!" என்று கூறிவிட்டு அப்போதும் ஏதோ மயிரிழையில் குறை கண்டு முணுமுணுத்துக் கொண்டிருப்பார். படத்தின் கதைக்கான கட்டத்தில் நடிகர்கள் தயாரானதும் கேமராமேன் அபிப்பிராயப்படி ஒரு விளக்கைப் போட்டுவிட்டு மறு உத்திரவு வரும்வரையில் மௌனமாகப் பரண்மீது அமர்ந்திருக்கும் அவனுக்கு எத்தனையோ சிந்தனைகள்.

"இந்த அவிட்டம் ஸ்டுடியோ முதலாளி, இந்தக் காலத்தில் இப்படி ஒரு படம் எடுக்கிறாரே; உலகம் முழுவதும் பகுத்தறிவு ஒளி பரவி யிருக்கும் இந்த வேளையில் "பஜனாமிர்தகானம்" என்ற பழமைப் பாசி பிடித்த கந்தல் கதையை யாராவது படமாக்குவார்களா?" என்று அவன் தன்னைத்தானே கேட்டுக் கொள்வான். ஐம்பதும் நூறும் சம்பளம் வாங்குகிற தன்னைப் போன்ற தொழிலாளிகள், வேலை நேரத்துக்குக் குறிப்பிட்ட காலத்தில் வந்து குறிப்பிட்ட காலத்தில் வெளியேறுவதையும், ஐம்பதாயிரம் அறுபதாயிரம் என்று சம்பளம் வாங்குகிற ஒரு சில நடிகர்கள் ஏழு மணிப் படப்பிடிப்புக்கு வர வேண்டுமென்றால் இந்திய சர்க்காரின் ரயில்களைப்போல இருநூறு முன்னூறு நிமிடங்கள் தாமதமாக வருவதையும் எண்ணிப் பார்த்துப் பெருமூச்சுவிடுவான். அவர்களிடமுள்ள திறமைக்கு—கலைக்கு—அந்தத் திறமையையும் கலையையும் வைத்துத்தான் படம் எடுப்பவர் சம்பாதிக்கிறார் என்ற நிலைக்கு—அவர்கள் பெறுகிற ஊதியங்கூட அவனுக்கு அநியாயமாகத் தோன்றவில்லை. ஆனால் அவர்கள் அளவுக்கு மீறிப் பணமும் பெற்றுக்கொண்டு தங்கள் வீடுகளில் ஒரு கடிகாரம், காலண்டர்கூட வாங்கி வைக்காமல் வாழ்க்கை நடத்துகிறார்களே யென்று நினைக்கும்போது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. படமெடுக்கும் முதலாளிகளின் மீது அவனுக்கு அனுதாப உணர்ச்சியும் தோன்றியது.

பெரிய நடிகர் இன்னும் செட்டுக்கு வந்து சேராததால் சின்ன நடிகர் ஒருவரை வைத்து அவருக்குள்ள காட்சியைப் படம் பிடிக்கலாம் என்று டைரக்டர் தீர்மானித்து, அந்த நடிகர்மீது என்னென்ன விளக்குகள் போட வேண்டுமென்று கேமராமேன் சொல்லும்போது அவனுக்கு அந்த விளக்கு ஒளியை நடிகர் மீது வீசவே மனம் வராது. உள்ளம் உடைந்து உதட்டைப் பிதுக்கியவாறு உட்கார்ந்திருக்கும் பட முதலாளியின் முகத்தில் அந்த வெளிச்சத்தைப் பாய்ச்சி அழகு பார்க்கலாமா என்று தோன்றும்.

ஒவ்வொரு நாளும் படப்பிடிப்புக்கு முன்பு கேமரா முதலிய கருவிகளுக்குத் தேங்காய் உடைத்துப், பூ வைத்துக், குங்குமம் இட்டு, பூஜை நடத்துகிற நிகழ்ச்சியைப் பார்த்து அவன் உள்ளுக்குள்ளே சிரிப்பான். எவனோ ஒரு மேல்நாட்டு 'முட்டாள்' கண்டுபிடித்த விஞ்ஞான சாதனைகளுக்கு நமது நாட்டு 'அறிவாளி' பூப்போட்டுப் பூஜையாவது செய்கிறானே யென்று முணுமுணுத்துக் கொள்வான்.

அந்தப் புதுமை எண்ணங் கொண்ட வாலிபன் அவிட்டம் ஸ்டுடியோவுக்கு வந்து ஐந்து வருடங்களுக்கு மேலாகிவிட்டன. அவன் அங்கு வரும்போது 'லைட்பாய்' வேலைக்கு வந்தவனல்ல. நடிக்கவேண்டும் என்ற எண்ணத்துடன்தான் அவன் அங்கு வந்தான். அவனும் அவனது வயோதிகத் தாயாரும் கிராமத்தில் வாழ முடியாமல் கஷ்டப்பட்டபோது பலரும் சொன்னார்கள்; "பயல் சிகப்பாய் அழகாயிருக்கிறான், பட்டினத்துக்குப் போனால் சினிமாவில் நடிக்கிற வேலை கிடைக்கும்" என்று!

அதை நம்பி அந்தக் கிழவி தன் மகனுடன் பட்டினத்துக்குப் புறப்பட்டு வந்தாள். வந்த பிறகு அலையாய் அலைந்தார்கள்;

பட்டினி கிடந்தார்கள்; பாதையோரங்களில் சுருண்டு கிடந்தார்கள். எந்தப் பட முதலாளியின் கண்ணிலும் அந்த பால்ய நடிகன் படவில்லை. எப்படியெப்படியோ கஷ்டப்பட்டு ஸ்டுடியோ வாயில்களில்தவமிருந்து, கடைசியில் 'லைட்பாய்' உத்தியோகத்தில் சேர்ந்தான் ஆதவன். அதன் பிறகு அவனுக்கு நடிகனாக வேண்டுமென்ற ஆசை மறைந்துவிட்டது. காரணம், ஸ்டுடியோவுக்குள்ளே துணை நடிகர்கள் கூட்டம் அனுபவிக்கிற சுகத்தை அவன் நேரில் பார்த்துப் பார்த்துத் தனக்கு நடிகர் வேலையே வேண்டாமென்று தாயின்மேல் ஆணையிட்டு உறுதியெடுத்துக் கொண்டுவிட்டான்.

பதினெட்டாவது வயதில் பட்டினத்துக்கு வந்தவன் பாடுபடுவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டு தன் வயிற்றைக் கழுவிக் கொள்வதை மட்டும் பெரிதாகக் கருதாமல், தன் அருமைத் தாயாரின் சுக வாழ்வுக்காக நாள்தோறும் உலகத்தில் போராடிக்கொண்டிருந்தான். அவனுக்கு வயதும் இருபத்து மூன்றுக்கு மேல் ஆகிவிட்டது. தான் பட்டினி கிடந்தாவது தாயின் குடல் கருகாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்பதில் ஆதவனுக்குள்ள அக்கரை எல்லாப் பிள்ளைகளுக்கும் அமையுமென்று கூறிவிட முடியாது.

இனாமாக ஒரு வாழைப் பழம் கிடைத்தால்கூட அதை எடுத்துக் கொண்டு வீட்டுக்கு வந்து "அம்மா! இன்று ஒரு சீப்பு வாழைப் பழம் கிடைத்தது. நான் எல்லாவற்றையும் தின்றுவிட்டு உனக்கு ஒன்றே ஒன்று கொண்டு வந்தேன். இந்தா, சாப்பிடு!" என்று தாயிடம் கொடுப்பான்.

"அதையேண்டா கண்ணு கொண்டு வந்தாய்? அதையும் சாப்பிடு!" என்று தாய் அன்பு பொழியும்; இருவரிடையே கண்ணீர் வழியும். இது நாள்தவறாது அந்த வீட்டில் நடைபெறும் நிகழ்ச்சி! மகனுக்குத் தெரியாமல் வயிற்றைக் கட்டி வாயைக் கட்டி அந்தக் கிழவி இரு நூறு ரூபாய் வரையில் மிச்சப்படுத்தி அடுக்குப் பானைக்குள் மூட்டை கட்டிப் போட்டிருந்தாள்.

ஒருநாள் தாயார் மகனைக் கூப்பிட்டு, "தம்பீ! உனக்கும் வயதாகிவிட்டது. நானும் போய்ச் சேரவேண்டிய கட்டத்துக்கு வந்து விட்டேன். என் கண் இருக்கும்போதே உன் கையால் ஒருத்திக்குத் தாலி கட்டிப் பார்க்க வேண்டுமென்று துடிக்குதடா நெஞ்சம்." என்று தன் தணியாத ஆசையைத் தழுதழுத்த குரலில் வெளியிட்டாள்.

ஆதவன், தலையை நாணிக் கோணியவாறு திருப்பிக் கொண்டான்.

திருமணமென்றதும் எந்தப் பிள்ளைக்குத்தான் வெட்கம் வராது? எல்லாருமே "ஆகா! திருமணமா? இதோ, நான் தயார்!" என்று போர்ப்பரணி பாடிவிடுவார்களா என்ன? முதலில் "அதெல்லாம் வேண்டாம்!" என்று பிகு பண்ணுவார்கள். பிறகு "உங்கள் வேலையைப் பாருங்கள்" என்று கோபித்துக் காட்டுவார்கள். பிறகு வீட்டார் ஒரு மாதம் கல்யாணப் பேச்சே எடுக்காமலிருந்தால், "என்ன; இவர்கள் ருசி காட்டிவிட்டுப் பேசாமல் அவர்கள் வேலையைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்களே........" என்று மனதுக்குள் பொருமிக் கொண்டிருப்பார்கள்.

வெட்கத்தை அதிக நேரம் தொடர்ந்து காட்டிக்கொண்டிருக்கவோ — அல்லது பிகு செய்துகொண்டு முறுக்கிக் கொண்டு ஓடவோ ஆதவனைச் சுற்றி யாருமில்லை. மாமனோ, மச்சானோ, அண்ணனோ, தம்பியோ யாருமில்லை. ஒரே ஒரு தருநிழல்.—அது அவன் தாயின் அன்பு நிழல். அதுவும் எந்த நேரத்தில் பட்டுப் போய்விடுமோ என்ற நிலையில் உள்ள மரத்தின் நிழல். ஒரு நாள் வெட்கம்—அடுத்த நாள் துக்கம்—மறுநாள் சிந்தனையென்ற அளவுக்குத் தாயார் கிளப்பிய திருமணப் பேச்சு வளர்ச்சி யடைந்தது.

இப்போதெல்லாம் ஆதவன், ஸ்டுடியோவில் பரண்மீது அமர்ந்திருந்தாலும், குடிசையில் மல்லாந்து படுத்துக்கொண்டு கூரையின் ஓட்டைகளை எண்ணிக்கொண்டிருந்தாலும் வேறு நினைவுகள் அவனைக் குடைவதில்லை. தாயார் தோற்றுவித்த திருமணப் பேச்சின் வசீகரத் தோற்றமே அவன் வாலிப உள்ளத்தைத் தொட்டுத் தடவி அவனை இன்பப் பஞ்சணையில் கிடத்தி அழகு பார்த்தது.

எத்தனையோ கனவுகள்...... அவன் நினைவு கடந்த காலத்தை நோக்கி வேகமாக வழுக்கிக் கொண்டு சென்றது...

அவன் கிராமத்திலிருந்து பட்டினத்துக்குப் புறப்படும்போது அவன் விட்டுப் பிரிந்த ஆனந்தி அவன் மனக்கண் எதிரே வந்து நின்றாள். அப்போது அவளுக்குப் பதினொரு வயது. கிராமத்துப் பள்ளிக்கூடத்தில் படிக்கும்போது ஆதவனும் ஆனந்தியும் யாராலும் பிரிக்க முடியாத ஜோடி! படிக்கும்போதும் விளையாடும்போதும் அவர்கள் இணைந்தே நின்றார்கள். இத்தனைக்கும் அவர்கள் சொந்தக்கார வீட்டுப் பிள்ளைகள் அல்ல. தூரத்து உறவு என்று இரு வீட்டாரும் சுற்றிவளைத்து முடிச்சுப் போட முயற்சியெடுத்துப் பார்க்கலாமே தவிர, வேறு எந்தப் பிணைப்பும் இரு குடும்பத்துக்கும் இல்லை. ஆதவனும் ஆனந்தியும் சேர்ந்து விளையாடுவது, படிப்பது, நடமாடுவது அந்தத் தெருவில் உள்ளவர்களுக்குப் பிடிக்கவில்லை. ஆனந்தியொன்றும் வசதி படைத்த வீட்டுப் பெண் இல்லை. அவளும் ஏழைக் குடும்பத்துச் சிறுமிதான். அந்த இளம் உள்ளங்கள் எந்தவிதக் களங்கமுமின்றி அன்பால் கட்டுப்பட்டு ஓடியாடியதைப் பொறாமை இருதயங்களால் சகித்துக்கொள்ள முடியவில்லை.

கலகம் ஆரம்பமாயிற்று. ஆனந்தியும் ஆதவனும் ஒரு நாள் பட்டம் விட்டுக்கொண்டிருந்தார்கள். ஆனந்தியின் தகப்பனார் பிரவேசித்தார். அவள் முதுகில் நாலு கொடுத்தார். பரபரவென வீட்டுக்கு இழுத்துச் சென்றார். போகும்போது அவர் ஆதவனை பார்த்து முறைத்த முறைப்பு அவனை அப்படியே கதிகலங்க வைத்துவிட்டது.

அதற்குப் பிறகு அவன் அவளைப் பார்க்க முயற்சியெடுத்துக் கொள்ளவில்லை. பள்ளிக்கூடத்தில் இருவரும் சந்திப்பார்கள். ஆனால் பேசுவது கிடையாது. கண்கள் பேச முயல்வதற்குள் கண்ணீர் வந்து முட்டுக்கட்டை போட்டுவிடும்.

இப்படி ஒன்றிரண்டு ஆண்டுகள் கழிந்தன. திடீரென ஆனந்திபள்ளிக்கூடம் வருவதும் தடைப்பட்டது. காரணம் அறிய ஆதவன் துடித்தான். ''அவள் பருவமடைந்து விட்டாள். அதனுல் பெற்ருேர் பள்ளிக்கூடத்தை நிறுத்தி விட்டார்கள்!'' என்று தெருவிலே பேசிக்கொண்டது அவன் காதிலே விழுந்தது. அந்தச் செய்தி கேட்டு அவன் உள்ளத்தில் இனமறியாத ஒரு பூரிப்பு எழுந்தது. ஏன் என்றே அவனுக்குப் புரியவில்லை. அரும்பாயிருந்த கொடி மலர்ந்து காட்சிதருகிறதாம்; அவல் கேள்விப்படுகிருன். அவளோடு ஆடியோடும்போது, படிக்கும்போது, பட்டம் விடும்போது ஏற்பட்டிராத ஒருவிதப் புது இல்ப நினைவு இப்போது அவனுக்கு எப்படி ஏற்பட்டது? அவனுக்கே விளங்கவில்லை. பள்ளித் தோழி— விளையாட்டு ஜோடி - இப்போது அவள் வாழ்க்கை ஜோடியாவதற்குத் தயாராகும் பருவம் துவங்கி விட்டது. ஆம்; மலர ஆரம்பித்து விட்டாள்.

குடிசையிலமர்ந்து பழைய நினைவுகளில் ஆழ்ந்திருந்த ஆதவனின் கண்களில் புதிய ஒளி தோன்றியது. அந்த ஒளி, அவன் ஸ்டுடியோவில் போடும்ஆயிரம் விளககு ஒளிகளையும் மஞ்சக் கூடியது. கிராமத்தில் மலர்ந்திருககும் கொடியைக கொண்டுவந்து பட்டினத்தில் தன் குடிசைக்குள் படரவிட வேண்டுமமென்ற ஆசை யெழுந்தது. அம்மாவிடம்தன்கருத்தை வெளியிட்டான். தாயும சந்தோஷத்துடன் சம்மதம் தந்தாள். ஓடினுன் கிராமத்தை நோக்கி. அந்தச் சிறறூரே அவனுக்குப் பாலைவனமாகத் தோனறியது. திடீரென வீசிய சூருவளியில எல்லா வீடுகளும் அழிந்து போய்விட்டன எனறு அவனிடத்தில் யாரோ கூறுவதுபோல் இருந்தது. ஆனுல் கிராமம்அப்படியேதான் இருந்தது. எதுவும அழியவில்லை. எல்லா வடுகளும் முனபு இருந்த இடத்திலதான இருந்தன. ஆனுல் அவனுக்கு எல்லாமே பாழாகத்தான தோற்ற



மளித்தன. காரணம்; அவன் தேடிச் சென்ற ஆனந்தி அங்கே இல்லை! அந்த வீட்டார் ஊரை விட்டுக் கிளம்பி ஒரு வருட மாகிறது என்ற செய்திதான் அவன் காதில் எட்டியது. என்ன ஆனார்கள்; எங்கே போனார்கள்—எதுவுமே தெரிய வில்லை அவனுக்கு!

நாடித் துடிப்புகள் அனைத் தும் அடங்கியவனாய் பட்டினத் துக்குத் திரும்பினான். மகனின் மனத்தை அமைதிப்படுத்தும் வேலையில் தாய் ஈடுபட்டாள். திருமண ஏற்பாடுகளை ஒத்தி வைத்து விட்டு முதலில் அவ னைத் தேற்றுவதில் பெருங் கவலை யெடுத்துக் கொண்டாள் அந்த ஏழைத் தாய்.

அன்று, அவிட்டம் ஸ்டுடியோ புது எழிலுடன் விளங்கியது. ஸ்டுடியோ முதலாளி புதிய படம் ஒன்றுக்குப் பூஜை போடு கிறார் என்பதே அந்த எழிலுக் குக் காரணம்.

சினிமாத் துறைப் பிரபல எழுத்தாளர் ஒருவர் எழுதிய ''மலர்ந்தது'' என்ற கதையைப் படமாக்கத் திட்டமிட்டு அதற் கான துவக்க விழாவுக்கு ஏற் பாடு செய்திருந்தார்கள். புதிய நடிகர் ஒருவரும், புதிய நடிகை ஒருத்தியும் அந்தப்படத்தில் அறிமுகப்படுத்தப்படுகிறார்கள் என்று பத்திரிகைகள் விளம் பரப்படுத்தின.

''மலர்ந்தது'' கதையின் முக் கிய காட்சி யொன்றை முதல் நாளே படமாக்குவதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. குறிப் பிட்டபடி பூஜைகள் முடிவுற்று,



படமெடுக்கும் இடத்துக்கு அனைவரும் வந்து குழுமினார்கள். ஆதவனும் தன்னுடைய வழக்கமான இடத்தில் உட்கார்ந்து, கிராமத்தில் சிந்தனையை மேய விட்டவனாக அலுவலைக் கவனித்துக்கொண்டிருந்தான்.

புதிய நடிகர் அரங்கத்திற்குள் நுழைந்தார். ஆள் பார்ப்பதற்கு கம்பீரமாகவும் நல்ல எதிர்காலத்துக்கு உரியவராகவும் அந்த நடிகர் காட்சி தந்தார்.

ஆதவனுக்கு அருகேயிருந்த இன்னொரு லைட்பாய் "அண்ணே! இன்னைக்கு புது நடிகர் மட்டுமல்ல; புது நடிகையும் வரப் போகிறாள்!" என்று உற்சாகத்துடன் கூறினான்.

அவன் வாய் மூடுவதற்குள் அந்த நடிகையும் வந்துவிட்டாள் அரங்கத்திற்குள்ளே! அவள் பெயர் ஆஷா!

அவளைக் கண்டதும் ஆதவனுக்குக் கண் இருட்டியது. உடல் வெடவெடவென ஆடியது. வந்தவள் அந்த ஸ்டுடியோவுக்குப் புது நடிகை—அவனுக்குப் பழைய ஆனந்திதான்! மூச்சு நின்றுவிடும்போல் இருந்தது. "ஒரு வேளை தன் ஆனந்தியைப் போல் உருவம் படைத்தவளா?" என்ற சந்தேகம் ஒரு கணம் எழுந்து உள்ளத்துக்குள் கூவியது.

அதற்குள் அந்தக் கதாநாயகன் பேச ஆரம்பித்தான். ஆம்; காதல் வசனம்!

"என்னுயிரே! அன்புத் தங்கமே! நிறைவேற முடியுமா என்று பலரும் சந்தேகித்த நமது காதல் நிறைவேறிவிட்டது! இன்று நமக்குப் புது வாழ்வு மலர்ந்தது!"

—அந்த வசனத்தை அவன் சொல்லி முடித்து ஒத்திகை பார்த்ததும் "டேக்" எடுப்பதற்கு டைரக்டர் தயாரானார்.

மேலே, ஆதவனிடம், அவன் சகத் தொழிலாளி பேசினான்: "அண்ணே! இந்த நடிகை ஆஷா—எங்கேயோ கிராமத்திலே கிடந்தவளாம். இந்தப் புது நடிகன் அவளைக் கல்யாணமும் செய்துகிட்டு நடிப்பதற்கும் அழைச்சிகிட்டு வந்துட்டான். ஆஷாவாம் ஆஷா! அழகான பேரு ஆனந்தின்னு இருந்துச்சாம்; அதை மாத்திட்டாரு நம்ம படமுதலாளி!" என்று அவன் கூறியதுதான் தாமதம்; ஆதவன் போட்ட கூச்சல் அங்கிருந்த எல்லாரையும் நடுங்கச் செய்தது.

மறுகணம்...

"ஐயோ!" என்ற கதறலைத் தொடர்ந்து, நாற்பதடி உயரப் பரணிலிருந்து ஆதவன் கீழே விழுந்தான்.

காதல் காட்சிக்குத் தங்களைத் தயார் செய்துகொண்டிருந்த அந்த நடிகத் தம்பதிகள் அலறி ஓடினார்கள். கடமையில் கவனம் செலுத்தியவர்கள் என்னவென்று காரணம் கேட்கவில்லை; செம்மண் பூசப்பட்டிருந்த அந்த அரங்கத்துத் தரையுடன் போட்டியிட்டுப் பெருகிய இரத்தவெள்ளம் நடந்ததைத் தானாகவே அறிவித்துவிட்டது!

குலைந்துபோன அந்த உடல் கடைசி முறையாக நெளிந்தபோது, அவனது நசுங்கிய உதடுகள் "ஆனந்...தி" என்று முணுமுணுத்தன. மற்றவர் செவிகளுக்கு விழாத அந்தக் குரல் காற்றோடு கலந்துவிட்டது!

ஆஷாவும் அவனருகே சென்று பார்த்தாள். அவளால் பாவம் அவனை அடையாளம் தெரிந்துகொள்ள முடியவில்லை. தலை முழுசாக இருந்தால்தானே அவன் யாரென்று அவளுக்குத் தெரியும்?

துவக்க நாளிலேயே அபசகுனம் ஏற்பட்டது எனக் கூறி "மலர்ந்தது" படத்தை நிறுத்திவிட்டார், அவிட்டம் ஸ்டுடியோ முதலாளி.

மறுநாள்...

செய்திப் பத்திரிகையைப் பிரித்துப் படித்துக்கொண்டிருந்த திரையுலகப் புதுநடிகை ஆஷாவின் காதலன், "ஆஷா! நேற்று இறந்துபோன லைட்பாயைப்பற்றி பேப்பரில் செய்தி வந்திருக்கிறதே; படித்தாயா?" என்று கேட்டான்.

"இல்லையே! நாம் நடிக்கப் போகிற புதிய படத்தின் விளம்பரத்தை மட்டும்தான் பார்த்தேன்!" என்றாள் ஆஷா!

"அவன் பெயர் ஆதவனாம்!"

"யாராக இருந்தால் என்ன? நம்முடைய படம் ஒன்றுக்கு அஸ்தமனம்தான் ஏற்பட்டது! சனியன்...சாவதற்கு வேறு இடம் கிடைக்கவில்லை; முதல் 'காண்ட்ராக்'டையே கெடுத்துத் தொலைத்துவிட்டானே!"

ஆஷாவின் இந்தக் கண்டனக் குரல் ஓயுமுன்பே வாசலில் ஏதோ சப்தம் கேட்டது. எழுந்து சென்று பார்த்தார்கள் இருவரும். ஆதவன் இறுதி யாத்திரை செய்து கொண்டிருந்தான். அதற்குப் பின்னணியாக அவனைப் பெற்றவளின் சோகப் புலம்பல் எழும்பிக் கொண்டிருந்தது!

ஆமாம்; திருமணத்துக்காகச் சேர்த்து வைத்திருந்த பணத்தைச் செலவிட்டு ஆதவனின் இறுதிச் சடங்கை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறாள், அந்த ஏழைக் கிழவி.

★

[48—ம் பக்கத் தொடர்ச்சி]

திருமணத்திற்கான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்றன. ஆடம்பரம் எதுவுமில்லாமல் திருமணம் செய்து கொள்வதென்று தீர்மானித்தோம்.

திருமண நாள்! நான் ஏங்கித் தவித்த பொன்னுள்! ஒவ்வொருவரின் வாழ்விலும் ஒரு இன்பத் திருப்பத்தை ஏற்படுத்தும் திருநாள்!

மேள தாளம் முழங்கிற்று! மங்கள ஒலி எழுந்தது! நண்பர்கள் கூடினர்! தாலியோடு தயாராக இருந்தேன் நான்!

''ஐயோ தம்பி, கிரிஜாவைக் காணோம்!'' என்று அலறினுர் அந்த அம்மையார்.

தாலி என் கைகளிலிருந்து நழுவியது. அவள் அறைக்கு ஓடினேன். அங்கே எனக்காக ஒரு கடிதம்தான் காத்துக்கொண்டிருந்தது. முத்து முத்தான எழுத்துக்களிலே கிரிஜா- என் இதயத்து ராணி-எழுதிய கடிதம்தான்!

விழி நீரைத் துடைத்துக் கொண்டு படித்தேன்:

''அன்பரே!

மங்கள முரசம் கொட்டி. மணவிழா மேடையில், மங்கை நல்லாளின் கழுத்திலே மாங்கல்யம் சூட்டுவோம் என எண்ணி மகிழ்ந்துகொண்டிருந்த நீங்கள் மணமகள் காணவில்லை என்ற சேதி கேட்டுத் திடுக்கிடுவீர்கள்-திகைப்பீர்கள், தாங்கொணுத் துயர் அடைவீர்கள். நான் அறிவேன்! அனுதையாய்-அன்னக் காவடியாய்-ஆதரவற்றவளாய்-நெடுமரம்போல் நின்றுகொண்டிருந்த என்னைக் கண்ணைப் போல்—பெற்ற பெண்ணைப் போல்-அன்பும், ஆராத ஆசையும் பொழிந்து காத்துவந்த என் அன்னைக்கு இது தாங்க முடியாத வேதனையாக இருக்கும். அதையும் அறிவேன். 'ஏமாற்றி விட்டாளே!' என்று நீங்கள் புலம்புவீர்கள். அன்னை என்னைப் பாவி என்று சபிக்கவும் கூடும்.

அன்புள்ளம் கொண்டவரே! என் கடந்த கால வாழ்வை-என் வாழ்வில் ஏற்பட்ட களங்கத்தை நீங்கள் அறியமாட்டீர்கள்! அன்னையும் உங்களுக்குக் கூறியிருக்கமாட்டார்கள். இத் திருமணத்தைத் தடுக்க நான் பெரிதும் முயன்றேன். அன்னையிடம் வாதாடினேன். உங்களுக்கும் சூசகமாகக் கூறினேன். ஆனுல் வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டது!

என் உள்ளத்திலே பெரிய போராட்டம் எழுந்தது. உங்களை ஏமாற்றினுலும் என் மனசாட்சியை ஏமாற்ற முடியாதே! அது சவுக்கால் என்னை அடித்துக்கொண்டிருக்குமே என்ற எண்ணம்தான் என்னை மணபீடத்திலிருந்து துரத்தியது!

நல்ல இதயம் படைத்தவரே! நாசமாய்ப் போன என் வாழ்வைக் கேளுங்கள்! இந்நாட்டை ஆண்டு வந்த வெள்ளைக்காரர்கள் வெளியேறிய வேளையில் வடநாடு முழுவதும் வகுப்புக் கலவரம் ஏற்பட்டதே, அது உங்களுக்கு நினைவிருக்கிறதா? அப்போது, இதே பம்பாயில் நான் என் பெற்றேர்களுடன் வசித்து வந்தேன். ஒரு நாள் மாலை கல்லூரியிலிருந்து நான் வீட்டிற்குத் திரும்பினேன். வழி நெடுக மக்கள் கூட்டம் எறும்பு சாரையைப்போல் ஓடிக்கொண்டிருந்தது.

நான் அவசர அவசரமாக என் வீட்டிற்கு ஓடினேன். ஐயோ! என் வீடும், மற்ற வீடுகளும் தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்தன! அழுகுரல்-ஒப்பாரி எங்கும்!

'ஓடுங்கள்! ஓடுங்கள்! வெறி பிடித்தவர்கள் வருகிருர்கள்!' என்ற குரல் அங்கே ஒலித்துக் கொண்டிருந்தது. மனிதக் கூட்டம் ஓடிய திசையில் நானும் ஓடினேன்.

திடீரென்று ஒரு மிருகக் கரம் என்னைப் பற்றியது. திரும்பிப் பார்த்தேன். வெறி பிடித்த ஒருவன் என்னைப் பிடித்து இழுத்தான். நான் அலறினேன். அவன் கண்களில் இரத்தவெறி! 'பழிக்குப் பழி' என்று அவன் நா கூறியது. ''விட்டு விடுங்கள்!'' என்று நான் அலறினேன்! 'உன்னை விட்டு விடுவதா? அதோ எதிரிலே மலைபோல் குவிந்துள்ள பிணத்தைப் பார்! ஒரு பாவமும் அறியாத பாலகர்களை — தவறு ஏதும் செய்யாத தையல்களை— கட்டாரிக்குப் பலியாக்கிக் குவித்துள்ளதைப் பார்! அதற்குப் பழிக்குப் பழி! இரத்தத்திற்கு இரத்தம்!'

கட்டாரியை ஓங்கினுன். அக்கத்தி என் உடலில் பாய்ந்திருக்கக் கூடாதா? அப்படிப் பாய்ந்திருந்தால் எவ்வளவோ நன்றாக இருந்திருக்கும். நான் செத்திருப்பேன். அதை அவன் செய்யாமல் என்னைச் சாகாத பிணமாக்கி விட்டான், பாவி! ஓங்கிய கையிலே கத்தி! கண்களிலே இரத்த வெறி! ஒரு கணம்தான்; அவன் மனம் மாறியது. என் அழகு அவன் கண்களை உறுத்தியது. அப்படியே என்னை அணைத்துக் கொண்டான். அலறினேன்; திமிறினேன்—மலைப் பாம்பின் பிடியில் சிக்கிய மான் தப்ப இயலுமா? அந்த முரடனின் மிருகப் பசிக்குப் பலியானேன்!

யாரோ என்னை அகதிகள் விடுதியில் சேர்த்தனர். அங்கே என்னைக் கண்ட அம்மையார், தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று இன்றுவரை பேணி வளர்த்தார்கள்!

நான் கசங்கிய மலர்! திரிந்த பால்!

நான் வாழப் பிறந்தவளல்ல— உங்களை ஏமாற்றி நான் மணந்து கொண்டால் மனச்சாட்சி என்னை எரித்துச் சாம்பலாக்கிவிடும். என்னை மன்னித்து விடுங்கள் — அன்னைக்கு ஆறுதல் கூறுங்கள். மங்கள ஒலி கேட்காத இடத்திற்கு நான் போகிறேன்.

அன்புள்ள,
கிரிஜா''

—இதயத்து வேதனையை வார்த்தைகளால் தீட்டப்பட்ட இக் கடிதம் என் நெஞ்சத்தைப் பிளந்தது.

கிரிஜா — என் கண்ணே! உன் வாழ்வில் ஏற்பட்ட களங்கத்தை நான் தெரிந்துகொண்டேன் என்று நீ புரிந்து கொண்டால், வேதனை வடிவமாகி விடுவாயே என்று தானே, அதை மூடிமறைத்தோம் நானும் உன் அன்னையும்! என் வாழ்வில் மண்ணை அள்ளிப் போட்டுவிட்டாயே! தங்கமே! களங்கமிருக்கிற தென்பதற்காக நான் நிலவை ஒதுக்கும் கயவனல்லவே! இனி என்ன செய்வேன்? பொன்னவிர் மேனியாள் போய் விட்டாள், என் இன்பத்தைச் சூறையாடிக்கொண்டு —இதயத்தை இரத்தத் தடாகமாக்கிவிட்டு! இனி என்று காண்பேன்? எங்கு காண்பேன்? ஃ

[92-ம் பக்கத் தொடர்ச்சி]

எவருமே தென்படுவதில்லை; எனின் அந்தச் சப்தம் அடிக்கடி தோன்றுவானேன்? அவ்வினாவிற்கு விடைதேடி இராசபாட்டையின் நெடுக தன் பார்வையைச் செலுத்தினாள். அப்போதுதான் கோட்டையினருகே சிலர் பதுங்கிப் பதுங்கிச் செல்வது தெரிந்தது. திருடர்கள் கோட்டைக்குள் செல்லமாட்டார்கள்.

எனவே அவர்கள் சதிகாரர்களாகத்தான் இருக்க வேண்டுமென்று எண்ணினாள். அப்படியானால் அவர்களால வளவனுக்கு ஏதேனும் ஆபத்து ஏற்படுமா என்ற எண்ணம் அவளைக் கோட்டையை நோக்கித் துரத்தியது. அதற்குள் முன்னால் சென்றவர்கள் கோட்டையினுள்ளே புகுந்துவிட்டனர். இவள் கோட்டைக் கதவினருகே சென்றதும் கதவு தானாகத் திறந்துகொண்டது. அவளையும் சதிகாரர்களில் ஒருத்தி என்றெண்ணி விட்டான் அந்தக் காவலாளி! உள்ளே சென்றதும், சில வீரர்கள் பிணமாகக் கிடப்பதைக் கண்டாள். சதிகாரர் அந்தப்புரத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். அவர்களுக்கு முன்னால் தான் எப்படி வளவன் இருக்குமிடத்தை அடைவது என்று அவளுக்குப் புரியவில்லை. இன்னது செய்வதென்று தெரியாமல் தடுமாறினாள். தன் இதய ஜோதியின் உயிரை மீட்க வழி இல்லையா? தன் பார்வையை உயர்த்தி கோட்டையின்மீது கம்பீரமாகப் பறந்து கொண்டிருந்த புலிக் கொடியைப் பார்த்தாள். அந்த வெற்றிக் கொடி என்ன ஆணையிட்டதோ தெரியவில்லை; ஆனால் அவள் முகத்தில் மட்டும் நம்பிக்கையின் கிறல் தென்பட்டது. உடனே மேல் தளத்திற்குச் செல்லும் படிக்கட்டுகளில் ஓடவில்லை, பறந்தாள்! அங்கு கொடிக் கம்பத்தின்கீழ் சோழப் பேரரசின் வெற்றி முரசு வைக்கப்பட்டிருந்தது. அதனருகிலிருந்த கம்புகளை எடுத்துத் தன் பலம்கொண்ட மட்டும் முரசின்மீது அடித்தாள். முரசொலி கிளம்பியது! முரசொலி கேட்ட வீரக் காளையர் துரோகிகளை ஒழித்துக்கட்ட ஓடி வந்தனர். முரசொலி கேட்ட மன்னனும் மற்றவரும் உறக்கம் கலைந்து வெளியே வந்தனர். முரசொலி கேட்ட சதிகாரர்கள் நடுநடுங்கிப் போனார்கள். அவர்களது சதி அம்பலமாகியது! விசயன் சிறைபட்டான்!

5

"காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிது"—என்றபடி நீ செய்த உதவி இந்தப் பூமியைவிடப் பெரியதாகும், ஆனால் அதற்கு ஈடாக நீ இளவரசனைக் கேட்பது முறையல்ல: எனவே வேறு ஏதாவது கேள்." என்றான் மன்னன். அதற்குத் தியாகவல்லி.

"வேந்தே! ஒரு பெண் கண் நிறைந்த கணவனைத் தவிர வேறெதை விரும்புவாள்?" என்று திருப்பிக் கேட்டாள். அதற்கு அமைச்சர்,

"அம்மா, நாம் நமது மகிழ்ச்சியோடு நாட்டின் நலனையும் கவனிக்கவேண்டும். இப்பேரரசு அழிந்து போகாமல் காப்பாற்றிய நீயே பிற்காலத்தில் ஏற்படப்போகும் அபாயத்திற்கு ஆதிகாரணமாக இருக்கலாமா?" என்றார். "அமைச்சர்களே, உங்கள் கருத்து எனக்குப் புரிகிறது. ஆனால் நான் கேட்பது இளவரசரின் அன்பு தானே தவிர இந்த அரசையல்ல! அரசே! எனக்கு அரசவாழ்வு வேண்டாம். பிற்காலத்திலும், எனது மகன்தான் மன்னனாக வேண்டுமென்று நிச்சயமாக கேட்பதில்லையென்று இம் மாமன்றத்தின் முன்பாக என் தாய்மேல் ஆணையிட்டுக் கூறுகின்றேன்"

அதைக் கேட்ட அரசர் வியப்புடன் அவளைப் பார்த்தார். ஆனால் அமைச்சரோ அதிருப்தியோடு அவளைப் பார்த்து,

"அம்மா, உனது பெருந்தன்மையைப் போற்றுகின்றோம். ஆனால் நாளை உங்களுக்குப் பிறக்கும் மகன், தானாக மண்ணாசை கொண்டு குழப்பம் விளைவிக்கலாம் அல்லவா?" என்று வினவினார். அதற்கு மறுமொழி சொல்ல முடியாமல் அவள் திணறினாள். அவளது விழிகள் நீரைப் பொழிந்தன. விழிகளிலிருந்த நீரைத் துடைத்துக் கொண்டாள். பிறகு அமைச்சரைக் கம்பீரமாகப் பார்த்து, "எனக்குப் பிறக்கும் ஆண் குழந்தையை உயிரோடு தியாகம் செய்துவிட்டால்......?" என்று வாக்கியத்தை முடிக்காமலே நிறுத்தினாள். அவையிலே சலசலப்பு ஏற்பட்டது. வளவன் ஏதும் புரியாதவனாக அமைச்சரைப் பரிதாபமாகப் பார்த்தான். இதையொன்றையும் கவனிக்காத அமைச்சர்,

"அதாவது, குழந்தை பிறந்தவுடன் அதை வேறு எவரிடமாவது கொடுத்துவிடுகிறாயா? அக்குழந்தையை தொட்டிலிட்டுத் தாலாட்டிப் பாலூட்டி, அதன் மழலை மொழிகேட்டுக்கொஞ்சி விளையாடும் தாயன்பைத் துறந்துவிடச் சம்மதிக்கிறாயா?" என்றார்.

"ஆம், அவன்தான் யாரென்பது தெரியாமலே இருந்துவிட்டால், நீங்கள் எதிர்பார்க்கும் எந்தப் போட்டியும் ஏற்படாதல்லவா? இளவரசருக்காகப் பெற்ற பாசத்தைத் தியாகம் செய்கிறேன்" என்ற தியாகவல்லி கூறியதும் அமைச்சர் திருப்தியோடு அரசரைப் பார்த்தார். அரசனும் சிரமசைத்தான். அவளது தியாகத்தின் உயர்வை கண்டு, வளவன் மகிழ்ச்சி பெருக்கில் சிலை போல நின்றான்!

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம்.
4-128 மவுண்ட்ரோடு, சென்னை-6.


G.K. புரொடக்ஷன்ஸ்
சகோதரி
டைரக்ஷன்: A. பீம்சிங்
திரைக் கதை, வசனம்
முரசொலி மாறன். M.A.
பாடல்கள்
கண்ணதாசன்
இப்பொழுது
நடைபெறுகிறது
சென்னை:
கெயிட்டி
பிராட்வே
ராக்ஸி
மற்றும்
தமிழ் நாடெங்கும்....
G.H.RAO
ஸ்டுடியோ: ஏவி எம்

Regd. No. 7079 "MURASOLI" Pongal Special Number—1960




Rights controlled by 'BHAVANI MOVIES,' Madras-18.